பக்கங்கள்: இருபத்தாறு

Registered as a Newspaper

# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை 9 : வள்ளுவர் ஆண்டு 2030 ஆவணி 11 சனிக்கிழமை (28-08-1999) SANJEAVY -Regenerative Tamil Weekly சிகரம்:13

# செம்மணி - அரியாலைப் புதைகுழிகள்: மேலும் தகவல்கள் திங்கள் வெளிவரும்

## கிருஷாந்தி வழக்குக் குற்றவாளிகள் நீதிமன்றில் ஆஜராகித் தெரிவிப்பர்

யாழ்ப்பாணம்,ஓக.28

**செம்மணி - அரியாலைப் பகுதிகளில் உள்ளதாகக் கருதப்படும் பெரும் மனிதப் புதைகுழிகள் குறித்து மேலும் தகவல்கள், விவரங்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

**கிருஷாந்தி குமாரசுவாமி பாலியல் வல்லுறவுப் படுகொலை வழக்கின் குற்றவாளிகள் ஐவரும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படும்போது புதைகுழிகள் பற்றிய தகவல்களை ஒவ்வொன்றாக வெளியிடுவர் என நம்பப்படுகின்றது.**

கிருஷாந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளான சோமரத்ன ராஜபக்ஷ, டி.எம்.ஜெயதிலக, ஏ.எஸ்.பெரேரா, பிரியதர்ஷன, ஜெயசிங்க ஆகிய ஐவரும் நாளை மறுதினம் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்படுவர்.

கண்டிச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்கள் யாழ்ப்பாணம் அழைத்து வரப்படுவதற்காகத் தற்போது கொழும்புச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

முப்பது சிறைச்சாலை ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் சகிதம் நாளை மறுதினம் யாழ் அழைத்து வரப்படும் இவர்கள் அன்று யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவர்.

நாளை மறுதினம் தொடக்கம் மூன்று தினங்கள் நடைபெறும் விசாரணைகளின் போது கிருஷாந்தி வழக்கின் முதல் குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ஷ தவிர்ந்த ஏனையோர் வாக்குமூலம் அளிப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தேவைப்படும் சமயங்களில் புதைகுழிகள் இருக்கக் கூடிய பகுதிகளுக்கு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு, புதைகுழி இருக்கும் இடங்களை அடையாளம் காட்டும்படி கேட்கப்படுவர் என்றும் கூறப்படுகின்றது.

அதன் பின்னர் எதிர்வரும் 6ஆம் திகதி புதைகுழி தோண்டும் பணி மீள ஆரம்பமாகும்.

இப்பணி முடியும் வரை - அனேகமாக அடுத்தமாதம் 30ஆம் திகதி வரை - இந்தக் கைதிகள் ஐவரும் யாழ்ப்பாணத்திலேயே தடுத்து வைக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஜூன் மாதம் நடத்தப்பட்ட முதற்கட்ட தோண்டுதலின் போது சோமரத்ன ராஜபக்ஷ காட்டிய புதைகுழியில் இருந்து அவர் தெரிவித்தபடி இரு எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டது தெரிந்ததே. (உ-3)

## நிபுணர்கள் குழு இன்று வருகிறது

யாழ்ப்பாணம், ஓக.28

நாளை மறுதினம் யாழ்.நீதிமன்றத்தில் ஆரம்பமாக இருக்கும் செம்மணிப் புதைகுழி தோண்டுதல் தொடர்பான விசாரணைகளில் பங்குபற்றுவதற்காக நிபுணர்கள் மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் கொண்ட குழு இன்று யாழ்ப்பாணம் வரவிருக்கின்றது.

சட்டமா அதிபர் திணைக்கள சட்டத்தரணி யஸந்த கோத்தாக்கொட, றுகுணு பல்கலைக்கழக சட்ட மருத்துவத்துறைப் பேராசிரியர் சந்திரசிறி நெரியல்ல, பேராதனைப் பல்கலைக்கழக மண்ணியல் நிபுணர் நந்தசேன, இரசாயனப் பகுப்பாய்வாளர் ஆனந்த மெண்டிஸ் ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெறுகின்றனர்.

எதிர்வரும் 6ஆம் திகதி தோண்டும் பணி ஆரம்பமாக இருப்பதால் அது தொடர்பான ஏற்பாடுகளை செய்யவே இந்தக் குழுவினர் வருகின்றனர்.

நாளை மறுதினம் இந்த விவகாரம் யாழ். நீதிமன்றத்தில் யாழ்.மேலதிக நீதிவான் எம்.இளஞ்செழியன் முன்னிலையில் எடுக்கப்படும் போது இவர்கள் அங்கு பிரசன்னமாவார்கள். (உ-3)

## மண்ணியல் தொடர்பான சர்வதேச நிபுணர் வருவார்

செம்மணிப் புதைகுழிகளை எதிர்வரும் 6 ஆம் திகதி தோண்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும்போது சர்வதேச மண்ணியல் நிபுணர் பிரசன்னமாக இருப்பார் என 'ஏசியா பவுண்டேசன்' அமைப்புத் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் ஏற்பாட்டில் மண்ணியல் நிபுணருடன் குற்றப்புலனாய்வு நிபுணர் ஒருவரும் இந்த நடவடிக்கையின் போது பிரசன்னமாக இருப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிபுணர்கள் வருவதற்கு இலங்கை அரசு அனுமதி வழங்கியுள்ளது என்றும் -

அடுத்தவாரம் அவர்கள் யாழ்ப்பாணம் செல்வர் என்றும் - அந்த அமைப்பினர் தெரிவித்தனர்.

செம்மணிப் புதைகுழி தோண்டும் முதல் கட்ட நடவடிக்கையில் சட்ட மருத்துவத்துறை தொடர்பான சர்வதேச நிபுணர்கள் சமுகமளித்திருந்தனர் என்றும் -

இம்முறை அவர்கள் வரமாட்டார்கள் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

## குமாருக்கு விமான டிக்கெட் வழங்குவதற்கு மறுப்பு!

கொழும்பு, ஓக.28

யாழ்ப்பாணம் செல்வதற்கு தமக்கு விமான டிக்கெட் வழங்குமாறு சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் விடுத்த கோரிக்கையை குடாநாட்டுக்கு விமான சேவையை நடத்தும் 'ஹெலிரூர்ஸ்' நிறுவனம் நேற்று நிராகரித்துவிட்டது.

விமான டிக்கெட் பெறுவதற்கான பாதுகாப்பு அமைச்சு அனுமதி பெறப்படாததால் டிக்கெட் வழங்க முடியாது என்று அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

எனது சொந்த ஊரான யாழ்ப்பாணத்துக்கு செல்ல ஏன் பாதுகாப்பு அமைச்சு அனுமதி பெறவேண்டுமென்று கேள்வி எழுப்பிய குமார், நாட்டில் எந்தப்பகுதிக்கும் செல்வதற்கு பாதுகாப்பு அனுமதி பெற வேண்டுமென்று அவசரகாலச் சட்டத்திலோ அல்லது வேறு எந்தச் சட்டத்திலோ தெரிவிக்கப்படவில்லை என்றும் அவர்களிடம் கூறினாராம்.

பாதுகாப்பு அமைச்சு குறிப்பிடும் நடைமுறைப்படியே தங்களால் டிக்கெட் வழங்க முடியும் என்றும் -

இந்தப்பணிக்கு பொறுப்பான அதிகாரியுடன் பேசலாம் என்றும் -

அவருக்கு பதிலளிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து குமார் அந்தப் பணிக்கு பொறுப்பான அதிகாரியான பிரிகேடியர் குணசேகராவுடன் தொடர்பு கொண்டார்.

அவருடன் பேசியும் பலன் கிடைக்காததால் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சந்திரானந்த டி.சில்வாவுடன் அவர் தொடர்பு கொள்ள முயற்சி எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ் நீதிமன்றத்தில் நாளை மறுதினம் ஆரம்பமாக இருக்கும் செம்மணி புதைகுழி தொடர்பான வழக்கில் காணாமற்போனோர் சங்கத்தின் சார்பில் ஆஜராக குமார் பொன்னம்பலம் சம்மதம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அதற்காகவே அவர் யாழ். வரமுயன்றார். (உ-3)

## நல்லூரில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஓக.28

நல்லைக் கந்தன் ஆலய உற்சவத்தில் கூடும் பக்தர்களின் நலன்களைக் கவனிக்கும் சேவையில் ஈடுபட்டிருந்த சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் உறுப்பினர் ஒருவர் இளைஞர் குழு ஒன்றின் தாக்குதலுக்கு இலக்கானார் என்று கூறப்படுகின்றது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் குணசீலன் கஜேந்திரன் (வயது19-நல்லூர்) என்பவரே தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றார்.

இது தொடர்பாக யாழ். பொலீஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து சிலர் விசாரிக்கப்பட்டுள்ளனர். (உ-3-9)

## கொழும்பில் வெடிப்பொருள்

கல்கிசைப் பகுதியில் வீடு ஒன்றிலிருந்து ஒரு தொகை வெடிமருந்துப் பொருள்களைப் பொலீஸார் நேற்றுக் கைப்பற்றினர். இது தொடர்பாக அந்த வீட்டு உரிமையாளரும், மூன்று தமிழர்களும் கைதாகியுள்ளனர்.

## புதைகுழிகளுடன் தொடர்புடைய படை அதிகாரிகள் இடமாற்றம்

கொழும்பு, ஓக.28

செம்மணிப் புதைகுழி விவகாரத்துடன் தொடர்புடைய படை அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து வேறு மாவட்டங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என சட்டமா அதிபர் திணைக்களத்தை மேற்கோள்காட்டி கொழும்பு செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

நாளை மறுதினம் ஆரம்பமாகவிருக்கும் விசாரணைகளைக் குழப்பும் நடவடிக்கையில் இவர்கள் ஈடுபட வாய்ப்புண்டு என்பதாலும் -

புதைகுழிகள் பற்றிய தகவல்களை வெளியிடும் - கிருஷாந்தி கொலை வழக்குக் குற்றவாளிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலும் -

மேற்படி அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம் -

செம்மணிப் புதைகுழி தொடர்பாக சோமரத்ன ராஜபக்ஷ ஏற்கனவே தமது வாக்கு மூலத்தில் பிரஸ்தாபித்திருந்த படைஅதிகாரிகளை தம்மிடம் ஒப்படைக்குமாறு இராணுவத் தலைமைப்பீடத்தை குற்றப் புலனாய்வுத் துறையினர் கேட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டது. (உ-3)

### கிரனேட் வீச்சை ஆட்சேபித்து

## பத்திரிகையாளர்கள் நகரில் கண்டன ஆர்ப்பாட்டம்!

யாழ்ப்பாணம், ஓக.28

கடந்த சனிக்கிழமை இரவு 'உதயன்' பத்திரிகை அலுவலகம் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலைக் கண்டித்தும், ஆட்சேபித்தும் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12மணிமுதல் 1.00மணி வரை யாழ்.மத்திய பஸ்தரிப்பு நிலையத்துக்கு முன்னால் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக அறிவித்துள்ளது.

பிரதேச, பிராந்திய செய்தியாளர்கள் உட்பட அனைத்து ஊடகவியலாளர்களையும், எழுத்தாளர்களையும், பத்திரிகைச் சுதந்திரத்தை நிலைநாட்டுவதில் ஈடுபாடுள்ள ஏனையோரையும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றி, கருத்து வெளியிடும் உரிமையை ஏகோபித்து நின்று உறுதிப்படுத்துமாறு வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. (உ)

## நீதிமன்ற அழைப்பை ஏற்று ஜெகன் நேற்று பிரசன்னம்

யாழ்ப்பாணம்,ஓக.28

ஈ.பி.டி.பி. அமைப்பிலிருந்து விலகியதாகக் கூறப்படும் ஓர் இளைஞன் தொடர்பாக யாழ். நீதிமன்றம் பிறப்பித்த அழைப்பாணையை ஏற்று அந்த அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வி.கே.ஜெகன் நேற்று யாழ்.நீதிமன்றத்தில் ஆஜரானார்.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த பவுலிஸ் சற்குணம் என்ற இளைஞன் தாம் ஈ.பி.டி.பி. அமைப்பில் இருந்து விலகிவிட்டதாகவும் -

தனது அடையாள அட்டை மற்றும் உடைமைகளை தம்மிடம் அந்த அமைப்பு ஒப்படைக்க உதவும்படியும்-

யாழ். பொலீஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

யாழ். பொலீஸாரால் யாழ். நீதிமன்றத்தில் இது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுவை அடுத்து யாழ். மேலதிக நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வி.கே. ஜெகனுக்கு அழைப்பாணை அனுப்பியிருந்தார்.

இந்த அழைப்பாணையை ஏற்றுக் கொண்டு யாழ். மேலதிக நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் முன்னிலையில் ஆஜரான வி.கே.ஜெகன் பிரஸ்தாப இளைஞனின் அடையாள அட்டை மற்றும் பிரயாணப்பை ஆகியவற்றை ஒப்படைத்தார்.

பிரஸ்தாப இளைஞனை அடுத்த மாதம் பதினைந்தாம் திகதி மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்து அவரது தாயாரிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (உ-3-9-ரீ)

## போக்குவரத்து விதிகளை மீறிய நால்வர் கைது!

யாழ்ப்பாணம், ஓக.28

பருத்தித்துறையில் போக்குவரத்து விதிகளை மீறியதாக இரு ஆசிரியர்கள் உட்பட நான்கு அரச ஊழியர்கள் நெல்லியடி பொலீஸாரால் நேற்று கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிவான் இ.த.விக்னராஜா முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

இன்றையகாலகட்டத்தில் போக்குவரத்து விதிகளை மக்கள் ஒழுங்காக கடைப்பிடிக்காத காரணத்தால் விபத்துக்கள் ஏற்படுகின்றன எனத் தெரிவித்த நீதிவான் நால்வரையும் எச்சரித்து விடுவித்தார்.

அரச ஊழியர்கள் என்ற காரணத்தால் கருணைகாட்டி விடுதலை செய்வதாகவும் -

இனியும் இவ்வாறு போக்குவரத்து விதிகளை மீறினால் கடும் தண்டனை விதிக்கப்படும் என்றும் -

நீதிவான் தெரிவித்தார்.

பருத்தித்துறை பரமானந்த ஆச்சிரமத்துக்கு தர்மப்பணமாக 250ரூபாவை நால்வரையும் வழங்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

போக்குவரத்து விதிகளை மீறுவோர் மீது கடும்நடவடிக்கை எடுக்கும்

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாய்துறை பங்கின் மைந்தன்
அருட்திரு
## அருள்ராஜா அமலதாஸ் அ.ம.தி.
அவர்களின்
## முதற்திருப்பலி நன்நாள் நினைவுடன்
## வாழ்த்து!

எங்கள் தவக்குரு முதல்வன் அமலதாசன்
இறைபரனின் சேவைதனில் இணைந்த பின்னர்
தங்கமுகமலர் பூக்கத் தாயகத்தே
தருகின்ற முதற்பூசைப்பலியைக் காணத்
திங்களன்று முப்பதாம் நாள் அந்திவேளை
திரள்கின்ற மக்கள் அன்பின் இதய வாழ்த்து.

பங்குத்தந்தையும்,
புனித நீக்கிலார் ஆலயப்
பங்கு மக்களும்,
நாவாய்ந்துறை.

(68535)

யாழ். சண்டிலிப்பாய் வடக்கு அருள்மிகு
**ஆவளைப் பிள்ளையார் தேவஸ்தான**
கட்டட திருப்பணி நிதிக்கான
## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

**1 ஆம் பரிசு 3538** **2 ஆம் பரிசு 327**
**3 ஆம் பரிசு 1285**

ஆறுதல் பரிசுகள்:
107, 1037, 1012, 5403, 2884
2765, 5415, 2891, 3320, 1451

மு. ஜயந்த
(செயலாளர்.)

(68529)

## அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு பிற்போடல்

யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியத்தின் வளர்ச்சிக்காக 1999-08-28 ஆம் திகதி நடத்தப்பட இருந்த மேற்படி சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. விரைவில் அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

நன்றி.

**செயலாளர், பொருளாளர்,**
**மாணவர் ஒன்றியம்,**
**உயர் தொழில் நுட்ப நிறுவனம்.** (68528)

## நேர்முகத் தேர்வு

**ஒப்பந்த அடிப்படையில் அலுவலர்களை நியமித்தல்**
**ஆசிரியர் கல்வி ஆசிரியர் அபிவிருத்தித் திட்டம்**
**உலக வங்கி நிதிமூலம் யாழ்ப்பாண**
**தேசிய கல்வியியல் கல்லூரி நிர்மாணம்**

11-08-1999 ஆம் திகதிய இப்பத்திரிகையில் வெளியாகிய மேற்படி சகல வெற்றிட விளம்பர அறிவித்தலுக்கான நேர்முகப் தேர்விற்கு தற்போது யாழ். மாவட்டத்தில் வசித்துக் கொண்டிருக்கும் விண்ணப்பதாரிகள் தங்கள் தகைமைச் சான்றிதழ்களை உறுதிப்படுத்தும் தராதரப் பத்திரங்களின் மூலப்பிரதிகளுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இடம்: **வலயக் கல்விப் பணிமனை, யாழ்ப்பாணம்.**
காலம்: முற்பகல் 9.00 முதல்
30-08-1999 - திங்கட்கிழமை.

**சுந்தரம் டிவகலாலா**
செயலாளர்,
கல்விபண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு,
வடக்கு - கிழக்கு மாகாணம்,
திருகோணமலை. (சி-8670)

## கண்ணீர் அஞ்சலி

திலக நர்த்தனாலய மாணவி
**செல்வி திருமகள் கனகசபை**

“மரணத்தின் பிடியில் நீ மௌனித்து விட்டாய் என்ற செய்தி கேட்டு மனம் பதறி நிற்கின்றோம்.”

அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

- திலக நர்த்தனாலயம்

தபாலக வீதி,
சாவகச்சேரி. (சி/8673)

## மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்.ஓக.28

கொக்குவில் லயன்ஸ் கழகம் ஒழுங்கு செய்துள்ள மாதாந்த மருத்துவ பரிசோதனையும், கண் பரிசோதனையும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கொக்குவில் மேற்கில் உள்ள காந்திஜி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளன.

லயன் டாக்டர் எஸ்.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் லயன் டாக்டர்களும் கலந்து கொண்டு மருத்துவ பரிசோதனைகளை நிகழ்த்துவர்.

## மனோன்மணி அம்பாளுக்கு மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஓக.28

சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள் ஆலய நவகுண்ட பக்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.21மணிக்கும் 7.21 மணிக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

எண்ணெய்க்காப்பு இன்று காலை 6.05 மணிக்கு ஆரம்பமாகி பி.ப.3 மணிக்கு பூர்த்தியாகும்.

பிரதிஷ்டா பிரதமகுரு சிவஸ்ரீ செ. ரவிசந்திரக் குருக்கள் கும்பாபிஷேகத்தை நடத்திவைப்பார்.

நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமசாரிய சுவாமிகள் அருளுரையும் கலாநிதி ப.கோபால கிருஷ்ணஐயர் ஆசியுரையும் வழங்குவர்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ், மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம், தேசிய சேவை மன்ற உதவிப் பணிப்பாளர் தி.சிவதட்சணாமூர்த்தி ஆகியோர் சிறப்புரைகள் ஆற்றுவர்.

(அ)

## தமிழ் விழாவில்

திருமறைக் கலாமன்றம் நடத்தும் தமிழ்விழாவின் 2ஆம் நாள் நிகழ்ச்சிகள் இன்று காலை 9.30மணிமுதல் நடைபெறும்.

காலை நிகழ்ச்சியில் நுண்கலை சார் கருத்தரங்கும், மாலை நிகழ்ச்சியில் கலாவிநோதன் சின்னமணியின் வில்லுப்பாட்டு, ‘பூதத்தம்பி’ இசைநாடகம் ஆகியனவும் இடம்பெறும்.


## ஓடியோ CD வெளியீடு

1) வாட்டாகுடி இரணியன்
2) விரலுக்கேற்ற வீக்கம்

**சுப்பஸோ**

149,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
எம்மிடம் பழைய புதிய பக்திப் பாடல்கள் CD க்கள் விற்பனைக்குண்டு.
(சி-8675)

## ராஜா

யாழ்ப்பாணம்
பிரசாந்த் -ஐஸ்வர்யா
மற்றும் பலர் நடித்த
**ஜீன்ஸ்.**
10.30, 1.45, 5.00
(புதிய நேரம்)
(C/8562)

## நாகம்ஸ்

(சுன்னாகம்.)
காதல் இளவரசன் விஜய்,
தேவயானி, ரம்பா,
மணிவண்ணன்
நடித்த
**நினைத்தேன் வந்தாய்**
காட்சிகள்
11.00 - 2.30 (புதிய நேரம்)
(68392)

## லிபேட்டி தியேட்டர்

(அச்சுவேலி.)
அஜித், தேவயானி,
பார்த்தீபன்
நடித்த
**நீ வருவாய் என**
(புதியவெளியீடு)
காட்சிகள்: 10.30, 2.30

## இலவச மருத்துவ முகாம்

We Serve

காலம் : **29-08-99** (ஞாயிறு)
நேரம் : 8.30 A.m
இடம் : **காந்திஜீ ச.ச. நிலையம்**
**கொக்குவில் மேற்கு.**

பரிசோதனை : **அனைத்து பொது மருத்துவமும் கண் பரிசோதனையும்**
பரிசோதிப்பவாகள்: **எரிக்கணேஷ - யாழ்ப்பாணம்**

**கொக்குவில், லயன்ஸ் கழகம்.**
(சி-8672)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகரத்தினம் தங்கத்துரை

புலோலி தெற்கு கிராமக் கோட்டடியைப் பிறப்பிடமாகவும் 83/1, மனிங் பிளேஸ் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் தங்கத்துரை 25-08-99இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கத்துரையின் அன்பு மனைவியும், வேலப்பர்-தாமோதரம், தாமோதரம் - அன்னலக்சுமியின் அன்பு மகளும், இராசரத்தினம், கந்தசாமி, காந்திமதி ஆகியோரின் சகோதரியும், வரதராஜன் (சுவிஸ்), கண்ணதாசன்(சுவிஸ்) நந்தகுமார் (சுவிஸ்), தேவகுமார், உதயராணி, ஜெயராணி, (சுவிஸ்), சாந்தி (ஹொலண்ட்) வசந்தா ஆகியோரின் அன்புத் தாயாரும் சத்தியநாதன் (இத்தாலி), ஜெயதேவன் (சுவிஸ்) மனோகரன் (ஹொலண்ட்) வானதி, சறோஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும் நமசிவாயம், சண்முகலிங்கம், சுந்தரலக்ஷ்மி, காலஞ்சென்றவர்களான தியாகராசா, திருநாவுக்கரசு, பொன்னுத்துரை, சின்னத்துரை ஆகியோர்களின் மைத்துனியும், ஸ்ரீகாந்தன், தங்கத்துரை, அபிராமி, ஜனந்தன், ஜெனோசா, பிரசாந், பபி, ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 29-08-99 (நாளை) ஞாயிற்றுக்கிழமை வெள்ளவத்தையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
V.T. **கந்தசாமி**
(மகன்)

புலோலி தெற்கு,
புலோலி. (சி-8671)

## Dr.கந்தசாமி பாலகிருஷ்ணன்

பொலிகண்டி வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட Dr.கந்தசாமி பாலகிருஷ்ணன் 25.08.1999 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் சீதலஷ்மியின் அன்புக் கணவரும், காலம் சென்றவர்களான திரு.திருமதி கந்தசாமியின் அன்பு மகனும், திரு.திருமதி சிவகுருப்பிள்ளையின் அன்பு மருமகனும், கிரிதரன்(H.N.B ராஜகிரிய), சுபத்திரா (பிரான்ஸ்), சிறிதரன்(ரஷ்யா), வசீகரன்(Paints Gerevals Industries Ltd) ரகுதரன்(கனடா), சசிதரன், யசோதரா ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் தேவமனோகரன்(பிரான்ஸ்), றியன்கா(ஆசிரியை) ஆகியோரின் மாமனாரும், திருமதி நடனகுருசாமி, திரு.சிறிஸ்கந்தராஜா ஆகியோரின் சகோதரனும் நாராயணசாமி (கனடா), R.S. சிவசுப்பிரமணியம், திருமதி மால்மருகேசன், திருமதி சண்முகானந்தா, திரு.தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 89/3 வைத்தியா றோட் தெகிவளை இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் ஞாயிறு (29.08.99) காலை 9 மணிக்கு கல்கிசை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
**பா.கிரிதரன்**
(மகன்)
T.P - 727710

89/3, வைத்தியா றோட்,
தெகிவளை.

(68534)

## திருமதி மேசி மனோன்மணி லோட்டன்

சங்குவேலி வடக்கைச் சேர்ந்த திருமதி மேசி மனோன்மணி லோட்டன் அவர்கள் 26.08.99 வியாழக்கிழமை மகிமைக்குள் பிரவேசித்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோசேப் குணரட்ணம் லோட்டன் அவர்களின் அன்பு மனைவியும், அருட்சகோதரி ஷீலா(இலங்கை பெந்தகோஸ்தே சபை, ஆஸ்திரேலியா), சரோஜினி(ஆஸ்திரேலியா), டேபோரா(ஆஸ்திரேலியா), ராஜினி(ஆஸ்திரேலியா), எமிலி(ஆஸ்திரேலியா), இராஜநாயகம் லூதர் (கொழும்பு), இராசகுமார்(சங்குவேலி), காலஞ்சென்ற லியோ ஆகியோரின் அன்புத் தாயாரும், சீவநாயகம், சற்குணநாதன், ஜெயரட்ணம், றொபேட்சன், பிறேமா,விமலா ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவேந்திரன், செல்வேந்திரன் ரவீந்திரன், இராஜேந்திரன், சர்வேந்திரன், சத்தியேந்திரன், வினோதினி, டுசி, பெனிட்டோ, தனோஜா, எமில், மார்க், ஜிலியன், லியான், சுனில், ஜோர்ஜ், சாம், நிரோஷனா, டேவிட், கேமச்சந்திரன்(லண்டன்), தர்ஷினி, சுபாசினி, செல்வச்சந்திரன், ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் மயில்வாகனம், தங்கம்மா, மதியாபரணம், ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி தயவாகக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அடக்க ஆராதனை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:-
**லோ.இராஜநாயகம் லூதர்,**
**லோ.இராஜகுமார்.**
(மகன்மார்)

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

(68530)

## செல்வன் சி.பராநந்தசர்மா

இருபாலை கிழக்கு பிள்ளையார் கோயிலடிய்யச் சேர்ந்த சிவேந்திரசர்மா-பரமேஸ்வரி அவர்களின் கனிஷ்ட புதல்வன் பராநந்தசர்மா(நந்தன்) 26.08.99 வியாழன் கொழும்பில் காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று (28.08.99) சனிக்கிழமை கோப்பாய் தெற்கு, வீரபத்திரர் கோயிலடி இல்லத்தில் 3.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
**கி.நாராயணகுருக்கள்**
(மாமன்)

கோப்பாய் தெற்கு,
வீரபத்திரர் கோயிலடி.

(68543)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் ஐந்தாண்டு நிறைவு வெற்றி விழாவும்

# இனப்பிரச்சினை தீர்வின் நிலையும் போர் அக்கறையும்

அரசியல் கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றி அரசாங்கம் அமைத்த பின்னர் வெற்றி விழாக்கள் கொண்டாடுவது வழக்கம். அனேகமாக முதலாவது ஆண்டில் அத்தகைய விழாக்களை நடத்தி, தேர்தல் காலத்தில் தாம் அளித்த வாக்குறுதிகளில் என்னென்னவற்றை நிறை



ஐந்தாண்டு வெற்றி விழாப் பேரணிக்கு ஜனாதிபதி சகல இன, மத சிறுவர் சிறுமியரால் அழைத்துச் செல்லப்படுகிறார்.

வேற்றி விட்டார்கள்c அவற்றுக்கு மேலதிகமாக என்னென்ன மக்கள் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி இருக்கிறார்கள்; என்பவற்றை மக்களிடம் சொல்லி அவர்களின் நம்பிக்கையை, ஆதரவைத் தக்க வைக்கும் ஏற்பாடே வெற்றி விழாக்கள்.

ஆனால் மூன்றாவது நான்காவது வருடங்களில் அரசாங்கக் கட்சிகள் வெற்றி விழாக்கள் வைப்பது மிகவும் குறைவு. ஒரு வருடம் அல்லது இரண்டு வருடம் கழிந்ததும் அரசியல்வாதிகளின் - குறிப்பாக ஆளுங்கட்சியில் உள்ள அரசியல்வாதிகளின் - கவனமும் அக்கறையும் பொதுமக்களை விடத் தம்மீதும் தம்மைச் சார்ந்தவர்கள் மீதுமே அதிகம் செல்வது வழக்கம்.

அடுத்த தடவை மக்கள் ஆதரவில்லாமல் தமது கட்சி எதிர்த்தரப்பில் இருக்க நேர்ந்தால், அதிகாரமும் பதவியும் பறிபோனால் என்ன செய்வது என்ற ஏக்கம் அவர்களை இந்தக் காலத்திலேயே அதிகமாகத் தொற்றிக் கொள்ளும்! மக்கள் ஒரேயடியாகத் தம்மை நிராகரித்து விட்டால், ஆளுந்தரப்பாக உள்ளபோது கிடைக்கும் வசதிகள்,சலுகைகள் கிடைக்க மாட்டா.

ஆகையால் காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளும் கலையைச் சரிவரப் பயன்படுத்த அவர்கள் முனைந்து விடுவார்கள். சிந்தனை எல்லாம் எவ்வாறு பணத்தைத் தேடி எதிர்காலத்துக்கு வருமானம் தரும் மூலதனமாக மாற்றிக் கொள்வது என்பது குறித்தே சுற்றிச் சுழலும். எந்தெந்த ஒதுக்கீடுகளில் என்னென்ன முறையில் அதிக வெட்டைப் பெறலாம் என்ற கணக்கையே ஆளுங்கட்சி அரசியல்வாதிகள் சதா செய்து கொண்டிருப்பார்கள். லஞ்சம் பெறக் கூடிய திட்டங்கள் எவை என்று தேர்ந்து எடுத்துக் கொள்வார்கள். தமது அதிகாரத்துக்கு உட்பட்டு அதற்கு உதவும் திட்டம் எதுவும்

## உள்ளும் புறமும்

குறுமுனி

இல்லையெனக் கண்டால், மக்கள் நலன் நாடியது என்று வர்ணம் பூசி ஒன்றைப் புதிதாக உருவாக்குவார்கள்; பலே பேர்வழிகள்!

லஞ்சம், ஊழல், செயல்வேகம்குறைவு என்பன ஆளுங்கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொருவரிடமும் - அரசியல்வாதி ஒவ்வொருவரிடமும்- பெருகியதும், ஆளுங்கட்சிக்கு உள்ள ஆதரவு கிடுகிடுவெனச் சரிந்து போகும். அதனாலேயே ஆட்சிக்கு வந்த மூன்றாம், நான்காம் வருடப் பூர்த்தியை விழாவாகக் கொண்டாட முனைவதில்லை. மெதுவாக அதனைத் தவிர்த்துக் கொள்வதுஉண்டு. தமது சாதனைகளை பத்திரிகை விளம்பரங்களாக்கி பிரசாரப்படுத்துவதோடு நிறுத்திக் கொள்வர்.

கடைசி வருடமான ஐந்தாவது ஆண்டுப் பூர்த்தியோடு தேர்தல் அறிவிப்பும் அனேகமாக வந்துவிடும். (இலங்கையில் இப்போது ஆட்சிக் காலம் ஆறு வருடங்கள் என்பதால் கணக்கு வேறுபடும் என்பதனைக் குறித்துக் கொள்க) ஆகையால் இறுதி வருடப் பூர்த்தியை, நிறைவு காலத்துக்கு இரண்டொரு மாதங்களுக்கு முன் மக்கள் ஆதரவை மீண்டும் தமது பக்கம் திருப்புவதற்கான விழாவாக (அசல் பிரசாரக் கூட்டமாக) நடத்துவது உண்டு. அந்தக் கூட்டம் ஆளுங்கட்சி அரசியல் தலைவர்கள், உறுப்பினர்கள் செய்த ஊழல்கள், மோசடிகளை மறைத்து தாம் செய்த நன்மைகளை ஒன்றைப் பத்தாக உருப்பெருக்கிக் காட்டும் விழாவாகவே அமையும்.

அதனைத் தொடர்ந்து சிறிது கால இடைவெளியில் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் ஆரம்பமாகிவிடும்; அவற்றில் தாம் செய்யாததை எல்லாம் செய்து நிறைவேற்றியதாக சண்டப் பிரசண்டம் செய்தும் இனிமேல் மக்களைச் சொர்க்க உலகத்துக்கு அழைத்துச் சென்று விடுவதாக வாக்குறுதிகளை வழங்கியும் தொண்டை கிழிய உரத்துக் கத்துவார்கள்.

இத்தகைய இறுதிக்கால விழா அல்லது கொண்டாட்டம் அல்லது கூட்டம் தேர்தல் கூட்டங்களின் முன்னோடியாக அமைவதோடு அல்லாமல், ஆளுங்கட்சி அரசியல்வாதிகள் செய்த தவறுகளை மக்களை மறந்துவிடச் செய்வதற்கான ஒன்றாகவும் அமைவது உண்டு.

### கொழும்பில் தேசிய விழா

கடந்த சனிக்கிழமை (21 ஆம் திகதி) கொழும்பில் நடைபெற்ற பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஐந்தாவது ஆண்டுப் பூர்த்தி விழாவும் மேற்கூறிய வகையினதே. தேசிய விழா என்று பெயர் சூட்டப்பட்ட இந்த விழாவில் பேரணியும் கூட்டமும் நடைபெற்றன. பேரணியில் அரசாங்கம் செய்த சாதனைகளைக் காட்டும் விதத்தில் கண்ணைக் கவரும் அலங்கார ஊர்திகள் சென்றன. அமைச்சர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் என்று பிரமுகர்கள் பலரும் பேரணிக்குத் தலைமை வகித்தனர். வெளி மாவட்டங்களில் இருந்து வாகனங்களில் வரவிக்கப்பட்ட மக்கள் உட்பட பல்லாயிரக் கணக்கான மக்கள் பேரணியில் கலந்து கொண்டனர்.

மாலையில் ஹவ்லொக் மைதானத்தில் நடைபெற்ற விழாவில் ஜனாதிபதி உரையாற்றினார். "ஐந்தாண்டுக்கான புதிய நோக்கு", "புதிய நூற்றாண்டுக்கான தொலைநோக்கு" என்ற தொனிப் பொருள்களில் விழா நடைபெற்றது. கலை நிகழ்ச்சிகளின் கருப்பொருள்களும் அவையாகவே இருந்தன. மக்கள் ஆதரவைத் திரட்டுவதற்கான முன்னோடிவிழாவாக, கவர்ச்சி விழாவாக, அரசாங்கத்துக்கு இருந்த சிங்கள மக்களின் ஆதரவு இன்னும் குறைந்து விடவில்லை என்பதனை செயற்கையாகக் காட்டுவதற்கான விழாவாக அது அமைந்தது.

தென்னிலங்கையில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல்களைத் தொடர்ந்து மக்கள் ஆதரவு ஐக்கிய தேசியக் கட்சியை விட ஆளுங்கட்சிக்கே உண்டென அரச தரப்பினர் கணக்குப் பார்த்திருந்தனர். அதனால் ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத் தேர்தல் ஆகியவற்றில் ஒன்றை இந்த வருட இறுதியில் நடத்தலாம் என்ற அபிப்பிராயம் கூட அரச வட்டாரங்களில் நிலவியது. அது குறித்துத் தீவிரமாக ஆராயப்பட்டதும் உண்டு. ஆனால் தாம் பார்த்த கணக்குத் தவறு என்பதனை அரச வட்டாரங்கள் கண்டு கொண்டன. அதனாலேயே இந்த வருடத்தில் தேர்தல் எதுவும் நடைபெறமாட்டாது என்றும் 2,000ஆம் ஆண்டே தேர்தல் ஆண்டாக இருக்கும் என்றும் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அரசுக்கு எதிரான பல பேரணிகளும், போரை நிறுத்துமாறு கோரும் பேரணிகளும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள் பேரணிகளும் அண்மைக் காலமாக நடைபெற்றன. அவற்றில் ஆளும் கட்சிக்கு எதிரான அபிப்பிராயம் - மனமாற்றம் தெற்கு மக்களிடம் ஏற்படாமல் தடுப்பதற்கான ஒரு கலகலப்பான விழாவாகவும் கருதியே இது பெரிய அளவில், பெரும் பணச் செலவில் ஏற்பாடு செய்யப்பட்டது எனக் கொள்ளலாம்.

விழா ஒரு புறமிருக்க அங்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆற்றிய உரையும் ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்கள் உட்பட சகல சிறுபான்மை மக்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அமைதியான தீர்வை, 2,000 ஆம் ஆண்டில் அரசியல் தீர்வு ஒன்றின் மூலம் நாம் பெற்றுக் கொள்வோம். இந்தப் போரினால் ஏற்படக்கூடிய அழிவுகளை 2,000 ஆம் ஆண்டில் நாம் முற்றுமுழுதாக இல்லாமற் செய்து விடுவோம்.

எம்மால் இப்போது [illegible] அரசியல் தீர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஐக்கிய தேசியக் கட்சியினரும், ஜே.வி.பி.யினரும் இந்த நல்ல கைங்கரியத்துக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்-

உயர்ந்த இந்த நாட்டின் பிரஜையாக இருப்போமானால், இந்தப் பிரச்சினையிலிருந்து நாம் நழுவிச் செல்ல முடியாது. பொறுப்பு வாய்ந்த சகல கட்சிகளையும் இப்பிரச்சினையைத் தீர்க்க முன்வருமாறு இச்சந்தர்ப்பத்தில் சகோதரத்துவமாக அழைப்பு விடுக்கின்றேன் என்று ஜனாதிபதி கேட்டார்.

அவரது பேச்சின் பிரதான கருப்பொருள் இனப்பிரச்சினைத் தீர்வு காண்பது பற்றியதாகவே இருந்தது. நாட்டை நெருப்பாக எரித்துக் கொண்டிருக்கும், பிரதானமான மிக முக்கியமான பிரச்சினை இனப்பிரச்சினை. அதனை இந்த நாட்டு மக்கள் அனைவருமே உணர்ந்துள்ளனர்.

இனப்பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட போரினால் உயிர்ச் சேதங்கள் இரண்டு தரப்புகளிலும் உண்டாகின்றன. போர் வடக்கு-கிழக்கில் மட்டுமன்றி நாடு முழுவதற்கும் பரவியுள்ளது. அதனால் பாதுகாப்பு உத்தரவாதம் இல்லாத நிலையிலேயே நாட்டின் எல்லாப் பிரதேசங்களையும் சேர்ந்த மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வடக்கு-கிழக்கில் மட்டுமே படைகளும் புலிகளும் மோதிக்கொண்டிருந்தாலும் விடுதலைப் புலிகள் அதனை நாடளாவிய ரீதியாக விஸ்தரித்துள்ளார்கள்.

இதன் விளைவாக போர் நிறுத்தப்பட வேண்டும்; இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்: அமைதியும் சமாதானமும் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்று மக்களில் பெரும்பாலானோர் விரும்புகின்றனர்; அக்கறையாக உள்ளனர். ஜனாதிபதி சந்திரிகாவே தமது தேசியவிழாப் பேச்சின் ஒரு கட்டத்தில், "சிறுபான்மையினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நியாயமான அரசியல் தீர்வு காண்பதற்கு பெரும்பான்மை மக்கள் அரசுக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர்" என்று கூறியுள்ளார்.

ஆனால் போரை நிறுத்துவது, அரசியல் தீர்வு காண்பது, அமைதியையும் சமாதானத்தையும் தோற்றுவிப்பது ஆகியவற்றில் மக்களுக்கு உள்ள ஆர்வமும் அக்கறையும் அரசாங்கத்திடம் இருக்கவில்லை. பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐ.தே.கட்சியும் விடுதலைப் புலிகளும் ஜே.வி.பி.யுமே தடையாக, மாறாக இருக்கின்றனர் என்ற கருத்துப்பட அவர்களின் ஒத்துழைப்பைக் கேட்டுள்ளார் ஜனாதிபதி. ஆனால் அரசாங்கம் இதுவிடயத்தில் தான் சொன்னது போலவும், மக்களின் நலனுக்கு முன்னுரிமை கொடுத்தும் செயற்பட்டதா என்பது கேள்விக்கு உரியதாகும்.

இனப்பிரச்சினையைத் தீர்க்கும் விவகாரத்துக்குக் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தைக் கொடுத்து அரசு மக்களுக்கு விசுவாசமாகச் செயற்பட்டிருப்பின் -

நியாயமான, நீதியான அரசியல் தீர்வு ஒன்றைக் காணவேண்டும் என்பதில் அக்கறையுடனும் முனைப்புடனும் அரசு முன்னின்று செயற்பட்டிருப்பின் -

அரசியல் தீர்வு தான் ஒரே மார்க்கம் என்று தீர்க்கமாக முடிவு செய்து நிலை தடுமாறாமல் மனம் தளம்பாமல் தொடர்ச்சியாக அவ்வழியில் செயற்பட்டிருப்பின் - பெரும் முன்னேற்றம் கண்டிருக்கலாம்.

### திசை மாறியது

1995 ஜனவரியில் ஆரம்பித்த அரசு - விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை முறிந்து போயிற்று என்பதற்காக, மக்களுக்கு அளித்த வாக்குறுதிக்கு முரணாகப் போரின் மூலம் இனப் பிரச்சினையைத் தீர்க்க முடிவு செய்து அரசு திசைமாறியதே இன்றைய நிலைக்கு முழுக் காரணமும் ஆகும். இத்தகைய பேச்சுவார்த்தை முயற்சிகள் தோல்வி அடைவது ஒன்றும் புதியதல்ல. உடனே கொள்கையை நேர்மாறாக மாற்றிச் செயற்பட முனைந்தால் எவ்வாறு வெற்றி கிடைக்கும்? தமிழ் மக்களின் வாக்குகளை வாங்குவதற்காக ஒரு வாக்குறுதியும், விடுதலைப் புலிகளைப் பழிவாங்குவதற்காக என்று கூறி அதற்கு முரணாக செயற்பாடும் அரசின் நடைமுறையாக அமைந்ததாலேயே இது விடயத்தில் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட முடியவில்லை.

### இரட்டை முகம்

அரசாங்கத்தின் நடத்தையை இன்னொரு விதமாகவும் பார்க்கலாம்: இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண்பதாகக் கூறினால் தமிழர்களின் வாக்குகளையும் பெற்றுப் பதவிக்கு வரலாம் எனப் பொ.ம.ஐ.முன்னணி நினைத்தது. அதன் பொருட்டு மட்டுமே தேர்தலில் அவ்வாறு வாக்குறுதி அளித்தது. உள்ளாந்தமாக அத்தகைய ஒரு விருப்பம் முன்னணிக்கு இருக்கவில்லை.

அதனாலேயே விடுதலைப் புலிகளுடனான முதலாவது பேச்சுவார்த்தை முறிந்தவுடனேயே இதுதான் சந்தர்ப்பம் என்று போரின் மூலம் சமாதானம் என்ற அர்த்தமற்ற அணுவளவும் நடைமுறைச் சாத்தியமற்ற கொள்கையை இறுக அணைத்துக்கொண்டது.

அதோடு மட்டும் நிற்காமல் அரசியல் தீர்வு யோசனை என்ற முகத்தையும் சேர்த்துப் பதவிக் காலத்தைக் கழிக்க திட்டமிட்டது. பெயருக்குத் தீர்வுப் பொதியைக் காட்டிக் கொண்டு இராணுவத் தீர்வை நாடுவதுதான் முன்னணியின் மூலத் திட்டமாகவும் இருக்கலாம். அது இரட்டைமுகம் கொண்டது என சந்தேகப்பட இடமுண்டு.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் இனப்பிரச்சினை தொடர்பான உள்ளாந்தரம் என்னவோ எவ்வாறிருந்ததோ தெரியாது. தமிழ் மக்கள் சந்திரிகா மீது நம்பிக்கை வைத்து வாக்களித்து விட்டார்கள். அவர் ஆட்சிக்கு வந்து ஐந்து வருடங்களும் கடந்து விட்டன. இப்போது தமிழ்க் கட்சிகள் உட்பட தமிழர்கள் அவர் மீது நம்பிக்கை இழந்து விட்டார்கள்: துளிஅளவும் இல்லை.

மேலே குறிப்பிட்ட வகையைச் சேராமல் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் - அரசியல் தீர்வு ஒன்று காணவேண்டும்: தமிழர்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதே சந்திரிகாவின் உள்ளாந்தரமான விருப்பமாக இருந்தது. இப்போதும் அதனையே விரும்புகிறார் என்பதே உண்மையான நிலைப்பாடு எனக் கொண்டாலும் - பதவிக்கு வந்து ஐந்து வருடங்களாகியும் இது விடயத்தில் முன்னேற்றம் காணாமல் காலம் கடத்தியது ஏன்?

ஐக்கிய தேசியக் கட்சி, விடுதலைப் புலிகள் ஆகிய இரண்டு தரப்புகளின் ஒத்துழைப்பையும் வெறுமனே பேச்சில் - வாயால் - கேட்காமல் உத்தியோகபூர்வமாக எழுத்து மூலம் கேட்டிருக்கலாம். அரசின் தீர்வுப் பொதியை பகிரங்கமாக வெளியிட்ட உடனேயோ அல்லது நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த உடனேயோ எழுத்து மூலம் தொடர்பு கொண்டோ அல்லது நேரில் அழைத்தோ ஒத்துழைப்புக் கேட்டிருக்கலாம். அது ஒரு நல்ல ஆரம்பமாக அமைந்திருக்கும்.

அவ்வாறன்றி, இவ்வளவுகாலமாக ஆறப்போட்டுவிட்டு இப்போது அவசரப்படுவது போலக் காட்டிக் கொள்வது நம்பிக்கை தரக்கூடிய ஒன்றல்ல. அதுவும் தேர்தலுக்கு ஒரு வருடம் மட்டுமே இருக்கும் போது, இதுவரை காலமும் பகைமை, போட்டி உள்ளவர் போல நடந்து விட்டு, இப்போது ஆதரவு கேட்பதால் அரசின் தவறான பாதையை மக்கள் மறந்து விடமாட்டார்கள்.

## 1979ஆம் ஆண்டோடு ஒப்பிடுகிறார் தமிழ்க் கட்சித் தலைவர் ஒருவர்

லியம்பொக்ஸ் இணக்கம் ஏற்பட்டவுடன் ஐ.தே.கட்சியுடனும், பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று விடுதலைப் புலிகள் பகிரங்கமாக அறிவித்த பின்னர் அவர்களுடனும் உத்தியோக பூர்வமாகத் தொடர்பு கொண்டு முனைப்பாகச் செயற்பட்டிருந்தால் ஏதோ ஓரளவேனும் முன்னேற்றம் கண்டிருக்கலாம். அவ்வாறன்றி அரசியல் தீர்வு குறித்து வெளியில் பேசிக் கொண்டு போரில் நாட்டம் காட்டிக் காலத்தைக் கழித்த பின்னர், தேர்தல் நெருங்கும் காலத்தில் ஒத்துழைப்புத் தாருங்கள்: நான் தீர்த்து விடுகிறேன் என்று கேட்பது முழுக்க முழுக்க அரசியல் லாபம் கருதிய செயற்பாடாகும். இது தனது தவறை மறைத்து விடும் தந்திரமும் ஆகும்.

சரி. கடந்த ஐந்து வருடங்களாக இரட்டை முகம் காட்டிக் காலத்தைக் கழித்த அரசு இப்போது திருந்தி விட்டது.: வேடம் போடாமல் தனக்குள்ள வடிவத்துடனேயே செயற்படப் போகிறது என்று நம்புவதற்கும் இடம் வைக்கவில்லை என்பது மேலும் நிலைமையை மோசமாக்குகிறது.

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தீர்வுப் பொதிக்கு ஆதரவு தருமாறு ஜனாதிபதி சந்திரிகா தமது தேசிய விழாப் பேச்சில் கேட்டிருக்கிறார். விடுதலைப் புலிகளுடன் பேசு வதற்கு தமக்கு விருப்பமுண்டு என்பதனை அவர் இவ்வாறு மறைமுகமாகச் சொல்லி யுள்ளார் என்றே எவரும் கருதுவர்.

அவ்வாறு காட்டிக் கொள்வதன் மூலம் அரசு மீது நம்பிக்கை இழந்து விட்ட தமிழ் மக்களைக் கவரும் ஓர் உத்தியாக தேசிய விழாப் பேச்சு அமைக்கப்பட்டுள்ளது. இது தேர்தலில் தமிழர்களின் வாக்குச் சேர்க்கும் தந்திரோபாயமும் ஆகும்.

ஆனால் சிங்களப் பிரதேசங்களில் அப்பகுதி மக்களின் வாக்குகளைச் சேர்க்க வேறு முகம் காட்டப்படுகிறது. தென்னிலங்கையின் பல பகுதிகளிலும் பரவலாக ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகள் போர் தொடர்ந்து நடத்தப்படவுள்ளதாகச் சொல்லாமல் சொல்லுகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் பதவிக்காலத்தில் விடுதலைப் புலிகள் வசம் இருந்த வடக்கு-கிழக்குப் பிரதேசங்கள். பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு நடத்திய போர் மூலம் விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பிரதேசங்கள். இன்னும் கைப்பற்ற வேண்டிய

( 7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் மாவட்ட

## ஷெல் காஸ் சமையல்வாயு (SHELL GAS)

விநியோக உரிமை பெற்ற "மெக்ஸ்" நிறுவனத்தினரின்

# பணிவான அறிவித்தல்

போக்குவரத்து, கப்பல் கட்டண உயர்வினால் எம்மால் இதுவரை காலமும் 430 ரூபாவிற்கு விற்பனை செய்து வந்த (SHELL GAS) சமையல் வாயு எதிர்வரும் 1.09.1999 முதல் 530 ரூபாவாக விற்பனை செய்யப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம். சிரமத்தைப் பாராது எங்கள் அன்பான வாடிக்கையாளர்களை அன்புடன் எம்முடன் ஒத்துழைக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இல்லத்தரசிகளுக்கு இனிப்பான செய்தி !

இதமாகவும், சுகமாகவும் நேரத்தை வீணாக்காமல் இலகுமுறையில் சமையல் செய்யக்கூடிய சமையல் வாயு சிலிண்டர், பலவித தெரிவுகளைக் கொண்ட அடுப்புகள் மற்றும் உபகரணங்கள் யாவும் பெற்றுக் கொள்ள யாழ்நகரில் ஒரே ஒரு ஸ்தாபனம்.

## "மெக்ஸ்" நிறுவனம்

தலைமையகம்:
**"மெக்ஸ்"**
இல.70 பெரியகடைவீதி
யாழ்ப்பாணம்.

கிளைநிறுவனம்:
**"மெக்ஸ் புடவை மாளிகை"**
(மொத்த சில்லறை புடவை வியாபாரிகள்)
இல. 34, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.PHONE - 2032
- 2852

(68465)


யாழ். ஆஸ்பத்திரியில்

# சிகிச்சை நிலையங்கள் இடம்மாறுகின்றன

யாழ்ப்பாணம், ஓக.28

யாழ். ஆஸ்பத்திரியின் பல் சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை சிகிச்சை நிலையங்கள் தவிர்ந்த ஏனைய சிகிச்சை நிலையங்கள் (கிளினிக்குகள்) நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் வெளிநோயாளர் பகுதிக்கு இடமாற்றப்படுவதாக ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அதேவேளை வெளிநோயாளர் பகுதிக் கட்டடத்தின் கீழ் தளத்தில் இயங்கிய வெளிநோயாளர் பார்வை அறைகள், ஊசிபோடும், மருந்து கட்டும் அறைகள், அவசர சிகிச்சை இரத்தப் பரிசோதனை, மருந்து கட்டும் அறைகள் என்பன நாளை மறுதினம் முதல் சிகிச்சை நிலையம் (கிளினிக்) இயங்கிய கட்டடத்துக்கு மாற்றப்பட்டு அங்கு அவை செயற்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த இடமாற்றங்களைக் கவனத்தில் எடுத்து அசௌகரியங் களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு நோயாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(ஐ-15-139)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக.28

மிக மூத்த கவிஞர் "சேந்தன்" (பண்டிதர் சி.கார்த்திகேசு) எழுதிய "திருநல்லைப்பதிற்றுப்பத்து" நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை 2.30 மணியளவில் நல்லை திருஞானசம்பந்த ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

விழாவுக்கு யாழ்.இந்துக்கல்லூரி முன்னாள் துணை அதிபர் க.சிவராமலிங்கம் தலைமை வகிப்பார். ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அருளாசி வழங்குவார். நூல் வெளியீட்டுரையை செல்வி புஷ்பா செல்வநாயகமும் ஆய்வுரையை மூத்த எழுத்தாளர் சொக்கனும் நிகழ்த்துவர்.

பண்ணிசைமணி திருஞான சம்பந் தனின் பண்ணிசைக் கச்சேரியும் இடம்பெறும். (அ)

## வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை

யாழ்ப்பாணம், ஓக.28

ஸ்ரீலங்கா வலைப்பந்தாட்ட சங்கத்தால் நடத்தப்படும் வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி இலக்கத்தினை இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் சமூகமளித்துப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் திருமதி ஏ.எவ்.கே.ரூபசிங்கம் அறிவித்துள்ளாார். (க)

## மணிக்கோபுர கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஓக.28

கோண்டாவில் செம்மாந்தோட்ட ஞானவைரவர் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மணிக்கோபுர கும்பாபிஷேகமும் 108 சங்காபிஷேகமும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

மாலை 4.00 மணிக்கு ஊஞ்சல் பாட்டும் அதனைத் தொடர்ந்து சுவாமி வீதியுலாவும் இடம்பெறும். (ஐ-ரி)


உ

## விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகராமான பிரமாதி வருக்ஷம் ஆவணித் திங்கள் 12 ஆம் நாள் (29~08~1999) ஞாயிற்றுக்கிழமை காலை 09.18 மணி முதல் 10.04 மணி வரையுள்ள துலா லக்ன சுபமுகூர்த்தத்தில்

எனது கனிஷ்ட புத்திரன்
சிரஞ்சீவி
**குகநேசனுக்கு**
(குகன்)
(சோதிடர் - படப்பிடிப்பாளர்)

இ. வெங்கடேச ஐயரின்
(வாக்கிய பஞ்சாங்கம்)
கனிஷ்ட புத்திரி
சௌபாக்கியவதி
**ரூபவதனியை**
(வதனி)

கன்னிகாதான பாணிக்கிரகண மாங்கல்யதாரணம் செய்ய மயிலணி முருகன் அருளுடனும் பெரியோர் ஆசியுடனும் நிச்சயிக்கப்பட்டு மணமகள் இல்லத்தில் விவாகம் நடைபெற இருப்பதால் அன்று காலை 6 மணியளவில் மணமகன் இல்லத்தில் நடைபெறும் சமாவர்த்தனத்திலும் மாலை 3.30 மணியளவில் இடம்பெறும் வதூவர கிரகப் பிரவேசத்திலும் 30-08-1999 திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெறும் வரவேற்புபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

சுபமஸ்து

வரவேற்பாளர்:
**திரு. ச. இராஜமோகன்-பகவதி தம்பதிகள்.**

**திருமதி சச்சிதானந்தக் குருக்கள்**
மயிலணி, சுன்னாகம்.

(தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை)

(சி-8662)



## 31 st DAY REMEMBRANCE

**26-08-1999**

Birth
24 - 01 - 1907



Demise
26 - 07 - 1999

**Mr. CLEMENT LAWRENCE SENATHIRAJAH**

(Retired Teacher - St. Patrick's College, Jaffna.)

Four Score and thirte... was your Term of Office. Longevity is the rewa... to those who served him well and true. Your ...yful service remembered with gratitude.

Lawrence,
...rajah & Family,
...izathurai Simon & Family.

41, Eachamottai Rd,
Chundikuli.

(68218)



உ

ஸ்ரீ ராம ஜெயம்

## விவாஹ சோபன சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

திருவருள் துணைகொண்டு ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் சர்வ மங்களகரமான பிரமாதி வருடம் ஆவணி மாதம் 12 ஆம் நாள் (29-08-1999) ஞாயிற்றுக்கிழமை உத்திரட்டாதி நட்சத்திரமும் திருதியைத் திதியும் அமிர்தயோகமும் கூடிய சுப நன்னாளில் முற்பகல் 9.00 மணி 45 நிமிடம் முதல் 11 மணி 15 நிமிடம் வரையிலான சுக்கிர புதஹோரையுடன் கூடிய துலா லக்கின சுபமுகூர்த்தத்தில்

எமது சிரேஷ்ட புத்திரன்
சிரஞ்ஜீவி
**பாலகிருஷ்ணசர்மாவுக்கு**

எமது கனிஷ்ட புத்திரி
சௌபாக்கியவதி
**சகுந்தலாதேவியை**

கன்னிகாதான பாணிக்கிரகண திருமாங்கல்யதாரணம் செய்ய முருகன் திருவருள் துணையுடன் நிச்சயிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் - கதிரேசன் கோயில் மண்டபத்தில் நடைபெறும் திருமண வைபவத்திலும் அன்று காலை 5 மணி தொடக்கம் மணமகன் இல்லத்தில் நடைபெறும் சமாவர்த்தன வைபவத்திலும் மாலை 3 மணி 30 நிமிடத்தில் நடைபெறும் வதுவரகக் கிரகப்பிரவேசத்திலும் தாங்கள் தங்கள் பந்து மித்திர சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்பு:- **01-09-99 காலை 11 மணிக்கு மணமகள் இல்லத்தில் நடைபெறும்.**

சுபம் அஸ்து!

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்:

திரு. தி. பாலசுப்பிரமணியக் குருக்கள்
நாகேஸ்வரி
(ஞான வைரவர் தேவஸ்தான
பிரதம குருக்கள்)
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

திரு. சோ. குகனேசசர்மா
பூமஹாலக்சுமி அம்மா
(திக்கரை முருகமூர்த்தி
தேவஸ்தான பிரதம குருக்கள்)
களபூமி, காரைநகர்.

- இருவீட்டார் அழைப்பு -

(68521)



## இந்து சாதனம் - Hindu Organ

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையின் வெளியீடாகிய 110 ஆண்டு பழமை வாய்ந்த இந்து சாதனம் - Hindu Organ பத்திரிகை கடந்த சித்திரா பூரணை முதல் புதுப்பொலிவுடன் பூரணை தோறும் மீண்டும் வெளிவருகிறது. சைவசமயத்தை அறிந்து கொள்ள ஒவ்வொரு சைவ இல்லத்திலும் இருக்க வேண்டிய பத்திரிகை. O/L, A/L மாணவர்கள் அவசியம் வாசிக்க வேண்டியது. ஆவணி இதழ் இப்போது விற்பனையாகிறது. உங்கள் பிரதிக்கு முந்திக் கொள்ளுங்கள். தனிப் பிரதி பத்து ரூபா. ஆண்டுச் சந்தா ( 12 இதழ்கள் தபால் செலவு உட்பட) 125 /-

கிடைக்குமிடங்கள்:

**125, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**பாரதி பதிப்பகம், 430, கே. கே. எஸ். வீதி, யாழ்நகர்.**
**சிவகுருநாத பீடம், குமாரசாமி வீதி, கந்தர்மடம்.**
**துர்க்கா மணி மண்டபம், நல்லூர்.**
**மூத்ததம்பிமடம், நல்லைக்கந்தன் ஆலய மேற்கு வீதி,**

- சைவ பரிபாலன சபை,
450, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8666)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணணிப்பாவனையில்

அங்கீகரிக்கப்பட்டதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான
பூரண பயிற்சியை நான் பெற்றுக்கொள்ள முடியுமா?
ஆம்.




# Road Closed for All Persons Except COMPUTER DRIVERS

*With SriLanka Computer Driving Licence*

Future is the computer. Computer is the future. ...there's no escaping from it. Computer literacy is an essential pre-requisite for any type of employment in years to come.

But, the question is, **" Can I get recognised, accepted, comprehensive training in computer usage?"**

Yes, by following a course leading to the Sri Lanka Computer Driving Licence.

Because it is the proof that:

- **The holder is fully competent to operate personal computers.**
- **The holder has received carefully structured training in theory and practice of computer usage.**
- **The holder has followed a syllabus approved by the Association of Computer Training Organisations.**
- **The holder has reached a high level of proficiency with over 80% of marks in each subject.**

Sri Lanka Computer Driving Licence certifies that its holder is well versed to handle
- Word processing, Spread sheets, Databases, Presentations, Graphics, E-mail and Internet.

*Using*

| | |
|---|---|
| Word 2000 | Excel 2000 |
| Powerpoint 2000 | Access 2000 |
| Email & Internet | Windows 98/2000 |

**Association of Computer Training Organisations**
ACTOS
9, Clifford Avenue, Colombo 3.
Tel: 565193, 573326, 574737, 576778, 074-713821 Fax: 074-713821

**Sri Lanka Computer Driving Licence -the Proof of Excellence**
**RECOMMENDED TRAINING CENTRES**

| | | |
|---|---|---|
| AIMS COMPUTER INTERNATIONAL(PVT) LTD | GATEWAY CENTRE FOR INFORMATION TECHNOLOGY | DCS COLLEGE OF COMPUTER TECHNOLOGY |
| DMS TRAINING CENTRE | DP AIDES (PVT)LTD | GATEWAY CENTRE FOR INFORMATION TECHNOLOGY |
| IDM COMPUTER STUDIES(PVT)LTD | INTERNATIONAL BUSINESS SYSTEMS OVERSEAS(PVT)LTD | INSTITUTE OF MANAGEMENT & COMPUTER STUDIES (PVT)LTD |
| OPENARC COMPUTER SCHOOL LTD | THE POLYTECHNIC LIMITED | |

**For full details regarding enrolment & syllabus please Contact :**

DCS
DATA CONNECTION SYSTEMS(PVT)LTD

College Of Computer Technology
124/2, Palaly Road, Jaffna
Tp.No :2604,2596 E-mail : dcsjaf@sltnet.lk

**DCS**

* அங்கீகரிக்கப்பட்ட அரச சான்றிதழுக்கான கணனிப் பயிற்சி
* தொழில்பயிற்சி மற்றும் மூன்றாம்மட்ட கல்வி ஆணைக்குழுவினால் பதிவு செய்யப்பட்டது.

DCS ல் கணனியில் கல்வி பயின்றவர்கள் மேற்படி சான்றிதழைப் பெற விசேடசலுகை

ஆரம்பம் – 12.09.99

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'சுடர்' இ. மகேந்திரன்
# மணிவிழா

இடம்: **கொக்குவில் இந்துக்கல்லூரி**
காலம்: நாளை ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 9. 30 மணி (புதிய நேரம்)
தலைமை: **திரு. து. வைத்திலிங்கம்**
மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்
(தலைவர், மணிவிழாக் குழு)

## நிகழ்ச்சிகள்

காலை 9.30 மணி: கொக்குவில் ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் வழிபாடு.

காலை9.35 மணி : ஆலயத்திலிருந்து மங்கள இசை முழங்க மணி விழா நாயகரை குடும்ப சமேதரராய் காங்கேசன்துறை வீதி வழியாக கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஹண்டி பேரின்பநாயகம் மண்டபத்துக்கு அழைத்து வருதல்.

முற்பகல்10.00மணி: மங்கள விளக்கேற்றல்
தேவாரம்
அமைதி வணக்கம்

முற்பகல்10.10 மணி: வரவேற்பு நடனம்
கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவியா

முற்பகல்10.20 மணி: வரவேற்புரை
**கே. தேவராஜா**
(பதில் பீடாதிபதி, முகாமைத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.)

முற்பகல்10.30 மணி: தலைமையுரை

முற்பகல்10.45 மணி: வாழ்த்துரைகள்
**பிரமஸ்ரீ க. சிவதாஸக்குருக்கள**
பிரதமகுரு, கொக்குவில் ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்
அதிவண. கலாநிதி எஸ். ஜெபநேசன்
பேராயர், தென்னிந்தியத் திருச்சபை

முற்பகல்11.00 மணி: நயப்புரைகள்.
**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்
**திரு. க. சண்முகநாதன்**
அரச அதிபர், யாழ்ப்பாணம்.
தலைவர், யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்.
**திரு. க. சிவராமலிங்கம்**
முன்னாள் பிரதி அதிபர், யாழ். இந்துக் கல்லூரி.
**திரு. க. சி. குகதாசன்**
முன்னாள் அதிபர், யாழ். இந்துக் கல்லூரி.
**திரு. த. அருணகிரிராஜா**
உதவிக் கல்விப்பணிப்பாளர் - உடற்கல்வி, யாழ். கல்வி வலயம்.
**திரு. பொ. கமலநாதன்**
அதிபர், கொக்குவில் இந்துக்கல்லூரி.
**திரு. அ. சிறீக்குமாரன**
அதிபர், யாழ். இந்துக் கல்லூரி.
**திரு. க. குணபாலசிங்கம்**
முன்னாள் அதிபர், வைத்தீஸ்வராக் கல்லூரி.
**திரு. ரீ. தேவராஜா**
தலைவர், கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்.
**திரு. த. அழகரத்தினம்**
அதிபர், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.
**திரு. இ. செல்வநாதன்**
செயலாளர், கொக்குவில் இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
**செல்வன் ச. காந்தரூபன்**
சிரேஷ்ட மாணவ முதல்வன், கொக்குவில் இந்துக் கல்லூரி.

பிற்பகல்12.30மணி: மலர் வெளியீடு
**திரு. அ. பஞ்சலிங்கம்**
முன்னாள் அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் யாழ்.இந்துக்கல்லூரி.

பிற்பகல்12.45மணி: அபிமானிகள் மாலை அணிவித்து பொன்னாடை போர்தி கௌரவித்தல்.

பிற்பகல்01.00மணி: விழா நாயகர் உரை.

பிற்பகல்01.15மணி: நடன நிகழ்ச்சி
கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவிகள்

பிற்பகல்01.45மணி: நன்றியுரை.
**திரு. பொ. சந்திரநாதன்**
செயலாளர், மணிவிழாக் குழு.

*** அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ***

(சி-8657) - **மணிவிழாக்குழு.**


# மருதம் கொமினிகேசன்

T.P - 070 - 212229, 070 - 212329
FAX- 070 - 212371

* **வெளிநாட்டு 'இன்கமிங் கோல்' களுக்கு நிமிடம் 3/-**
* **போட்டோ கொப்பி ஒரு பிரதிக்கு 3/-மட்டுமே.**

**மேலும் தொகையான பிரதி எடுப்பவர்களுக்கு கழிவு வழங்கப்படும்.**
**100க்கு மேற்பட்ட பிரதிக்கு 2/- வீதம் மட்டுமே.**

* **லமினேற்றிங் (A/3 லீகல்)**

**மேலும்**

* **திருமண அழைப்பிதழ்கள் * நினைவஞ்சலி**
* **புத்தகங்கள் * கலர் போட்டோ வசதிகளுடன்**

**அதி நவீன கம்பியூட்டர் சாதனங்களின் மூலம் செய்து கொடுக்கப்படும்.**
**நெ.ம.ம.வி. தெரு,**
**நெல்லியடி, கரவெட்டி.**
(சி-8643)



## "இப்பொழுது ஒரு புதிய சேர்க்கை"

# றொக்லண்ட்




மேலதிக பலத்துடன்
39% செறிவு
ரூ. 390/-

மேலதிக பலத்துடன்
38% செறிவு
ரூ. 420/-

மேலதிக பலத்துடன்
38% செறிவு
ரூ. 385/-

இப்போது யாழ்ப்பாணத்தில் கிடைக்கின்றது

ROCKLAND
றொக்லண்ட் டிஸ்றிலறிஸ் லிமிட்டெட்
*ஏழ தசாப்தத்திற்கும் மேலான சிறந்த தரம்!*

**உத்தரவு பெற்ற சகல மதுபான விற்பனை நிலையங்களிலும் வாமாஸ் வைன் ஸ்ரோரிலும் கிடைக்கும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர்க்கந்தன் ஆலய உற்சவத்தையொட்டி இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்கா தேவி மண்டபத்தில் நடைபெற்று வரும் தெய்வீக இசைஅரங்கில் இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிமுதல் 7.00 மணி வரை எல்.திலகநாயகம போலின் இசைக்கச்சேரி நடைபெறும்.இதற்கு அணிசேர் கலைஞர்களாக கே.பத்மநாதன் (வயலின்), எஸ்.துரைராஜா (மிருதங்கம்), ஏ.செல்வரெத்தினம்(கடம்), வீ.ரமணன்(முகர்சிங்) ஆகியோர் கலந்து கொள்வார்கள். (ஜ-ரி-30-103)

* * *

நல்லூர்க்கந்தன் ஆலய உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் கானகதா வாரிதி பிரம்ம ஸ்ரீ நித்தியானந்த சர்மாவினால் நிகழ்த்தபட்டு வரும் திருத்தொண்டர் புராண தொடர் இசைச் சொற்பொழிவில் இன்று சனிக்கிழமை 'இல்லை என்னாத இயற்பகை' எனும் தலைப்பில் இசைச் சொற்பொழிவு இடம்பெறும்.

(ஜ-ரி-30-103)


சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் ஆவணித்திங்கள் 12-ம் நாள் (29.08.99) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.29 மணி தொடக்கம் 11.17 மணி வரையுள்ள துலாலக்கின சுபமுகூர்த்த வேளையில்:

எமது புத்திரன் திருநிறை செல்வன்
**நகுலேந்திரன்**
(யாழ்/போதனா வைத்தியசாலை)

எமது புத்திரி திருநிறை செல்வி
**ரேவதி**

ஆகிய இருவருக்கும் திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் சுற்றம்சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. திருமதி வ.சின்னையா
புதுவளவு, மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

திரு. திருமதி பசுபதி
அல்லாரை தெற்கு,
கொடிகாமம்.

(C/8646)



## STP Computer World

இது கணனி யுகம்!
கணனி உலகின் அனுபவத்தேர்ச்சி மிகு புத்தொளி தரும் புதிய விடிவெள்ளி உதயம்... அதுவே

**STP Computer World**

கற்றாரை கற்றாரே காமுறுவர் ஆம்! கணனி கற்றாரை அகில உலகமும் வேலை வாய்ப்புக்களுடன் அரவணைக்கக் காத்திருக்கிறது.

அரச, தனியார் அலுவலக உத்தியோகஸ்தர்களுக்கான தொழில்சார் கணனிப் பிரயோகங்கள் (Computer Applications) பிரத்தியேகமாகவும் குழுக்களாகவும் பயிற்றுவிக்கப்படும்.

மாணவர்களுக்கான அறிவியல் சார் கணனி உயர்கற்கை நெறிகளும் சிறுவர்களுக்கான அடிப்படை கணனி பிரயோகங்களும் பயிற்றுவிக்கப்படும்.

கணனி உலகின் கலங்கரை விளக்கம்
STP COMPUTER WORLD
No. 54 A,
பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (68483)



யாழ்ப்பாணத்தில் விற்பனை முகவர்கள் உடன் தேவை

**யூகே டிஷ் அன்டெனா**

மொத்த வியாபாரிகளுக்கு விஷேட விலைக்கழிவு உண்டு


உலகின் ஒரு மூலையில் தனிமைப்படுத்தப்பட்டுவிட்டதாக ஆதங்கப்படுகிறீர்களா? இல்லவே இல்லை!!



உலகோடு உங்களை நொடிப்பொழுதில் இணைக்கும் பணியை ஏற்றுக்கொள்ள யூகே நிறுவனத்தினர் தயாராகிவிட்டனர்!!!

தலைநகரிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தலைசிறந்த நிபுணத்துவம் மிக்க தொழில்நுட்பத்தில் செய்மதி டிஷ் அன்டெனாக்கள் மூலம் சர்வதேச அலைவரிசைகளை வழங்கியதில் முன்னோடிகள்

சில்லறையாகவும் மொத்தமாகவும் டிஷ் அன்டெனாக்களையும் உதிரிப்பாகங்களையும் மிகச்சாதாரண விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்



UKAAYE 169, BODHIRAJA MAWATHA, COLOMBO -11.
(Gaswork Street, Pettah)
TEL : 075-370019 FAX : 075-370018


# அரசாங்கத்தின் ஐந்தாண்டு.......

( 3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசங்கள். இவற்றை அச்சு வர்ணத்தில் கவர்ச்சியாக்கி ஆளுங் கட்சியின் போர் வீர பிரதாபங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

அது மட்டுமா?

எஞ்சியுள்ள தமிழ்ப் பிரதேசங்கள் ஐக்கிய முன்னணியின் பதவிக் காலத்தில் கைப்பற்றப்பட்டுவிடும். முழு இலங்கையும் தமது அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்து விடும் என்றும் அந்தச் சுவரொட்டிகள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது போர் தொடரப்படும்; விடுதலைப்புலிகள் வெல்லப்படுவார்கள் என்று மறைமுகமாக உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு பக்கத்தில் சமாதானம், அரசியல்தீர்வு என்று கூறிக்கொண்டு மறுமுனையில் போர் முனைப்புக் காட்டப்படுகிறது. அதனால் பொ.ஐ. முன்னணியின் உள்ளாந்தரம் போரும் தமிழரை அடக்கி ஆள்வதுமே என்பது தெட்டத் தெளிவாகிறது அல்லவா?

இதற்கு இன்னுமோர் உதாரணம்; சமாதானத்தையும், அரசியல் தீர்வையும் விரும்பும் தென்னிலங்கையின் நூற்றுக்கு மேற்பட்ட அமைப்புக்களை அடக்கியது சமாதானத்துக்கான தேசிய முன்னணி. போரை நிறுத்த வேண்டும் என்றும் அரசியல் தீர்வை கொண்டுவர வேண்டும் என்றும் கோரி இந்த முன்னணி கொழும்பில் பேரணிகளை ஏற்கனவே நடத்தியுள்ளது.

போர் நிறுத்தத்துக்கான ஓர் அடையாளமாக அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இந்த மாதம் 27,28,29 ஆம் திகதிகளில் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று ச.தே.முன்னணி கோரிக்கை விடுத்திருந்தது. அனேகமாக அரசாங்கம் இதற்கு முதலில் உடன்பாடு தெரிவிக்கும் என்றும், அதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளும் இணங்குவர் என்றும் ச.தே.முன்னணியின் பிரமுகர்கள் நம்பியிருந்தனர். ஆனால் அரசாங்கம் இந்த விடயத்தில் தாம்கொண்டிருந்த நம்பிக்கையை வீணடித்து விட்டதாகவே கருதுவதாக சமாதான தேசிய முன்னணியின் நடவடிக்கைக் குழு உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார். அவர் 26ஆம் திகதி காலை இவ்வாறு தெரிவிக்கும் வரை, அரசாங்கம் போர்நிறுத்தக் கோரிக்கை குறித்து ஆக்கபூர்வமான சமிக்ஞை எதனையும் காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சமாதானத்துக்கான தேசிய முன்னணியின் தலைவரான பேராசிரியர் திஸ்ஸ விதான அரச ஆதரவாளர் அமைச்சர் பட்டி வீரக்கோனின் அரசியல் ஆலோசகர். லங்கா சமசமாஜக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவரான டாக்டர் என்.எம்.பெரேராவின் மருமகன் முறையானவர். மேலும் முன்னணியின் நடவடிக்கைக் குழுவில் உள்ள உறுப்பினர்களில் அனேகர் அரச ஆதரவாளர்கள்.

அவ்வாறிருந்தும் அடையாள போர்நிறுத்தத்துக்கு ஆதரவாக அரசு பதிலளிக்கவில்லை. அதன் அர்த்தம்... போரைத் தீவிரமாக்கித் தொடரவே அரசு விரும்புகிறது என்பது தானே...?

* * *

அரசாங்கத்தின் தீர்வுப் பொதியை ஆதரிப்பதற்கு நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகள் பின்னடிப்பதாக ஏற்கனவே இப்பத்தியில் எழுதியிருந்தோம். தமிழ்க்கட்சிகள் ஆதரிக்காவிட்டாலும் ஐக்கியதேசியக் கட்சியுடன்பேசி ஏதோ ஒரு வகையில் இணக்கம் கண்டு அதிகாரப் பரவலாக்கல்த் திட்டத்தை அரசமைப்புச் சட்டத் திருத்தத்தோடு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதென்று அரசாங்கம் முடிவுசெய்திருந்தது. அரசின் மிக உயர்வட்டாரங்களில் இது குறித்து ஆராயப்பட்டு தீர்வுத்திட்டத்தை இம்மாத இறுதியில் நாடாளுமன்றத்தில் அனுப்புவது என்றும் உத்தேசிக்கப்பட்டிருந்தது.

எனினும் அந்த முடிவு மாற்றப்பட்டு, ஐக்கியதேசியக் கட்சியுடன் மேலும் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் இதுபற்றி தீர்க்கமான முடிவுக்குவர ஏற்பாடாகியுள்ளது. வர்த்தக சம்மேளனத்தின் முகதாவில் ஆளுங் கட்சிக்கும் ஐக்கியதேசியக் கட்சிக்கும் இடையில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளின் போது இணக்கம் காணப்படும் பகுதிகளையேனும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்ற முடியும் என்று அரச தரப்பினர் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இதற்கிடையில் சமன்சீரற்ற அதிகாரப்பரவல் முறையை ஐக்கியதேசியக்கட்சி முன்வைத்திருப்பதால் அதனைப் பரிசீலனை செய்து இணக்கத்துக்கு வரவும் அரசாங்கம் விரும்புவதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. சமன்சீரற்ற அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தில் வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கினால் தமிழ்க்கட்சிகளைத் திருப்திப்படுத்த இயலும் என்ற கருத்தும். அரசாங்க வட்டாரங்களில் நிலவுகிறதாம்.

இது இவ்வாறிருக்க அரசின் தீர்வுத்திட்டத்தை தமிழ்க்கட்சிகளை ஏற்றுக்கொள்ளும் முயற்சியாக சில நாடுகளின் உதவியை அரசாங்கம் கேட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது. அதன் பெறுபேறாக இவ்வாரத்தில் தமிழ்க் கட்சிகளை வெளிநாடு ஒன்றின் இலங்கைத் தூதரக அதிகாரிகள் அழைத்துப் பேசியுள்ளனர்.

அப்போது இனப்பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்தின் போக்கில் தாம் நம்பிக்கை இழந்துவிட்டதாக கட்சிப் பிரதிநிதிகள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர். தீர்வுப்பொதியும் இல்லை; தமிழர் பிரச்சினைக்குத் தீர்வும் இல்லை. என்ற நிலையே இப்போது தோன்றியுள்ளதாக அவர்கள் கூறியதாக அறிப்படுகிறது. தமிழர்களுக்கு நியாயமான அதிகாரங்களை கைமாற்றம் செய்யாத தீர்வுப் பொதியின் தற்போதைய வடிவம் குறித்து அவர்கள் அதிருப்தி தெரிவித்ததாகவும் அறியவந்தது.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட தமிழ்க்கட்சி ஒன்றின் தலைவர், இப்போதைய நிலையை 1979 ஆம் ஆண்டின் நிலையோடு ஒப்பிட்டு கருத்துத் தெரிவித்தாராம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகம் அ.அமிர்தலிங்கம் மேற்குறிப்பிடட ஆண்டில் லண்டன் சென்றிருந்தார். அப்போது இனப்பிரச்சினை சம்பந்தமாக ஏதாவது ஒரு முன்னேற்றம் ஏற்படுமா? என்று லண்டனில் உள்ள அக்கறையுள்ள தமிழர்கள் அவரிடம் கேட்டனர்.

ஜே.ஆர். பதவிக்கு வந்துவிட்டார். அவர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பார் என்ற நம்பிக்கை எமக்குண்டு. நிச்சயம் தீர்வு கிடைத்துவிடும் என்று அப்போது அமிர்தலிங்கம் கூறியிருந்தார் - என்பதே அந்தத் தகவல் ஆகும்.

நாமும் இன்ப்பிரச்சினைக்கு சந்திரிகா தீர்வு காண்பார் என்ற நம்பிக்கையிலேயே அவருக்கு ஆதரவு அளிக்க முடிவுசெய்தோம். நம்பிக்கொண்டு இருந்தோம். ஆனால் 1979 ஆம் ஆண்டு நிலையே மீண்டும் உருவாகியுள்ளது - என்று சம்பந்தப்பட்ட கட்சித் தலைவர் தூதரக அதிகாரிகளிடம் இப்போதைய நிலையை பெரும் மனவருத்தத்துடன் சொன்னர் என அறியவந்துள்ளது.

நம்பிக்கெட்டவன் தமிழன். நம்பிக் கெடுவதற்கு எப்போதும் தயாராக உள்ளவனும் தமிழன் என்பதனை சிங்கள அரசியல் தலைவர்கள் மிக ஆழமாக அறிந்துள்ளார்கள் என்பதனை குறிப்பிட்ட தலைவரின் ஒப்பீடு தெளிவாக்குகிறதல்லவா?

* * *

போரை நிறுத்தக்கோரி சர்வோதைய இயக்கம் நாளை கொழும்பில் மிக பிரமாண்டமான பேரணியையும், மௌனப்பிரர்த்தனையையும் நடத்தவுள்ளது. தென்னிலங்கையில் உள்ள பத்தாயிரம் கிராமங்களைச் சேர்ந்த சுமார் ஒருலட்சம் மக்கள் பேரணியிலும் மௌனப் பிரார்த்தனையிலும கலந்துகொள்வார்கள் என சர்வோதைய இயக்கத்தின் தலைவர் கலாநிதி ஏ.ரி.அரியரத்தின தெரிவித்துள்ளார். கொழும்பு விகார மகாதேவி பூங்காவில் கூடுகின்ற மக்கள் மௌன ஊர்வலம் ஒன்றை நடத்திப் பின்னர் மௌனப் பிரார்த்தனையில் ஈடுபடுவர். அவரவர் தத்தமது மதச் சடங்குகளைச் செய்தே பிரார்த்தனையை தொடங்குவர்.

மக்களின் ஆன்மீகத்தை உயர்த்துவதும் அதன்மூலம் நாட்டில் தேசிய ஒற்றுமையை உருவாக்கி யுத்தத் தீயை அணைப்பதுவுமே இச் சமாதானப் பிரார்த்னையின் நோக்கம் - என்று கலாநிதி ஆரியரத்தினா சொன்னார். இதேபோன்ற மௌனப் பிரார்த்தனையையும், பேரணியும் நாட்டின் முக்கிய நகரங்களில் வாராந்தம் நடத்தப்படும் என்றும் அவர் தகவல் வெளியிட்டார்.

எத்தனையோ பேரணிகள், கூட்டங்கள் மூலம் யுத்தத்தை நிறுத்துமாறு பல அமைப்புக்களும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்ட போதிலும் அது தனது நிலையில் இருந்து ஒரு சென்றிமீற்றர் ஏனும் அசையவில்லை. ஆரியரத்தினாவின் ஆன்மீகப் பேரணி எந்தளவிற்கு அரசாங்கத்தை அசைய வைக்கும் என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். *

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### இறைச்சிக்கோழிகள்

Broiler இறைச்சிக் கோழி தினமும் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அடை முட்டையும வாழைக்குட்டிகளும உண்டு. (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு)19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (68422)

### பொருளியல்

சுயமாகக் கற்கக்கூடிய வகையில் எழுதப்பட்ட பொதுப் பொருளாதாரம், பேரினப் பொருளாதாரம், வெளிவாரி விளைவுகள், சர்வதேச வர்த்தகம், வர்த்தக மாற்றுவீதம், அபிவிருத்திக் கொள்கைகள், நடைமுறைவிடயங்கள் ஆகிய நூல்கள் யாழ். நகரிலும், சுன்னாகம், நெல்லியடி, புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றன. ஆசிரியர் வே.கருணாகரன். (68228)

### வீடு விற்பனைக்கு

உரும்பிராய்ச் சந்தி, பலாலி வீதியில், நகைக் கடைக்குப் பக்கத்தில் 5அறைகளுடன் கூடிய சகல வசதிகளையும் கொண்டவீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- (கடிதம்) V. Panchananthan 65/1, Rudra Mawatha, Colombo - 06, தொலைபேசி எண் - 503639. (சி-8532)

### ENGLISH, MATHS

O/L இல் Credit, Distinction பெறுபேறடைய ஆரம்பத்திலிருந்து இதுவரையும் (பெறுபேறு அடையாதவர்களும், புதியவர்களும் Paper Classஉட்பட) தினமும் காலை 6 முதல் மாலை 6 மணிவரை கற்பிக்கப்படும். ஆசிரியர் B.sc.(Cey.) 85, சிவன் கோவிலடி, சிவன் கோவில் பின்வீதி, திருநெல்வேலி. (68280)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி புறோயிலர் மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு K.அழகரட்ணம், நீர்வேலி தெற்கு, கந்தசாமி கோயில் வடக்கு வீதி, T.P No. 070 - 212354, 070 - 212383. (68430)

### ஜோதிடம்

எத்தகைய தீராத பிரச்சினைகளும் தீர ஆலோசனை வழங்கப்படும். சாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். புதன்கிழமை 111/3, கோவில்வீதி, நல்லூர். ஞாயிற்றுக்கிழமையில் மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடம். பொய்யாமொழி ஜோதிடம். (68431)

### ஜோதிடம்

ஜாதகக்குறிப்புஎழுத, பலன்பார்க்க, விவாகப் பொருத்தம்,பிறந்த திகதிக்கு அதிர்ஷ்ட எண்முறைப்படி பெயர் மாற்றம், வீடு, வியாபார ஸ்தலங்களுக்கு, வசிய சௌபாக்கிய லட்சுமி, சுதர்சன முருகன், விநாயகர், யந்திரங்கள், கிரகதோஷ பரிகாரயந்திரம், விவாக தாமதத்திற்குப் பரிகாரம் காண நேரில் சந்தியுங்கள். பிரபல சோதிடர் விஷ்வ பிரம்மஸ்ரீ மா.தங்கவேல் டச்சுவீதி, சாவகச்சேரி. (68453)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- இல. 15,6ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சின்னக்கடை அருகில்) (68274)

### விண்ணப்பப்படிவம்

2001 ஆண்டு லொத்தர் மூலம் அமெரிக்க வதிவிட விசா படிவம் விற்பனையாகின்றது. நாயகபாலன் மானிப்பாய். (68474)


### ஆங்கிலம்

திங்கள், புதன் காலை 6-7, G.C.E . (O/L)வகுப்புக்கும் செவ்வாய், வியாழன் காலை 6-7 G.A.Q, B.A மற்றும் ஆசிரியர், உத்தியோகத்தர்களுக்கும் நடைபெறுகின்றன. சனி, ஞாயிறு நாள்களில் வீடுகளுக்கு சென்று அடிப்படை ஆங்கிலமும் கடந்தகால வினாத்தாள்களும் கற்பிக்கப்படும். K.சோமசுந்தரம், சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (68476)

### விற்பனைக்கு

நல்லூர் யாழ். மாநகரசபை இந்து விடுதி முன்பாக மூன்று கடைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு பா. கோபிநாத், 123,பருத்தித்துறை வீதி, நல்லூர். (68496)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 1944 – 07 – 07

உதிர்வு: 1997 – 08 – 29

### S.K.மனோகரபூபன்

அன்பான நடைமுறையும் அதிராத வார்த்தைகளும்
சிதறாத சிந்தனையால் சினக்காத உங்கள் - குணமும்
உதிராத பூப்போல உயர்வுதரும் உங்கள் - முகமும்
இருபத்தாறு ஆண்டுகள் பண்புடனே வாழ்ந்தீர்கள்
- என்னுடனே

காலத்தின் கோலமதால் காலன் இட்ட கட்டளையால்
நிழல் தந்த விருட்சம் வேரோடு சாய்ந்ததுவே
நெஞ்சங்கள் யாவும் நிசப்தமாகிப் போனதுவே
ஊமையாய் அழுகின்றோம் உரிமை உறவுகள் - நாம்

அப்பா, உங்கள் இலட்சியக் கனவுகள்
நனவாகும் வேளைதனில் அதைக்காண நீ இங்கு
- இல்லை அப்பா
அயராது உழைக்கின்றோம் உன் விழுதுகள் நாங்கள்
- இங்கே
உன் கனவுகள் நனவாகும் நாள் வெகுதூரம் இல்லை
- அப்பா
அதைக்காண எப்போ அப்பா வருவீர்கள்
கனவுகள் கண்ணீரால் நனைய தேடுகிறோம்
உன் வரவை.

**அன்பு மனைவி - கருணா,**
**அன்புப் பிள்ளைகள் - வீணா, கிட்டு,**
**அன்பு மருமகன் - பிரகாஷ்.**

49, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம். (68459)

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 10-06-1935

உதிர்வு 20-08-1997

அமரர்

### சின்னத்தம்பி சின்னையா (இராசையா)

(முன்னாள் தபாலதிபர்)
(Radio Officer, Foreign - Ship)

நாம் உயர உயரமாய் நின்றீரே! அன்பின் திருவுருவமாய் பண்பின் உறைவிடமாய், பாசத்தின் இருப்பிடமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து மறைந்துவிட்ட எங்கள் அன்புத் தெய்வமே! ஆண்டு இரண்டு சென்றிடினும் மறைந்திடுமோ நின் மலர்ந்த முகம்?

*உங்கள் ஆத்மா சாந்தியடைய கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்,**
**உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.**

மீசாலை வடக்கு,
கொடிகாமம்,
வேம்பிராய். (68411)

## நீங்காத நினைவதிலே ஓராண்டு நினைவலைகள்

தோற்றம்: 11 - 11 - 1939



மறைவு: 28 - 08 - 1998

அமரர்

### பொன்னையா - தியாகராஜா

(இ.போ.ச.சாலைப் பரிசோதகர், கிளிநொச்சி - பருத்தித்துறை)

திதி: - 17-09-1999

ஆண்டுகள் பலவானாலும்
அணையாத எம் குலவிளக்கே
கூடி வாழ்வோமென
நாம் இங்கு எண்ணியிருக்க
குறையில் எம்மைவிட்டு
பிரிந்த கதை என்ன சொல்வோம்
குறைகள் ஏதுமின்றி
எம்வாழ்வில் நிறைவுகாட்டி
வளமாய் நாம் வாழ்ந்திடவே
வாழ்வில் வழிகாட்டி
வழியில் எம்மைவிட்டு
பிரிந்தகதை என்ன? சொல்வோம்
சொன்னால் வேத வாக்கு
செய்தால் நன்மை நோக்கு
பார்வையில் கனிவு காட்டி
பாசத்தை எமக்கு ஊட்டி
பரிதவிக்க எம்மைவிட்டு
பறந்த கதை என்ன, சொல்வோம்
எட்டு திசையிலும் நாம் ஒளிர
உங்கள் வியர்வை தனை
எண்ணையாக்கி தந்தவரே
ஆனால் இன்று எங்கள்
ஒளி தன்னில் நீங்கள் வாழ
மறந்த கதை என்ன? சொல்வோம்
கண்ணீரை அறியாது களிப்புடனே
எம்மை வளர்த்தீர் அப்பாவே இப்போ
கண்ணீர்தான் வாழ்வு என
கரைகின்றோம் நாம் இங்கு
எம் கண்ணை இருளாக்கி
நீங்கள் கரைந்த கதை என்ன சொல்வோம்
புன்னகை தவழ்ந்திடும் பொலிவு கொண்ட
உங்கள் முகம்
போன இடம் தெரியாது
புலம்புதப்பா எங்கள் மனம்
துயர் நீக்க யாருமின்றி
துடிக்கின்றோம் நாம் இங்கு
தூயவரே எம்வாழ்வில்
நீங்கள் மீண்டும் வரவேண்டும்
சருகான எம்வாழ்வு
அரும்பாகி மலரவேண்டும்
சலிப்படைந்த எங்கள் மனம்
சந்தோஷம் அடைய வேண்டும்
அப்பா என்று உங்களை நாம்
அன்புடன் அழைக்க வேண்டும்
உங்கள் அன்பு பாதமதில்
பாத பூசை செய்ய வேண்டும்
துயர் கொண்ட எங்கள்மனம்
தூவுதப்பா கண்ணீர்ப் பூக்கள்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
ஆசிக்கின்றோம் நாம் இங்கு

**மனைவி, பிள்ளைகள்,**
**சகோதரர்கள், மைத்துனர்கள்,**
**உறவினர், நண்பர்கள்.**

புஸ்பா ஸ்ரோர்ஸ்,
இல.192, கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (68512)

## மல்லாகம் சந்தை திறந்துவைக்கப்பட்டது

வலிகாமம் தெற்கு,ஓக28

ஐ.நா.அபிவிருத்தித் திட்ட அமைப்பின் உதவியுடன் வலிகாமம் வடக்கு பிரதேச சபையினால் மல்லாகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள மத்திய சந்தை கடந்த புதன்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

ஐ.நா.அபிவிருத்தித் திட்டஅமைப்பின் திட்டமிடல் முகாமையாளர் காரி. கே.ஹெல்செத் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சந்தைக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

மரக்கறிச் சந்தை, மீன் சந்தை, இறைச்சிக் கடைகள் ஆகியவற்றை தனித்தனியாகக் கொண்டதாக இச் சந்தை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இச்சந்தை நிறுவப்பட்டதனால் வலி-வடக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பல கமக்காரர்கள் தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தவும், வியாபாரிகள் தமது முயற்சிகளை மேற்கொள்ளவும் வசதிகள் ஏற்பட்டுள்ளன.

சுமார் பத்துப் பரப்புக் காணியில் அமைந்துள்ள இச் சந்தையின் கட்டட வேலைகள் கடந்த ஏப்ரல் மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டன. (-152)

## விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு

சண்டிலிப்பாய், ஓக.28

ஆனைக்கோட்டை, கரைப்பிரான் ஆதவன் பாலர் பாடசாலைக்கு யுனிசெவ் நிறுவனம் ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களை கடந்தவாரம் வழங்கியுள்ளது.

ஊஞ்சல், ராட்டினம் உட்பட பல்வேறு விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. (இ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடி அரங்கு

கடந்த புதன்கிழமை இரவு பி.பி.ஸி தமிழ்ச்சேவை யில ரெலோ அமைப்பின் முதல்வரும்,எம்.பியுமான அடைக்கலநாதனின் (செல்வத்தின்) பேட்டி ஒன்று ஒலி பரப்பாகியது.

"உங்கள் அமைப்பு யாழ்ப்பாணத்தில்வர்த்தகர்களி டம் அச்சுறுத்தி நிதி அறவிட்டு வருவதாகச் செய்திகள் வருகின்றனவே?" என்று பேட்டியின்போது வினா எழுப் பப்பட்டது.

"அது முற்றிலும் தவறு. அதற்கு நாங்கள் அனுமதிக் கவில்லை. எங்கேனும் ஓரிரு சம்பவங்கள் நடக்கலாம். அவற்றைத் தடுக்கவும், உரிய நடவடிக்கை எடுக்கவும் நாங்கள் பின்னிற்கவில்லை. அத்தகைய சம்பவங்கள் இடம்பெற்றால் உடன் எமக்கு அறியத்தரும்படியும் நாம் தீவிர நடவடிக்கை எடுப்போம் என்றும் பொதுமக்களுக்கு அறிவித்திருகின்றோம்". - என்ற சாரப்பட ரெலோ முதல் வரின் பதில் அமைந்தது.

நல்ல பதில். நல்ல தீர்மானம். ஆனால் உறுதியாகச் செயல்படுத்தப்பட்டால்தான் பயனுண்டு.

இந்தச் சந்தர்ப்பத்தில், இது தொடர்பாக கடந்த டிசெம்பர் 13ஆம் திகதி உதயனில் பிரசுரமான - அடைக் கலநாதன் எம்.பியின் - அறிக்கையின் சில பகுதிகளை மீண்டும் இங்கு பிரசுரிப்பது பொருத்தமானது என நினைக் கிறோம்.

*"யாழ் மக்களிடம் இருந்து நிதிவசூல் செய்வதோ அல்லது அன்பளிப்புகளைப் பெறுவதோ இல்லை என ரெலோ தலைமையகம் தீர்மானித்துள்ளது.*

*யாழ். மக்களிடம் இருந்து ரெலோ உறுப்பினர்கள் நிதி வசூல் செய்தாலோ அல்லது அன்பளிப்புப் பெற் றாலோ அவர்கள் இனங்காணப்பட்டு அவர்கள் மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படும்.*

*இத்தீர்மானம் குறித்து ரெலோ அமைப்பின் யாழ். மாவட்டக் காரியாலய உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப் பட்டுள்ளது.*

*இந்த நிலையில் பொதுமக்கள் நிதியையோ அல்லது பொருள்களையோ அன்பளிப்பாக அவர்களிடம் கொடுக் கக்கூடாது.*

*இதனை எமது உறுப்பினர்கள் மீறினால் 33, சென் பிற்றர்ஸ் பிளேஸ், கொழும்பு - 3 இல் உள்ள எமது தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு, பொதுமக்கள் தமது முறைப்பாட்டைத் தெரிவிக்கலாம். அல்லது 074 - 512891 அன்றேல் 074 - 512892 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு முறைப்பாட்டைத் தெரிவிக்கலாம். நிதி வசூல் செய்தால் அல்லது அன் பளிப்புகளைப் பெறுவது தொடர்பாக முறைப்பாடு கிடைத் தால் சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்."*

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட சாரத்தை ரெலோ முதல்வர் பி.பி.ஸி. பேட்டியில் மீண்டும் உறுதிப் படுத்தியிருக்கின்றார்.

எனவே யாழ். வர்த்தகர்கள், பிரமுகர்கள், இது விடயத்தில் தெளிவான போக்கைக் கடைப்பிடிக்க வேண் டும். கலந்துரையாடலுக்கு வாருங்கள் என 'அன்பு' அழைப்பு விடுப்பதும், வராவிட்டால் ஏன் வரமுடியாது என்பதை எழுத்தில் தாருங்கள் என 'பரிவோடு' கேட்ப தும் - இந்த அறிவிப்புகளுடன் பார்க்கும்போது - இடை யில் நிற்கின்ற சில 'குறுநடப்புகளின்' வேலையோ என்று சந்தேகிக்கத் தோன்றுகின்றது.

எது, எப்படி என்றாலும் ரெலோ முதல்வரின் பகிரங்க அறிவிப்பை உண்மையானதாக - உளப்பூர்வமானதாக - இப்போதைக்குக் கருதுவோம்.

வர்த்தகர்கள் 'நமக்கேன் வீண் வம்பு நாம் அமைச் காகக் கொடுப்பதைக் கொடுத்து விட்டு, அதற்கேற்றவாறு பொருள்களில் விலையைக் கூட்டி மக்கள் மீது கட்டிய டிப்போம்' என்ற குறுக்குத்தனமான புத்தியை விடுத்து, இத்தகைய நெருக்குதல்கள் ஏதும் வந்தால் அவற்றைப் பகிரங்கப்படுத்த வேண்டும்; நெருக்குவோருக்கு அவர்க ளின் முதல்வரின் அறிக்கையைச் சுட்டிக்காட்ட வேண் டும்; அதற்கும் சரிவராவிட்டால் சம்பந்தப்பட்ட கட்சி முதல்வருக்கு அறிவிக்க வேண்டும்; இல்லையேல் உரிய வர்களுக்கும் பொதுசனத் தொடர்பு சாதனங்களுக்கும் பகிரங்கப்படுத்த வேண்டும்.

இங்கு ஒவ்வொருவரும் நமக்கேன் வம்பு என்று பாராமுகமாக இருந்து விட்டால் எல்லோருக்கும் வம்பா கவே அதுமுடியும் என்பதை அனைவரும் உணர வேண் டும்.

* * *

குற்றவியல் நடவடிக்கைகள் தொடர்பாக யாழ்ப் பாணத்தில் பொலிஸாருக்குப் புறம்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா? அத்தகைய நடவடிக்கைக ளுக்கு பொலிஸார் அங்கீகாரமளிக்கின்றார்களா?

- இத்தகைய சந்தேகம் யாழ்ப்பாணம் நீதிமன்றத் துக்கு எழுந்திருக்கின்றது.

இது குறித்து விசாரிப்பதற்காக வடபிராந்திய பிரதிப் பொலீஸ்மா அதிபரையும், யாழ் பொலிஸ் நிலைய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரையும் நாளை மறுதினம் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிவான் உத்தரவிட்டிருக் கின்றார்.

'டிராக்டர்' கொள்வனவு தொடர்பாக இரு சாராருக்கு இடையில் ஏற்பட்ட சர்ச்சையை அடுத்து டிராக்டரை ஒரு கட்சியினர் தமது முகாமுக்குக் கொண்டு சென்று தடுத்து வைத்திருந்தனராம்.

'டிராக்டரை' விற்றவர் அந்த முகாமுக்கு அழைக் கப்பட்டு அவரது அடையாளஅட்டை மற்றும் ஆவ ணங்கள் பறிமுதல் செய்யப்பட்டிருந்ததாகவும் -

நீதிமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. இதனை அடுத்து விவகாரம் பொலீஸுக்குப் போய், பொலீஸார் 'டிராக்டரை' தமது காவலுக்குக் கொண்டு வந்ததாகவும் கூறப்பட்டது. இந்த இடத்தில் மீண்டும் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கின்றது.

குடாநாட்டில் தனது சிவில் நிர்வாகம் முழுஅளவில் உள்ளது என்று சர்வதேச உலகுக்குக் கண்பூச்சுக் காட்டுவதற்காகவே நீதிமன்றங்களை யாழ்ப்பாணத்தில் இயங்க வைக்க அரசும், இராணுவமும் முயல்கின்றன என்பது புலிகளின் குற்றச்சாட்டு. அதை உறுதிப்படுத் துவது போலவே இங்கு சம்பவங்கள் நடக்கின்றன.

ஒரு கொலைச்சம்பவம் தொடர்பாக விசாரிக்கப்பட வேண்டிய ஒரு கட்சியின் உறுப்பினர் ஒருவர் நீதிமன் றுக்கு சமூகமளிக்காமல் இருந்து வருகின்றார் என் பதற்காக அவரைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படி நீதிமன்று நோட்டீஸ் பிறப்பித்திருக்கின்றது. ஆனால் நீதிமன்ற உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட வில்லை. தங்களால் கைதுசெய்ய முடியாது இருப்ப தாக பொலிஸ் கூறுகின்றது. கைதுசெய்வது எங்கள் வேலையில்லை என்று படைத்தரப்புக் கருதுகின்றது.

ஆனால் அந்த உறுப்பினரோ 'ஹாயாக' நகரில் நடமாடுகின்றார். அவரை பொலிஸ் நிலையத்துக்குள் ளும், இராணுவத்தின் சிவில் நிர்வாக அலுவலகத்துக் குள்ளும்கூட இப்போது நமது செய்தியாளர்கள் பலதட வைகள் கண்டுள்ளனர்.

இப்போது கூறுங்கள். புலிகளின் குற்றச்சாட்டை நிரூபிக்கும் போக்குதானே இது!

* * *

'குடி குடியைக் கெடுக்கும்' கசிப்பு என்றால் சொல லவே வேண்டாம். அதிலும் மோசம்.

கசிப்புக் காய்ச்சுவோரை சட்டத்தின்முன் நிறுத்த சட்ட ஏற்பாடுகள், அதிகாரிகள் உள்ளனர். ஆனால் பல இடங்களிலும் வேலியே பயிரை மேய்வதாகக் குற்றச்சாட்டு.

இது போன்ற சுவையான சம்பவம் ஒன்று கடந்த சில வாரங்களுக்கு முன்னர் நீர்வேலிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. இது விவகாரத்தில் சம்பந்தப்பட்ட மிக உயர்ந்த அதிகாரி ஒருவர் தமது வலதுகரமான எடுபிடி ஒருவருடன் அப்பகுதிக்கு தமது வழமையான'விசிட்டை' மேற்கொண்டார். 'மாமூல்' வாங்குவதற்காக. பொலிஸா ருடன் வந்து தொல்லை கொடுப்பார்கள் என்ற அச்சத் தில் 'வடி'வேலர்கள் ஆயிரம் இரண்டாயிரங்களை 'துரை' மாருக்கு நைஸாகத் தள்ளி விட்டு தமது 'கிபீர்' பிஸ் னஸில் கருமமே கண்ணாகிவிடுவர். எல்லாம் அந்தப் பெருமாள் வைகுந்தவாசனுக்கே வெளிச்சம்!

இப்படி 'கிம்பலத்தை' கலெக்ட் செய்ய மோட்டார் சைக்கிளில் வந்த சமயம் இருவர் குழுவை, இளைஞர் அணி ஒன்று தலையிட்டு மொத்துவதற்கு முயற்சித்த தாம்.

இளைஞர்கள் ஆத்திரத்துடன் மொழிந்த திட்டல்கள், தாக்குதல்களாக மாறிவிட முன்னர் மாமூல்காரர்கள் காணாமல் போயினர்.

சரியாக இயக்கத்தக்கவர்கள் இல்லாததால் இந்த லஞ்ச, லாவண்யங்கள், சமூகச் சீரழிவுகள் தலைவிரித் தாடுகின்றன என்று பெருமூச்சு விடுகின்றார்கள் பொது மக்கள்.

-மின்னல்.


வடலியடைப்பு-புதறாணை

## ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்
## பூங்காவன விஞ்ஞாபனம்

இன்று (28-08-99) சனிக்கிழமை காலை 10 மணியளவில் விஷேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து விநாயப் பெருமான், முருகப்பெருமான் சமேதராக மாலை 6 மணிக்கு விசேட பூங்காவில் எழுந்தருளுகின்றார்.

தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட அன்னப்பட்சியில் சுவாமி வீதி உலா இடம்பெறும்.

**பூங்காவன விசேட நிகழ்ச்சிகளாக -**

* மேளக்கச்சேரி - எம். கோவிந்தசாமி குழுவினர் (வடலியடைப்பு)
என். ஜெயராம் குழுவினர் (வடலியடைப்பு)
* நாதஸ்வரம் - நாதஸ்வரக் கலாநிதி, அளவையூர் பத்மநாதன் குழுவினர்
* வில்லிசை - சிறுப்பிட்டியூர் சத்தியதாஸ் குழுவினர்.
('பக்தன் உஷா' - என்னும் பொருள்பற்றி)
* இன்னிசைக் கானங்கள்: யாழ். முன்னணி ராகம்ஸ் குழுவினர்
* ஒளி அமைப்பு - ஆனந்தன், கொக்குவில்.
* ஒலி அமைப்பு - செல்வம் பண்டத்தரிப்பு.

**பூங்காவன விழா சிறப்புற வாழ்த்துவோர்:**

**ராகம்ஸ் பட்டுச் சோலை**

24, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(சி-8659)


# 'போலி' மருத்துவர்கள் விவகாரம்; சித்தமருத்துவ மாணவர் விளக்கம்

*கடந்த 7ஆம் திகதி சஞ்சீவியின் அதிரடி அரங்குப் பகுதியில் போலி வைத்தயர்கள் குறித்து பிரசுரமான தகவல்கள் தொடர்பாக சித்த மருத்து வத்துறை மாணவர்கள் சார்பில் ஒரு வர் அனுப்பிவைத்த மடல் இங்கு பிர சுரமாகின்றது.அதிரடிஅரங்கில் கொடுக் கப்பட்ட தகவல்களையும் சித்தமருத் துவத்துறை மாணவர்களின் விளக்கங் களையும் சீர்தூக்கிப் பார்த்து சரியான முடிவுக்கு வருவது வாசகர்களைப் பொறுத்தது.*

போலி வைத்தியர்கள் குறித்து அதிரடி அரங்கில் வெளியான தகவல் எம்மைப்போன்ற சித்தமருத்துவத்துறை மாணவர்களுக்கு மிகவும் மனவேதனை யைத் தந்துள்ளது.

இன்று சுதேச வைத்தியர்கள என்ற போர்வையில் பதிவு செய்யப்பட்டு பலர் வைத்தியர்களாக இருக்கின்றார்கள். அவர்களின் பிரிவுகள் வருமாறு:-

* யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையில் ஐந்து வருடங் கள் செயல் முறையுடன் கூடிய - விஞ்ஞான ரீதியான மருத்துவக் கல் வியை முடிப்பதுடன் ஒருவருட உள் ளக பயிற்சியை முடித்து வெளியேறும் BSMS வைத்திய பட்டதாரிகள்.

* பரம்பரையாக வைத்தியம் செய் வோர்.

*அங்கீகரிக்கப்படாத சுதேச மருத் துவக் கல்லூரிகளில் கல்வி கற்றோர்.

*பரம்பரையோ எதுவித மருத்துவ கல்வி அறிவோ அற்றோர்.

இப்படி பலதரப்பட்ட வைத்தியர் கள் இருப்பதனால் மக்கள் மத்தியில் ஒரு தெளிவற்ற தன்மை இருந்து வந் திருக்கின்றது.

ஆனால் இந்நிலை சிறிது சிறிதாக மாறி சித்த மருத்துவப் பட்டதாரி வைத் தியர்களில் - அவர்களின் திறமையில் - நம்பிக்கை ஏற்பட்டு வரும் இவ் வேளையில் சித்த மருத்துவ பட்டதாரி களையும் போலி வைத்தியர்கள் என கூறுவது எம்மை மிகவும் மனவேத னைக்கு உள்ளாக்கியுள்ளது.

இன்று யாழ்ப்பாணத்திலுள்ள போர்ச் சூழலில், எம்மண்ணையும் மக் களையும் மறந்து மண்ணை விட்டு ஓடாது, தாம் கற்ற கல்வியின் மூலம் மக்களின் ஆரோக்கியத்தைப்பேண பெரும் பங்காற்றுகிறார்கள் எமது சித்த மருத்துவப் பட்டதாரிகள்.

சித்த மருத்துவப் பட்டதாரிகளை போலி வைத்தியர்கள் என்று கூறு வோருக்கு எமது கல்வி முறை பற்றிய விளக்கத்தைத் தருவது எமது கடமை ஆகும்.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரின் நேரடிக் கண்காணிப் பிலுள்ள ஒரு துறையே சித்த மருத்து வத்துறை. இங்கு கல்வி கற்கின்ற, கல்வி கற்று பட்டம் பெற்று வெளி யேறிய அனைவரும் ஜி.சீ.ஈ. உயர் தரத்தில் உயிரியல் விஞ்ஞானப் பிரி வில் கற்று பல்கலைக்கழகத்துக்கு செல்லும் அடிப்படை தகுதிகளைப் பூர்த்தி செய்தவர்களே ஆவர். இந்த நிலையில் சித்த மருத்துவத்துறை யில் 5வருடங்கள் செயன் முறையுடன் கூடிய - விஞ்ஞான ரீதியிலான - மருத் துவக் கல்வியையும் ஒரு வருட உள் ளகப் பயிற்சியையும் முடித்து வெளி யேறுபவர்களுக்கு சித்த மருத்துவமும் சத்திர சிகிச்சைமானியும் (BSMS) - அதாவது Bachelor of Siddha Medicine and Surrgery என்ற - பட் டம் வழங்கப்படுகிறது.

எமக்குக் கற்பிக்கப்படுகின்ற பாடத் திட்டம் மேற்கத்திய வைத்தியர்க ளுக்கு உள்ளது போன்றதே. எமக்கு உடற் கூற்றியல்(Anatomy), உடற் றொழிலியல்(Physiology), பிணியி யல்(Pathology) பெண்ணோயியல் (Hynaecology), சத்திரசிகிச்சை (Su-rgery) போன்ற பாடங்களுடன் சத்த மருத்துவத்திற்கே சிறப்பான குண பாடம்(Materia medica), மருந்தியல் (Pharmacy) போன்ற பாடங்களும் கற் பிக்கப்படுகின்றன. அத்துடன் குண பாடம், மருந்தியல் போன்ற பாடங் களை கற்கும் போது மேற்கத்திய (ஆங்கில) மருந்துடன் ஒப்பிட்டே கற் கின்றோம். ஏனெனில் பல ஆங்கில மருந்துகள், மூலிகைகளிலுள்ள இரசா யன கூறுகளைப் பிரித்தெடுத்து தயா ரிக்கப்படுவதனாலும் நோயாளி மேற் கத்திய மருந்தை உட்கொண்ட பின் எம்மிடம் வந்தால் அதன் பக்க விளை வுகளைப் பார்த்து சிகிச்சை அளிக்க வேண்டும். என்பதனாலும் ஆகும் ஆகவே இவ்வாறு கல்விகற்று வெளி யேறும் 'சித்த மருத்துவமும் சத்திர சிகிச்சைமாணி' என்ற பட்டம் பெற்ற வைத்தியர்கள் போலி வைத்தியர் களா? அப்படியாயின் பல்கலைக்கழ கத்தால் வழங்கப்பட்ட இந்தப்பட்டமும் போலியானதா?

சித்த மருத்துவம் எமது மக்க ளுக்குரிய பக்கவிளைவுகளற்ற - எமது சீதோஷண நிலைக்கேற்ற - மிகச்சிறந்த வைத்தியம் ஆகும். இதை அழியாமல் காப்பது எமது கடமை.

எமது சித்தமருத்துவ பட்டதாரிகள் சிலர் ஆங்கில மருந்து பாவனைக்கு பின்வரும் காரணங்களைக் கூறலாம்.

1) நாட்டுச் சூழ்நிலை காரணமாக நாவின்னவிலுள்ள நமது மருந்துக் கூட்டுத்தாபனத்திலிருந்து மருந்துகள் இங்கு கொண்டுவரப்படவில்லை.

2) அவசரமான இந்த உலகத்தில் இலகுவாக உள்ளெடுக்கக் கூடியதும், கவர்ச்சியான நிறம், மணம், உடைய துமான மருந்துகளையே மக்கள் விரும்புகின்றார்கள். நிதி வளம் போதா மையால் தனியார் வைத்தியர்கள் சித்தமருந்துகளை இவ்வாறு உற்பத்தி செய்யமுடியாது. ஆனால் இந்தியா வில் கவர்ச்சியான நிறம், மணம், சுவையில் நவீன மயப்படுத்தப்பட்டு ஆங்கில மருந்துகள் போன்ற குழிகை கள் tablets, capsule,tonic, syrups போன்றவையும் நவீன மயப்படுத்தப் பட்ட Ointment போன்றவையும் - ஏன் ஊசி மருந்துகள் கூட - நவீன தொழில் நுட்ப இயந்திரங்களை பயன் படுத்தி தயாரிக்கின்றார்கள். இம்மருந் துகள் கூட இறக்குமதி செய்யப்பட்டு தரப்படவில்லை.

3) ஒரு நோயாளியி தீவிர அவஸ் தையில் வருந்தும் நிலையில் தான் கற்ற கல்வியைப் பயன்படுத்தி வீரியம் குறைந்த ஆங்கில மருதைப் பாவிப்பத னால் சித்த மருத்துவர்கள் போலி வைத்தியர் ஆகின்றார்களா?

4) சித்த மருத்துவ வைத்திய பட்டதாரிகள் பட்டம் பெற்று வெளி யேறினாலும் நியாய விலையில் சித்த மருந்துகளைப் பெறமுடியாமையாலும் அரசாங்க வேலைவாய்ப்பு கிடைக்கும் மட்டும Private practice இற்காக மேற் கூறிய காரணங்களால் தமக்குரிய அறிவைப் பயன்படுத்தி ஆங்கில மருந் தைப் பாவிக்கின்றார்கள். இதனால் இவர்களைப் போலி என்று கூற முடி யுமா?

எமது பிரச்சினைகளை எமது சமூ கமோ அல்லது இதில் சம்பந்தப்பட் டோரோ தீர்த்து வைப்பார்களாயின் ஆங்கில மருந்துப் பாவனையற்ற சிறந்த சித்த வைத்தியர்களாக இவர் கள் செயற்படுவார்கள் என்பதில் இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியாது.

இதில் சிலவகை மருந்துகளை வைத்தியர்களின் சிபாரிசு இல்லாமலே Pharmacy இல் வாங்கக் கூடியதாக இருக்கும் போது - உதாரணமாக Pa-nadol என்ற ஆங்கில மருந்தை சாதா ரணமாக பாமரமக்கள் வாங்கிப் பாவிக் கலாம் என்றால் - ஆங்கில மருந்து பற்றிய அறிவையும் பெற்ற பின் இவ் வகையான வீரியம் குறைந்த மருந் துகளைப் பாவித்தால் அவர்களபோலி வைத்தியர்கள் ஆகிவிடுவரா?

அடுத்து சித்த மருந்துகளுடன் ஆங்கில மருந்தை இடித்துக் கலந்து பாவிப்பதாக்க் குறிப்பிட்டுள்ளது. இது பயங்கர ஆபத்தை விளைவிக்கக் கூடி யது. இச்செயல் யார் புரிந்தாலும் வன் மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது. ஆனாலும் எமது சித்த மருத்துவத் துறை பட்டதாரி வைத்தியர்கள் இவ் வாறான செயலில் ஈடுபட்டிருக்க மாட் டார்கள்.

இன்று யாழ் மக்களின் அபிலா சையை பூர்த்தி செய்யும் ஒரே பத்தி ரிகை உதயன் - சஞ்சீவியே. ஆகை யாலும் மக்களைத் திசைதிருப்பும் சக்தி பத்திரிகைத் துறைக்கு உண்டு என்பதனாலும் குழம்பியுள்ள மக்க ளுக்கு இக்கருத்துக்களை சஞ்சீவி அதிரடி அரங்கின் மூலமோ அல்லது செய்தியின் மூலமோ தெளிவு படுத்து மாறு அன்புடன் கேட்டுக் கொள்கி றேன்.

**இ. மணிவர்ணன்**
(சித்த மருத்துவத்துறை மாணவன், யாழ் பல்கலைக்கழகம்.)


## முக்கிய அறிவித்தல

**இன்று (28-08-99) நடைபெறவிருந்த, பருத்தித்துறை பிரதேச மலர் வெளியீட்டு விழா தவிர்க்க முடியாத காரணத் தால் 18-09-99 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதென்பதை அறியத் தருகின்றோம்.**

**- மலர் வெளியீட்டுக் குழு**

பருத்தித்துறை. (68531)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வ ஆசி வேண்டி நேற்றுப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஓக.28

தொடரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து மக்கள் அமைதியாகவும் சுதந்திரமாகவும் வாழத் தெய்வ ஆசி வேண்டி யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் வெள்ளிக்கிழமை தோறும் நடத்தப்படும் கூட்டுப்பிரார்த்தனை நேற்றும் இடம்பெற்றது.

பிற்பகல் 5 மணி தொடக்கம் பிற்பகல் 6மணி வரை நடத்தப்பட்ட இந்த வழிபாட்டில் நியந்திரி சார்பில் பிரம்மஸ்ரீ காரை கு.சிவராஜசர்மா, அருட்தந்தை ஜெயசீலன், அருட்தந்தை றெஜி இராஜநாயகம் உட்பட நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

நேற்றைய பிரார்த்தனையை விவசாய பீட மாணவர்கள் ஒழுங்குசெய்து நடத்தியதுடன் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக மாணவர் ஒன்றியத்தினால் திரட்டப்படும் துயர் துடைப்பு நிதிக்கும் தங்கள் பங்களிப்புகளைச் செலுத்தினார்கள்.

அடுத்த கூட்டுப் பிரார்த்தனை எதிர் வரும் வெள்ளிக்கிழமை கலைப்பீட மாணவர்களால் நடத்தப்படும்.(உ-9)

## ஒத்திவைப்பு

யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் பிரதி ஞாயிறு தோறும் யாழ். இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பயிற்சிவகுப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை இடம் பெறமாட்டாது எனவும் -

அடுத்தவாரம் முதல் வகுப்புகள் வழமைபோல் நடைபெறும் எனவும்-

உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் நாளை இடம்பெறவிருக்கும் சுடர் இ. மகேந்திரனின் மணி விழா நிகழ்ச்சிகளை முன்னிட்டு நாளைய பயிற்சி வகுப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## கிரிக்கெட் கழக சந்திப்பு

யாழ்ப்பாணம், ஓக.28

டொனால்ட் கணேசகுமார் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்டு வந்த கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நாளை இடம்பெறவிருக்கும் இறுதி ஆட்டத்தில் பங்குபற்றும் யாழ். பல்கலைக்கழகம் மற்றும் கொக்குவில் கே.ஸி.ஸி. ஆகிய அணிகளின் பிரதிநிதிகளுக்கும், சுற்றுப்போட்டியை ஏற்பாடு செய்துள்ள சென்றலைட்ஸ் வி.க. பிரதிநிதிகளுக்கும் இடையில் இன்று பி.ப. 3.00 மணிக்கு யாழ். கிரிக்கெட் பயிற்சி நிலையத்தில் சந்திப்பு ஒன்று இடம் பெறவிருக்கின்றது.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளது. (உ-3)

## பெற்றோரைத் தேடும் சிறுவன்

யாழ். பஸ்நிலையத்தில் பெற்றோரால் தவறவிடப்பட்ட 4 வயதுச் சிறுவன் ஒருவன் பெற்றோரைத் தேடியபடி ஈ.பி.டி.பி. யாழ். அலுவலகத்தில் உள்ளான்.

நகரில் அழுதபடி திரிந்த அந்தச் சிறுவன் சில வர்த்தகர்களால் ஈ.பி. டி.பி. அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சந்தியா டெனிற்ராஜ் என்று தன் பெயரைக் கூறும் அந்தச் சிறுவன் வெள்ளை ரீ சேட்டும், நீலக்காற்சட்டையும் அணிந்துள்ளான். (உ-3)

## போக்குவரத்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படியும் --

வீதியில் சமாந்தரமாக சைக்கிளில் செல்வோரை விசேடமாகக் கவனித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படியும் –

நெல்லியடிப் பொலீஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார். (உ-3)

# மேலதிக செயலர்கள் பதவியேற்பு

கொழும்பு, ஓக.28

கல்வி, உயர்கல்வி அமைச்சு மேலதிக செயலாளராக எஸ்.தில்லைநடராஜா கடந்தவாரம் பதவியேற்றுள்ளார்.

கிளிநொச்சி அரச அதிபராக நீண்டகாலம் பணிபுரிந்த இவர் அண்மையில் இந்து கலாசார திணைக்களப் பணிப்பாளராக பதவியேற்று கடமை புரிந்தார்.

கல்வி, உயர்கல்வி அமைச்சுச் செயலாளராகப் பணிபுரிந்த எஸ்.யோகநாதன் மரணமானதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே அவர் நியமனம் பெற்றுள்ளார்.

பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்த முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் எஸ்.தர்மகுலசிங்கம் இனவிவகார, நல்லிணக்க அமைச்சு மேலதிக செயலாளராக நியமனம் பெற்றுள்ளார். (உ-3)

## பலகல்ல ஹவாய்க்கு.

வவுனியா, ஓக.28

தென்னாசிய நாடுகளின் பாதுகாப்பு சம்பந்தமாக ஹவாய் தீவில் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் 4 தினங்களுக்கு நடைபெறவிருக்கும் கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக வன்னிப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல தலைமையிலான இராணுவ அதிகாரிகள் குழுவினர் நாளை ஹவாய்த் தீவுக்குப் பயணமாகின்றனர். (உ-7-164)

## மரண அறிவித்தல்

### இராயப்பு இராஜேந்திரம்

வசாவிளான் - வடமுனை உத்திரிய மாதா கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இராயப்பு இராஜேந்திரம் 26.08.99 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பாக்கியத்தின் அன்புக்கணவரும் தேவராஜா, ஜெகவனிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், அன்ரனிராஜ், யசிந்தா, ஆகியோரின் மாமனாரும் ராஜ்குமார், கிசாணா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 27.08.99 அன்று கீறிப்பல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:-
**அ.ராஜ்குமார்**
(பேரன்)

வனிதா இல்லம்,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

(சி/8676)


**Institute of Informatics Studies**
**Jaffna, Sri Lanka.**

(பிரித்தானிய IMIS நிறுவனத்துடன் இணைந்து செயற்படும் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்)

TelePhone: 021-2831 Email: iis@ sltnet.lk.

**கணனிப் பயிற்சி நெறிகள்**

ஆரம்பம்: 05.09.1999 பகல் 10.00 மணி

இக் கல்வி ஆண்டில் மிக நவீன கணனித் தொழில் நுட்ப அறிமுகங்களுடன் ஆரம்பமாகும் பயிற்சி நெறிகள்.

**Diploma Courses:**

1.Advanced Diploma in Applied Computer Science
(பிரித்தானிய IMIS ஆஸ்திரேலிய ACS பரீட்சைக்கான முழு பாட விதானங்களையும் உள்ளடக்கியது)
2.Diploma in Computer programming.
3.Technician Diploma in Computer Hardware
4. Diploma in Microsoft office-2000

**Certificate Courses:**

* WINDOWS 98/2000/NT
* MS WORD 2000
* MS EXCEL 2000
* MS ACCESS 2000
* MS POWER POINT 2000
* VISUAL BASIC
* C/C++
* PASCAL
* AUTO CAD
* PAGE MAKER
* COREL DRAW
* Dbase



இப் பயிற்சி நெறியில் இணைந்து கொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும் **இன்ரநெற், ஈமெயில்** என்பவற்றில் மேலதிகப் பயிற்சிகள் அளிக்கப்படும்.

- உங்கள் பயிற்சிக்கான கட்டணங்களை தவணை முறையில் இலகுவாக செலுத்திக் கொள்ள முடியும்.
- எமது மாணவர்களிற்கு அறிவியல் ரீதியான (மருத்துவம், இலத்திரனியல், பொறியியல், ஆங்கிலம், கலைக் களஞ்சியம், மேலும் பல .. ) CD நூலகவசதிகள்.
- மாணவர்களிற்கு போதிய அளவு செய்முறைப் பயிற்சிகளும், நூலக வசதிகளும் அளிக்கப்படுகின்றது.
- மாணவர்களின் வசதிக்கேற்ப வாரநாட்களிலும், வார இறுதி நாட்களிலும் காலை, மாலை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும்.
- அலுவலக அதிகாரிகள், ஊழியர்களின் விருப்பத்திற்கேற்ப பிரத்தியேக வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:

**தலைமை அலுவலகம்.**

IIS, 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**கிளை நிறுவனங்கள் :**

- IIS, நாவலர் மடம், நெல்லியடி.
- IIS, "சேர்க்கிள் சென்ரர்", சங்கானை.
- IIS, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.



**அன்பு வெள்ளம் தொடர்கிறது.**

**A.V.M.ராஜன், புஷ்பலதா**

**குழுவினர் பங்குபற்றும் மாபெரும் நிகழ்ச்சி**




| காலம் | நேரம் | இடம் |
|---|---|---|
| ஓகஸ்ட் 28 முதல் 29 வரை | மாலை 3.30 | யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம் வட்டுக்கோட்டை. |
| ஓகஸ்ட் 30 முதல் 31 வரை | மாலை 3.30 | UC மைதானம் சாவகச்சேரி. |
| செப்ரெம்பர் 01 முதல் 02 வரை | மாலை 3.30 | திக்கமுளை மைதானம், பருத்தித்துறை. |
| செப்ரெம்பர் 03 முதல் 05 வரை | மாலை 3.30 | துரையப்பா விளையாட்டு அரங்கு, யாழ்ப்பாணம். |

(சி-8312)

(நேரங்கள் யாவும் புதிய நேரப்படி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28-08-1999இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சஞ்சீவி

# சஞ்சிகை


துஷா ஒப்ரிசன்ஸ்

கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர்கள்.



544,ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம். (68276)


சஞ்சீவி 28-08-1999

கருத்துக் கலசம் மயூரா

## சொல்லும் செயலும்

***நன்றாகப் பேசுவது நல்லது தான். ஆனால் நன்றாகச் செய்வது அதனிலும் நல்லது.***

*- ஓர் அறிஞர்.*

இன்றைய உலக மக்களுக்கு மிகக் குறிப்பாக எமது மக்களுக்கு பொருத்தமான வாக்கு இது. எம்மில் - மக்களில் - மிகப் பலரும் வாய்ச் சொல் வீரர்களே. நிறையச் சொல்வார்கள்; சொல்வதில் ஒரு சதவீதமேனும் செய்கிறார்களா என்பதே சந்தேகம்!

சொல்லொன்று; செயல் வேறு என்ற நிலையே விரவிக் காணப்படுகிறது. 'உனக்கில்லையடி கண்ணே உபதேசம், ஊருக்கடி' என்று கவிஞன் சொன்னதைவிட மோசமானது இந்தவகை. இது போலித்தனம், நடிப்பு, ஏமாற்றுத்தனம் என்பனவற்றின் மறுவடிவமாகும்.

ஒரு மேடைப் பேச்சாளன் ஆகுவதற்கு அதற்கான திறமை வேண்டும். பெயர் பெற்ற, மக்கள் அபிமானத்துக்குரிய பேச்சாளராவது எல்லோருக்கும் இலகுவானதல்ல. சிறந்த பேச்சாளனாவதற்கு நாவன்மை வேண்டும். அறிவு உள்ளவன்தான் நல்ல கருத்துக்களை ஆற்றொழுக்காகப் பேச வல்லவன். பேச்சு அதனைக் கேட்பவர்களுக்கு அறிவு புகட்டுவதாகவும் அவர்களை நல்வழிப்படுத்துவதாகவும் அமைவதே சிறப்பு.

ஆனால் இப்போது, மேடையில் ஏறுபவர்கள் எல்லோரும் பேச்சாளர்கள் என்றாகிவிட்டது. அவ்வாறு பேசுபவர்கள் மேடையில் நின்று பல போதனைகளை அள்ளி வீசுகிறார்கள். பலர் அர்த்தம் இல்லாமலும், சம்பந்தா சம்பந்தம் இல்லாமலும் 'அலட்டு'கிறார்கள். ஆனால் தாம் போதித்தவற்றுக்கு முரணாகவே சொந்த வாழ்க்கையில் நடக்கிறார்கள். இது ஒரு வகை.

மக்களை கவரக்கூடிய முறையில் பேசுவது ஒருவிதக் கலை எனலாம். அந்தக் கலையைப் பழகிக் கொண்டவர்கள், வேண்டாத கருத்துக்களையும், தமக்குப் பிடித்தவற்றையும் மக்களிடம் திணிக்க முயல்கிறார்கள். சமூகத்திற்குப் பயன்படாத, மக்களை தவறான வழியில் இட்டுச் செல்லும் பேச்சுக்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

'பேச்சுப் பல்லக்குத் தம்பி கால் நடை' என்ற வகையில்தான் இப்போது பலரும் நடந்து கொள்கிறார்கள். சமூக முன்னேற்றம், சமூக மறுமலர்ச்சி, கலாசாரம் பண்பாடுகளைப் பேணுதல், பாரம்பரியங்கள் அழியாமல் பாதுகாத்துக் கொள்ளுதல், கலாசாரச் சீரழிவுகளைத் தடுத்தல், சமய ஆசாரங்களை அனுஷ்டித்தல் என்பன குறித்து நிறைய நிறையப் பேசப்படுகிறது. ஆனால் அவை நாடிய செயலோ எள்ளளவே!

அரசியல்வாதிகள் பேசுவதில் வல்லவர்கள். வாய்க்கு வந்ததை எல்லாம் பேசுவார்கள். தாங்களே கடவுளர், தம்மால் செய்யமுடியாதது ஒன்றுமில்லை என்ற மேலார்ந்த தளத்தில் நின்று பேசுவார்கள். வாக்குறுதிகள் பலவற்றையும் பஞ்சமின்றி அள்ளி வீசுவார்கள். மக்களை நம்ப வைப்பார்கள் - தமது பக்கம் இழுத்து வைத்திருப்பதற்காக. ஆனால் சொன்னதைச் செய்வதற்கு வசதியாக அவற்றை மறந்துவிடுவர்.

'கூட்டத்தில் கூடி நின்று கூடிப் பிதற்றலன்றி நாட்டத்தில் கொள்ளாரடி கிளியே நாளில் மறப்பாரடி' - என்று பாரதியார் பல ஆண்டுகளுக்கு முன்னர் சொன்னது இன்றும் பொருத்தமாகவே உள்ளது. என்று மாறும் இந்த நிலை?

# பற்றி எரியும் பருவம்

**தமிழகத்திலிருந்து வெளிவரும் சஞ்சிகை ஒன்றில் பிரசுரமான கட்டுரை இது. சில விடயங்கள் நம்மூருக்கும் பொருந்துவதால் சஞ்சீவியில் இதனையும் சேர்த்துக் கொள்கின்றோம்.**

(ஆ-ர்)

இன்றைய வளர் இளம் பருவத்தினர் மிகவும் புத்திசாலிகள். விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப, தகவல் தொடர்புத்துறைகளில் ஏற்பட்டு வரும் பிரமாண்டமான வளர்ச்சியுடன் தங்களையும் இணைத்துக் கொண்டுள்ளனர். எதிர்கால வாழ்க்கை குறித்த அக்கறை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அவர்களிடம் தென்படுகிறது.

திறமைகளை வளர்த்துக் கொள்கிறார்கள். கிடைக்கும் வாய்ப்பைக் கனகச்சிதமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். பெரும்பாலான பிரிவினர் இப்படி. இன்னொரு பிரிவினர் பருவத்திற்கே உரித்தான உணர்ச்சி மேலீட்டினால், காதலில் விழுந்து வாழ்க்கையைத் தொலைத்து விடுகிறார்கள். அந்த பிரிவினருக்கானதே இக்கட்டுரை.

பூமியினைப் பிளந்து கொண்டு வெளிவரும் செடியின் துளிர்ப்பில் உள்ள துடிப்பும், சிறகு முளைத்த குஞ்சுப் பறவை சுதந்திரமாய்ப் பறப்பதில் காட்டும் தீவிர முனைப்பும் நிறைந்த பருவம் வளர் இளம் பருவம். அதாவது Adolescent அல்லது 'டீன் ஏஜ்' எனப்படும் ரெண்டுங் கெட்டான் பருவம். இந்த ரெண்டுங் கெட்டான் வயசு 12முதல் 20 வயதாகும்.

குழந்தைத்தனமும் பெரியவர்களுக்கு உரித்தான சில குணங்களும் ஒரு சேர இருப்பதால் இதை 'ரெண்டுங் கெட்டான் பருவம்' என அழைப்பதுண்டு. பொருத்தமாகச் சொல்வதானால் இது 'பற்றி எரியும் பருவம்'. இப்பருவத்தில்தான் ஆண், பெண் ஆகிய இருபாலரிடத்திலும் உடல் ரீதியான மாற்றம் நிகழும். புத்துணர்வு, கடலலைகள் போல் ஓயாமல் உணரப்படும் ஒருவிதத் தவிப்பு, ஒன்றை விடுத்து இன்னொன்றை கைக்கொள்ளத் துடிக்கும் இனம் புரியாத பரவசம் ஆகியவை இப்பருவத்தின் குணங்கள்.

இப்படி உடல் ரீதியாக, உளரீதியாக, நிகழும் மாற்றம் கண்களின் கட்டளைக்காய்க் காத்துகிடக்கும். ஓர் ஓரப்பார்வையின் மொழிகளுக்கு மன அகராதியைப் புரட்டிப் பார்க்கும். வார்த்தைகளுக்கே அர்த்தம் தேடிய கண்கள் மௌனத்தைக் கூட வெகு சாமர்த்தியமாய் மொழி பெயர்க்கும்.

பார்வையிலேயே பரிமாற்றம் துவங்கும். இருபாலாருக்கும் இது பொருந்தும் என்றாலும் கூட மௌனத்தை மொழி பெயப்பதில் பெண்களின் கண்கள் ஒருபடி மேல்தான். தான் உண்டு, தன் வேலை உண்டு என்பதுபோல் பாசாங்கு செய்து கொண்டே தன்மீது விழும் பார்வைகளை எல்லாம் இரகசியமாகப் பதிவு செய்வார்கள். பின்னர் தனிமையில் அவை பரிசீலக்கப்பட்டு பதில் பார்வை பரிமாற்றப்படும். இப்படிப் பட்டுத் தெறிக்கும் பார்வைகளினால் ஒட்டிக்கொள்ளும் காதல்.

பெண்களுக்குத் தங்களது உடல், உடை, அலங்காரம் ஆகியவற்றின் மீது இருந்து வந்த அக்கறை கூடுதலாகிவிடும். பையன்கள் கண்ணாடி முன் தலைமுடியைச் சீவிசீவிச் சரிசெய்து கொள்வார்கள். ஒருவிதமான துள்ளல் மனத்திற்குள் தாளமிடும். வேகம் முன்நிற்கும். 'பஸ்ஸில் புட்போர்டு' சாகஸங்கள் தொடரும். "என்னப்பா?, என்ன தம்பி?" என்ற வார்த்தைகள் கடுப்பேற்றும். துடிப்பும் துள்ளலும் கொண்டவர்களின் கண்கள் பெண்ணின் ஓர விழிப்பார்வைக்காய் அலையும்.

"ஒரு பார்வையில் என்னை உறைய வைத்தாய்; ஒரு புன்னகையால் என்னை உருக வைத்தாய்" என்ற மயக்க வரிகள் அவர்களைச் சுதாரிக்க விடாமல் கட்டிப்போடும்.

ஒரு வழியாய் பார்வைப் பரிமாற்றம் முடிந்து பின் அன்றாடச் சந்திப்பாய் அவதாரமெடுக்கும். அவன் நேரத்திற்கு அவளும், அவள் நேரத்திற்கு அவனும் ஏங்கத் தொடங்கிவிடுவார்கள். குறிப்பிட்ட நேரத்தில் சந்திக்க முடியாவிட்டால் இதயத்தில் ஈட்டி பாய்ச்சிய வலியை உணர்வார்கள்; தத்தளிப்பார்கள்; பரிதவிப்பார்கள். எப்படியாவது சந்தித்து விட வேண்டும் என்ற பதைப்பில் பெற்றோரை ஏமாற்றத் துணிவார்கள்.

சிநேகிதி வீடு, டியூசன், ஸ்பெஷல் கிளாஸ், ஹோம்வேர்க், அஸைன்மெண்ட் என சரளமாய்ப் பொய்யைப் பெற்றோரிடம் தெரிவித்து விட்டு தியேட்டர், பீச், பார்க், கோவில் எனச் சுற்றித் திரிவார்கள். முதலில் கண்கள் தூக்கத்தை இழக்கும். எந்த ருசியான சாப்பாடும் பிடிக்காது. திடீர் அமைதி, திடீர் சந்தோஷம், திடீர் கோபம் என ஒரு 'தீடீர்ப்பிறவி' ஆவார்கள். சிந்தனைகள் சிதறும்; மனம் அலைபாயும். தவிப்பு, தத்தளிப்பு; தத்தளிப்பு, தவிப்பு என்று ஒருவித வலியை உணர்ந்து கொண்டே இருப்பார்கள்.

இத்தருணத்தில் அப்பா, அம்மா, வீட்டில் உள்ள அனைவரும் அந்நியமாய்த் தெரிவார்கள். காதல் தவிர பிறவிஷயங்களில் சுவாரசியம் இல்லாமல் போகும். தங்களது காதலுக்கு ஆதரவு தரும் ஒத்த வயதின் நண்பர்களே எப்போதும் தேவை என உணர்வார்கள். இப்படி அவனும், அவளும் தங்கள் இருவரைச் சுற்றி ஒரு குட்டி உலகைச் சிருஷ்டித்து கொள்வார்கள். உடல், பொருள், ஆவி அனைத்தையும் அதற்கே அர்ப்பணித்துவிட்டுப் போலியாய் சிலவற்றை அல்லது அவர்களுக்குச் சரியாக தெரிவது போல உள்ளவற்றைச் செய்து கொண்டிருப்பார்கள்.



இப்படி காதல் தீவிரமடையும் போது ஏதாவது ஒரு வழியில் வீட்டுக்குச் சேதி வந்து சேரும். வீடு போாக்களமாகும்; அல்லது மகிழ்ச்சியான குடும்பத்தை மயான அமைதி ஆக்கிரமிக்கும். படிப்புத் தொடருமா? நிற்குமா? காதலின் கிளைமாக்ஸ் சுபமா? சோகமா? - என்பதெல்லாம் வீட்டுக்குவீடு வேறுபடும்.

முடிவு என்னவாக இருந்தாலும் வளர் இளம் பருவத்தில் காதல் வயப்படும். இருபாலரும் தங்களது எதிர்காலத்தைத் தொலைத்திருப்பார்கள். பருவக் கோளாறினால் ஏற்படும் உணர்ச்சிக்கு அடிமையானவர்கள் அவற்றிலிருந்து சுதாகரித்துக் கொண்டு வெளியே வருவதற்குள் எதிர்காலத்தின் கதவுகள் எல்லாம் இறுக மூடப்பட்டுவிடும்.

எனவேதான் "வளர் இளம் பருவம் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் கொடுக்கப்படும் வசந்தத்தின் திறவு கோல்" என அறிஞர்கள் கூறுகின்றனர்.

சமீபத்தில் நடந்த சம்பவம் இது. 20 வயது இளைஞன் தற்கொலை செய்துகொள்ள முயன்று தூக்க மாத்திரை சாப்பிட்டுவிட்டான். ஆஸ்பத்திரியில் சேர்த்து காப்பாற்றிக் கொண்டு வந்தார்கள். வந்தவுடன் வீட்டின் மாடியிலிருந்து குதித்து விட்டான். கைகால்களில் பலத்த அடி. வேறென்ன சமாச்சாரம்? காதல்தான். நான்கு வருடங்களாகத் தன்னை காதலித்த பெண் திடீரென காதலிக்க மறுக்கிறாள். - பின்னணி இதுதான்.

பெண்ணுடைய வயது 20. பட்டப்படிப்பு இறுதியாண்டு மாணவி. "நான் அவனுடன் பேசியது உண்மை. ஆனால் காதலின் அர்த்தமெல்லாம் தெரியாது, ஏதோ பேசினேன். இப்ப.... எனக்கு நிறையப் படிக்க வேண்டும். மேலும் அவன் எனக்குத் தகுதியானவன் அல்லன." - எனத் தீர்மானமாய் கூறிவிட்டாள். இது சம்பந்தப்பட்ட பெண்ணின் தரப்பு வாதம்.

ஆனால் அதற்குள் பையன் குறைந்தது ஆயிரம் பேரிடம் விஷயத்தைச் சொல்லி விட்டான். இப்போது பெண் மீது பெற்றோருக்கு இருந்த நம்பிக்கை தகர்ந்து விட்டது. அவள் படிப்பும் கேள்விக்குறியாகிக் கண்ணீர் வடிக்கிறாள். இந்தச் சம்பவம் ஒன்றும் புதிதும் அல்ல. ஒரு பெண்ணின் வாழ்க்கையில் பல்வேறு அம்சங்களையும், சாதக, பாதகத்தையும் அலசிஆராயும் பருவத்திற்கு வந்தவுடன் தனது எதிர்காலம் குறித்து ஏற்படும் சிந்தனை மாற்றத்தை வெளிப்படுத்தவே இங்கு குறிப்பிடப்படுகிறது. வளர் இளம் பருவத்தில் குறிப்பாக 'டீன்ஏஜ்' பருவத்தில் காதல் என்ற பெயரில் வருவது உணர்ச்சி மேலீட்டால் நிகழும் ஒருவிதக் கவர்ச்சியே. உண்மையில் மகிழ்ச்சிகரமான எதிர்காலத்தை நேசிப்பவர்கள் தங்களது வளர் இளம்பருவத்தை காதல், ஊர் சுற்றல் என்று வீணடிக்க மாட்டார்கள். இந்த நோக்கத்தில் தன் மீது விழும் பார்வையையும் சம்பந்தப்பட்ட நபரையும் ஒரு பொருட்டாகவே கருதமாட்டார்கள்.

இப்படிச் சொல்வதன் மூலம் இக்கட்டுரை, காதலுக்கு எதிரானது என கருதி விடவேண்டாம். கேள்வியே எது காதல் என்பதுதான். சிலசில மாதங்களுக்கு முன் சென்னையிலுள்ள 'அபார்ஷன்' கிளினிக் மருத்துவர்களைச் சந்தித்தபோது பள்ளி, கொன்வென்ட், கல்லூரி மாணவிகள்தான் அதிகளவில் கருக்கலைப்புச் செய்து கொள்கிறார்கள் என்ற அதிர்ச்சியான தகவலைச் சொன்னார்கள். பள்ளிக்கூட யூனிஃபாம்களை மாற்றிக்கொள்ள வசதியான அறைகளைக் கொண்ட அபார்ஷன் கிளினிக்குகள் அதிகரித்து வருகின்றன. அடுத்த வேளைச் சோற்றுக்குக் கூடப் பெற்றோரின் தயவையே சார்ந்திருக்கும் ஒரு பருவத்தில் வெறும் கவர்ச்சியாலும், உணர்ச்சியினாலும் அலைக்கழிக்கப்படும் பருவத்தில் வாழ்க்கையின் தவறான திசைக்குச் செல்வது காதல்அல்ல. மனித குலத்துக்குக் கிடைத்த மகிழ்ச்சிகரமான பரிசு காதல். வாழ்க்கையையும் நிஜத்தையும் அதன் அத்தனை மூர்க்கத்தனத்தையும் எதிர்கொள்ள, உரிய வயதில் ஏற்படும் காதல் வழிவகுக்கும். கண்ணியமான, மகிழ்ச்சிகரமான ஆண் - பெண் உறவுக்கு காதல் பிரமிக்கத்தக்க அளவில் வலுச்சேர்ப்பதுண்டு. உடற் கவர்ச்சியாலும் உணர்ச்சி மேலீட்டாலும் நிகழும் காதல், வாழ்க்கையை வீணடித்ததாகவே சம்பவங்கள் உள்ளன.

எனவே பெற்றோர் கூறும் வழிகாட்டுதல்களை வளர் இளம்பருவத்தில் பின்பற்ற வேண்டும். இப்பருவத்தை எல்லாம் கடந்தவர்களே இன்றைய பெற்றோர் என்பதை உணர்ந்தால் நலம். இன்னொரு முக்கியமான விஷயம். இப்பருவம் தற்காலிகமானது என்பதுதான். பெற்றோரின் அறிவுரை என்பது அவர்களின் கடமையினால் மட்டும் வருவதல்ல; அனுபவத்தின் வெளிப்பாடு.


இங்கு பெற்றோரின் பாத்திரம் பிரதானமானது. வளர் இளம் பருவத்தினரை முரட்டுத்தனமாகக் கையாளக் கூடாது. நண்பர்களைப் போல நடத்த வேண்டும்.

இப்பருவம் எப்படிப்பட்டது? உடலில் ஏற்படும் மாற்றங்களை எப்படி எதிர்கொள்வது? (உதாரணம் மாதவிலக்கு). தூய்மையாக உடலைப் பராமரிப்பது எப்படி? - என்பது போன்றவற்றை எடுத்துரைக்க வேண்டும். பிள்ளைகள் பொருட்டு மேற்கொள்ளும் முடிவுகளை அவர்களோடு விவாதித்து விட்டு எடுக்க வேண்டும். இது ஆரோக்கியமான மன நிலையை அவர்களுக்கு அளிக்கும். அவர்கள் உடலை அவர்கள் நேசிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

இன்றைய நிலையில் தகவல் தொடர்புத் துறையில் ஏற்பட்டுள்ள புரட்சி பல கலாசாரங்களை வீட்டுக்குள்ளேயே கொண்டுவந்து கொட்டுகிறது. பற்றாக்குறைக்குப் பத்திரிகைகளும் சினிமாக்களும் பாலியல் விஷயங்களைப் பந்தாடுகின்றன. இது பல்வேறு விதமான பாதிப்புக்களை இளம் பருவத்தினரிடம் ஏற்படுத்துகிறது. பாலியல் கல்வியைக் கல்விக்கூடங்களில் அவசியம் கற்றுத் தர வேண்டும்.

நமது பாரம்பரியத்திலிருந்து முற்றிலும் விட்டு விடாத அல்லது முற்றிலும் புதிய கலாசாரத்தைக் கைக்கொள்ளாத ஒரு 'ரெண்டும் கெட்டான்' சமூகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இங்கே அனுமதிப்பது, அனுமதிக்காதது ஆகிய இரண்டிலும் பிரச்சினைகள் உள்ளன. இதில் சரியான கோணத்தில் குழந்தைகளை வளர்த்தெடுக்க அவர்களை ஆக்கபூர்வமான பணிகளில் மும் முரமாக ஈடுபடவைப்பதுதான் சிறந்ததாக இருக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்டி வீதி திறப்பு யோசனை
# ஆனையிறவை பாதுகாக்கும் ஏற்பாடா?

இலங்கைக் கடற்பரப்பினுள் நுழையும் இந்திய மீனவர்கள் விடயத்தில் அடுத்த சில வாரங்களுக்கு கடும்போக்கைக் கடைப்பிடிக்க வேண்டாமென கடற்படையினர் கேட்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இது தொடர்பாக கடற்படைப் பிரிவுகளுக்கு கடற்படைத் தலைமையகம் சில அறிவுறுத்தல்களை விடுத்துள்ளதாகவும் -

உத்தரவுகள் எதுவும் பிறப்பிக்கப்பட்டால் அன்றி இந்திய மீனவர்களை வெளியேற்றவோ அன்றி அவர்களுடன் கடும்போக்குடன் நடந்து கொள்ளவோ வேண்டாம் என்று தெரிவிக்கப் பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வட கிழக்குக் கடற் பகுதியில் ரோந்து சென்ற கடற்படையினர் மீனவர்களின் படகுக் கூட்டம் ஒன்றைக் கண்டதாகவும் -

அச்சமயம் முல்லைத்தீவுப் பக்கமாக இரண்டு கடற்புலி படகுகள் தென்பட்டதாகவும்-

எனினும் மீனவர்கள் பாதிக்கப்படக்கூடும் என்பதால் கடற்படையினர் புலிகளின் படகுகள் மீது தாக்குதல் நடத்தவில்லை என்றும் -

கொழும்பு பாதுகாப்புச் செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இன்னும் ஓரிரு வாரங்களில் இந்தியாவில் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது. இச்சமயத்தில் தமிழக மீனவர்கள் பாதிக்கப்படும் சம்பவங்கள் இடம்பெற்றால் அது தமிழ்நாட்டில் இலங்கை அரசுக்கு எதிரான உணர்வலைகளைக் கொண்டிருக்கும் தமிழக கட்சிகளுக்கு ஒரு பிரச்சார அரசியல் ஆயுதமாக மாறிவிடும் என அரச வட்டாரங்கள் கருதுகின்றன. எனவேதான் இந்திய மீனவர்கள் விடயத்தில் கொஞ்சக்காலம் மென்போக்கைக் கடைப்பிடிக்க அரசு விரும்புகிறதுபோல் தெரிகிறது.

அதேவேளை -

விடுதலைப் புலிகளின் ஆயுதக் கடத்தல் மற்றும் சர்வதேச கடற் போக்குவரத்து என்பனவற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக இந்தியாவுடன் நெருங்கிச் செயற்பட கொழும்பு விரும்புகிறது. கூட்டுக் கண்காணிப்புச் செயற்பாடுகள் தொடர்பாக புதுடில்லியின் ஒத்துழைப்பைப் பெற பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள் குழு ஒன்று ஏற்கனவே இந்தியாவில் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது.

கார்கில் நெருக்கடியில் பிராந்திய கவனம் திசைதிரும்பியுள்ள சமயத்தில் இலங்கைக்

## இந்திய மீனவர் விடயத்தில் தேர்தலை ஒட்டி மென்போக்கு

கடற்படை அதிகாரிகள் இந்தியக் கடற்படை அதிகாரிகளுடன் கடந்தவாரம் சந்தித்துப் பேச்சு நடத்தி உள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா தலைமையில் கொழும்பில் இருந்து கடந்த 15ஆம் திகதி புதுடில்லி சென்ற குழுவினர் 19 ஆம் திகதி கொழும்பு திரும்பும் வரை இந்த விஜயம் தொடர்பான தகவல்களை கொழும்பும், புதுடில்லியும் இரகசியமாக வைத்துள்ளன. இலங்கை, இந்திய அரசசெய்தி நிறுவனங்கள் இது குறித்து செய்தி வெளியிடாமல் விட்டிருந்தமையும் கவனிக்கத்தக்கது.

இலங்கைக் குழுவில் சந்திரானந்த டி சில்வாவுடன் முன்னாள் பொலீஸ்மா அதிபர் பிராங் சில்வா(இவர் தற்பொழுது வெளிநாட்டுப் புலனாய்வுப் பணியகத்தின் பணிப்பாளராக உள்ளார்), ரியர் அட்மிரல் தயா சாந்தகிரி, கடற்படையின் பிரதம தலைமை அதிகாரி கப்டன் ரி.எஸ்.ஜி. சமரசிங்க, கடற்படை நடவடிக்கைகளுக்கான பிரதிப் பணிப்பாளர் எயர் கொமடோர் லால் பெரேரா, மற்றும் வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த பிரதிநிதிகள் புதுடில்லிக்கான இலங்கைத் தூதர் மங்கள முனசிங்க உட்பட உயர்மட்ட அதிகாரிகள் இடம்பெற்றிருந்தனர்.

பாக்குநீரிணை உட்பட இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அதிகரித்துவரும் புலிகளின் கடற் போக்குவரத்துக்கள் தொடர்பாக இக் குழுவினர் இந்தியப் பாதுகாப்புச் செயலர் ரீ.ஆர். பிரசாத் தலைமையிலான இந்தியக் கடற்படை அதிகாரிகளுடன் விரிவாக ஆராய்ந்தனர்.

'எம்.வி.மரியம்மா', 'சோவா மாறு' என்ற பெயர்களையுடைய இரு கப்பல்களில் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் கடத்தி வரப்பட்டதாக முன்பு வெளியாகி இருந்த அறிக்கைகள் பற்றியும் இப்பேச்சுக்களின் போது ஆராயப்பட்டது.

இரு நாடுகளின் கூட்டு கடற்படைச் செயற்பாடுளை அதிகரிப்பதில் இந்தப் பேச்சுக்கள் நிறைவான வகையில் அமைந்ததாக இலங்கைக் கடற்படை வட்டாரங்கள் கூறியுள்ளன.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படும் சம்பவங்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான இத்தகைய கூட்டுச் செயற்பாடுகளுக்கு [illegible] லாம் என இந்தியத் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டதாகவும் தெரியவருகிறது. இதனையடுத்தே இந்திய மீனவர்கள் விடயத்தில் மென் போக்கை கடைப்பிடிக்க அரசு முடிவு செய்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

### இந்தியா மறுப்பு

இதேவேளை கடற்படை உயர் மட்டக் குழுவின் இந்த விஜயத்தின்போது தமிழ்நாட்டின் தூத்துக்குடிக்கும், கொழும்புக்கும் இடையே பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பது தொடர்பாகவே இரு நாட்டு பிரதிநிதிகளும் பேச்சு நடத்தியதாக இந்திய மத்திய அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாக்குநீரிணையிலும் வடக்கு - கிழக்கு கடற்பிராந்தியத்திலும் விடுதலைப்புலிகளின் ஆயுதக்கடத்தலைத் தடுப்பது தொடர்பாக இந்தியாவும் இலங்கையும் இரகசிய உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டதாக வெளியான செய்திகளை புதுடில்லி மறுத்துள்ளது.

* * *

ஆனையிறவு - பரந்தன் முன்னணி நிலைகளில் இருந்து கடந்த 22 ஆம் திகதி சுட்டபுரம் என்னும் பகுதியை நோக்கி படையினர் சிறு குழுக்களாக முன்னெறித் தாக்குதல் நடத்தியுள்ளனர். அப்பகுதியில் ஏற்கனவே தயார் நிலையில் இருந்த விடுதலைப் புலிகள் பதில் தாக்குதல் நடத்த சிறிது நேரம் இருதரப்பினருக்கும் இடையே மோதல் மூண்டது.

**...அச்சுறுத்தலுக்குள்ளாகி இருக்கும் ஆனையிறவுத் தளத்தைப் பாதுகாப்பதற்கு மாற்று ஏற்பாடுகளைச் செய்யத்தயாராகும் நிலையில் படையினர் இல்லாததால் அதனைப் பாதுகாக்கும் நோக்குடனேயே கண்டி வீதியூடாக குடாநாட்டுக்கு பயணிகள் போக்குவரத்துப் பாதையைத். திறக்கும் யோசனையைப் படைத்தரப்பு முன்மொழிந்துள்ளதா என்ற கேள்வியைப் பாதுகாப்பு ஆய்வாளர்கள் எழுப்புகின்றனர்.....**

இந்த மோதலில் தமது தரப்பில் இருவர் உயிரிழந்ததாகவும் ஆயுதங்களும் படையினரின் இரு சடலங்களும் கைப்பற்றப்பட்டதாகவும் புலிகள் அறிவித்தனர். அதேசமயம் இச்சம்பவத்தில் மூன்று படையினர் பலியானதாகவும் 7 பேர் காயமடைந்ததாகவும் படைத்தரப்பு தெரிவித்தது.

ஆனையிறவு - பரந்தன் பகுதியில் படையினருக்கும், புலிகளுக்கும் இடையே தினமும் அடிக்கடி இடம்பெறும் மோதல்களில் இது குறிப்பிடத்தக்க சம்பவமாக அமைந்தது.

இலங்கைத் தீவில் மிகவும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள பெரிய படைத்தளம் என்று ஆனையிறவு - பரந்தன் முகாமை பாதுகாப்பு விமர்சகர்கள் விவரித்திருந்தனர்.

சுமார் ஒருவருடகாலம் பெரும் தாக்குதல் எதனையும் மேற்கொள்ளாமல் மௌனம் காத்துவரும் புலிகள் ஆனையிறவுத் தளத்தை முற்றாக வழித்துத் துடைக்க திட்டமிடுவதாக கடந்த பல மாதகாலமாக தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இந்த தளத்தின் முன்னணி நிலைகளுக்கு அப்பால் வேவுப் பணிகளில் புலிகள் தீவிரமாக ஈடுபட்டுவருவதால் முகாமைத் தாக்கவே அவர்கள் பெரும் திட்டம் தீட்டிவருவதாகப் படைத்தரப்பு நம்புகிறது.

பெரும் தாக்குதல் ஒன்றை எதிர்கொள்ளத் தயாராக எந்நேரமும் படையினர் அங்கு முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகப் படைத்தலைமை கூறியுள்ளபோதிலும் ஆனையிறவுத்தளத்தைப் பாதுகாப்பது என்பது படையினருக்குப் பெரும் சவாலான விடயமாகவே மாறி உள்ளது.

வன்னியில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் ஒருபுறம் இருக்க புலிகளின் தாக்குதலில் இருந்து ஆனையிறவுத் தளத்தைப் பாதுகாப்பதிலேயே படையினர் தற்போது முழுக் கவனத்தையும் செலுத்திவருகின்றனர்.

ஆனையிறவு ஊடாக கண்டி வீதியைத் திறக்க படையினர் முன்மொழிந்துள்ள யோசனை ஆனையிறவுத் தளத்தைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட திட்டமாக இருக்கலாம் என்று பாதுகாப்பு ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

குடாநாட்டை தக்கவைத்துக் கொள்வதை நிச்சயப்படுத்திக்கொள்ள ஆனையிறவுத் தளத்தின் பாதுகாப்பு உறுதி செய்யப்படவேண்டும். ஆனையிறவுத் தளம் புலிகளின் கைகளில் வீழ்ந்தால் உடனடியாகவே குடாநாட்டின் தென்மராட்சிப் பகுதியில் படையினர் தங்கள் பிடியை இழக்க நேரிடும். எனவே ஆனையிறவுத் தளத்தைப் பாதுகாப்பதாயின் ஒன்று அங்கு பெரும் எண்ணிக்கையில் படையினரைக் குவிக்க வேண்டும். அல்லது முகாமின் தெற்குப் பகுதி ஊடாக (பரந்தன்) போக்குவரத்துப் பாதை ஒன்றைத் திறக்கும் இணக்கத்துக்கு வந்து அதன்மூலம் முகாமைப் பாதுகாக்க வேண்டும்.

இவற்றில் இரண்டாவது ஏற்பாடுதான் தற்போதைய நிலையில் சாதகமானது. எனவேதான் பயணிகள் போக்குவரத்துப்பாதை என்னும் திட்டத்தின்கீழ் கண்டிவீதியை திறக்கும் யோசனையைப் படைத்தரப்பு வெளியிட்டிருப்பதாக சில விமர்சகர்கள் கூறுகின்றனர்.

இந்தத் தரைவழிப் பாதையைத் திறக்கும் படையினரின் யோசனைக்கு புலிகளிடம் இருந்து சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

படையினர் தமது திட்டத்தை உத்தியோகபூர்வமாக அன்றி மூன்றாம் தரப்பின் ஊடாக ஒரு சமிக்ஞையாகவே வெளியிட்டிருந்ததால் அந்த யோசனைக்கு புலிகள் உத்தியோகபூர்வமாக பதிலளிப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது. ஆனால் படையினரின் இந்தத் தரைப் பாதைத் திறப்புத் திட்டம் கபடத்தனமான - உள்நோக்கம் கொண்ட - இராணுவ நலன்களுக்கான - திட்டம் என்று வன்னியில் புலிகள் வட்டாரங்களில் பொதுவாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டு வருவதாக அறியமுடிகிறது.

இராணுவ நடவடிக்கை மூலம் எய்த முடியாமற்போன ஓர் இலக்கை வெற்றி கொள்ள இந்தக் கண்டிவீதி தரைப்பாதைத் திறப்பு யோசனையை படையினர் வெளியிட்டிருப்பதாக புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி - பரந்தன் படைத்தளத்தை தாக்கி அழித்த சமயம் இருந்த ஆள்பலத்தைப் போன்று பல மடங்கு எண்ணிக்கையான ஆள் பலத்தை புலிகள் தற்போது கொண்டுள்ளனர்.

இதைவிட பொதுமக்களுக்கான போர்ப்பயிற்சித் திட்டத்தின் மூலம் சுமார் 25 ஆயிரம் பேரைக்கொண்ட துணைப்படை ஒன்றையும் புலிகள் கட்டியெழுப்பியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் ஆனையிறவுத் தளத்தை தாக்கி அழிக்கும் ஆள்பலம் புலிகளிடம் இருப்பதாக அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே மாங்குளத்தில் இருந்து ஆனையிறவு ஊடாக கண்டி வீதியை போக்குவரத்துக்குத் திறக்கும் படையினரின் யோசனையை புலிகள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பது தெளிவு.

**1990 களின் முற்பகுதியில் குடாநாட்டுக்கான வழிகள் அடைபட்டு- மக்கள் கிளாலி ஊடாக பயணம் செய்து வந்த காலத்தில் ஆனையிறவுப்பாதையை திறக்கும் யோசனை ஒன்று முன்வைக்கப் பட்டது. அதை புலிகள் ஏற்கவில்லை. அதை ஏற்க மறுத்ததற்கான காரணங்களை புலிகள் விளக்கி இருந்தனர்.**

*** புதிய நகர்வு ஒன்றை மேற்கொள்ள வசதியாக அந்தப் பாதையில் உள்ள கண்ணி வெடிகள், பொறிக்கிடங்குகள் மற்றும் அரண்கள் அகற்றப்படும்.**

*** ஆனையிறவு ஊடாகச் செல்லும் உணவு வாகனங்களில் இருந்து தமக்குத் தேவையானவற்றை படையினர் இறக்கிக் கொள்வர். (ஆனையிறவு முகாமுக்கான விநியோகங்கள் அக்காலத்தில் பெரிதும் தடைப்பட்டிருந்தன.)**

*** முகாமைத்தாண்டி அவ் வீதியால் செல்லும் பொது மக்களிடமிருந்து புலிகளின் நிலைகள், ஏற்பாடுகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்வது.**

**இந்த மூன்று காரணங்களும் புலிகளின் நோக்கில் விளக்கப்பட்டிருந்தன.**

### பசுபிக் படைத்தளபதிகள் சிங்கப்பூரில் மாநாடு

பசுபிக் பிராந்திய நாடுகளின் இராணுவத் தலைவர்களுக்கான நான்கு நாள் மாநாடு அடுத்தமாதம் சிங்கப்பூரில் நடைபெறவுள்ளது.

அமெரிக்காவின் ஏற்பாட்டில் முதற் தடவையாக நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய கலந்து கொள்ளவுள்ளார்.

இதேவேளை வன்னி படைகளின் தளபதியும் இராணுவத்தின தலைமை அதிகாரியுமான மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல பாதுகாப்புத் தொடர்பான மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக ஹவாய் செல்லவுள்ளார். 40 நாடுகளைச் சேர்ந்த இராணுவ பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்கு பற்றுகின்றனர்.

### அதிர்ஷ்ட தினங்களில் புலிகள் தாக்குகின்றனரா?

அண்மைக்காலத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இவற்றை நன்கு அவதானித்து வரும் புலனாய்வுத் தரப்பினர் அவற்றுக்கிடையே சில ஒற்றுமைகளைக் கண்டுள்ளனராம்.

சில அதிர்ஷ்ட தினங்களைத் தெரிவு செய்து அந்நாள்களில் புலிகள் தாக்குதல்களை நடத்துவதா கவும் புலனாய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

கடந்த ஜனவரி முதல் திகதிக்கும் மே 31ஆம் திகதிக்கும் இடையே இடம்பெற்ற தாக்குதல்களில் குறிப்பிடக்கூடிய 20 பெரிய சம்பவங்களைத் தொகுத்து தமது அவதானிப்புகளை புலனாய்வு அலுவலர்கள் வெளியிட்டுள்ளனர்.

அவர்களின் அவதானிப்புக்கள் வருமாறு:-

இந்த 20 தாக்குதல்கள் சம்பவங்களும் ஒரே பாணியில் இடம்பெற்றுள்ளன. அவற்றில் ஐந்து வெள்ளிக் கிழமைகளிலும் ஏனையவை திங்கள், சனி ஆகிய கிழமைகளிலும் இடம்பெற்றுள்ளன.

காலை 6 மணிக்கும் 8 மணிக்கும் இடையே ஆறு தாக்குதல் சம்பவங்களும், 8 மணிக்கும் 11 மணிக்கும் இடையே நான்கு தாக்குதல்களும், பிற்பகல் 2 மணிக்கும் 5 மணிக்கும் இடையே மூன்று தாக்குதல்களும் இடம்பெற்றிருக்கின்றன.

இவற்றை விட புலிகளின் ஆறு பெரிய தாக்குதல்கள் ஒன்று இலக்கம் வரும் தினங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மூன்று தாக்குதல்கள் 2ஆம், 6ஆம் இலக்க திகதிகளில் இடம்பெற்றிருக்கின்றன.

ஆக மொத்தம் 20 தாக்குதல்களிலும் 13 வன்னிப் பெருநிலப்பரப் பரப்பில் நடத்தப் பட்டிருக்கின்றன.

மறுபக்கம்
வார விமர்சனம்
நல்லூர் தாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுப்புரம் சம்பவம் சோனியாவுக்கு கிடைத்த முதலாவது ஏமாற்றம்!

தமிழ்நாட்டில் பெரும் இழுபறிகளுக்கு மத்தியில் உருவாக்கப்பட்டது அ.தி.மு.க - காங்கிரஸ் கூட்டணி. இந்தக் கூட்டணி அமைக்கப்பட்ட பின்னர் சோனியாவும் ஜெயலலிதாவும் முதல்தடவையாக ஒரே மேடையில் தோன்றி உரை நிகழ்த்தும் பொதுக் கூட்டம் கடந்த ஞாயிறன்று விழுப்புரம் தொகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால்



ஜெயலலிதா

இந்த முதல் கூட்டமே சோனியாவுக்கு ஏமாற்றத்தை அளித்து விட்டது.

ஜெயலலிதா இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. அத்துடன் முன்அறிவிப்பு எதுவும் இன்றி சோனியாவை 45நிமிடம் காக்கவும் வைத்து விட்டார். கடந்த செவ்வாயன்று சோனியா ஆந்திரா பயணமானபோது டில்லி விமானநிலையத்தில் வைத்து செய்தியாளர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில்அளிக்கையில், தமிழ்நாட்டில் அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி நீடிப்பதாகத் தெரிவித்தார்.

ஆனால் விழுப்புரம் சம்பவம் சோனியாவுக்கு பெரும் ஏமாற்றம் என்றே அவதானிகள் தெரிவிக்கின்றனர். ஜெயலலிதாவின் தொல்லை ஆரம்பித்து விட்டதாகவே கருதப்படுகிறது.

சோனியாவுடன் ஜெயலலிதாவுக்கு முறுகல் நிலை ஏற்படுவதற்கு இரு காரணங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

காங்கிரஸின் மூத்த தலைவர்களில் ஒருவரான டாக்டர் மன்மோகன் சிங் சமீபத்தில் பத்திரிகை ஒன்றுக்கு அளித்தபேட்டிகாரணமாக ஜெயலலிதா ஆத்திரம் அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஜெயலலிதாவும் லாலுபிரசாத் யாதவ்வும் ஊழல் குற்றச்சாட்டுக்களில் குற்றவாளிகளாகத் தீர்க்கப்பட்டால் தண்டிக்கப்பட வேண்டியவர்களே என்று டாக்டர் மன்மோகன்சிங் தெரிவித்திருந்தார்.

தோழமைக்கட்சிகளின் ஆதரவுடன் பதவிக்கு வந்தாலும் மத்தியில் காங்கிரஸ் தனித்து ஆட்சி நடத்தும் என்று சோனியா கூறிவருவது குறித்து ஜெயலலிதாவுக்கு திருப்தி இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விழுப்புரம் கூட்டத்துக்கு ஜெயலலிதா வராமல்விட்டது திட்டமிட்ட ஒரு நிகழ்வு என்பதில் சந்தேகம் இல்லை.

தென்இந்திய மாநிலம் ஒன்றின் தொகுதியில்(பெல்லாரி)போட்டியிடுவது மூலம் தனது அர்சியல் வாழ்வின் முக்கிய கட்டத்துக்குள் காலடி எடுத்து வைத்துள்ள சோனியாவுக்கு விழுப்புரம் சம்பவம் பெரும் பின்னடைவு என்றே கூறப்படுகின்றது.

## இரகசியத் திட்டம் எப்படி வகுக்கப்பட்டது?

கர்நாடகம் மாநிலம் பெல்லாரித் தொகுதியில் சோனியாவைப் போட்டியிடவைக்கும் இரகசியத் திட்டம் காங்கிரஸ் பொதுச்செயலர் குலாம்நபி ஆஸாத் மற்றும் சோனியாவின் செயலர் வின்செண்ட் ஜோர்ஜ் ஆகியோரால் வகுக்கப்பட்டது.

அதே சமயம் சோனியாவுக்கு எதிராக முன்னாள் மத்திய அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜை நிறுத்தும் அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டவர்கள் மத்திய அமைச்சர் ராமகிருஷ்ண ஹெக்டேயும் பாரதீய ஜனதாக்கட்சியின் பொதுச்செயலர் வெங்கைய நாயுடுவுமே.

பெல்லாரித் தொகுதியில் சோனியாவைப் போட்டியிடவைக்கும் திட்டம் மிகவும் இரகசியமாக வகுக்கப்பட்டது. ஆந்திரா மாநிலத்தின் கடப்பைத் தொகுதியிலேயே அவர் போட்டியிடப் போவதாக முதலில் காங்கிரஸ் காரிய கமிட்டி உறுப்பினர்களுக்கும் காங்கிரஸின் மூத்த தலைவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதேசமயம் சோனியாவுக்கு எதிராக சுஷ்மா ஸ்வராஜை நிறுத்தும் முடிவு கடைசி நிமிடத்திலேயே எடுக்கப்பட்டது. காங்கிரஸ் இத்தகைய அரசியல் சதுரங்க நகர்வை எதிர்பார்க்கவே இல்லை.

## பி.ஜே.பிக்கு எப்படித் தெரியவந்தது?

காங்கிரஸ்காரர்களுக்குக் கூடத் தெரியாது இருந்த பெல்லாரித் தொகுதியில் சோனியாவை வேட்பாளராக நிறுத்தும் இரகசியத் திட்டம் பாரதீய ஜனதாக்கட்சியினருக்கு எப்படித் தெரியவந்தது?

சோனியா பயணம்செய்த ஹெலிக்கொப்ரருக்கும் ஹைதராபாத் விமான நிலையக் கட்டுப்பாட்டு அறைக்கும் இடையில் நிகழ்ந்த உரையாடல்களை பாரதீய ஜனதாக் கட்சியினர் உடனுக்குடன் அறிந்துகொண்டு அதேவேகத்தில் செயற்பட்டனர் என்று கூறப்படுகிறது. ஆந்திரா முதல்வர் சந்திரபாபு நாயுடுவும் சோனியாவின் இரகசியப் பயணங்களை அறிந்து வைத்துக்கொண்டு பாரதீய ஜனதாத் தல்லவர்களுக்கு உடனுக்குடன் தகவல் அனுப்பிஇருந்தார்.

பெல்லாரித்தொகுதியில் சோனியா போட்டியிடும் பட்சத்தில் அவருக்கு எதிராக சுஷ்மா ஸ்வராஜ் அல்லது ஜோர்ஜ் பெர்னாண்டஸ் போன்ற பலமான வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்று பாரதீய ஜனதாக்கட்சியின் உயர்மட்டத் தலைவர்களினால் ராமகிருஷ்ண ஹெக்டேக்கும் வெங்கையநாயுடுவுக்கும் தெரிவிக்கப்பட்டது. ஜோர்ஜ் பெர்னாண்டஸை போட்டியிடவைக்கவே முதலில் இவர்கள் விரும்பினர். ஆனால் அவருடன் உடனடியாகத் தொடர்பு கொள்ள முடியவில்லை. சுஷ்மா ஸ்வராஜுடனேயே தொடர்பு கொள்ள முடிந்தது.

சுஷ்மா ஸ்வராஜும் உடனடியாகச் சம்மதித்தார். அதன் பின்னர் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சருடன் தொடர்பு கொண்டு டில்லியில் இருந்து பெங்களூர் செல்லும் விமானத்தில் அதிகாலைப் பயணத்துக்கு சுஷ்மா ஸ்வராஜுக்கு ஆசனம் ஒதுக்கப்பட்டது. சோனியாவின் ஹெலிக்கொப்ரர் பெல்லாரியில் இறங்குவதற்கு 20 நிமிடங்கள் இருக்கையிலேயே சுஷ்மா ஸ்வராஜ் பெங்களூருக்கான தனது விமானப் பயணத்தை ஆரம்பித்தார்.

## வலுவிழந்து வரும் காங்கிரஸ் கோட்டை

கர்நாடகத்தில் காங்கிரஸ் கோட்டையாக இருந்துவரும் பெல்லாரி மக்களவைத் தொகுதியில் போட்டியிடுவது மூலம் தனது அரசியல் வாழ்க்கையில் அடுத்த அடியை எடுத்துவைக்கிறார் சோனியா.




கனிம சுரங்கங்கள் நிறைந்த மாவட்டமான பெல்லாரி 1957 ஆம் ஆண்டு முதல் காங்கிரஸ் வசமே இருந்துவருகிறது. அனைத்துத் தேர்தல்களிலும் காங்கிரஸ் அந்தத் தொகுதியில் வெற்றி பெற்றுவந்தாலும் கடந்த சிலஆண்டுகளாக அங்கு காங்கிரஸ் கட்சியின் வாக்கு வங்கியில் தொய்வு நிலை ஏற்பட்டிருந்தது. எதிர்க்கட்சிகள் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டதே இதற்குக் காரணம் ஆகும்.

1971 தேர்தலில் அப்போதைய மத்திய அமைச்சரும் பொருளாதார நிபுணருமான டாக்டர் வி.சே.ஆர்.வி. ராவ் காங்கிரஸ் சார்பாக பெல்லாரித் தொகுதியில் போட்டியிட்டார். அப்பொழுது அவருக்கு 72.70 சதவீதமான வாக்குகள் கிடைத்தன. ஆனால் இதற்குப் பின்னர் காங்கிரஸுக்குக் கிடைத்த வாக்குகள் குறைந்து குறைந்து வந்து 1998 தேர்தலில் காங்கிரஸுக்கு இங்கு 40 சதவீத வாக்குகளே கிடைத்தன. காங்கிரஸ் வேட்பாளரான கொண்டையா 39.76

**உலக உலா**
**என்.பி.சீலன்**

சதவீத வாக்குகளை மட்டுமே பெற்று வெற்றி பெற்றார். அவருக்கு அடுத்த இடத்தைப் பிடித்த லோக்சக்தி - பாரதீய ஜனதா கூட்டணி வேட்பாளர் திப்பண்ணாவை விட 64 ஆயிரம் வாக்குகளே இவர் கூடுதலாகப் பெற்றார்.

## நிரந்தரமான 20 சதவீத வாக்குகள்

பெல்லாரித் தொகுதியைப் பொறுத்தவரை மக்களவைத் தொகுதியிலேயே காங்கிரஸ் தொடர்ந்து வெற்றியீட்டி வருகிறது. 1983,1985 சட்டப் பேரவைத் தேர்தல்களில் ஜனதாதள் கட்சிக்கே இத்தொகுதி மக்கள் வாக்களித்தனர். ஆந்திர மாநிலத்தின் எல்லைப்பகுதியில் அமைந்துள்ள பெல்லாரித் தொகுதியில் தலித் மக்களின் வாக்குகள் 12 சதவீதம் ஆகும். முஸ்லிம்களின் வாக்குகள் 3 சதவீதம், கிறிஸ்தவர்களின் வாக்குகள் 5 சதவீதம். இந்த மூன்று பிரிவினருமே எப்பொழுதும் காங்கிரஸுக்கு ஆதரவாக வாக்களித்து வருகிறார்கள். ஆகவே காங்கிரஸுக்கு உறுதியாக 20 சதவீத வாக்குகள் கிடைத்து வருகின்றன. இவற்றை எல்லாம் கணக்குப் பார்த்தே சோனியா பெல்லாரியில் காலடி எடுத்து வைத்தார்.

பெல்லாரித் தொகுதியில் போட்டியிடும் சோனியாவை எப்படியும் தோற்கடிக்க வேண்டும் என்பதில் பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர்கள் தீவிரமாக இருந்து வருகின்றனர். சுஷ்மா ஸ்வராஜ் வேட்புமனுத்தாக்கல் செய்த நாளில் இருந்து பெல்லாரித் தொகுதியிலேயே முகாமிட்டுள்ளார். ஆனால் சோனியாவினால் அப்படிச் செய்ய முடியாது. காங்கிரஸ் தலைவி என்ற ரீதியில் அவர் தேர்தல் பிரசாரத்துக்காக இந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்ய வேண்டிய நிலையில் இருந்து வருகிறார்.

## காங்கிரஸ் வென்றால் யார் பிரதமர்?

காங்கிரஸ்கட்சி வெற்றிபெறும் பட்சத்தில் சோனியாவே பிரதமர் என்பது பெரும்பாலும் நிச்சயமாகிவிட்டது. தேர்தலுக்கு முன்னரே, இதனை அறிவித்தால் வாக்குகளை இழக்க நேரிடலாம் என்று காங்கிரஸ் அஞ்சுகிறது. இந்தியாவின் [illegible] பேதங்களை எல்லாம் கடந்தது என்பது காங்கிரஸுக்குத் தெரியும். இதனால்தான் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றால் புதிய எம்.பிக்கள் பிரதமரைத் தெரிவு செய்வர் என்று காங்கிரஸ் கூறிவருகிறது. அவர் சோனியா வாகத்தான் இருப்பார் என்பது நாடறிந்த விடயம்.

## வெளிநாட்டவர் பிரச்சினை

சோனியாவின் வெளிநாட்டவர் பிரச்சினை காங்கிரஸுக்கான வாக்குகளை இம்முறை குறைக்கவே செய்யும். சட்டம், நீதி மற்றும் மக்கள் பிரதிநிதித்துவச் சபைகள் ஆகியவற்றில் உயர்பதவிகளை வகிக்க இந்தியாவில் பிறந்த இந்தியக் குடிமக்களுக்கு மட்டுமே உரிமை அளிக்கும் விதத்தில் சட்டம் இயற்றப்படும் என்று பாரதீய ஜனதாக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியாகத் தெரிவித்துள்ளது. தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவாரும் நாட்டின் பிரதமர், ஜனாதிபதி போன்ற உயர் பதவிகளை வெளிநாட்டவர்கள் வகிப்பதை எதிர்க்கிறார்.

ஆனால் தற்போதுள்ள சட்டத்தில் சில விதிகளை மாற்றினாலேயே இதனை அமுலுக்குக் கொண்டு வந்துவிடலாம் என்று சரத்பவார் கூறுகிறார்.

தேவகௌடா தலைமையிலான ஜனதாதளம்(எஸ்) சமாஜவாதிக்கட்சி, சரத் ஜோஷி தலைமையிலான சுதந்திர பாரதீயக்கட்சி, ராமதாஸ் அதவாலே தலைமையிலான இந்தியக் குடியரசுக்கட்சி ஆகியவற்றுடன் தேசியவாத காங்கிரஸ் இம்முறை கூட்டணி அமைத்துள்ளது.

## ஊழல் கட்சிகளுடன் காங்கிரஸ் கூட்டு

தமிழ்நாட்டில் அ.தி.மு.க.வுடனும் பீஹாரில் ராஷ்ட்ரிய ஜனதாதள் கட்சியுடனும் கூட்டணி அமைத்துக் கொண்டது மூலம் தமிழ் நாட்டிலும்

## ஜெயலலிதாவினால் தொல்லை ஆரம்பம்

பீஹாரிலும் காங்கிரஸ் சில தொகுதிகளைக் கூடுதலாகக் கைப்பற்றும் வாய்ப்பு உள்ளது. எனினும் ஊழல் கட்சிகளுடன் காங்கிரஸ் வைத்துள்ள கூட்டு தேசிய மட்டத்தில் அதற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தி வருகிறது. காங்கிரஸ், அ.தி.மு.க, ராஷ்ட்ரிய ஜனதாதள் ஆகிய மூன்று கட்சிகளும் ஊழலில் ஊறித் திளைத்தவை என்றும் ஊழல் ஒழிப்புச் சட்டங்களை பயனற்றவை ஆக்கவே இவை கூட்டணி அமைத்துள்ளன என்றும் பாரதீய ஜனதாதத் தலைவர்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

தமிழ் நாட்டில் காங்கிரஸுக்கு 6 தொகுதிகளை மட்டுமே தரமுடியும் என்று ஜெயலலிதா ஆரம்பத்தில் கூறி வந்தார். ஆனால் 12 தொகுதிகள் பின்னர் காங்கிரஸுக்கு வழங்கப்பட்டன. இதனையே பெரிய வெற்றியாக காங்கிரஸ கருதுகிறது. ஆனால் இவற்றில் எத்தனை தொகுதிகளில் காங்கிரஸ வெற்றி பெறும் என்பது கேள்விக்கிடமாக இருக்கிறது. உதவாக்கரைத தொகுதிகளை எல்லாம் காங்கிரஸுக்குத் தள்ளிவிட்டா ஜெயலலிதா என்று காங்கிரஸ் பிரமுகர்கள் குமுறும் நிலையில்தான் தமிழ்நாட்டில் காங்கிரஸுக்கும் அ.தி.மு.க.வுக்கும் இடையில் தொகுதி உடன்பாடு ஏற்பட்டது.

தமிழ்நாட்டில் ஏதாவது ஒரு திராவிடக்கட்சியுடன் கூட்டணி அமைக்காது எந்த தொகுதியிலாவது வெற்றி பெறும் நிலை காங்கிரஸுக்கு கிடையாது. அதேநேரம் தொகுதிப் பங்கீட்டில் ஆகக் குறைந்த தொகுதிகளை ஏற்றுக் கொள்ளவும் அது தயாராக இருக்கவில்லை. அதனால்தான் வெற்றி பெறமுடியாத தொகுதிகளில் சிலவற்றை அ.தி.மு.க. விட்டுக் கொடுக்க காங்கிரஸ் அதனைக் ஏற்றுக் கொண்டுள்ளது.

பீஹாரில் காங்கிரஸுக்கு 13 தொகுதிகளை ஒதுக்கி உள்ளார் லாலு பிரசாத்யாதவ். பீஹார் மாநில காங்கிரஸ் தலைவர்கள், லாலுவுடன் கூட்டு வைக்கக் கூடாது என்று ஒரு வாரகாலமாக டில்லியில் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த சமயம் இந்த



சோனியா

உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் பீஹாரில் காங்கிரஸாரும் ராஷ்டிரிய ஜனதாதள் கட்சியினரும் எப்படி இணைந்து பணியாற்றப்போகின்றனர்?

உத்தரப்பிரதேசத்தில் 1998 தேர்தலில் ஒரு தொகுதியில் கூட வெற்றி பெற முடியாதுபோன காங்கிரஸ் இம்முறை அமேதி பகுஜன் சமாஜக் கட்சியுடன் கூட்டணி அமைக்க பகீரத பிரயத்தனம் செய்தது. அமேதித் தொகுதியில் சோனியாவை நிறுத்தவும் திட்டம் இருந்தது. இந்த முயற்சி தோல்வி அடைந்த நிலையிலேயே கர்நாடகத்தின் பெல்லாரித் தொகுதியில் வேட்பு மனுத்தாக்கல் செய்யும் நிலைமை சோனியாவுக்கு ஏற்பட்டது. சோனியா மற்றும் ஒரு தொகுதியில் வேட்பு மனுத்தாக்கல் செய்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அது பெரும்பாலும் அமேதி தொகுதியாகத்தான் இருக்கமுடியும். ஆனால் பகுஜன் சமாஜக் கட்சியுடன் கூட்டுச்சேராது அமேதி தொகுதியில் வெற்றி பெறுவது கடினமானது. காங்கிரஸுடன் கூட்டணி என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறிவிட்டார் மாயாவதி.

## சந்தர்ப்பவாத கூட்டணியில் இடதுசாரிகளும்

இந்தியத் தேர்தல் களத்தில் தற்பொழுது உருவாகி உள்ள சந்தர்ப்பவாதக் கூட்டணிகளில் இடதுசாரிகளும் சிக்கி இருப்பது ஆச்சரியம் அளிக்கிறது.

கேரளம், மேற்கு வங்காளம், திரிபுரா ஆகிய மாநிலங்களில் இடதுசாரிகள் காங்கிரஸை எதிர்க்கின்றன. ஆனால் தமிழ்நாடு உட்பட பெரும்பாலான மாநிலங்களில் இடதுசாரிகளுடன் காங்கிரஸ் கூட்டணி அமைத்துக் கொண்டுள்ளது. மாநிலத்துக்கு மாநிலம் கொள்கையை மாற்றும் நிலைமையை இந்தத் தேர்தல் இடதுசாரிகளுக்கு ஏற்படுத்திவிட்டது. இரு கட்சி ஆட்சி முறை உருவாவதைத் தடுக்க இடதுசாரிகளும் மதசார்பற்ற சக்திகளும் இணைந்து மூன்றாவது அணி அமைக்க வேண்டும் என்று இடதுசாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிய கம்யூனிஸ்ட்கட்சி ஆகியவற்றின் தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் இது பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாஜ்பாய் தலைமையிலான பாரதீய ஜனதா அரசு கவிழ்க்கப்பட்ட பின்னர் காங்கிரஸ் தலைமையில் மாற்று அரசு அமைக்கும் முயற்சி தோல்வி அடைந்த பின்னர் மார்ச்சிய கம்யூனிஸ்ட் தலைவர் ஜோதிபாஸு தலைமையில் மாற்று அரசு அமைக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியகுழு இதனை நிராகரித்து விட்டதால் அந்த முயற்சி

( XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானதியின் கணவன்

நீங்களும் என்னைப் போல ஒரு பெண்ணாக இருக்கும் பட்சத்தில், அதுவும் மிகவும் நெருக்கமான பேருந்தில் அடிக்கடி பிரயாணம் செய்ய நேர்ந்தால், அதிலும் கொஞ்சம் இளமையாக இருந்தால், என்னுடைய மன உணர்வுகளை நிச்சயம் புரிந்து கொள்வீர்கள்.

நான் புத்தூர் பாடசாலையில் பெண்லிகிதராக கடமையாற்றுபவள். எனது சொந்த இடமான கரவெட்டியிலிருந்து தினமும் பேருந்தில் பயணம் செய்ய வேண்டிய கட்டாயம். எனக்கு இன்னும் கலியாணமாகவில்லை. நான் அப்படி ஒன்றும் பெரிய அழகியில்லை. ஏறக்குறைய சினிமா நடிகை கோவை சரளாவின் சாயலில் இருப்பேன். (சிலருக்கு சினிமா நடிகைகளை எடுத்துக் காட்டினால்தானே எளிதில் விளங்குகின்றது!)

எனக்கு அவ்வாறு நிகழ்ந்த போது வீட்டிற்கு வந்ததும் அறையைப் பூட்டிக்கொண்டு விம்மி விம்மி அழுதேன். காலப்போக்கில் அவ்வாறான நிகழ்வினைத் தவிர்த்துக்கொள்ளப் பழகிக் கொண்டேன். இருந்தாலும் சில சந்தர்ப்பங்களில் தற்செயலாகவோ, தவிர்க்க முடியாமலோ அது நிகழ்ந்து விடுகிறது.

## இராகவன்

பேருந்துப் பிரயாணத்தின் போது என் மீதான முதற் தொடுகை இன்றும் என்னால் மறக்கப்பட முடியாததாகி விட்டது. தொடுகை மட்டுமா? என்மீது தொடுகை புரிந்தவனின் முகம் இப்போதும் எனக்கு ஞாபகமிருக்கிறது. இப்போது அவனைக் கண்டாலும் என்னால் அடையாளம் காட்டமுடியும். ஆனால் அவனை அதற்குப்பின் பேருந்தில் ஒருபோதும் காணவில்லை. எனக்குத் தெரியும். அவனது தொடுகை தற்செயலானதல்ல. வேண்டுமென்றே புரியப்பட்ட தொடுகை. இது அவனின் கையின் அழுத்தத்திலிருந்து நிச்சயமாக அறிந்து கொண்டேன். ஆனால் யாரிடம் முறையிட முடியும்? எவ்வாறு முறையிட முடியும்? தவிரவும் நான் ஒரு பெண் அல்லவா?! மானம் என்பது இங்கே பெண்ணிற்கென்றாகி விட்டது. இதை யாரால் மாற்றமுடியும்?

நான் வழமைபோல் அன்று பாடசாலைக்கு போனபோது ரைப்பிஸ்ட் பத்மா அந்தத் தகவலைச் சொன்னாள்.

"செவ்வந்திஅக்கா! ஸ்கூலுக்கு இண்டைக்கு புதுசா ஒரு ரீச்சர் வந்திருக்கிறா"

"எந்த ஸ்கூல்ல இருந்து?" நான் விசாரித்தேன்.

"ஏதோ ஒரு கொழும்பு ஸ்கூல்ல இருந்தாம்" பத்மாவின் குரலில் கொஞ்சம் கவலை கலத்திருந்தது. அந்தக் கவலைக்குக்காரணம் தெரியவில்லை. சில நேரம் கொழும்பில் அந்த ஆசிரியை கற்பித்த பாடசாலையின் பெயர் தனக்குத் தெரியவில்லை என்பதனாற்தான் அந்தக் கவலையோ தெரியவில்லை.

நான் என் வேலையில் மூழ்கிப் போனதால் அந்தப் புதிய ஆசிரியையை மறந்தே போனேன். பத்மா தான் மீண்டும் அதைப்பற்றி ஞாபகப் படுத்தினாள்.

"செவ்வந்தியக்கா! புது ரீச்சர் வாறா, ஆளைக் கவனமாய்ப் பாருங்கோ"

நான் என் வேலையிலிருந்து விடுபட்டு இந்த உலகத்திற்கு வந்து அந்தப் புதிய ஆசிரியையை ஆவலாய் கண்களை அகல விரித்துத் தேடினேன்.

"எட! வானதி!" என்னையறியாமல் அவளைக் கண்டதும் என் நாவிலிருந்து அந்தப் பெயர் வெளிவந்தது.

"உங்களுக்கு அவாவை முதல்லேயே தெரியும்போல" பத்மா என்னை மெதுவாகக் கேட்டாள். பத்மா தன் வேலையில் கவனம் செலுத்துகிறாளோ இல்லையோ இப்படியான விடயங்களில் கவனம் செலுத்துவதில் கெட்டிக்காரி. தவிரவும் மற்றவர்களிடமிருந்து கேள்விகளின் மூலமாக விஷயமறிவதிலும் கைதேர்ந்தவள்.

"ஓமோம்! இவவும் நானும் ஒன்றாய்த்தான் பள்ளிக்கூடத்தில படிச்சனாங்கள்" பத்மாவின் கேள்விகளுக்குப் பிடிகொடுக்காமல் பதில் சொல்ல முயல்கிறேன்.


"அப்ப ரெண்டுபேரும் நல்ல சினேகிதம் எண்டு சொல்லுங்கோ" பத்மா மீண்டும் கேட்டாள்.

அவள் தொடர்ந்தும் கேட்கப் போகும் கேள்விகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க குரலில் சினத்தைக் காட்டியபடி சொன்னேன் "விசர்க் கேள்வி கேட்கிறாய். ஒரே பள்ளிக்கூடத்தில படிச்சா சினேகிதமில்லாமல் வேறு என்ன இருக்கும்?"

என் குரலில் சினம் கலந்திருந்ததைப் புரிந்து கொண்ட பத்மா தொடர்ந்தும் என்னைக் கேள்வி கேட்பதை நிறுத்திக் கொண்டாள்.

நான் வானதியோடு ஒன்றாகப் படித்த நாள்களை ஒரு கணம் நினைத் துப் பார்த்தேன்

எங்கள் வகுப்பிலுள்ள பெண்களில் வானதி மிகவும் வசீகரமானவள். அதேநேரம் கர்வம் நிறைந்தவள். என்னிடமோ வசீகரமுமில்லை; கர்வமு



மில்லை. ஆனால் நானும் அவளும் நெருங்கிய தோழிகளாக இருந்தோம். க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகள் எங்களை வெவ்வேறு திசைகளில் பிரித்து வைத்தன. இன்று அவள் ஒரு பட்டதாரி ஆசிரியை. நான் ஒரு கிளார்க்.

"செவ்வந்தி நீயா?" வானதியின் குரல் கேட்டு சிந்தனைகளைக் கலைத்தேன்.

"நான் உன்னை எதிர்பார்க்கவேயில்லை" வானதியின் குரலில் ஓர் உற்சாகம் இருந்தது. அந்த உற்சாகத்தில் கலந்திருந்தது நட்பா, ஏளனமா எனப் பகுப்பாய்வு செய்ய என்னால் முடியவில்லை.

"நானும் எதிர்பார்க்கவேயில்லை" எனது பதிலில் ஏனோ உற்சாகமில்லை.

"அப்ப உன்ரை நிலைமை என்ன மாதிரி? உன்ரை அவர் என்னவேலை செய்யிறார்? உனக்கு எத்தினை பிள்ளையள்?" வானதியின் இந்தக் கேள்வி எனக்கு வேதனையையும் சிரிப்பையும் தருவதாக அமைந்தது.

"எனக்கு இன்னமும் கலியாணம் நடக்கேல்லை. வானதி" மிக மெல்லிய குரலில் சொன்னேன்.

"என்னது கலியாணம் நடக்கேல்லையோ? இப்ப செய்யாமல் பிறகெப்ப செய்யப்போகிறீர்?"

அவளது கேள்விக்கு நான் என்ன பதில் கூறுவது?

என்னுடைய சொற்ப சம்பளத்திலும் அப்பாவின் ஓய்வூதியத்திலும் குடும்பம் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த நிலையில் எப்படி சீதனம் கொடுத்து திருமணம் செய்வது? அது அவளுக்கு எங்கே தெரியப் போகிறது?

நான் அவள் பேச்சை திசை மாற்ற எண்ணினேன். "வானதி நீர் உம்மைப் பற்றி ஒண்டுமே சொல்லேல் லையே"

"என்னைப்பற்றியா? என்னைப் பற்றிச் சொல்லுவதெண்டா நிறையச் சொல்லலாம். எனக்கு கலியாணம் முடிஞ்சு அஞ்சு வருஷம். என்ர அவர் ஒரு பாங்க் மனேஜர். எனக்கு ஒரு பெடியனும் ஒரு பெட்டையும். இப்போதைக்கு இவ்வளவும் காணும் எண்டு நினைக்கிறன்." என்றபடி மெல்லச் சிரித்தாள். அவள் சிரிப்பில் ஒரு நளினம் இருந்ததை அவதானித்தேன்.

"அப்ப எதுக்கு கொழும்பிலயிருந்து இஞ்ச மாற்றம் எடுத்தனீர்?" நான் கேட்டேன்.

"என்ர அவருக்கு யாழ்ப்பாண பாங்குக்கு மாற்றம் வந்ததால நானும் மாற்றம் எடுத்துக்கொண்டு வந்திட்டன்" வானதி நிதானமாகச் சொன்னாள்.

"ஏன் அவரில உமக்கு நம்பிக்கையில்லையே" நான் அவளை புன்னகையோடு கேட்டேன்.

அந்தக் கேள்வியின் அர்த்தத்தை புரிந்துகொண்ட வானதியின் முகத்தில் ஒரு கோபப்பார்வை ஒரு கணம் தோன்றி மறைந்தது.

"என்ர புருஷன் அப்படியான ஆள் இல்லை. அவருக்கு பொம்பிளையளைக் கண்டா ஒரே கூச்சம். அவருக்கு என்னோட படிப்பிக்கிற ரீச்சர்ஸ் என்ரை வீட்ட வந்தாலும் அல்லது வேற யாரும் என்ர பிறன்ஸ் வந்தா லும் பெரிய வெட்கம்வந்திடும். அவை யள் போற வரைக்கும் வெளியில வரமாட்டார். அப்பிடித் தங்கமான மனிசன். அவர் இஞ்சை கஷ்ரப்படக் கூடாது எண்டுதான் மாற்றம் எடுத்துக் கொண்டு வந்தனான்" மூச்சுவிடாமல் என் கேள்விக்கு பதில் சொன்னாள் வானதி.

பாடசாலை முடிந்து நான் வீட்டிற்குப் புறப்பட ஆயத்தமானபோது, வானதியும் என்னுடன் வந்தாள். நாங்கள் பாடசாலை வாசலுக்கு வந்த போது ஸ்கூட்டர் ஒன்று வானதியின் முன்னே வந்து நின்றது.

வானதி எனக்கு உற்சாகத்துடன் சொன்னாள் "செவ்வந்தி! இவர்தான் என்ர ஹஸ்பண்ட்".

நான் நிமிர்ந்து பர்த்தேன். எனக்கு ஒரு கணம் தூக்கிவாரிப் போட்டது.

அவள் கணவனுக்கு என்னை மறந்திருக்கும் ஆனால் எனக்கு அவள் கணவனை மறக்கமுடியாத அளவிற்கு நினைவிருந்தது.

பேருந்துப் பிரயாணத்தின் போது என் மீது முதற் தொடுகை புரிந்த அந்தப் பெயர் தெரியாத, முகம் மட்டும் என் நெஞ்சில் ஆழமாய்ப் பதிந்து போன, அந்த மனிதன் இப்போது என் முன்னிலையில் வானதியின் கணவன் என்ற வேஷத்தோடு நின்று கொண்டிருந்தான்.

வானதியின் அறிமுகத்திற்கு என்னால் எந்த உணர்ச்சியையுமே வெளிப்படுத்த முடியவில்லை.

"நாளைக்கு ஸ்கூல்ல சந்திப்பம்" என்றபடி என் பதிலுக்கு காத்திராமல் ஸ்கூட்டரில் ஏறி கணவனின் இடுப்பில் தன் கரம் பதித்துப் புறப்பட்டாள் வானதி.

"என்ர அவர் தங்கமான மனிசன்....." வானதியின் குரல் என் காதில் திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டிருந்தது. நான் பேருந்து நிலையத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தேன்.

(யாவும் கற்பனை)

---

# கனவுகளே....! கனவுகளே....!!

எமது பண்பாட்டில், கனவு என்பது ஒரு சிறப்பான இடத்தைப் பெற்று வந்திருக்கின்றது. கனவிலே காணும் சம்பவங்களைக் கொண்டு நிகழப் போகும் சம்பவங்களைக் கணிப்பிடும் ஒரு நம்பிக்கை எம்மிடத்தே உண்டு. கனவின் மகிமை பற்றி பழந்தமிழ் இலக்கியங்களில் கதை கதையாகக் கூறப்படுகின்றது. விஞ்ஞான பூர்வமாக, மனித மூளையின் ஓய்வின் போது முன்னைய சிந்தனை மீட்கப் படுதலே கனவு எனக் கூறப்படுகிறது.

நம்மிடத்தே கனவுகள் நம்பிக்கைகளாக இருக்க, 20ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் கனவு கலையானது. அது சர்ரியலிசம் (Surrealism) எனப்பட்டது. பிராய்டு என்ற மருத்துவர் 'மனோதத்துவம்' எனும் பிரிவில் நிகழ்த்தி வெளியிட்ட ஆராய்ச்சிக் கருத்துக்கள் இதன் தோற்றத்துக்கு வித்திட்டன.

மனித மனதை பிராய்டு - வெளிமனம், உள்மனம் என்று இரண்டாகப் பிரிததார். வெளிமனம் நனவு நிலையில் இயங்குகின்றது. உலக அறிவு, ஒழுக்க நியதி, அன்றாட உணர்ச்சிகள் என்று ஒவ்வொரு வினாடியும் உணரும் மனதை வெளி மனம் என்றார். இன்னொரு கூறு உள்மனம். இது

## கனவுலகில் உதயமான ஒரு கலைப்பாணி.....!

நனவற்ற நிலையில் இயங்குகின்றது. நம்மனதில் குழந்தைப் பராயத்தில் இருந்து அரும்பி அடக்கி வைக்கப் பட்டுள்ள ஆசைகள், தாபங்கள், விருப்பு - வெறுப்புக்கள் ஆகியன உள்மனதில் குடிகொண்டுள்ளன. இவை தடைகளை மீறி எப்போதாவது உணர்ச்சிப் புலன்களுக்குத் தட்டுப்படுவதுண்டு. அது பல்வேறு ரூபங்களில் நிகழ்கிறது. அதில் ஒன்று தான் நாம் உறங்கும் போது காணு கின்ற கனவுகள்.

மனிதர்களின் கனவுகள் பற்றி பிராய்டு சிறப்பாக ஆராய்ந்தார். கனவுகள் மனதில் நிறைவேறாத ஆசைகளைப் பூர்த்திசெய்து வைப்பதற்காக உண்டாகின்றன. நம் சிந்தனைகள், நோய்கள், நாம் அலட்சியப்படுத்தும் எண்ணங்கள் ஆகியன கனவின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன. இந்த வெளியீட்டின்போது வெளி மனம் இவற்றைத் தணிக்கை செய்வதுண்டு. அத்தகைய தணிக்கையை மீறி அந்த விசயங்கள் கனவில் உருவங்களாகவும் சங்கேதக் குறிகளாகவும் வெளிப்படுவதுண்டு என்று கூறுகிறார் பிராய்டு.

பிராய்டு கண்டு சொன்ன உள்மனமும் கனவு நிலைக் கருத்துக்களும் ஆந்தர் பிரெடன் (Andre Breton) என்பவரையும் அவருடைய நண்பர்களையும் கவர்ந்தன. இவர்கள் முன்னைய டாடாலிசம் எனும் கொள்கைக் குழுவில் இருந்து புதியதொரு பாதையைத் தேடியவர்கள். ஆக ஒரு கவிஞனின் ஆயுதங்களுடன் அக உலகின் இருண்ட பிரதேசத்தை அறிந்து கொள்ள இவர்கள் நிகழ்த்திய பயண வழிமுறையே சர்ரியலிச இயக்கமாக மலர்ந்தது. சர்ரியலிசம் ஆரம்பத்தில் இலக்கியம் ஊடாக படைக்கப்பட்டாலும் பின்னர் பல கலை வடிவங்களிலும் முனைப்புப் பெற்று கலை இலக்கிய இயக்கமாக வளர்ச்சி கண்டது.

கனவுகள் சில சம்பவங்களில் அழகானவையாக இருக்கின்றன. சில சம்பவங்களில் அவை அதி விநோதமாக அமைவதும் உண்டு. கனவுகளின் அழகுகள் பற்றி ஆந்தர் பிரெடன் பேசுகிறார். கனவு நிலையில் கிடைக்கும் புனைவுக் காட்சிகள் அற்புதமானவை மட்டுமல்ல, அழகானவையும் கூட என பிராய்டு எழுதினார். நனவு நிலையை விட உயர்ந்த கனவு நிலைக் காட்சிகளுக்கு முக்கியம் கொடுக்குமாறு சர்ரியலிஸ்டுக்கள் எல்லாக் கலை இலக்கிய வாதிகளையும் வேண்டிக் கொண்டனர். அறிவியக்க உலகுக்கு மறுபுறம் அமைந்து கிடக்கும் அந்த அதிசய உலகிற்கு பயணஞ் செய்ய கற்பனை, உறக்கம் எனும் இரண்டு ஆயுதங்களுடன் அவர்கள் புறப்பட்டனர். உறங்கும்போது கனவு கண்டனர். கனவு நிலையை அவர்கள் வரவேற்றனர். கனவு நிலைக்காகத் தவம் கிடந்தனர். தாங்கள் கண்ட கனவுகளைக் கவிதைகளாகவும் ஓவியங்களாகவும் வடிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். உடனுக்குடன் தங்கள் கனவுகளைப் பரிமாறிக் கொண்டனர். பத்திரிகையில் தங்கள் கனவுகள், கற்பனைப் புனைவுகளைப் பற்றி எழுதினர். இந்தக் கற்பனைப் புனைவுகளே புறஉலகைவிட உண்மையானவை என்று அவர்கள் திண்ணமாக நம்பினர். காலப் போக்கில் இந்தக் கனவு நிலை மனநிலை என்பனவற்றோடு இவர்களது ஆய்வு சென்று விட்டது.

## து.துசியந்தன்

சர்ரியலிஸவாதியான ஆரகன் தன் அனுபவத்தைக் கூறும் போது, "நாங்கள் படுக்கையில் உறங்குவதற்குச் சற்று முன்னாலும் சரி, அல்லது தெருவில் நடந்து கொண்டிருக்கும் போதும் சரி, கண்களை விழித்துக் கொண்டு நிழல்களுடன் கைகுலுக்குவதற்குத் தயாராக இருந்தோம். இந்த மனம் என்கிற விடயத்தை அதன் ஸ்தூல வடிவில் உணர்ந்தோம். அந்த மனம் ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு மாறிக்கொண்டே இருந்தது. அந்தக் காட்சிகளும் சிந்தனை நிலையிலிருந்து வித்தியாசமானவை என உணர்த்தின" என்றார். இத்தகைய முயற்சிகளின் விளைவாக ஒரு காலத்தில் சர்ரிய லிஸ்டுக்கள் அனைவரும் ஒரு தவ நிலையில் நின்று கொண்டிருந்தனர். அதாவது இவர்களது நிலை பித்துப் பிடித்தவர்களைப் போல் ஆகியது.

விளக்கை அணைத்துவிட்டு நனவற்ற நிலையில் பேசிக்கொண்டிருந்தனர். சிலர் கனவு காண்பதற்கு வசதியாக நினைத்தவுடன் தூங்க ஆரம்பித்து விட்டனர்.

சர்ரியலிஸ்டுக்கள் மேற்கொண்ட



இந்த நடவடிக்கை அவர்களை அறியாமலே ஓர் இலட்சிய உலகிற்கு அவர்களை அழைத்துச் சென்று விட்டது. சர்ரியலிஸ்டுக்களின் தன்னியக்க(Psychicautomatism) எழுத்துக்களும் பேச்சுக்களும் வெளிவந்த சமயத்தில் அவர்கள் கண்ட கனவுக் காட்சிகளும் வெளிவந்தன.

அவர்கள். தூங்கும்போதும் தூங்குவதாக நினைத்துக் கொண்ட போதும் மனக்கண்ணுக்கு புலப்பட்ட அதிசயங்கள், அமானுஷ்ய - அர்த்தமற்ற விடயங்கள் எல்லாவற்றையும் எழுத்திலும் ஓவியத்திலும் வடித்த னர்.

அதுவே மிகையான யதார்த்தம், முழுமையான மெய்மை, சர்ரியலிசம் என்றனர். சர்ரியலிஸ பாணியின ஓவிய முன்னோடியாக சர்வரோடாலி குறிப்பிடப்படுகிறார். ஸ்பானிய நாட்டின் பார்ஸிலோனா நகரிற்கு அருகில் 1904இல் டாலி பிறந்தார்.மட்ரிட் நகரத்து நுண்கலைக் கல்லூரியில் பயின்றார். 1928இல் சர்ரியலிஸ ஓவியக்குழுவினருடன தன்னை இணைத்துக் கொண்டார். சிக்மண்ட் பிராய்டின் உளவியல் கொள்கையின் செல்வாக்குக்குட்பட்டு ஓவியத்தில் பிராய்டின் ஆகசசெயற்பட்டார். ஓவியப் பொருள்களின் தெரிவு, ஓவிய வரன்முறைகள், புதுப் புனைவான ஓவிய உருவாக்கம், விலங்கு அவயத்தோடு கூடிய மனித உருவங்கள், மெய்யானதும் பொய்யானதுமான கலப்பைப் பெற்ற ஓவியங்கள் என்பன டாலியின் படைப்புக்களில் காணப்படும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். விநோதமான கனவுநிலைக் காட்சிகளாக டாலியின் ஓவியங்கள் திகழ்ந்தன.

"வழிந்தோடும் கடிகாரம்" என்ற ஓவியம் டாலியின் முதன்மைப் படைப்பாகும். இதைவிட உள்நாட்டுக்கு கலகத்திற்கான அபாய அறிகுறி - சிலந்திக் கால்களுடைய யானை போன்றன - இவரது படைப்புக்களில் சிறந்தவையாகும்.

பல நூற்றாண்டு காலமாக ஓவிய வழக்கில் போற்றப்பட்ட காட்சிக்குரிய அடிப்படைகளைத் தகர்க்கும் வகையில் டாலியின் சிந்தனைகளை இப்படைப்பு வெளிக்கொண்டு வந்தது. சர்ரியலிஸ்டுக்களின் ஓவியங்களில் ஓவியப் பொருளை இலகுவில் கண்டு பிடித்துவிடலாம். எல்லோராலும் அறியப்பட்ட பொருள்கள், சர்ரியலிஸ்டுக்கள் கையில் கற்பனைபொருந்திய விசித்திர வடிவங்களாக மிளிர்ந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 21 வயற்கரையில் சங்கமம்

செங்கை ஆழியான்

பிள்ளையார் கோயில் வயல் விளிம்பிலிருந்து பார்க்கும்போது கண்ணுக்கெட்டிய தூரம் வரை வயல் வெளி பரந்து கிடக்கின்றது. இரண்டு மாதங்களுக்கு முன்னர் பச்சைப்பசேலென்றிலிருந்த வயல்கள் கதிர்களுடன் சாய்ந்து கிடந்தன. அறுவடை செய்ய எவருமில்லாத நிலை. சில சில வயல்களில் ஓரிருவர் தானியக் கதிர்களை வெட்டிச் சென்றனர். கூட்டங் கூட்டமாகப் பறவைகள் வயல்களில் விழுந்து தானியங்களைப் பொறுக்கிச் சென்றன.

பார்த்துக்கொண்டு நிற்கும் போது ஒரு கூட்டம் புறாக்கள் சிறகுகளைப் படபடவென அடித்துக்கொண்டு வயலின் வரப்புகளில் இறக்கின. கட்டாக் காலி மாடுகள் அவற்றினைப் பார்த்து மூசிவிட்டு மேய்ந்து கொண்டிருந்தன. மாடுகள் நன்றாக மேய்ந்து கொழுத்துத் திமிர்பிடித்திருந்தன. கன்றுகள் தாயிடம் நன்றாகப்பால் குடித்து மதமதர்த்து வளர்ந்திருந்தன. அவற்றிற்கான பாலைக் கறந்தெடுப்பதற்கு இந்த ஊரில் மனிதர்களில்லை.

தூரத்தில் சங்கரத்தை பத்திர காளி கோயில் நிழலாகத் தெரிகின்றது.

நான் கவலையுடன் லூசியனை எண்ணிக்கொண்டேன். ராகுலன் என்னிடம் திடமாகக் கூறிவிட்டான்.

"அப்பு, யாழ்ப்பாணத்திற்கு வீடு பார்க்க வந்த லூசியன் அண்ணை, திரும்பி வரவில்லை. நாங்க அவர் வீட்டிற்குப்போய்ப் பார்த்தம். அவர் வீட்டு வாசலில் எலும்புக்கூடொன்று கிடந்தது. வீட்டிலும் ஷெல்பட்டிருக்குது. அவருக்குச் ஷெல் பட்டிருக்க வேணும். அந்த எலும்புக்கூடு அவராகத்தான் இருக்க வேண்டும். வளவுக்குள்ள கிடங்குவெட்டி அடக்கம்செய்தம். பிள்ளைகள் பாவம்" அவன் குரல் வேதனையில் தளதளத்தது. அவன் பிலோமினாவை எண்ணிக் கொண்டான். அவளுக்கு அவன் என்ன சொல்வான்? எப்படி அவளை ஆறுதல் படுத்துவான்?

தென்மராட்சியிலிருந்து ராகுலன் எப்படி இந்தக் கட்டுக் காவல்களை மீறி இங்கால் வந்தான் என்பதை எண்ணி நான் அதிசயப்படவில்லை. இந்தஇளைஞர்கள காதால நுழைந்து மூக்கால் வரக்கூடியவர்கள். எதுவும் இவர்களின் ஊசாட்டத்தைத் தடுக்க முடியாது.

லூசியனின்மரணத்துடன அவன் நல்ல செய்தி ஒன்றினையும் கொண்டு வந்திருந்தான். என்னால் அதனை நம்ப முடியவில்லை.

"அம்மா கொழும்புக்குப போயிட்டா. அங்க அங்கொட ஆஸ்பத்திரியில அப்பாவை சித்த சுவாதீன நிலையில சிதம்பரம் மாமாண்ர மகன் பார்த்திருக்கிறாராம். அப்பு! அப்பாதான் அவர் என்பதில் அவருக்குச் சற்றுச் சந்தேகம். அம்மாவை வரச்சொல்லி எழுதியிருந்தார். போயிட்டா... இன்னமும் விவரம்வரவில்லை. அது அப்பாவாகத்தான் இருக்குமெண்டு என் மனம் சொல்லுது.."

"பிள்ளையார் கைவிடமாட்டார். யோகம் பட்டதுயரம் கொஞ்ச நஞ்சமல்ல, 'ராகுலா! தம்பிநாதன் பத்து வரியமாக என்ன கஷ்டப்பட்டானோ? அவன் இருந்திருந்தால் நீயும் இப்படிப் போயிருக்கமாட்டாய்..."


அவன் மௌனமாக இருந்தான். ஆச்சி வழங்கிய தேநீரைக் குடித்து விட்டு நிமிர்ந்து பார்த்தான்.

"இருக்கும்...அப்பாவை அவர்கள் அடித்து, உதைத்துக் கப்பலில் ஏற்றிச் சென்றார்கள். கண்டவர்கள் சாட்சி. அவர் காணாமற் போனார். என் உடன் பிறப்புக்கள் இரண்டு ஷெல்லிற்குக் காணமற் போயினர். இவை மாத்திரமல்ல அப்பு, அவர்களைப் போல எத்தனை பேர் அநியாயமாகப் பலியாகினர் தெரியுமா? கேள்வி நியாயமில்லை.."

"கேள்வி நியாயம் எங்குமில்லை..." என்றேன். ராகுலன் என்னை ஏறிட்டுப் பார்த்தான்.

"என்ன சொல்லிறியள்?"

நான் பேசவில்லை. அவனும் பின்னர் வற்புறுத்தவில்லை. இந்த மண்ணில் மரணம் என்பது கேள்வி நியாயத்திற்குப்பட்டதாகவில்லை. ஒருவனின் உடலைச் சன்னம் ஒன்று துளையிட்டு உயிரைப் பறித்துக் கொண்டு வெளியேறின் ஒரு பகுதியினர் 'பயங்கரவாதி' எனப் பெயரிட்டனர். இன்னொரு பகுதியினர்



'துரோகி' எனப் பெயரிட்டனர். ஒவ்வொருவரும் தங்களது செயற்பாட்டிற்கு நியாயம் கற்பித்தனர். நியாயம் எப்பக்கம் என்பதல்ல முக்கியம். இறந்துபோன மனிதன் இந்த மண்ணில் வாழவேண்டிய உயிா என்பதும் இந்த உலகத்தின் சகலதிற்கும் உரிமையுடைய மானிடன் என்பதும் தான் எனது எண்ணம்.

ஓர் உயிரைப் பறிக்க எவருக்கும் உரிமை கிடையாது.

லூசியனின் மரணம் ஏற்படுத்தியிருக்கும் துன்பச் சுமையும், தம்பிநாதன் உயிருடன் இருக்கிறான என்ற செய்தி ஏற்படுத்தியிருக்கும் அளவிலா மகிழ்ச்சித் துளிர்ப்பும் வெவ்வேறான உணர்ச்சிகளை ஏற்படுத்தின. தம்பிநாதன் உயிருடன் இருக்கின்ற மகிழ்ச்சியை அனுபவிக்க முடியாமல் லூசியனின் மரணம் தடுத்தது. எவ்வளவு அற்புதமான மனிதன் அவன்? அந்தக் கிராமத்தின் ஆத்மாவாகவிருந்தான். எவருக்கும் பிரதிபலன் பாராமல் உதவ அவனால்தான் முடியும்.

அத்தனைக்கும் அவன் பெரும் வசதி படைத்தவனல்லன். கடலில் இறங்குவதற்குத் தடைவந்த போது தன்னந்தனியனாகக் கடலில் வள்ளத்துடன் சென்று திரும்பி வந்தான். கடற்கரையில் ஏக்கத்தோடு அவனைப்பார்க்கும் ஊரவர்களுக்கு தான் பிடித்துவந்தவற்றில் முகஞ் சுழிக்காது தூக்கிக் கொடுக்கும் பெருந்தன்மையை நான் பலதடைவைகள் கண்டிருக்கிறேன். பிடித்துவரும் மீன்களில் ஒரு பங்கினை [illegible] அவன் அந்தக் கிராமத்தின் பல வீடுகளில் அடுப்பெரிய உதவியிருக்கிறான். தன்னிடம் வேலை செய்த கார்த்தியன் செத்துப்போனதும் அவனின் குடும்பத்தைப் பட்டினியில் சாக விடாது காத்துப்பேணியவன் அவன். லூசியனைப் போல ஒருவன் இருக்க முடியாது. அவ்வளவு இரக்க சிந்தனையுடையவன்.

வீட்டிற்குத் திரும்பி வந்தபோது தையல்முத்து நிலத்தில் சேலைத் தலைப்பினை விரித்துவிட்டுப் படுத்திருந்தாள். மத்தியானவேளையில் இப்படிப் படுத்திருப்பவளல்லள்.

இன்று சமையல் எதுவுமாகவில்லையோ?

அவள் அருகில் வந்தேன். நான் வந்ததை அவள் கவனிக்கவில்லை. நெற்றியில் கைவைத்துப் பார்த்தேன். நெருப்பாகச் சுட்டது. நல்ல காய்ச்சல்.

"என்ன தையல்... என்ன செய்யிறது?"

அவள் கண்விழித்துப் பார்த்தாள்.

"ஒண்டுமில்லை அப்பா. இருந்தாற் போல தலைவலியும் குத்தும். காய்ச்சலும்காயுது... அவ்வளவுதான்."

"வாரும்... வட்டுக்கோட்டைக்குப் போவம். அங்க யூனிவேசிற்றி டாக்குத்தர் பிரசாத் இருக்கிறாராம். காட்டுவம்..."

"ஒண்டும் வேண்டாம். நீங்க போய் அடுப்பில சுடுதண்ணி வையுங்கோ. சூடா ஏதாவது குடித்தால் சரியாகி விடும்."

அடுக்களைக்குள் சென்று அடுப்பு மூட்டி வெறுந்தேநீருடன் அவளருகில் வந்தேன். அவள் எழுந்து உட்கார்ந்தாள். பாசத்துடன் பேணியை வாங்கிக் கொண்டாள்.

"எனக்குச் சாகிறதுக்குப் பயமில்லை. உங்களை இங்க தனிய விட்டிட்டுப் போறன் எண்டுதான் வருத்தமாக இருக்குது. பிள்ளையளிடம் உங்களை ஒப்படைச்சிட்டன் எண்டால் எனக்குப் பயமில்லை. நான் எப்பவும் சாகத் தயார்..."அவள் விழிகள் பொலபொலவென நீரைச் சொரிந்தன.

நான் நெகிழ்ந்து போனேன். அன்போடு மனைவியைப் பார்த்தேன். விழிகள் கலங்கத் தொடங்கின.

"சும்மா விசர்க்கதை கதையாதை, தையல். உனக்கேன் இப்படியொரு நினைவு வந்தது? நான் சித்தங்கேணி டாக்குத்தர் சதாசிவத்தாரிடம் ஒருக்காப் போய் வருத்தத்தைச் சொல்லி மருந்து வாங்கிவாறன்.."

"நீங்க ஒரு இடமும் போக வேண்டாம். என்னோட இருங்கோ.."

எனக்கு எதுவும் தெரியவில்லை. அடிக்கடி மனைவியின் நெற்றியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டேன். இரவு அவளின் உடல் நெருப்புப் போலக் கொதித்தது.

பயப்படத தொடங்கினேன். மயில்வாகனத்தார் வீட்டிற்குப்போய் அங்கிருந்தவர்களிடம் மருந்து ஏதாவது கிடைக்குமா என விசாரித்தேன். அங்கிருந்தவர்களிடம் எதுவும் கிடைக்கவில்லை.

காய்ச்சல் நிற்கவில்லை. தையல் இரவில் தன்னை அறியாமல் பிதற்றத் தொடங்கினாள். பிள்ளைகளின் பெயர்களையும் பேரப்பிள்ளைகளின் பெயரையும் அடிக்கடி கூப்பிட்டாள்.

"நீங்கதான் பாவம்... என்ன செய்யப் போறிள்?" என்று நிமிடதிற்கு ஒரு தடவை கூறிக்கொண்டாள். அவளின் அருகில் அமர்ந்து துயரத்துடன் அவளைக் கவனித்தேன். 'நான்தான் பிழைவிட்டிட்டன். உன்னையும் பிள்ளைகளோட சாவகச்சேரிக்கு அனுப்பவேண்டும். உனக்கு ஏதாவது நடந்திட்டால் பிள்ளைகளுக்கு நான் என்ன பதில் சொல்லுவன்?' என எனக்குள் குமைந்தேன்.

இரவு முழுவதும் நான் உறங்கவில்லை. மனைவிக்கு அருகில் அமர்ந்து அடிக்கடி அவளுக்குச் சூடாகத் தேநீர் பருக்கி வந்தேன். வேறெதுவும் எனக்குப்புரியவில்லை.

காலை துயரத்துடன் விடிந்தது.

மயில்வாகனத்தார் வீட்டிலிருந்த ஒருவயோதிபப் பெண் காலையில் வந்தாள்.

"வைச்சுக் கொண்டிருக்காமல் ஒருக்காக் கொண்டு போய்ப் பரியாரிட்ட காட்டவேணும்."

"எப்படிக் கொண்டு போறது?"

"கொட்டைக்காட்டில பரசாமியின்ர மாட்டுவண்டில் நிக்குது. போய்ச் சொன்னியள் எண்டால் வருவான். கொண்டுபோய் வட்டுக்கோட்டைப் பரயாரியாரிட்ட காட்டுங்கோவன்." இப்படிச் சொன்ன அப் பெண், "தையலுக்கு எல்லாம் ஒடுங்கிட்டுது.." என்றும் சொன்னபோது துடித்துப் போனேன். வாங்கில அறிவு நினைவில்லாமல் கிடக்கும் மனைவியைப் பார்த்தேன்.

"நான்பார்க்கிறன். நீங்க போயிட்டு வாருங்கோ..."

சைக்கிளை எடுத்துக்கொண்டு கொட்டைக்காட்டிற்குப் புறப்பட்டேன். பரமசிவத்தின் வீடு எனக்குத் தெரியவில்லை. வீதியில் விசாரிக்கவும் மனிதரில்லை. பரமசாமி எந்த மூலையில் ஒதுங்கிக் கிடக்கிறானோ?

எங்கு சென்று அவனைத் தேடுவது? மனம் படபடத்தது. வீட்டில் தையல் எப்படியோ? அவளுக்கு எதுவும் ஆகாது. ஆகக்கூடாது. பிள்ளையார் விடமாட்டார்.

கொட்டைக்காட்டு ஒழுங்கைக்குள் அலைந்து எதிர்ப்பட்ட ஒருவரிடம் விசாரித்து பரமசாமியின் வீட்டைக் கண்டுபிடித்தேன். விசயத்தைக் கேள்விப்பட்ட அவன், மேய்ச்சலிற்கு அவிழ்த்துவிட்ட நாம்பன்களைத் தேடிப்பிடித்து வண்டில்கட்டிக் கொண்டு புறப்படப் பன்னிரண்டு மணியாகி விட்டது.சைக்கிளை வண்டிலில் ஏற்றிக் கொண்டு அராலிக்கு வந்தபோது என் வீட்டுவாசலில் மூன்று, நான்கு பேர் நின்றிருந்தனர். அவர்கள் நின்றிருந்த கோலத்திலிருந்து ஏதோ நடந்துவிட்டதென எனக்குப் புரிந்தது. அவசரமாக வண்டியிலிருந்து குதித்து வீட்டிற்குள் ஓடி வந்தேன்.

வாங்கில் தையல்முத்தாச்சி வளர்த்தப்பட்டிருந்தாள். தலைமாட்டில் குத்துவிளக்கொன்று எரிந்து கொண்டிருந்தது.

அப்படியே மௌனச் சிலையாகி விட்டேன். வாங்கிலில் வளர்த்தப்பட்டுக் கிடக்கும் என் மனைவியைக் கண் கொட்டாமல் பார்த்தேன். விழிகள் மௌனமாக நீரைச் சொரிந்தன. அப்படியே நிலத்தில் அமர்ந்து கொண்டேன்.

தையல்முத்தாச்சி செத்துப் போனாள். பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சுற்றம், அயலவர்கள் என அவளைச் சூழ்ந்து நின்று அழுவதற்கு நூற்றுக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எவருமின்றி என்மனைவி வாங்கில் வளர்த்தப்பட்டிருக்கிறாள். தலையிலும் வயிற்றிலும 'அடித்துக்கொண்டு தையலின் பெருமைகளைச்சொல்லி அரற்றுவதற்கு இங்கு எவருமில்லை.

'தையல், நான் தனிச்சுப் போனனடி... தனிச்சுப் போனன். பிள்ளைகளுக்கு என்ன பதில் சொல்லப் போறன்?'

ஓரிரவு தையல்முத்தாச்சியின் சடலம் வாங்கில் காத்திருந்தது. மறுநாள் அதிகாலை, விறகு, தடி என்பவற்றினைப் பொறுக்கி பக்கத்து வயலில் அடுக்கி தேவாரத்துடன் அவளைத் தூக்கிச் சென்று கட்டையில் வளர்த்தி தீ மூட்டியபோது "ஐயோ... என்ர தையல்.." என்று தலையில் அறைந்து கொண்டு கதறினேன். "உனக்கு நான் கொள்ளி வைக்க நேர்ந்துவிட்டதே?" என்று அழுதேன்.

என்னை ஒருவர் வீட்டிற்கு அழைத்து வந்தார். சவக்கிரியைகள், சடங்குகள் எதுவுமின்றி, பாடை, பறை எதுவுமின்றி, பேரப்பிள்ளைகள் நெய்ப்பந்தம் பிடிக்காமல், மூத்த மகன் கொள்ளிக்குடம் தூக்காமல், முறையாக மயானத்திற்கு எடுத்துச்செல்லாமல், பக்கத்திலுள்ள வயல் கரையில் என் உயிரானவள் தீயுடன் சங்கமமாகி விட்டாள்.

அப்படியே திண்ணையில் அமர்ந்துவிட்டேன்.

இருந்தாற்போல அராலி பரபரப்படைந்தது. வாகனங்கள் விரைந்து வந்தன. மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் மனிதருடன் ஓடிவந்தன.

"சாவகச்சேரியை ஆமி பிடிச்சிட்டுது...இப்ப எல்லாச்சனமும் யாழ்ப்பாணத்திற்குத் திரும்ப வந்து கொண்டிருக்கினம்."

இடம்பெயர்ந்து திரும்பி வந்தவர்கள் உண்மையில் சந்தோசமாகத் தான் கூச்சலிட்டார்கள்.

நான் அவற்றினைக் கவனிக்கும் நிலையிலில்லை.

(தொடரும்)

## குறள் வெள்ளம்

மனம் ஒரு கண்ணாடி என்பார்கள். அதன் கடுப்பு முகத்தில் தெறிக்கும் என்பார்கள்.

மனக் கண்ணாடியில் கீறல் விழுந்தால் அதை அழித துவிடல் முடியாது. எனவேதான் அடுத்தவர் மனங்களைக் கீறும் வைர வரிகளை உயர்ந்தோர் பாவிக்க மாட்டார்கள்.

கோபம் வரும் போதும் - பொறுமை இழக்கும் போதும் நிதானம் தவறிக் கீழ்த்தரமான வார்த்தைகளை அள்ளி வீசி அடுத்தவர் மனங்களைக் கோணவைக்கும் கீழான பண்புடையோர் - தம் வாழ் நாள் முழுவதுமே அத்தகைய தவறுக்குப் பிராயச்சித்தம் தேடி விடல் முடியாது.

அத்தகைய சந்தர்ப்பங்களில் தடியடி, சண்டை, வெட்டுக்குத்து என்று வன்முறையில் இறங்குபவர்கள் நாளை சமாதானமாகி விடக்கூடும். காயங்கள் ஆறிவிடும். மனங்களும் குளிர்ந்துவிடும்.

தீயினால் சுடலாம். அப்புண் ஆறிவிடும். ஆனால் நாவினால் சுடக்கூடாது. அந்த மனக் காயம் ஆறாது நின்று வருத்தும்; அறுக்கும்.

**'தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு'** - 0129

- அடக்கமுடைமை -

- *அம்பிகைபாகன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவனிடம் கேட்டேன் இறகு

மெல்லச் சிறகடித்து மேகத்தில் முக்குளிக்கும்
புள்ளாகிப் போக 'பொடி' எனக்கு கொள்ளையாசை
வானில் பறக்கும் மணிக்குயிலைக் கேட்கின்றேன்.
ஏன் மனிதன் ஆனேன் நான் என்று?

பஞ்சாய் இறகும் பறந்துயரப் பூஞ்சிறகும்
குஞ்சு பொரிக்கும் குதூகலமும் – அஞ்சாமல்
விட்டு விடுதலையாய் வெய்யில் குடிப்பதுவும்
எட்டவில்லையேடா எனக்கு.

என்ன சுதந்திரமாய் எப்பாட்டும் பாடிடுவேன்
தின்பேன் நினைத்தால் திசையளப்பேன் – கண்மூடித்
தூங்கென்று சொல்லத் துரைகளில்லாச் சிட்டாக
ஏங்குறதென் உள்ளம் எரிந்து.

ஆலில் ஒரு வீடு... ஆ! முகிலில் பள்ளியறை
நீலக் கடல்..பூங்கா என்றிணைத்து –வாழ்வில்
'இடத்துக்காய் மாயும் இடர்' அற்ற கொக்கின்
தடந்தேடும் எந்தன் தவிப்பு.

தான் வாழ... சொந்தச் சகோதரரைக் கன்னமிட்டுக்
கோனாகும் கொள்கை குருவியிடம் – நான் காணேன்
கூனிக் குறுகுதுளம், கூடிக் கரைந்துண்ணா
ஈனப் பிறப்பெடுத்தேன் ஏன்?

"வெள்ளை சிறகினைப் போல் மென்மை உளப்புறாவே"
கள்ளன்; உடல்நிறம்போல் நெஞ்சடைந்தேன்! – சொல்லில்
வடிக்கவொண்ணாத் 'தாழ்வுயர்வு' மானுடர்க்குள் செய்த
துடக்கனானேன் என்னைத் தொலைத்து!

பேதங்கள் அற்று 'பெரிசு சிறிசழித்து'
சாதிச் சளக்கறுத்துச் சன்மார்க்கம் – தேட
பரிணாமப் பாடம் பறவையிடம் கற்போம்;
இறைவனிடம் கேட்டேன் இறகு!

- அருணன் -

## 'பால் வெளியில் பாய்ந்த நீர்'

நாதசுர இசையின் நாயகனே
நாதத்தின் நுண்மைதனை நவையறக் கற்றவனே!
நின் கலையை,
சாதகத்தால் மெருகூட்டி, வாழ்வுதனை இசைக்காக
சமர்ப்பணம் செய்தவனே!

திருவிழாக் காலமென்றால், நின்பெயரை
ஊடகங்கள் பறைசாற்றும்; ஊர்திரளும்.
மேனியில் நீ வீற்றிருந்து
நாதமழை வர்ஷிப்பாய்.

பல்லவி ராகமாலிகையை, பலமணிகள்
வாள்முனைப் பயணம்போல், நூலிழை வழுவாது
வாரிவழங்குவாய்.
உன்னை மறப்பாய்; உலகநினைவிழப்பாய்.
நாபியில் மூச்சிழுத்து ~ உச்சத்
தாயியில் உனையுருக்கி,
தேனெனப் பிழியும் அந்தத்
தோடியின் இனிமை என்னே!

சங்கரா பரணந்தன்னில்
சர்ப்பங்கள் நெளிந்து ஓடும்
சண்முகப் பிரியாதன்னில்
சரவணக் குளிர்மை தோன்றும்
தர்பார் இசைத்து மன்னர்
சபைதனை உணரவைப்பாய்

தருக்குடை நெஞ்சாரையும்
உருக்கிடும் முகாரியும்,
தென்றலாய் வருடித் தேகம்
சிலிர்த்திடும் மோகனமும்,
குன்றென நிமிரவைக்கும்
குணமுடை அடானாவும், ~ உன்
குழல்வழி வழிந்து என்பும்
குளிர்ந்திடச் செய்யுமையா!

இத்தனை தந்துமென்ன எவரிதை நுகர்ந்தார்?
அரசியல் நிலைவரமும்,
அங்காடி விலை உயர்வும்,
அசை போட்டு மகிழ்வார் ~ அன்றி
இசையினை யார் உணர்ந்தார்?

தண்டாமரையின் உடனிருந்தும்
தண்தேன் நுகராத,
மண்டூகம் போல்வார் முன்
வாரி வழங்கிய உன்கான மழை,
பாழ்வெளியில் பாய்ந்த நீரையா!

- புத்தூர் வே. இளையகுட்டி -

## கவிதை முற்றம்

## கவிதை பாடிப்பொழுது போச்சு?

வீதிகளில் போகையிலே
வீட்டில் அடை காக்கையிலே
நாதியற்றுச் சாய்ந்திடலாம் உசிரும் ~ எங்கள்
நாய்க்கு மதிப்பெங்களிலும் அதிகம்.

எண்ணம்போல் திரிவதற்கு
என்னயலைக் கொஞ்சுவதற்கு
மண்ணில் தடை ஆகா என்ன உரிமை? ~ செக்கு
மாட்டைவிடக் கேவலமெம் 'நிலைமை'

எக்கணமுஞ்சாவதற்கும்
என்றும் ஊமையாய், முடமாய்,
சிக்கனமாய்ச் சாப்பிடவும் துணிந்தால் ~ இங்கு
சிக்கலில்லை வாழ்ந்திடலாம் நெடுநாள்.

மாற்றம்வரும் மாற்றம்வரும்
மாற்றம் வரும் என்று நம்பி
மாற்றமின்றிச் சாகுதெங்கள் கனவு ~ பெரும்
'மர்ம நாவல்'தானோ எங்கள் நனவு.

கட்டில்லாத பட்சிகளும்
காற்று, முகில், சூரியனும்
தொட்டகலும் போதெனுள்ளம் துடிக்கும் ~ சிறைச்
சூழல் மீது... என்னிதயம் சபிக்கும்!

கால் நசித்த பூச்சியை நாம்
கண்டிடாது போவது போல்
காலம் எமை ஏய்த்து 'விட்டுப்' போச்சு ~ சும்மா
கவிதை பாடி என்ன பலனாச்சு?

- சயனொளிபவன் -

## பேசவேண்டும் புலிகளுடன் பேணவேண்டும் மூன்றாந்தரப்பை

இலங்காபுரி யாளும் ஏந்திழையே யுந்தன்
அலங்கார வார்த்தைகளை அடுக்கி ~ கலங்காதீர்
சமாதானம் வந்திடும் சற்றுப் பொறுங்களென சதாதானம்
உயிர்களுக்கிங்கேன் சாற்று.

தீர்வுப் பொதிவருமெனத் தினந்தினம் அறிக்கைவிட்டு
போர்ப் பறைமுழக்கம் பொழிவதல்லால் ~ தேர்வுக்கு
மக்களவை முன்வைக்காது மாற்றான் கருத்துணராது
சிக்கலை நீடிப்பதேன் சிதைத்து.

அகதிகளாக மக்கள் ஆயிரக் கணக்கிலென்றும்
சகதியில் உழல்வதுதான் சமாதானமா ~ தகுதியின்
சுயங்கரம் நாட்டும் சூழலுக் காளானோர்க்குப்
பயங்கர வாதப்பட்டமேன் பகர்.

நான்காண்டு களின்முன்னே நடந்திட்ட தேர்தலில்
நான்காட்டு வேன்தீர்வென நயந்த ~ தேன் கூட்டும்
இனிய சொல் லலங்காரம் ஏமாற்றி வாக்குப் பெறக்
கனிய வைக்கும் அரசியல் காயக்குமா?

புதைகுழிகள் தோண்டியன்று புனித முழக்கமிட்டு
வதைமுகாம் ஒழிப்பேனென்ற வஞ்சினம் ~ புதைகுழிகள்
செம்மணியில் மீண்டும் சிரஞ்சீவி யானபோது
அம்மணியே எங்குற்றதோ அறியோம்.

சுற்றிவளைப்புக் கைதுகளால் சுடுகாடு போலத் தினம்
வற்றிவதங்கும் தமிழ்மகன் வாழ்க்கை ~ வெற்றிவாகை
சூடும் வெறித் தனத்தால் சுரக்கும் இரக்கம்கெட
நாடும் நெறிப் பிறழ்வால் நலிந்து.

குளிரூட்டி அறையில்பணி குற்றேவல் புரியப்பலர்
களிப்பூட்டும் சூழ்நிலையின் காரணத்தால் ~ விழிப்போடு
தக்கபடி அறிந்திலரோ தமிழர் துயரங்களை
பக்கபல மளிப்போரின் பகடத்தால்.

வாக்குறுதி ஒன்றளித்தால் வழுவாது பின்பற்றும்
நோக்குறுதி வேண்டும் நுண்ணியர்க்கு ~ நாக்குறுதி
பிறழ்ந்தால் மதியார்காண் பேரறிவாளர் மற்றும்
அறந்தானும் நின்றறுக்கும் அறி.

ஆளுக்கொரு விதமாய் அறிக்கைகளை விடுத்து
நாளுக்கொரு திட்டமாய் நல்கி ~ வேளைக்கொரு
விதமாக உரைத்திடும் விற்பன்னர் ஓரணியில்
மிதமாகத் தீர்ப்பரோ மிளிர்ந்து.

பேசவேண்டும் புலிகளுடன் பேணவேண்டும் மூன்றாந் தரப்பை
கூசவேண்டாம் என்றமைச்சர் கூறிநிற்க ~ பேசவேண்டாம்
வெற்றி கொண் டொதுக்குவோம் விரைவிலெனப்பகர்ந்தால்
பற்றிய பிரச்சினைதான் தீர்வதெப்போ பகர்.

(சுயங்கரம் - சுயஉரிமை;
காயக்கம் - மருட்டுவித்தை;
பகடத்தால்- தந்திரத்தால்;
மிளிர்ந்து - பெருமைப்பட).

- பழையூர்சுந்தரம்பிள்ளை -

## நிம்மதி தா....!

பச்சை மயிலேறிப் பறந்திடும் வேலவா ~ உனை
கொச்சை மொழியாலே பாடி நான் அர்ச்சிக்க
இச்சை கொள வைக்கும் வடிமுக அழகா ~ நாடி
வாஞ்சை கொண்டு நின்றேன் ஓடியே வந்திடுவாய்!

படர்ந்த முடி அழகா, ஓவியக்கண் அழகா ~ ஞானப்
பழமாகிப் பழநியிலே பதியாகி நின்றவுனை ~ சிரம்தாழ்த்தி
பருகிடவே சீரான விருப்புடனே ~ வருந்தித்தான்,
பாடுகின்றேன் வரமருள வந்திடுவாய்!

விதியென்று வதிகின்ற வதிவிடமற்றோர்க்கு ~ நற்
கதியென வேலால் நீ அருளிடுவாய் ~ கனிந்திடும்
துதி செய்து வாழ்வோரைத் தினம் காக்கும்
பதி நீயே எனக்கொரு வரம் தருவாய்!

எல்லோர்க்கும் அருள்செய்ய வல்லவா திருமுருகா,
நல்லூரில் விருப்புடனே அமர்ந்த கதை நானறிவேன்!
வல்லவனாய் வள்ளி தெய்வானையுடன் தேரேறி
நல்லவனே வந்திடுவாய் நாடித் தொழுதுநின்றேன்!

பேராசைப் பேய்கள் மறைந்திடவே ~ ஆசைப்
பெருங்கயிறு அறுந்து தெறித்திடவே!
சீரான நல்வாழ்வு பெற்றுச் சிறந்திடவே
நாவாலே நாடுகின்றேன் நாயகனே வந்திடுவாய்!!

- ச.சுஜிதா -

## முருகா.....பதில்...தா....?

(பெண் ஒருத்தியின் உள்ளக் குமுறல்கள் இவை. இவை நிழல்கள் அல்ல. நிஜங்கள்.)

மாதருக்கு இங்கு உண்டு என்னநீதி..
மால்மருகா ஆருரைத்த தெய்வநியதி...?
வேதங்களில் உள்ளதுவா இந்த வேலி...
வேடுவர்கள் தாம் வகுத்த பங்கவேள்வி.

மங்கையரைப் பெற்றவரோ மாபாவி
மைந்தரது அன்னையரோ ஆங்காரி
கங்கைநதி பாலனெமைக் காப்பாற்றி
காசினியில் தந்திடுவீர் அருளாட்சி

நம்மவரைக் கண்டுசிலர் பரிகாசம்...
நாலுகுத்தல் பேசியுமே கரகோசம்
வம்பளக்க வந்து ஒன்று வாலாட்டும்....
வாழ்வினிலே எங்களுக்கோ போராட்டம்.

காதலென்று சொல்லியொன்று ஏமாற்றும்
கன்னிமையைக்கொள்ளையிட்டுத் தாயாக்கும்...
ஆதரவைத் தேடிமனம் அழுதாறும்
ஆறுதலை நீக்குஞ்சிலர் அவதூறும்

சீதனமோ ஆண்களுக்குப் பலகாரம்
சீரழிவோ நம்மவரைப் பந்தாடும்
தாதரென்று எண்ணுளமைச் சமுதாயம்
தாலிவரம் எங்களுக்கு இலதாகும்.

பெண்மையினைக் கூறுபோடும் வியாபாரம்
பேய்கள்வந்து நாடுவதும் விபச்சாரம்...
கண்களிலே இல்லையவர்க் கனுதாபம்...
கற்பழிப்பார்... எங்குளதும் பரிகாரம்?

ஆண்களுக்கு வீட்டினிலே அதிகாரம்...
ஆரணங்குக் கில்லைமனை விவகாரம்...
ஆண்டவனே... வேலவனே... அநியாயம்!
ஆறுமுகா தந்துவிடும் ஆதாரம்.

பாதகத்திற் பாதகமிப் பெண்பாவம்...
பாரிடையே சொல்லிவிட நீர்வாரும்
பூதலத்தில் வேண்டுமுங்கள் அவதாரம்...(அது)
பூவையர்கது நீங்க(ள்) செய்யும் உபகாரம்


- த. தர்மேந்திரா -

## கேட்ட வரம்

ஆனந்தம் விளையாடும் அகிலம் கேட்டேன்
அச்சம் இல்லாத அமைதி கேட்டேன்
கந்தக நெடி இல்லாத காற்றைக் கேட்டேன்
தென்றல் தழுவும் தேசம் கேட்டேன்
மாசு மறு இல்லாத தாயன்பு கேட்டேன்
மறந்து விடாத ஒரு காதலி கேட்டேன்
இனங்களுக்கிடையே இணக்கம் கேட்டேன்
இன்பமாய் இருக்க ஒருநாள் கேட்டேன்
துன்பம் தூரத் தொலைந்திடக் கேட்டேன்
சஞ்சலம் இல்லாத சகோதரத்துவம் கேட்டேன்
மாரியில் மழை மண்ணில் பொழிந்திடக் கேட்டேன்
வாசலெங்கும் வசந்தம் வாசம் செய்யக் கேட்டேன்
சமாதானப் புறாவின் சத்தம் கேட்டேன்
நம்பி நடக்க ஒரு நட்புக் கேட்டேன்
தேசத்துத் தெருவெங்கும் சுற்றிவர சுதந்திரம் கேட்டேன
தாய்மொழியைத் தயக்கம் இன்றி உரைக்க வரம்கேட்டேன்
உண்மையை மதிக்கும் உலகம் கேட்டேன்
வறுமை இல்லாத வாலிபம் கேட்டேன்
நோயில்லாத வயோதிபம் கேட்டேன்
இத்தனை கேட்டும் கிடைக்கவில்லை
இதிலே எதுவும் நடக்கவில்லை.

- கு. சுதாகரன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சிறியேன் செய்த சிறுபிழை

4

திலீப் என்னிடம வந்து மாட்டிக்கொண்டதிலிருந்து நாளாந்தம் சுவாரஸ்யங்களுக்குப் பஞ்சமில்லை.

அன்று ஒரு சனிக்கிழமை - ஓய்வு நாள், காலை உணவு முடித்து ஓய்வாக இருந்தோம். ஏதாவது கொஞ்சம் தமாஷ் பண்ணாவிட்டால் காலை உணவு சீரணமாகாதே என்று எனக்கு ஒரு கவலை உண்டானது.

ரொபி ஒன்றுடன் என்னை நோக்கிய திலீப்பை “கொஞ்சம் பொறுங்கோ....! பொறுங்கோ....!!” என்றவாறே அவரது உள்ளங்கையை உற்றுநோக்கினேன். அவர் வசதியாய்க் கையை நீட்டி அசையாது பிடித்து, தனது கை ரேகை பார்ப்புக்கு மிகுந்த ஒத்தாசை புரிந்தார்.

நான் வாயில் போட்ட ரொபியையும் உமிழ மறந்து, கைரேகையை உற்று நோக்கினேன். இருவருமே அசையாச் சிலைகளாய் இருந்த 2 நிமிடத்தில் “ம்ம்....!ஓ....அஅ....! ம்ஹ்...! ஓஹ்...!” என்ற முனகலான ஓசை இடையிடையே என்னிடமிருந்து வெளிப்பட்டது. எனது அந்த ஓசையில் அவர் கட்டுண்டிருந்தபோது, சட்டென்று நான் எழுந்துவிடவே, அவர் முகத்தில் ஒரு பெரிய ஏமாற்றத் தவிப்புத் தெரிந்தது.

“என்ன...ஸேர்!.. என்ன..? ஒண்டும் சொல்லேல்லையே!” என்று பெரிதும் அங்கலாய்த்தார்.

“வெளியே போய் வந்து பிறகு சொல்கிறேனே!” என்றேன். அரைமனதோடு என்னுடன் புறப்பட்டார்.

இருவரும் மற்ற ஆசிரியர்கள் தங்கும் இடங்களுக்குப் போனோம். போன இடமெல்லாம் அவர் நிலை கொள்ளாமல் தவிப்பது புரிந்தது. “போவம் ஸேர்...! போவம் ஸேர்...!” என்று அடிக்கடி தூண்டிக் கொண்டேயிருந்தார். ரேகைப் பலன் அறிவதில் ஏற்படும் தாமதத்தால் அவர் சற்று எரிச்சலடைவது எனக்குப் புரிந்தது. அவரின் ஆவலின் அதிகரிப்பு எனக்குத் திருப்தியளித்தபோது அறைக்குத் திரும்பினோம்.

அறைக்கு வந்ததும் என் படுக்கையிலேயே உட்கார்ந்து கையை ஏந்தியபடி நீட்டிக்கொண்டார்.

“கைபெரியகோளாறு பண்ணுதே!” என்றேன்.

“விவரமா சொன்னால்தானே விளங்கும்” என்றார்.

கா.அருளானந்தம்
(கீழ்க்கருணையூர்)

கைரேகையைச் சில நிமிஷங்கள் மௌனமாய் உற்றுக் கவனித்தேன். முக்கியமான விஷயங்களைச் சரியாய்ச் சொல்லி அவரை வியப்பிலாழ்த்த வேண்டும் என்ற எண்ணம் என்னுள் வலுப்பட்டிருந்தது.

“குருமேட்டிலை நட்சத்திரக் குறி விழுந்திருக்க விதிரேகைக் கிளை ரேகை வந்து அதைத தொட்டிருக்கே..! ராசியான கன்னி நாட்டம் ஒண்டு வந்திட்டுது...! என்ன..? எப்பிடி...விஷயம்...!”

“ம்...ம்... அதுவோ..? எனக்குச் சரியா விளங்கல்ல..!”

“பொய் சொல்லக் கூடாது பாப்பா! கன்னி தெரியாது...கன்னி? அது வந்து நெஞ்சில தொட்டிருக்கு..! இப்ப விளங்குதா...?”

“தெரியுது....! அப்பிடி ஒண்டு நெஞ்சில பதிஞ்சுதான் இருக்கு!”

“பதிஞ்சு கொஞ்சம் காலமாச்சே...? இதய ரேகை சொல்லுது!”

“மூண்டு வருசத்துக்கு மேலை ஆச்சு...!”

“ராகு மேட்டிலைபட்டிருக்கிற கொம்புக்குறி, வீட்டில கொஞ்சம் குழப்பம் பண்ணியிருக்கு...! எதிர்ப்பு வந்துதான் இருக்கும்.... எப்பிடி..?”

“முதல்ல எதிர்ப்பு இல்லை.... பிறகுதான். வேறை ஒரு இடம், வயல், காணி, தோட்டம், ரொக்கம் எண்டு கொஞ்சம் கூடின சீதன உருவமாய் வந்து குழப்பப் பாத்துது. நான் இடம் குடுக்கல்லை.”

“மூண்டு வருசமாய் முன்னேறிய காதல்! கேது மேட்டுச் சங்குக்குறி குழப்ப விடாது... நிறையக் குடுபட்டிருக்கு! குடுத்தது என்னென்ன?”

“வசதிக் குறைவு இல்லாத நல்ல இடம்!.. நான் குடுக்கிறதுக்கு ஒண்டுமில்லை... தேவையுமில்லை!”

“பொய் சொன்ன வாய்க்குப் பொரியும் கிடையாது....... தெரியுமெல்லே! காதல் வியாதி முத்தினால்.. குடுக்கிறதென்ன? அதுவுந் தெரியாத காதலே?”

“பக்கம் பக்கமாய் எழுதின கடிதங்கள் நிறையக் குடுத்திருக்கிறன்!”

“சும்மா கணக்கு விட்டுத் தப்பேலாது! உங்கடை கைரேகை இப்ப என்னெட்டை..!”



“சத்தியமா ஸேர்! ஒரே ஒரு நாள் ஒரே ஒரு.. முத்தம் மட்டுந்தான்.... நம்புங்கோ!”

“என்ன.....'மட்டுந்தான்'....! விதி ரேகை சொல்லுகிறதே இதயம் போனதை..!”

“அது எப்பவோ முழுதாய்க் குடுத்தாச்சு ஸேர்!”

“எல்லாம் தீர்மானம் ஆச்சு ராசா...! கவலைப்படாதை கண்ணு...! எனக்கு.. எது எந்த ரேகை.... எது என்ன மேடு.... எது என்ன குறி...எதுவுமே தெரியாது தலைவா..! நான் பார்த்த இந்த ரேகை பார்ப்பு எல்லாம் வெறும் 'டுப்பு' வாத்தியாரே..! அடியேன் வயதில் ஒன்று குறைஞ்சவன்.. சிறியேன் செய்த சிறு பிழை இதனைப் பெரு மனங்கொண்டு பொறுத்திடு. மன்னா..!”

சரணாகதியாய் நான் பேசிய தமிழை அவர் சிறிதும் பொருட்படுத்தாமல், தன் காதல் விவகாரத்தை முழுவதாய் அன்றைய நிலைவரம் வரை சொல்லியே நிறுத்தினார். நானும் அவரது மனநிறைவுக்காக ஆதரத்தோடு கேட்டுக்கொண்டேன்.

இந்த ரேகை பார்ப்புத் தொழிலை யாழ்ப்பாணப் பாடசாலையிலும், கேட்பவர் பற்றி அறிந்துள்ள சங்கதிகளின் அடிப்படையினை ஆதாரமாகக் கொண்டு, இலவசமாக ஆனால் வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கிறேன். ஆனால் மூன்று நாளாவது கழித்துத் தான் சரணாகதி!

## உடையாதவன் யார்?

அந்த நான்காம் வகுப்பின் ஆசிரியைக்கு வகுப்பைப் பொறுத்தவரை வித்தியாசமான பிரச்சினை ஒன்று இருந்தது.

அதாவது 'வித்தியாசம் காண முடியாததே' அந்தப் பிரச்சினையாயிருந்தது.

இரட்டையர்களான முஸ்லிம் பையன்கள் இருவர். காபன் பிரதி போல எல்லாவகையிலும் தோற்றத்தில் ஒரே மாதிரியாக இருந்தார்கள். சிரிப்பு என்ன... அழுகை என்ன... ஓட்டம் என்ன... நடை என்ன.. எதிலுமே வித்தியாசம் காணமுடியாதிருந்தது. மேற்பக்க முன்வரிசையில் ஒரு பல் கொஞ்சம் சரிவாயிருப்பதுகூட இருவருக்கும் ஒரேமாதிரியாய் இருந்த்து. மாதந்தோறும் ஒரேநாளில் ஒரே மாதிரியாய் மொட்டையடித்து வருகிறார்களே என்று ஆதங்கப்பட்டார் அந்த வகுப்பாசிரியை. அவர்களின் பெயர் உச்சரிப்புக்கூட ('கரீம்,''றகீம்'போன்றோ, 'ஜமீல்', 'பஸீல்' போன்றோ) அதிக வித்தியாமின்றியே இருந்தது.)

ஆசிரியை இன்னொன்றையும் சொன்னார். 'கணக்கிலோ எழுத்திலோ பிழை விடுவதிலுங்கூட இருவருமே ஒரே மாதிரியாகவே பிழை விடுகிறார்கள்' என்றார். காலையில் முதல் பாடவேளையே உடுப்பு வித்தியாசம் கவனித்து, (அக்காலத்தில் அங்கு சீருடை முறை அமுலில் இல்லை) ஒரு பையனை அழைத்து “நீ யார்?” என்று கேட்டுப் பெயர் அறிந்து கொள்வாராம். என்றாவது ஒருவன் வராவிட்டால், வந்தவனை அழைத்துப் பெயர் அறிந்து தான் இடாப்பில் 'வரவு பதிவாராம்.

அன்று - அப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

மதிய இடைவேளைக்கான மணி ஒலித்ததும் நீளமான அந்த மண்டபத்து வகுப்புகளிலிருந்து மாணவர்கள் ஆரவாரமாய் விரைந்து வெளியேறினர். சற்று நேரத்திலேயே, சுவரின் மத்தியில் பொருத்தியிருந்த சுவர் மணிக்கூட்டின் கண்ணாடி உடைந்து 'கலீர்' என்று விழுந்து சிதறியது.

மாணவர்கள் சிலர் இரட்டையர் இருவரையும் இழுத்துக்கொண்டு ஒரு 'ரெனிஸ்' பந்துடன் அலுவலகத்துள் வந்து கண்ணாடி உடைத்தது பற்றி முறைப்பாடு செய்தார்கள். பந்து எறிந்தவன் 'அந்த இருவரில் யார்? என்பது அவர்களுக்கும் தெரியவில்லை. இருவரில் ஒருவன் என்பது மட்டுமே தெரிந்தது.

“உடைத்தது யார்?” என்று அதிபர் விசாரிக்கத்தொடங்கினார். 'நானில்லை இவன்தான்' என்றான் ஒருவன், மற்றவனும் 'நானில்லை இவன்தான்' என்றான். அதிபர் எப்படியெல்லாமோ கேட்டும் அவர்கள் இருவரும் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொன்னார்கள்.

மிரட்டிப் பார்க்கும் நோக்கில் அதிபர் பிரம்பை எடுத்தார்.

“எங்க 'வாப்பா' சத்தியமா நானில்ல... இவன்தான்” என்றான் ஒருவன்.

“எங்க'உம்மா'சத்தியமாநானில்ல... இவன்தான்” என்றான் மற்றவன்.

இவ்வாறே, அவர்கள் தங்கள் நிலையிலிருந்து கொஞ்சமும் விலகுவதாய்த் தோன்றவில்லை.

இடைவேளையும் முடிந்தது. அதிபரும் நானுமாய் ஒரு யுக்தி செய்தோம்.

“உண்மை சொன்னால் நிச்சயமாய் அடி கிடையாது. உடைத்த ஆள் குற்றத்தை ஒப்புக்கொண்டால் நிச்சயமாய் அடியே இல்லை” என்று சொல்லிவிட்டு, அதிபர் பிரம்பை அலுமாரி மேல் வைத்துவிட்டார்.

ஒருவனை அதிபர் விசாரிக்க விட்டு, மற்றவனை நான் அறைக்கு வெளியே கூட்டிச் சென்றேன். “உண்மையைச் சொல். நிச்சயமாய் உனக்கு அடி கிடையாது.” என்றேன்.

தயக்கத்தோடு சற்றே நிமிர்ந்து பார்த்தவனை என் பார்வையால் ஊக்கப்படுத்தினேன். அடிகிடையாது என் பதில் அவனுக்கு நம்பிக்கை பிறந்திருக்க வேண்டும்.

“உடைச்சது நான்தான் ஸேர்!.. அவனில்ல!” என்றான்.

ஆதரவாய் அவன்முதுகை வருடி, அவனை உள்ளே அழைத்துச் சென்றேன்.

யுக்தி பலித்த மகிழ்வில் அதிபரும் நானும் ஒருவரையொருவர் அர்த்தத்தோடு பார்த்துக்கொண்டோம்.

அதிபர் மற்றப்பையனைப் பார்த்து, “இதை நீ முதலே சொல்லியிருக்கலாமே?” என்று தொடர்ந்து பேசிய போதுதான், அந்தப்பையனும் தானே உடைத்தாகச் சொல்லியிருக்கிறான் என்பது எனக்குப் புரிந்தது.

இப்போது, உண்மையாகவே உடைத்தது யார் என்ற பிரச்சினை மீண்டும் தலைதூக்கியது.

“நான் தான் உடைச்சேன் ஸேர்!... இவனில்ல” என்றான் ஒருவன். மற்றவனும் அதையே சொன்னான்.

“எங்க 'வாப்பா' சத்தியமா நான்தான் உடைச்சேன் ஸேர்..! இவனில்ல..!” என்று ஒருவன் சொல்ல, “எங்க உம்மா சத்தியமா நான்தான் உடைச்சேன் ஸேர்..! இவனில்ல..!” என்றான் மற்றவன்.

எங்கள் மூளை குழம்பியது.

முன்பு, 'உடைத்தவன் யார்?' என்று அறிய முயன்றோம். இப்போது, 'உடைக்காதவன் யார்? என்று அறிய முயன்றோம்...!தோற்றுத்தான போனோம்.

“சரி! உடைத்தது நீங்கள் இருவருந்தான். ஆனால் பந்துதான் ஒன்று. இப்போ வகுப்புக்குப் போங்கள்... பிறகு பார்ப்போம்!” என்று அனுப்பி விட்டார் அதிபர்.

இப்போது நாங்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டது. 'இருவரையும் அசடாக்கிவிட்டார்களே' என்ற அர்த்தத்தில்.

## பஞ்சம் பல வகை

சஞ்சிகை ஒன்றில் வந்த 'ஜோக்'கான பேட்டி ஒன்று:-

நடிகை: “நான் சினிமா உலகுக்கு வருமுன்பு துணி வாங்கக்கூட காசில்லாமல் கஷ்டப்பட்டிருக்கிறேன்!”

நிருபர்: “இப்போ நீங்கள் கோடி கோடியாகச் சம்பாதித்தும் அந்தத் துணிப் பஞ்சம் உங்களுக்கு இன்னும் தீரவில்லையே...!”

இந்த ஜோக்கில் வரும் நடிகைக்கு எந்தளவுக்குத் துணிப் பஞ்சம் இருந்ததோ தெரியவில்லை. ஆனால், சுமார் 40 வயதான அந்த ஆசிரியை அணியும் சட்டைக்குத் துணி ஓரளவு சிக்கனமாகவே பயன்படுத்தப்பட்டது என்பதில் உண்மை இருந்தது. இதனால் அந்த ஆசிரியை ஏனைய ஆசிரியர்கள் சிலரால் சற்று ஓரங்கட்டப்பட்டார் என்பதும் உண்மையே. அதாவது அந்த ஆசிரியையுடன் ஆசிரியைகள் சிலர் அந்நியோன்னியமாகப் பழகத்தயங்கினர்.

ஒரு நாள், பாடசாலைக்குப் பக்கத்தே உள்ள பெட்டிக்கடையில் ஓர் ஆசிரியர் வாங்கிய பெரிய அன்னாசிப் பழங்கள் இரண்டும் மதிய இடைவேளையின்போது தோல் சீவப்பட்டுச் சிறுசிறு துண்டுகளாக்கப்பட்டன. ஆசிரியர் அறையில் எல்லாரும் ஒன்றாயிருக்க, மாணவர்கள் ஏந்தி வந்த தட்டிலிருந்து ஒவ்வொரு பழத்துண்டு எடுத்துக்கொண்டோம்.

அப்போதுதான் பிரச்சினைன் ஒன்றுக்கு வித்திடப்பட்டது.

அந்தச் சிக்கனச் சட்டைக்கார ஆசிரியை, அன்னாசிப்பழத்தை வேண்டாமென்று மறுத்து, “எனக்குப் பற்கூச்சம் இருக்கிறது!” என்றார், அதே வேளை, “பல்லிலாவது அப்படி ஒன்று இருக்கிறதே!” என்று சொல்லியபடியே ஓர் இளம் ஆசிரியை வெளியே சென்றுவிட்டார்.

இடைவேளை முடிந்து வகுப்புகள் ஆரம்பித்துவிட்டன.

பற்கூச்சமுள்ள அந்த ஆசிரியை மட்டும் அறையை விட்டு வெளியேறவுமில்லை. வகுப்புக்குப் போகவுமில்லை. மேசையில் தலை சாய்த்து மெலிதாய் விம்மிப் பொருமி அழுதுகொண்டே இருந்தார்.

இதை அவதானித்தவர்கள் சம்பந்தப்பட்ட இளம் ஆசிரியையிடம் சொன்னார்கள். ஐந்து நிமிடத்தில் ஆசிரியைகள் பலரும் ஒன்று கூடி இப்பிணக்கைத் தீர்க்கும் வழியை ஆராய்ந்தார்கள். ஆசிரியைகள் அனைவரும் அந்த இளம் ஆசிரியையை அழைத்துக்கொண்டு ஆசிரியர் அறைக்குப் போய் அழுகின்ற ஆசிரியையைச் சூழ்ந்து நின்றார்கள்.



இளம் ஆசிரியை நெருங்கிப் போய் “இவ்வளவு துக்கப்படுவீர்கள் என்று தெரியாமல் சொல்லிவிட்டேன். நான் அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது. இந்த வார குமுதத்தில் வந்த மாதிரி ஒருஜோக் ரீச்சர் இது. நாளைக்கு குமுதத்தைக் கொண்டு வந்து காட்டுகிறேன். என்னை மன்னியுங்கள் ரீச்சர்!” என்று சொல்லி அப்படியே நின்றார்.

ஒரு நிமிடம் எல்லாரும் அப்படியே மௌனமாய் நின்றனர். அழுகை ஓய்ந்ததாயினும் தலைநிமிரவில்லை. “அவவுக்குக் கொஞ்சம் ஓய்வு கொடுங்கள்” என்று ஓர் ஆசிரியை சொல்லவே, அனைவரும் வெளியேறினர்.

அன்று பாடசாலை விட்ட பின்பு, கடைசியாகவே அந்த ஆசிரியை அறையைவிட்டு வெளியேறிச் சென்றார். இதைக் கவனித்த நானும் நண்பரும் மறுநாள் ஓர் ஆசிரியையிடம் கேட்டு விவரம் அறிந்தோம்.

அந்த ஆசிரியை, நாள் செல்ல வாயினும் தன் சட்டையின் சிக்கனத் தன்மையை மாற்றக்கூடும் என எதிர் பார்த்தோம். ஆனால், அவர் எப்போதுமே அதை ஒரு பிழையாகக் கருதவில்லை என்றே தெரிந்தது. 'மாணவிகள் அதிகமுள்ள அப்பாடசாலையில் அந்தச் சட்டை, சிறந்த ஒரு முன் மாதிரியல்லத்தான்!' என்பதே பொதுவான அபிப்பிராயமாக இருந்தது.

## தேவை ஒரு மாற்றம்

மலையகத் தமிழரான நடுத்தர வய்துடைய அவ்வாசிரியர் தமது சொந்த இடத்திலிருந்து கொஞ்சம் தொலைவிலுள்ள தெல்தோட்டைக்கு மாற்றத்தில் வந்திருந்தார்.

மலையக இளைஞர் சிலர் கல்வித்தகைமையுடையவர்களாக இருந்தும் அவர்களில் மிகப் பலர் இலங்கையராக ஏற்கப்படாததால் அரசாங்க வேலைகளுக்கும் உயர்கல்விக்கும் அவர்களுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டிருந்தது. மிகச் சிலரே பிரஜா உரிமை கிடைத்து அரச நியமனம் பெற்றிருந்தனர். இவ்வாறு நியமனம் பெற்ற ஒருவரே இவ்வாசிரியர்.

வந்ததிலிருந்தே இவர் தமது சொந்த இடத்துக்கு அல்லது கிட்டவுள்ள இடத்துக்கு மாற்றம் பெற்றுச் செல்ல மிக முயன்றார். அப்படி அவர் செல்ல வேண்டியிருந்த குடும்பப் பின்னணியை நானும் அறிந்திருந்தேன்.

இவரது மாற்ற விண்ணப்பம் எவ்வித பலனையும் தராத நிலையில், மத்திய பிராந்திய கல்வித் திணைக்களத்துக்கு இவர்மீது அரசியல் ரீதியான 'பெட்டிசம்' ஒன்று போயிருந்தது.

அக்காலகட்டத்தில் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்தை ஆதரித்தது.

பெட்டிசத்தில், இவ்வாசிரியர் இ.தொ.க.கட்சிச் சார்புடையவர் எனவும் தெல்தோட்டையில் கட்சி சம்பந்தமான அரசியல் விஷயங்களில் இவர் அதிக ஈடுபாடுடையவராக இருப்பதால் இவர் வேறு இடத்துக்கு மாற்றப்பட வேண்டும் எனவும் தெரிவித்து, பலர் ஒப்பமிட்டிருந்தனர். ஆசிரியருக்கும் பிரதி ஒன்று அனுப்பப்பட்டுள்ளமையும் அதில் தெரிந்தது.

உண்மையில் ஆசிரியர் எவ்வித அரசியல் நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை என்பதை நானும் அறிவேன். இப்பெட்டிசம் கல்வித்திணைக்களத்துக்குக் கிடைப்பதற்குச் சில நாள் முன்னர்தான் இவரது மாற்றங் கோரும் மற்றுமொரு விண்ணப்பமும் அங்கு போய்ச் சேர்த்திருந்தது. இப்பெட்டிசமும் மாற்றம் கோரும் விண்ணப்பமும் ஒன்றாக இணைந்திருந்ததால் இலகுவாக மாற்றத்துக்கு இயலக்கூடிய சூழ்நிலை ஒன்று உருவானது.

பெட்டிசத்துக்கு வலுவூட்டும் வகையில், இ.தொ.கா.தொழிற் சங்கக் கிளைக் கூட்டத்தில் இவ்வாசிரியர் உரையாற்றியமைக்குச் சான்றாக, பத்திரிகையில் வெளிவந்த செய்தி வெட்டுத்துண்டு (PAPER CUTTING) ஒன்றும் இணைக்கப்பட்டிருந்தது.

ஆசிரியருக்கு மாற்றமும் வந்தது!

அவர் செல்வதற்கு முதல் நாள் தான், தன்மீது குற்றச்சாட்டாய் அனுப்பப்பட்ட பெட்டிசம் போலியாகத் தயாரிக்கப்பட்டதாகவும், தனது முயற்சியாலேயே அது அனுப்பப்பட்டதாகவும் அவர் சொன்னபோது நான் மிகவும் வியந்துபோனேன்.

“அப்படியானால் பத்திரிகைச் செய்தி வெட்டுத்துண்டு விஷயம் எப்படி?” என்றேன். தொழிற்சங்கக் கிளையில் தமது நண்பர் மூலம் அச்சடித்த தலைப்புள்ள கடிதத்தாள் ஒன்று பெற்று தானே அதில் செய்தியை எழுதுவித்துப் பத்திரிகைக்கு அனுப்பி செய்தி வெளியிடச் செய்ததையும் சொன்னார்.

தன்மீது, தானே குற்றஞ் சுமத்திப் பெட்டிசம் எழுதினாரே! அவர் மேற்கொண்ட இந்தக் குறுக்கு வழிப் பிரயத்தனத்தின் மதிநுட்பம் என்னைப் பெரிதும் வியப்பிலாழ்த்தியது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகங்களின் இனத்தவர்கள் இ

# ஆனால் படம் எடுக்கத் தெரியாத

விடத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு பாம்புகளை மூன்று கூட்டங்களாக வகுக்கலாம் - விடப்பற்கள் இல்லாதவை (AGLYPHOUS), கடைவாயில் விடப்பற்களை உடையவை (OPHISTHOGLYPHOUS), முன்வாயில் விடப் பற்களையுடையவை (PROTEROGLYPHOUS).

இவற்றுள் பின்னவைதான் கொடியவை; எளிதில் விடத்தைப் பாய்ச்சக் கூடியவை.




**கருவளலைகள். 1,2 - பங்காறஸ் சிலோனிக்கஸ் சிலானிக்கஸ். 3,4,5 - பங்காறஸ் சிலோனிக்கஸ் கறவலா.**

முதற்கூட்டத்திற்கு உதாரணமாகச் சாரை, நன்னீர்ப் பாம்பு, மலைப்பாம்பு போன்றவற்றைக் கொள்ளலாம்.


இரண்டாவது கூட்டத்திற்கு உதாரணமாகக் கோடாலிப் பாம்பு போன்ற மரப்பாம்புகளை (TREE SNAKES) உதாரணமாகக் கொள்ளலாம்.

**குகன்**

மூன்றாவது கூட்டத்திற்கு உதாரணமாக கடற்பாம்புகள், நாகங்கள், பிடையன்கள் போன்றவற்றை உதாரணமாகக் கொள்ளலாம்.

பாம்புகளில் உமிழ்நீர்ச் சுரப்பிகள்தான் திரிபடைந்து விடத்தைச் சுரக்கின்றன. நாகக் குடும்பத்திற்குரிய பாம்புகளின் விடம் நரம்புத் தொகுதியைப் பாதிக்கும்; பிடையன் குடும்பத்திற்குரிய பாம்புகளின் விடம் குருதித் தொகுதியைப் பாதிக்கும்.

நாகக்குடும்பம் இலாபிடே குடும்பம் (FAMILY ELAPIDAE) எனப்படும். இதில் இரண்டு உப குடும்புங்களுண்டு. ஒன்று இலாபினே (ELAPINAE). மற்றயது



**கருவளலை - பங்காறஸ் சிலோனிக்கஸ், முதுகுப் புறமாக நெடுநீட்டாகவுள்ள, அறுபக்கமுள்ள பெரிய செதில்களைக் கவனிக்கவும்**

ஹைட்றோபினே (HYDROPHIINAE). முன்னதில் நாகங்களும் அதன் கூட்டாளிகளும் அடங்கும். பின்னதில் கடற்பாம்புகள் அடங்கும். பிடையன்களெல்லாம் வைப்பெறிடே (VIPERIDAE) குடும்பத்திற்குரியவை. பாம்புகளிலேயே கொடியவை பிடையன்கள். இவை பற்றிப்பின்னர் பார்ப்போம்.


நாகக்குடும்பத்திற்குரிய பாம்புகளில் நாகங்கள் சாதுவானவை; படமெடுத்து வெருட்டி விட்டு ஒதுங்கிப் போகத்தான் அவை முயற்சிக்கும். இக்குடும்பத்திற்குரிய, நிலவாழ்க்கையை மேற்கொள்ளும் ஏனையவை, படமெடுக்கத் தெரியாத காரணத்தினாற் போலும், சிறு அதிர்ச்சி ஏற்பட்டாலும் சீறிப்பாய்வதுடன் எதுவித எச்சரிக்கையுமின்றிக் கடிக்கவே முற்படுகின்றன. நாகங்களைப் போலவே இவற்றிலும் விடப்பற்கள் சிறியவை;



நீலவளைய கடற்பாம்புகள் (BLUE - RINGED SEA SNAKES)

அலகில் நிரந்தரமாக இணைக்கப்பட்டிருக்கும்; உள் நோக்கி வளைந்திருக்கும்; அதனால் இவை கொத்தும் போது (STRIKING) விடம் ஏறுவது குறைவு. கடிக்கும் போதுதான் (BITING) விடம் நன்றாக ஏறும். கடிக்கும் போது நன்றாகக் கௌவிப் பிடித்துக் கொள்ளும். அதனால் நன்றாக உதறியோ அல்லது பாம்பைப் பிடுங்கியோதான் அகற்ற வேண்டியிருக்கும். அதனால் நன்றாக விடம் ஏறிவிடும். இங்ஙனம் சிறிது நேரம் கௌவிப் பிடித்த பின்தான் பிடியை இளக்கும்.

பாம்பு ஒரு தடவை கடித்தால் மீண்டும் உடனடியாகக் கடிக்கும் போது விடமேறுவது குறைவு; காரணம்



கறுப்புப் பட்டிக்கடற்பாம்பு (BLACK - BANDED SEA SNAKE)


விடப்பைகளில் விடம் இருக்காது. மீண்டும் சுரப்பதற்குச் சிறிது அவகாசம் தேவைப்படும்.

**கடற் பாம்புகள்** (SEA SNAKES)

கடற்பாம்புகள் மெல்லிய நெடிய தோற்றத்தையுடையவை. வால்,மீனின் வாலைப்போன்று, இருபக்கமும் தட்டையாக இருக்கும் (துடுப்புப் போன்று). நீரில் நன்றாக

## நாகக் குடும்பத்திற்குரியவை; ஆனால் நாகங்களை விட மிகக் கொடியவை

நீந்துவதற்கு இது உதவும். கடற்பாம்புகள் இந்து, பசுபிக் சமுத்திரங்களுக்குரியவை. மஞ்சள் வயிற்றுக் கடற் பாம்பு (Yellow Bellied Sea Snake) என்ற ஒரேயொரு இனம் மாத்திரம் மத்திய அமெரிக்கா வரை வியாபித்துக் காணப்படும். இவை முருகைக்கற்பாறைகள் நிறைந்த



**ஆஸ்திரேலிய புலிப்பாம்பு** (AUSTRALIAN TIGER SNAKE). **முதுகுப்புறச்செதில் வரிசையைக் கவனிக்க.**

கடல்களில் அநேகமாகக் காணப்படும். கரையோரப் பகுதிகளிலும் காணப்படும். நிலத்தில் இவற்றால் விரைவாக இடப்பெயர்ச்சி செய்ய முடிவதில்லை. அதனால் அலை அடித்துக் கரையொதுங்கினால் இவற்றின்பாடு திண்டாட்டமாகப் போய்விடும். இவற்றின் விடம் நாக பாம்பின் விடத்தைக்காட்டிலும் பத்துமடங்கு விஷம் கூடியது. ஆயினும் இவை சாதாரணமாகக் கடிப்பதில்லை. கரையிலிருக்கும் போது அவற்றின் மேல் மிதித்தால் சில சமயங்களில் கடிப்பதுண்டு. கடலில் குளிப்பவர்கள் சில சமயங்களில் இங்ஙனம் கடியுண்



கோறல் பாம்பு (CORAL SNAKE)



**இரத்தப்பிடையன். இதுவும் கிறெயிற் வகைக்குரிய பாம்பு. அறுகோணச் செதில்களைக் கவனிக்கவும்.**

டிருக்கிறார்கள். இனப்பெருக்க காலங்களில் இவை பெரும் எண்ணிக்கையில் கடலின் மேற்பரப்பில் காணப்படுவதுண்டு. இக்காலங்களில் கடிப்பதுண்டு; காதல் மயக்கமாகவிருக்கலாம். இந்திய, இலங்கைப் பிராந்தியக் கடல்களில் காணப்படும் ஒரு இனக்கடற்பாம்பு வலையைக் கடித்துக் கொண்டோ சிக்குப்பட்டோ வருவதுண்டு. மீனவர்கள் சற்றும் அச்சமின்றி இங்ஙனம் வரும் பாம்புகளைக் கையாலே பிடித்துக் கடலில் வீசுவார்கள். இச்செயற்பாடு காரணமாக இவ்வினப்பாம்பிற்கு என்ஹெட்றினா வலைக்கடியன் (ENAYDRINA VALAIKKADIYAN) என்ற விஞ்ஞானப் பெயரைக் கொடுத்திருக்கிறார்கள்.

நாகக்குடும்பத்தைச் சேர்ந்த பாம்புகள் அனைத்தும் முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கும். முட்டை ஓடு கல்சியம் காபனேற்று ஏற்றம் பெறாதது; தோல் போன்ற ஆனால் வன்மையான போர்வையைக் கொண்டிருக்கும். அதனால் உயரத்திலிருந்து விழுந்தால் பந்து போல எகிறும். இலேசில் உடைவதில்லை. கோழிமுட்டையைப் போலல்லாது வட்டமான வடிவமைப்பு உடையவை. (பறவைகளின் முட்டைகள், சிறப்பாக நிலத்தில் முட்டையிடும் பறவைகளின் முட்டைகள், வட்டமாக இருப்பதில்லை. நீள்வட்டமாக ஒருபக்கம் பெருத்தும் மறுபக்கம் சிறுத்தும் இருக்கும். அதனால் முட்டை உருண்டு போவது தடைப்படும். கோழி முட்டையை இலேசாக உருட்டிப்பாருங்கள். பந்து போல உருண்டு போகாமல், ஒரு சிறு வட்டத்திலலேயே வட்டமிடும். இயற்கையின் விநோதங்களில் இதுவுமொன்று. சந்ததி நிலைப்பதற்கு இயற்கை ஏற்படுத்திய வழி இது.)

கடலில், சிலரின் அவதானங்களின் அடிப்படையில், இராட்சத பாம்புகளும் இருப்பதாக நம்பப்படுகிறது. அவை மலைப்பாம்பிலும் பலமடங்கு பெரியவையெனக் கருதப்படுகின்றது. ஆயினும் ஆதாரபூர்வமான தகவல்களில்லை.



பச்சை மம்பாவின் (GREEN MAMBA) விடப்பற்கள்.

**கிறெயிற்றுகள்** (KRAITS)

கிறெயிற்றுகளின் சாதிப் பெயர் பங்காறஸ் (BUNGARUS). இவற்றின் முதுகுப் புறத்தில், நடுக்கோட்டுக் குரியதாக, நெடுநீட்டாக ஆறுபக்கமுள்ள (HEXAGONAL) பெரிய செதில்களுண்டு. இதைக்கொண்டு இவற்றை இனங்காணலாம். இக்கூட்டத்திற்குரியதாக இலங்கையில் மூன்று இனங்களுண்டு. அவையாவன:- பங்காறஸ் சீறூலியஸ் (BUNGARUS CAERULEUS), பங்காறஸ் சிலோனிக்கஸ் சிலோனிக்கஸ் (B. CEYLONICUS CEYLONICUS), பங்காறஸ் சிலோனிக்கஸ் கறவலா(B. CEYLONICUS KARAVALA) ஆகும்.

கருமையான உடல் நிறத் தில்
போன்ற வெள்ளைப் பட்டி கள
பைக் கொண்டு இவற்றைச்
முடி யும். இவை ஓரளவு ஒதுங்
யவை. ஆயினும் பிரச்சினை
தயங்குவதில்லை. இவற் றி
னின் விடத்தைக் காட்டிலும்

**மம்பா** (MA

மம்பா ஆபிரிக்கக் கண்ட
காடுகளில் வாழும். நாகத்தை
வளரக்கூடியது. வேகமாக நக
மாட்டம் தரையிலுமிருக்கும். மர
பாதையில் யாராவது குறுக்
சென்று கடிப்பதற்குத் தயங்கு



பட்டியுள்ள கிறெயிற் (BA

விலங்குகளுக்கும் இதனால்
ஆபிரிக்க மக்கள் பெரிதும் பய
நாகங்களுக்கல்ல. கொடிய வி
விருப்பதனால் விடமும் அதிக
இதில் இரண்டு வகைகளுண்
(GREEN MAMBA) என்றும்
(BLACK MAMBA) என்றும்
மரவாழ்க்கைக்குரியது. பின்ன
யது.

**புலிப்பாம்பு** (TIG

இது ஆஸ்த்திரேலியா. க
பதற்குப் புலிப்பிடையனைப்
பெரிய கொடிய விடமுள்ளது.
பெரிதும் பயப்படுவது இதற்கு

**கோறல் பாம்புகள்** (

இவை அமெரிக்க நாகங்
படும். மெல்லிய, நெடிய, அ
மஞ்சளும் நீலமும், மஞ்சளும்
மும், அல்லது நீலத்துக்குப்பதி
போன்ற பட்டிகளையுடையதா
விடமுள்ளவை. ஆயினும் ஒது
யவை. அதனால் மனிதனுக்கு
தில்லை பொதுவாக, எவ்வள
ளவையாக இருந்தாலும், பாம்
தில்லை. மனிதனின் நடமாட்ட
களும்தான் பாம்புகளைக் கடி

பாம்புகள் அடிக்கடி நாக்
சுவைத்து அறிவதற்கே. அதா
றின் மணநுகர்ச்சி அங்கமாக
நெடியது, இருகவருள்ளது. (

## அங்கிகள் பலவி
## ஒவ்வொன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ...இவை
# ...தவை

இதில் முன்னது தமிழில் புலிப்பிடையன் என்றும் (இது பிடையன் அல்ல), ஏனையவை கருவளலை என்றும் அழைக்கப்படும். புலிப்பிடையன் பார்வைக்கு கருநாகம் போன்றிருக்கும். வெண்ணிறப் பட்டிகள் (WHITE BANDS) துலக்கமாக இருப்பதில்லை. நெடியபாம்பு. பருமனிலும் நீளத்திலும் நாகத்தினளவிற்கு வளரக்கூடியது. மிகுந்த ஆக்ரோஷமுள்ளது. நாகத்தைக் காட்டிலும் இதற்கு வெகுவாகப் பயப்படுவார்கள். தீண்டுவதற்கு இது தயங்குவதில்லை. கொடிய விடமுள்ளது.

கருவளலைகள் ஓரளவு சிறியவை. மெல்லியவை. ...றத் தில் ஒடுக்கமான வளையம் ...ட்டி கள் இருக்கும். இவ்வியல் ...ற்றைச் சுலபமாக இனங்காண ... ஒதுங் கிப் போகும் இயல்புடை ...னை கொடுத்தால் கடிப்பதற்குத் ...வற் றின் விடம் புலிப்பிடைய ...டிலும் சிறிது வலுக்குறைந்தது.

...ா (MAMBA)

... கண்டத்துக்குரியது. அடர்ந்த ...கத்தைக் காட்டிலும் பெரிதாக ...ாக நகரக் கூடியது. அதன் நட...தும். மரங்களிலுமிருக்கும். இதன் ... குறுக்கே சென்றால் பாய்ந்து ...யங்குவதில்லை. அதனால் வன



(BANDED KRAIT)

...ால் தொல்லை ஏற்படுவதுண்டு. ...ும் பயப்படுவது இதற்குத்தான். ...ய விடமுள்ள பாம்பு பெரிதாக ... அதிக அளவில் சுரக்கப்படும். ...ளுண்டு. ஒன்று பச்சை மம்பா ...ன்றும், மற்றது கறுப்பு மம்பா ...ன்றும் அழைக்கப்படும். முன்னது ...பின்னது தரை வாழ்க்கைக்குரி...

(TIGER SNAKE)

...பா, கண்டத்திற்குரியது. பார்ப் ...னைப் போன்றிருக்கும். ஆனால் ...ள்ளது. ஆஸ்திரேலிய மக்கள் ...இதற்குத்தான்.


...ள் (CORAL SNAKES)

...ாகங்கள் எனவும் அழைக்கப் ..., அழகான பாம்புகள். உடல் ...களும் சிவப்பும், சிவப்பும் நீல ...ருப்பதில் கறுப்புமாக வளையம் ...டயதாக இருக்கும். கொடிய ...ம் ஒதுங்கிப் போகுமியல்புடை ...னுக்குத் தொல்லை கொடுப்ப ...வ்வளவுதான் கொடியவிடமுள் ... பாம்புகள் தேடிவந்து கடிப்ப ...ாட்டமும் சந்தர்ப்ப சூழ்நிலை ...க் கடிக்க வைக்கும்.

...நாக்கை நீட்டுவது சூழலைச் ...அதாவது நாக்குத்தான் அவற் ...மாகவும் தொழிற்படும். நாக்கு ...து. (FORKED TONGUE).

...விதம்
...ன்றும் ஒருவிதம்

## எது உறுதி?



கந்தன் ஒரு மட்பாண்ட வியாபாரி. பலவிதமான மண் பானைகளைச் செய்து சந்தையில் விற்று வந்தான். அவன் மிகவும் புத்திசாலி; சாதுரியமானவன். அதனால், தனது பேச்சுத் திறமையால் தரம்குறைந்த பானைகளையும் விற்று விடுவான்.

அதே ஊரில் கோவிந்தன் என்றொரு வியாபாரியும் இருந்தான். அவன் விசிறிகளைச் செய்து விற்பனை செய்துவந்தான்.

ஒரு நாள் கந்தனுக்கும் கோவிந்தனுக்கும் இடையே தங்கள் பொருள்களின் தரத்தைப் பற்றிய போட்டி ஏற்பட்டது.

'உன் பானை உறுதியற்றது என நான் நிரூபித்தால் நீ எனக்குப் பத்து ரூபா தரவேண்டும். அப்படி நிரூபிக்கத் தவறி விட்டால் நான் உனக்குப் பத்து ரூபா தந்து விடுகிறேன்' என்று கோவிந்தன் கூறினான்.

'அதேபோல உன் விசிறி தரமற்றது என நான் நிரூபித்தால் நீ எனக்குப் பத்து ரூபா தரவேண்டும். அப்படி நான் நிரூபிக்கவில்லை எனில் உனக்குப் பத்து ரூபா தருகிறேன்' என்று கந்தனும் கூறினான்.

முதலில் கந்தன், கோவிந்தனின் விசிறியை வாங்கிக் கையால் ஒடித்தான். அது 'மடக்' என்று உடைந்து போனது. பின்னர் கோவிந்தன் கந்தனின் பானையைத் தனது கையிலிருந்த கோலினால் தட்டினான். அதுவும் உடைந்து விட்டது.

உடனே கோவிந்தன் 'நம் இருவரின் பொருள்களும் தரத்தில் குறைந்தனவாகவே இருக்கின்றன. எனவே யாரும் மற்றவருக்குப் பணம் தரவேண்டியதில்லை' என்றான்.

'ஆனால் நீ எனக்குப் பணம் தரவேண்டும்' என்று கந்தன் கூறினான். கோவிந்தன் அதற்குக் காரணம் கேட்டான்.

'நான் உன்னுடைய விசிறியைக் கையால்தான் உடைத்தேன். வேறு எந்த உபகரணத்தையும் பயன்படுத்தவில்லை. ஆனால், நீயோ என் பானையைக் கோலால்தான் உடைத்தாய். எனவே என் பானை உறுதியானது. நீ எனக்குப் பத்து ரூபா தரவேண்டும்' என்று கந்தன் பதிலளித்தான்.

கோவிந்தனும் அதைமறுக்க இயலாமல் பத்து ரூபாவைக் கொடுத்து விட்டு நடையைக் கட்டினான்.


## திருக்குறளைப் பற்றி

வள்ளுவர் எழுதிய திரு நூலாம்
வையகம் போற்றிடும் பெரு நூலாம்
அறிவுரை கூறிடும் அற நூலாம்
இருளினில் அலைபவர்க்கொளி நூலாம்
பேசருஞ் செந்தமிழ் மறை நூலாம்
அரசியல் அறிவுரை நிறை நூலாம்

சிவபாலன் சிவாம்சன்
*(ஆண்டு 3, சென்ஜோன் பொஸ்கோ வித்தி.)*

## உங்களால் முடியுமா?

கீழே மூன்று வட்டங்கள் உள்ளன. இவற்றுக்கு மேலதிகமாக ஒரு சிறிய நேர்கோடு மற்றும் ஒரு சிறிய வளைந்த கோடு ஆகியன உள்ளன. இவை இரண்டையும் சேர்த்து உங்களால் நாய் ஒன்றை உருவாக்க முடியுமா? முயன்று பாருங்கள்!



(விடை XV ஆம் பக்கத்தில்)

## சிறுவர் சுடர்

## நொடிப்பொழுது

1. உரிச்ச கோழி சந்தைக்குப் போறான். அவன் யார்?
2. கடல் நீரில் வளர்வான்: மழை நீரில் மடிவான். அவன் யார்?
3. சட்டைப் பையில் அவன் இருந்தால் ஒருவரும் அதனுள் இருக்க மாட்டார்கள். அவன் யார்?
4. குதிரை ஓட ஓட வால் குறைகின்றது. அது என்ன?
5. தட்டச் சீறுவான். அவன் யார்?

சீ.ஏ.யசிகரன்
*(தரம் 8, ஆழியவளை. சி.சி.த.க.வித்தி)*

விடைகள்:




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | வி சனி | | |
| சந் | இராசிச்சக்கரம் | | ராகு |
| கே | | | புத வெ சூ |
| | செவ் | | |

**அமைதி ஏற்பட்டால் தான் மக்கள் - நாடு செழிப் படையமுடியும். நல்லை முருகப்பெருமானின் அருள், கருணை அளப்பரியது. அன்பர்கள், அடியவர்கள் வேண்டுதல் செய்து அமைதியும், சமாதானமும் மிளிர வேண்டுமென பிரார்த்தனை செய்யுங்கள்.**

# இந்த வார இராசி பலன்

## 28 - 08 - 1999 இலிருந்து 03 -09 - 1999 வரை

*மாற்றம்:- பூரட்டாதி நட்சத்திரம் - கும்பம் இராசியில் சந்திரன் நிற்கும்.*

*அரசியலில் புதிய அணுகுமுறையையாளுவார்கள். வெளிநாட்டார் ஆலோசனை, அரசியல்வாதிகளின் கருத்து வேற்றுமை, மாணவர்கள், தொழிலாளர்களின் போராட்டம், யுத்தச் சூழ்நிலை தொடர்ந்தபடி இருக்கும். இந்தியாவின் எல்லைப்பகுதியில் யுத்தசூழ்நிலை ஏற்பட்டு அழிவுகள் தொடரும். தேர்தல் சூடு உச்சக்கட்டம் அடையும். அடுத்த மாதம் எவரின் ஆட்சினை மக்கள் கேட்டபடி இருப்பார்கள். பாரதீயஜனதா அதிக ஸ்தானங்களைப் பெறலாம். ஜெயலலிதாவுக்கு தெற்கில் எதிர்பாராத வெற்றியும் சோனியாகாந்திக்கு ஆபத்துச் சூழ்நிலையும் உருவாகும். சில தலைவர்கள் பழிவாங்கப்படுவார்கள். யுத்தசூழ்நிலை, தீவிரவாதிகளின பயங்கரவாதச் செயல்கள், பாகிஸ்தானில் சில அழிவுகள் என்பன நடக்கும். மேற்கு உலகம், வடக்கு - மத்திய கிழக்கு நாடுகளில் தனது ஆதிக்கவலுவை தொடர்ந்து நிலை நாட்டியபடியே இருக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.*

### மேடம்

மனிதர்கள மனிதசட்டத்தை உடைத்தெறிகிறார்கள். ஆனால் எவரும் தெய்வசட்டத்தை உடைத்தெறிய முடியாது. தொழில்ஸ்தானத்தில் சட்டதிட்டத்தை பின்பற்றி நடக்கமுடியாத நிலை ஏற்படலாம். போராடிப் பொருள் பெறுவீர். அரசஅதிகாரிகள் உதவிகள் புரிவர். எதிர்ப்பாலர் நல்ல அபிப்பிராயம் சொல்லமாட்டர்கள். அரசியலில் ஈடுபாடுள்ளவர்களுக்கு எதிர்பாராத மாற்றம் ஏற்படும். வேகமான பேச்சால் எல்லோரையும் வெருட்டி விடுவீர்கள். நெஞ்சுவலி, பணத்தால் யோசனை, வயிற்று ரோகம், மலசல பீடைகள், கண்கூச்சம் என்பன வரலாம். எழுத்துவேலை, போக்குவரத்துத்துறை, மருந்துத்துறை, வியாபாரத்துறை, பத்திரிகைத்துறைத் தொடர்பானவர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். காணி பூமியில், வாகனத் செலவுகள் அதிகரிக்கும். நிதான இருக்கவும்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன.*

# மகாதேவா ஜோதிடம்

### இடபம்

உலகத்திற்கெல்லாம ஆலோசனை சொல்லுவீர்கள .ஆனால உங்கள்காணியில் எவராவது மாடு கட்டினால் பொறுமையாக இருக்கமாட்டீர்கள். தொழில்ஸ்தானத்தில் உங்கள் தவறுகளை, பொருட்களை எவராவது சுட்டிக்காட்டி அல்லது எடுத்தால் சூரசங்காரம்தான் நடக்கும்போல் இருக்கிறது. உதயத்தைச் செவ்வாய் உக்கிரமாய் பார்த்தாலும்உள்ளபடி சகோதரங்களால சொல்லாமல் பல உதவி கிடைத்துவிடும். உஷ்ணபீடைகள், விறைப்பு, நெஞ்சுப் படபடப்பு என்பன ஏற்படலாம். பத்திரிகைத்துறை, மருந்துத்துறை, குருத்துறை, தொழில் நுட்பத்துறையினர், கடல்துறையினருக்கு நல்ல இலாபங்கள் அதிகரிக்கும். காடு, நாடு என மாறிமாறி ஓடித்திரிவீர்கள். இலாபம் மட்டும் மத்திமநிலைதான் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- புதன்.*

### மிதுனம்

துக்கம், கவலையால் எதையும் சாதிக்க முடியுமா? எதையும் அலட்சியம் செய்யாது - எங்கும் சுழன்றபடி இருப்பீர்கள். அடிக்கடி தொழில்ஸ்தானத்தில் உங்களைத் தேடுவார்கள். கவலையில்லாத மனிதர் நீங்கள் என, நாலுபேர் காது கேட்கப் பேசுவார்கள். சகோதரமென்றால்நெஞ்சில வேதனை வரலாம். வாய்வு, விறைப்பு, மலச்சிக்கல், தலைவலி என மருந்துக்குச் செல்வீர்கள். ஆனால் வரும் விருந்துகளையும் விடமாட்டீர்கள். எழுத்துத் துறை, அச்சுத்துறை, ரீவித்துறை, குருத்துறை, தரகுத்துறை, கலைத் துறையினர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள். பொதுத்தொண்டுகளால் மனக்கொதிப்புக்கள் அடிக்கடி ஏற்பட்டு பகையைச் சம்பாதித்துக் கொள்ளுவீர்கள். பிறருக்கு அடிக்கடி புதுப்புதுத் திட்டங்களை நல்லபடி தீட்டிக் கொடுப்பீர்கள். தூரதேசப் பிரயாணங்களை தள்ளிப்போடுவதனால் நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்:- புதன்.*

### கடகம்

எந்த விஷயத்திலும் முயற்சி செய்யாமல் இருப்பவரிலும் பார்க்க முயற்சி செய்து தோல்விகண்டவர்கள் சிறந்தவர்கள். சரி, பிழை பாராது நீங்களும் தொழில்ஸ்தானத்தில் முயற்சி செய்தபடி இருப்பீர்கள். எதிர்ப்பாலாருடன் வாக்குவாதங்கள் ஏற்படலாம். வாகனத்தால் சுகம் கிடைக்கும். பித்த ரோகம், சிரசுவருத்தம், வாய்வு, வாதம் போன்றவை வந்து வருத்தலாம். சல வருத்தம் சஞ்சலம் தரலாம். வியாபாரத்துறை, கடல்துறை , மருந்து, பத்திரிகைத்துறை, நகைவேலை, இரும்பு வேலை, எண்ணெய்வேலை செய்பவர்கள் நன்மை அடைவார்கள். அடிக்கடி மாறிமாறி வேகமாக வரும் உலகில் உங்களையும் கொஞ்சம் நவீனமயப் படுத்தப்பாருங்கள். கவர்ச்சியால் கனக்கக் காரியங்கள் சாதித்துக் கொள்ளலாம்.

*அதிர்ஷ்டநாள்:- புதன்.*

### சிங்கம்

மாசுபட்டஇடம் - தூசுபட்டாலென்ன? அழிவுபட்டால் என்ன? எனச் சிந்திக்கிறீர்களா? நியாயமானதுதான். பிழைகள் சரியாகா. சரிகளை எப்பொழுதும் எவரும் பிழைகள் எனச் சொல்லமுடியாது. தொழில்ஸ்தானத்தில் பலவித அபிப்பிராயம் வந்தாலும் உங்கள் உறுதிநிலையை தளம்ப விடமாட்டீர்கள். சக ஊழியர்களால் யோசனை ஏற்படும். முன்னுக்கு வாழ்த்தியும், பின்னுக்கு தூற்றியும் திரியும் பலர் உங்களைச் சூழ்ந்திருப்பர். உதயத்தில் சூரியன், வெள்ளி, புதன் சேர்ந்திருப்பதனால் உஷ்ணவாய்வு, விறைப்பு ஏற்படலாம். வியாபாரத்துறை, நிர்வாகத் துறை, குருத்துறை, இரும்பு, தொழில் நுட்பத்துறையினர்கள் அதிக நன்மை அடைவார்கள். பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

*அதிர்ஷ்டநாள்:- புதன்.*

### கன்னி

இறைவனிடம் கேளுங்கள். அவர் இல்லை எனச் சொல்வதில்லை. மனிதரிடம் கேளுங்கள். அவர்கள் இருக்கிறது எனச் சொல்லுவதில்லை எனச் சிந்திக்கும் காலம். கலங்குவீர்கள். அட்டமத்தில் சனி எல்லோரையும் தாக்குவதில்லை. ஒருவருக்கு மனக்குமுறல் - மற்றவருக்கு பொருள் கலக்கம்.. இன்னும் சிலருக்கு நடுவீதியில் நாலு பேருக்கு நியாயம் சொல்ல வேண்டி வைக்கும் காலமெனக் கலங்குவீர்கள். பொருள், வீடு, வாகனச் செலவுகள் அதிகரிக்கும். ஆலயவாசலைத் தேடி வருவீர்கள். நாரிநோ, வாய்வு, வாத விறைப்பு, மலச்சிக்கல், கண்கூச்சம் என்பன கொடுக்கலாம். நகைத்துறை, புடைவைத்துறை, குருத்துறை, நிர்வாகத்துறை, வியாபாரத்துறை, போன்றவற்றில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அதிக இலாபம் ஏற்படும். ஆயினும் வரவிற்கு மீறிய செலவுகள் அதிகரிக்கும். அதனால் அதிக வேதனைப்படுகிறீர்கள். அமைதியான மனமும், நோயில்லாத உடம்பும் மனிதவாழ்விற்கு அவசியமென உங்களுக்குப் புரியாததா? என்ன?

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன்.*

### துலாம்

தர்மமும், உண்மையும் தோற்பதில்லை எனச் சொல்லுகிறார்கள். அதை வெற்றிகாண நடக்கும் போராட்டத்தில் எத்தனை பாதிப்பு, [illegible] இழப்பு, துன்பம் ஏற்[illegible] தொழில்ஸ்தானத்தில் உரிமைப் பிரச்சினை தலைதூக்க இடமுண்டு. நாம் நினைப்பதெல்லம் நடக்கின்றதா? இடமாற்றம், பிரயாணம் ஏற்படும். மனமாற்றம் அடிக்கடி ஏற்படும். வயிற்றில் வருத்தம், தோல்வருத்தங்கள், கைகால் உளைவு என்பன ஏற்படலாம். மனச்சோர்வு, வாய்வு, நாரிநோ, தலைச்சுற்று என்பன ஏற்படலாம். குருத்துறை, கடல்வேலை, இரும்புவேலை, தொழில் நுட்பத்துறை தொடர்பானவர்களுக்கு நன்மைகள்ஏற்படும். தூரதேசத்திலிருந்து நற்செய்திகள்வரும் காலமாகும்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன்.*

### விருச்சிகம்

தெய்வசக்தி - பக்தியாளர்களுக்குத்தான் தெரியும். சாஸ்திரத்தின் ஆழம் சோதிடம் தெரிந்தவர்களுக்குத் தான் புரியும். 'நான்நாஸ்திகன். எனக்கு கடவுள் நம்பிக்கையில்லை. சோதிடத்தை நான் நம்புவதில்லை' எனச் சிலர் பெருமையாகச் சொல்லுகிறார்கள். இவர்களில் பலர் இரகசியமாக - தமது குறிப்புக்களுடன் சோதிடர்களிடம் ஓடிக்கொண்டுதான் இருக்கிறார்கள். இப்படி உலகத்தினருக்குதான் ஒரு பக்கமும் - உள்ளத்தில், மனச்சாட்சிப்படி மறுபக்கமும் நடிப்பவர்கள் போன்று நீங்களும் தொழில்ஸ்தானத்தில் இருக்கமாட்டீர்கள். சுயகட்டுப்பாடுடன் பலகாரியங்களைச் செயற்படுத்துவீர்கள். வயிற்றி பொருமல், வாய்வுத்தொல்லை, வாதப்பிடிப்பு, கைகால் வலி என்பன வரும். கோயில்வேலை, எழுத்துத்துறை, தொழில்நுட்பத்துறை, இரும்புவேலை என்பன தொடர்புடையவர்களுக்குப் பலமாற்றங்கள் நடக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன்.*

### தனுசு

பணபலம், அதிகாரப்போதை, லஞ்சம், ஊழல் மலிந்தவர்களைக் கண்டு பல சாதுக்கள் மிரண்டு அதனால் பலரை நடுங்கச்செய்யும் செயற்பாடுகளை நாம் நாட்டிற்கு நாடு - ஊருக்கு ஊராக பார்த்தபடி இருக்கிறோம். மனிதர்கள் திருந்தமாட்டார்களா என வெளிப்படையாகக்கேட்கிறீர்களா? இப்படியாகப்பலர் கேட்டுகேட்டு களைத்து விட்டார்கள். தொழில்ஸ்தானத்தில சாது மிரண்டால் எப்படி இருக்கும் என்பதை உங்கள்மூலம் அறியச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். படபடப்பு, தலைச்சுற்று, பித்தக்கொதிப்பு, நாரிநோ, வயிற்றுக்குழப்பம் என்பன கொடுக்கும். அரசியல் துறை, நிர்வாகத்துறை, குருத்துறை, வைத்தியத்துறை, பிரயாணத்துறை, இரசாயனத்துறை, பத்திரிகைத்துறை, போன்றவற்றில தொடர்பானவர்களுக்கு நன்மைகள் கொடுக்கும். பிணைக்குப் போகாதீர்கள் இடமாற்றங்களை, பிரயாணங்களை இயன்ற அளவு தவிர்த்துக் கொள்ளுங்கள்.

*அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, திங்கள், புதன்.*

### மகரம்

மனம் இருந்தால் இடம் உண்டு. இடம் இருந்தால் மனம் வருமா? தத்துவம் பேசி என்ன பலன்? சரித்திரம் படைக்கும் பலன்கள உங்களை நாடித் தேடிவருகிறதே பொறுமையாக இருங்கள். மனவியாதிக்கு மருந்து தெய்வீக வழிபாடுதான். இதையெல்லாம் தொழில்ஸ்தானத்தில் சொல்லிச சமாளிக்கமுடியாது. சம்பளம்தரும் முதலாளி அதற்கு மேலால் வேலை வாங்காமல் விடுவாரா? பழைய பாக்கிகள் வரலாம். அயலவர்கள் கோள் சொல்வார்கள். புதிய வேலை, உயர்வுகள் பெற்றுத் தருவதாகச் சிலர் ஆசைவார்த்தைகளைச் சொல்லி காசு பறிப்பார்கள். வெளிநாடு என ஏஜென்ஸிகளிடம் பொருள் கொடுத்து ஏமாற வேண்டாம்.

*அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, திங்கள்.*

### கும்பம்

உணர்ச்சிவசப்படுகிறவர்கள் நல்லதை ஏற்கமாட்டார்கள். அதனால் அழிவுகள் எங்கும மலிகின்றன. எனவே இக்காலத்தில் தொழில்ஸ்தானத்தில் நீங்கள் புத்திசாதுரியமாகப் பொறுமையுடன் கொடுக்கல் வாங்கல்களைச் செய்து வாருங்கள். இடமாற்றம் சில [illegible] லாம். மறதி, கைகால்நோ, நெஞ்சுப் படபடப்பு, நரம்புத்தளர்ச்சி, அடிக்கடி கோபம் என்பன ஏற்படலாம். வாக்குத் தவறியவர்களால் வேதனைப்படுவீர்கள். விவசாயத்துறை, கடல் வேலை, இரும்புவேலை, விஞ்ஞானத்துறை, மருந்துத்துறை, எண்ணெய்த் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் நன்மை அடைவார்கள். தூரதேசத்துச் செய்திகளால் உறவினர்கள் நன்மை அடைவார்கள். தெய்வவழிபாடு சிறப்புத்தரும்.

*அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, திங்கள்.*

# சோதிட சஞ்சீவி

### மீனம்

எவருக்காவது மமதை தலைக்கேறிவிட்டால் அழிவுகள்தான் ஓடிவரும். வீட்டில் என்ன குழப்பம்? ஏன் கோபிக்கிறீர்கள்? பொறுமையாக இருக்க முயலுங்கள்.உலகம் எமக்கு மட்டுமா சொந்தம். யாருக்கு இப்பூமி எனத் தெரியாத தனாலேயே அதிகம் பேர் அடிபட்டபடி இருக்கின்றார்கள். இது உங்களுக்குத் தெரியாதா? தொழில்ஸ்தானத்தில் நன்மை, தீமை, இலாப, நஷ்டம் கலந்தபடி நடக்கும். வரும் திசையில் ஒரு பகுதி ஓடிக்கொண்டுதான் இருக்கும். கணக்குப்பார்த்துச் சாப்பிடுவதனாலும் - எண்ணி எண்ணி வீடு கட்டுவதனாலும் எதுவும் உருப்பட்டு வரத்தாமதமாகும். நரம்புச்சோர்வு, வயிற்றுக் குழப்பம் ஏற்படும். சிலருக்கு திடீரெனப் பொருள் வரவு கொடுக்கும். பொருள் இழப்பு, அல்லது களவு போகலாம். குடும்பத்தவர்கள், எதிர்ப்பாலாருடன் கருத்து வேற்றுமை ஏற்படஇடமுண்டு. கடல்துறை, பிரயாணத்துறை, வியாபாரத்துறை, விவசாயத்துறை ஈடுபாடுடையவர்களுக்கு அதிகளவு மாற்றங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, திங்கள்.*

## காரியாசான் கண்ட நாய்கள்

நாம் அறிந்த விலங்குகளில் நாயும் ஒன்று. பேரருளாளர்கள், தம்மை நாயென்றும் நாயினும் கடைப்பட்டவர் என்றும் கூறுவர். திருநாவுக்கரசு சுவாமிகள் 'நாயினும் கடைப்பட்டேனை நன்னெறி காட்டி ஆண்டாய்' என்றும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'நாயேன் பலநாளும் நினைப்பின்றி' என்றும் மாணிக்கவாசக சுவாமிகள் 'நாயான நத்தம்மை ஆட்கொண்ட நாயகனை', 'நாயிற் கடைப் பட்ட நாயேனை' என்றும் எல்லாம் கூறுவர்.

ஒருவர் மற்றொருவரை, வெட்கமற்ற – நாணமற்ற – நாய் என்று திட்டுவதனையும் காண்கின்றோம். நன்றி அறிதலை உடைய நாய் அதன் பழக்கப்பண்பால் கேவலம் இகழவும் படுகின்றது.

எங்கள் புலவர் காரியாசான், ஆறறிவு படைத்த மனிதருள்ளும் ஐந்து நாய்களைக் காட்டுகின்றார். நாணிலாதான், நன்கு நள்ளாதான், பெரியரைப் பேணாதான், பிறர் சேவகன், பணமின்றிப் பரத்தையர் வீதியில் திரிவோன் இவரெல்லாம் நாய்களாம்.

நாண் என்பதற்கு முன்பும் விளக்கம் அறிந்தோம். மகளிர்க்குரிய நால்வகைக் குணங்களில் ஒன்றாகிய நாண் வேறு. இங்கு குறிப்பிடப்படும் நாண் வேறு. பிந்திய நாண் மக்கள் அனைவருக்குமே பொதுவாக இருக்க வேண்டிய நாண். அது 'ஒருவர் தமக்கு தகாத கருமங்களைச் செய்ய வெட்கப்படுதல்' என்பதாகும். பெரியராயினார் இழிந்த கருமங் களைச் செய்ய நாணுவர். உணவும் உடையும் முதலாயின எல்லோர்க்கும் பொது. நன்மக்களுக்கு நாணம் சிறந்த அணிகலமாகும். பண்டையோர் பொதுமக்களுக்கு அன்றி பாராளும் வேந்தருக்கும் அதனைச் சிறந்த அணிகலமாக்கினர்.

# தேன்கூடு

புறப்பாடலுள் ஒரு செய்தி வருகின்றது. கிள்ளிவளவன் என்னும் வேந்தன், கருவூர்க் கோட்டையை, முற்றுகையிட்டிருக்கிறான். ஆங்கு கருவூர் மன்னன் அடைபட்டிருக்கிறான். காவன் மரங்களை வெட்டும் ஓசை செவியில் நன்கு படுகின்றது. பாவம்! போருக்கு வராது உள்ளே அஞ்சி இருக்கின்றான். அத்தகைய வேந்தனுடன் சண்டையிடுவது தூயவீரருக்கு நாண் தருவதாகும். ஆலத்தூர் கிழார் எனும் புலவர் 'சிலைத்தார் முரசங்கறங்க – மலைத்தனை என்பது நாணுத்தகவுடைத்தே.' (புறம் 36) என்று பாடுகிறார். வலியர் மெலியரை வருத்துவது வெட்கம் விளைவிக்கும்

நன்கு நள்ளாதானை நோக்குவோம். நன்கு நள்ளாதான் என்பது இனிதே நட்புக்கொள்ளாதவன் எனும் பொருளது. சிலர் ஊழ் வலியான் பல்வளமும் படைத்தவிடத்து பிறரை மதிப்பதும் இல்லை. நண்பு பூண்பதுவுமில்லை. தனித்தே இருக்க விழைகின்றனர். மனம் கலந்து பழகும் தன்மை இல்லாரது வாழ்க்கை, குளப்பரப்பானது கரையில்லாது, நீர்நிறைந்தாற் போன்றது என்று வள்ளுவர் பெருமான் கூறுவர். நண்பர் இல்லாதார் வாழ்க்கை மணம் அற்ற மலர் போன்றது. மிகப்பெரிய ராமன் ஏழைமை வேடன் குகனுடன் நண்பு பூண்டான். குகனைத் தம்முடன் பிணைத்து, ஐவரானோம் என்று அகமிக மகிழ்ந்தான்.

**சிந்திப்போம் செயற்படுவோம்**

பெரியாரைப் பேணுதல் என்பது தந்தை, தாய், தம்முன் நிகரில் குரவர் முதலியோரைப் பேணுதலாகும். பெரியோர் தம்மை அடைந்தாரைத் துயர் தீர்த்து நல்ல வண்ணம் வாழ வைப்பார். தீ நெறியின்று நன்னெறிக்கண் வாழவைப்பர். திருவள்ளுவதேவர் பெரியாரைப்பேணித்தமராகக் கொள்ள வேண்டும் என்று ஆணை மொழிகின்றார். இனி பெரியார் என்பதற்குத் தவத்தாற் பெரிய துறவியரையும் வலிமை மிக்க வேந்தரையும் கூட இணைத்துக் கொள்ளலாம்.

நகுசன் என்பான் இந்திரப்பதம் பெற்றிருந்தான். அதனால் கர்வங் கொண்டான். இருடியர் ஒரு சமயம் அவனைச் சிவிகையில் சுமந்து சென்றனர். நகுசன், விரைந்து செல்லுங்கள் என்னும் பொருள்படச் 'ஸர்ப்ப ஸர்ப்ப' என்று கூறினான். இருடியர் அதனைப் பொருள் ஆக்கினர். அகத்தியர் பாம்பாகும்படி சபித்தார். இந்திர பதமும் இழந்தான்.

இனி சேவகரை எடுப்போம். ஈங்குச் சேவகராவர் பிறர்க்கு ஊழியம் செய்வோர். தமக்கென ஒரு கொள்கையில்லோர், ஏவின செய்வார். அவரும் நாய்கள் தாம் என்கிறார்.

இறுதியாகக் கையில் பணம் இன்றிப் பரத்தையர் வீதியில் திரிவோன் அதாவது கைத்து இல்லான்; பூண்முலையார் சேரி திரியும் கைத்து இல்லானும் நாயே! பொது மகளிரை, வள்ளுவர் பெருமான் வரைவின் மகளிர் என்பர். பொது மகளிர் ஒருவனை அன்புபற்றி அன்றிப பொருள்பற்றியே விரும்புவர். அவர் அழகு, சொல், செயல் மூன்றானும் ஆடவரை வஞ்சிப்பர். கீழ் மக்கள் பொதுப் பெண்டிரையும் கள்ளினையும் சூதினையும் பெரிதும் விரும்புவர் . புலவர் பருத்தி விற்கும் கடையில் வறிதே கிடக்கும் நாயென இவரை சற்றுக் கூடுதலாக விமர்சிக்கின்றார்.

இனிப் பாடலைப் படிப்போம்.

*நாணிலன் நாய்; நன்கு நள்ளாதான் நாய்; பெரியார்ப்*
*பேணிலன் நாய்; பிறர் சேவகன் நாய்; - ஏணில்*
*பொருந்திய பூண்முலையார் சேரிகைத் தில்லான்*
*பருத்தி பகர்வுழி நாய்.*

'கைத்து இல்லான் – கைப்பொருள் இல்லான்; ஏண் – உயர்வு; மனநிலையுமாம்.' (தொடரும்)

–சிகண்டியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20ஆம் நூற்றாண்டில் உலக இலக்கியம்



சிங்கிஸ் ஐத்மத்தோவ்

16

மொழி மற்றும் தேச வாரியாகவோ, கால ஒழுங்கிலோ, கூறுகட்டி நிரற்படுத்தாமல் இயல்பான சிந்தனையோட்டத்தில், நனவோடை உத்தியில் - அமைந்த கட்டுரையாகிவிட்டது இது. இலக்கியக் கட்டுரையொன்று அப்படியிருப்பதில் ஆட்சேபிக்க எதுவும் இல்லையென்றும் அதுவே அதன் அழகென்றும் கூறப்படுகிறது.

எனினும், குறிப்பிடப்படவேண்டிய முக்கியத்துவம் பெற்றிருந்தும் இதுவரை கூறப்படாதுபோன இலக்கியங்களையும் படைப்பாளிகளையும் பரிச்சயம் கொள்ள முதல் இன்றைய உலகச் செய்திகளில் முக்கிய இடம்பெறும் தாகெஸ்தானும் அது தந்த முன்னணிக் கவிஞரொருவனும் நினைவில் இடம் கொள்வது இயல்பாகவே அமைகிறது.

முன்னாள் சோவியத சோஷலிஸக் குடியரசுகள் பதினைந்திலும் முதலிடம் பெற்றிருந்த ருஷ்ய சமஷ்டியின் ஓர் அங்கமாக இருந்தது தாகெஸ்தான். ருஷ்யநாடு உட்படப் பல சுயாட்சிக் குடியரசுகளையும், சுயாட்சி மாநிலங்களையும், சுயாட்சிப் பிரதேசங்களையும் ருஷ்யசமஷ்டி கொண்டிருந்தது. அவற்றுள் தாகெஸ்தான ஒரு சுயாட்சிக் குடியரசாயிருந்தது. கோகஸஸ் பகுதியில் கஸ்பியன் கடலை அண்டியிருந்த இப்பிரதேசம் வெவ்வேறு மொழிகளைப் பேசும் பல தேசிய இனங்களைக் கொண்டது.

இம் மொழிகளுள் முதன்மை பெற்றிருந்த அவார் மொழியின் கவிஞன், ரசூல் கம்ஸ்தோவ். அக்கால சோவியத்நாட்டையும் தாண்டி, ஆசிய - ஆபிரிக்க நாடுகளில் புகழ்பெற்றிருந்தார் கம்ஸதோவ். அவருடைய கவிதைகளின் கலையழகிற்காகவும், சமூகப் பொறுப்புணர்ச்சிக்காகவும் அவர் கவனம் பெற்றார். தான் ஓர் அவார் இனத்தவனாக இருப்பது, தாகெஸ்தான் பிரஜையாக இருப்பதையோ, சோவியத் குடிமகனாக இருப்பதையோ எவ்விதத்திலும் முரண்கொண்டதாக்கவில்லை என கம்ஸதோவ், தமது தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளின் மொழி பெயர்ப்புத் தொகுதி முன்னுரையில் குறிப்பிட்டார். இதில் இடம் பெற்ற 'நாரைகள்' எனும் கவிதை மிகவும் புகழ் பெற்றது.

சில குறிப்புகள்

*'பெரும் கொடும் போர்களில் உயிர்களை நீத்தவர் புறமுதுகிடாப் பெருவீரர் புதைகுழிகளிலே மறைவதில்லை...'*

இக்கவிதைத் தொகுதியைவிட 'எனது தாகெஸ்தான்' என்ற அவரது வசனத்தினாலான படைப்பும் ஆங்கிலத்தில் வெளியாயிற்று. இது வெறும் கட்டுரை நூலன்று; கவிதைகள், சிறுகதைகள், பழமொழிகள் எல்லாம் இடம் பெறுகிற - ஒரு படைப்பாளியின் உணர்வுக் கதம்பம்.

**சாந்தன்**

கம்ஸதோவ் பற்றிக். குறிப்பிடுகையில் உடன் நினைவுக்குவருகிற இன்னொரு படைப்பாளி சிங்கிஸ் ஐத்மத்தோவ்.. சோவியத் குடியரசுகளில் ஒன்றாயிருந்து இப்போது பிரிந்துவிட்ட கிர்கீஸியாவின் புகழ்பூத்த நாவலாசிரியர். 'ஜமீலா' என்ற அவரது நாவலுடன் பெருங்கவனம் பெற்றார். இதைத் தவிர அவருடைய 'அன்னை வயல்', 'போய் வா, குல்ஸாரி' ஆகிய நவீனங்களும் தீவர வாசகர்களின் ஆர்வத்திற்கும் அக்கறைக்கும் உரியவையாக விளங்கின. இம்மூன்று படைப்புக்களுமே தமிழிலும் பெயர்க்கப்பட்டு வெளியாகின.

ஐத்மத்தோவின் படைப்புக்களில், கிர்கீஸியாவின் மலைகளையும், எல்லையற்றுப் பரந்த ஸ்தெப்பி வெளிகளையும் மட்டுமன்றி, மானுடப் பண்புகளுக்கு இலக்கணமாய் அமைகிற பாத்திரங்களையும் சந்திக்க முடியும். போரின் கொடுமைகளுக்கு முகங் கொடுப்பதுடன்,மனத்திடத்திற்கு உதாரணமாயும் திகழ்கிற ஒரு மூதாட்டியின்கதை 'அன்னைவயல்'. 'உலகின் சிறந்த காதல் நவீனங்களுள் ஒன்று' என லூயி எரகனால் பாராட்டப்பட்டது 'ஜமீலா'.

சோவியத் நாடு, உடைக்கப்பட்டதானது உலகின் சமநிலையை இல்லாதொழித்ததுடன் நடுநிலைமை, அணிசேராமை போன்ற பதங்களையும் கூட அர்த்தமற்றதாக்கி விட்டது. அரசியல் ரீதியான இந்நிலைகள் ஒரு புறமிருக்க மூன்றாம் உலகின் கலை இலக்கியவாதிகளுக்கு அந்த உடைவு பெரும் இழப்பாகவும் அமைந்தது.

'சர்வதேசியம்' என்ற இலட்சியத்தின் கீழ் இலக்கியச் செல்வங்கள் யாவற்றையும் உலக முழுமைக்கும் பொதுமையாக்க சோவியத் தேசம் பெருமுயற்சிகளை மேற்கொண்டது. அங்கு வழக்கிலிருந்த உடெகே, யுகாகிர் போன்ற மொழிகள் எழுத்து வடிவம் கூட இல்லாதிருந்தன. எனினும் ஐம்பது ஆண்டுகளுள் அம்மொழிகள் தம் சொந்த எழுத்தாளர்களையும், இலக்கிய நூல்களையும் பற்றிப் பெருமை கொள்ளும் அளவிற்கு வளர்ச்சி கண்டன. இரண்டாயிரம் பேர் மட்டுமே பேசிக்கொண்டிருந்த சாமி மொழி ஆயிரத்தைந்நூறுக்கும் குறைவானோரைக் கொண்டிருந்த இத்தல்மன் மொழி - இவற்றிற் கூட இலக்கியப் படைப்புக்கள் நூலுருவில் வெளியாகியிருந்தன. இருபது லட்சத்துக்குச் சற்று அதிகமான கிர்கீஸியருடைய சிங்கிஸ் ஐத்மத்தோவும், அதில் கால்வாசி கூட இராத அவர்களின் ரசூல் கம்ஸதோவும், சோவியத் நாட்டின் எல்லைகளுக்கப்பாலும் உலகளாவிய இலக்கிய வாசகர்களுக்கு மிக நெருக்கம் கொண்ட படைப்பாளிகளாயிருந்தனர். சோவியத்நாடு 'தேசிய இனங்களின் சிறைச் சாலை'யாய் இருந்ததா? என்பது இக் கட்டுரைத் தொடருக்கு அப்பாற்பட்டது. எனினும் இன்றைய சர்வதேச நிலைவரங்களின் கீழ் அது மிக முக்கிய ஆய்வாக அமையும்.

எப்படியிருப்பினும், மேற்சொன்ன 'சர்வதேசியம்' என்ற பதாகையின் கீழ் சோவியத் அமைப்பானது தமிழ் மொழிக்கும், மக்களுக்கும் ஆற்றிய பணி மகத்தானது. இக்கட்டுரைத் தொடரின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்ட பல படைப்புக்கள் உட்பட உலகப் புகழ் பெற்ற செம்மை இலக்கியங்கள், குழந்தை இலக்கியங்கள், நவீன அறிவியல்துறை - சகலதும் சார்ந்த நூல்கள் யாவற்றையும் நினைத்தும் பார்க்க முடியாத மலிவு விலையில் தலைமுறைகளுக்கும் நிலைக்கும் விதத்தில் அது வெளியிட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)

---

# கண்ணாடிகள் வளைவதில்லை... உடைகின்றன..!

"தம்பி வாறானாமே?......."

இந்தக் கரகரத்த, சளிபூசிய குரல் செல்லம்மாக் கிழவிக்குரியது.

"ஓமெண்டுதான் சொான்னான். நல்லூர்த் தேரோடை ஒருக்கா வந்திட்டுப் போறானாம்" பவானி குக்கரிலிருந்து பாலை இறக்கி வைத்தபடியே சொன்னாள்.

"தம்பி வாறானாமே மோனை?" மீண்டும் அதேகேள்வி. இது வழமை. அசைவுகளை, முகபாவணையை வைத்துத்தான் பேசுவதைப் புரிந்து கொள்ளக்கூடிய பரிதாபம். வயதின் அதிகரிப்பில் புலன்களின் மங்கல் புதிதான ஒரு விஷயமில்லையே. ஆனாலும் சிலவேளைகளில பவானிக்குப பொறுக்க முடியாதிருக்கும். அவசரமாய வேலைக்குப் புறப்படும் கணவன்; 'நேஸறி'க்குப் போகின்ற மகன்; பாடசாலைக்குப் போகிற மகள். ஓடியோடி அனைவரது தேவையும் சரியாக்கும்...இறக்கையற்ற பறப்புக்கு இடையே அமைதியாகத் தாயின் முகத்திற்கு முன்பாக இருந்து கேள்விக்குப் பதில் சொல்வது மிகச்சிக்கலான விஷயந்தான்; இன்று ஒருமாதிரி அவர்களை அனுப்பியாகி விட்டது.

"பிள்ளை! தம்பி வாறானாமேயடி?"

"ஓமெணை. இந்த வரியம் வந்து போகலாமாம்"

"அப்ப..... வாறானாமே....?"

தனக்குள் சொன்ன செல்லம்மாவின் சுருக்கம் விழுந்த முகத்தில் சடுதியாய் மகிழ்ச்சிக் கீற்றுகள் படர்த்தன.

"எப்பவாம் வாறான்?

"நல்லூர்த தேரோடையாம அம்மா" சலிக்காமல் சொன்னாள்.

"எவ்வளவு நேரம் கதைச்சவன் மோனை? என்னைப்பற்றிக் கேட்டவனே?"தாயின் கேள்வி தொடர்ந்தது.

"ஒரு மணித்தியாலம் வரும். உங்களைப் பற்றித்தான் கனக்கக் கதைச்சவன் தம்பி"

**ச.சாரங்கா**
(சங்கத்தானை)

"என்ரை பிள்ளை வேற ஆரைப் பற்றிக் கதைக்கப் போறான்?" தாய்மையின் பெருமிதம் குரலில் வழிந்தது. முகத்தில் திருப்தி படர்ந்தது. பவானி எழும்பி உள்ளே போனாள்.

செல்லம்மாவுக்கு பவானியும், துர்க்காவும், ராசன் எனப்படுகின்ற ரிஷி குமாரனுமாக மூன்று பிள்ளைகள். இளம்வயதில் கணவனைப் பறிகொடுத்து பிறகு பிள்ளைகளை வளர்க்க அவள் பட்டபாடு கொஞ்சம் நஞ்சமில்லை. எவரிடமும் கையேந்தாது ஏழ்மையின்கரியநிழல பிள்ளைகளில் படர்வதை இயன்றளவு தடுத்தபடியான அந்த நாள்களின் முடிவில் மகள்மார் இருவரும் வசதியான இடங்களில் வாழ்க்கைப்பட்டதும் ராசன் பத்துவருடத்தில் சுவிட்ஸர்லாந்துப் பிரஜையாக மாறிவிட்டதும் நடந்து விட்டன.

கிழவியின் இப்போதைய கனவெல்லாம் ஒன்றே ஒன்றுதான். சாவதற்குள் ஒரேஒருமுறை மகனைப் பார்த்துவிடவேண்டும். வேறுஎதுவுமே அவளுக்குத தேவையில்லை. வெண்பனி ஆடை போர்த்த மலைகளுக்கருகே சிரித்தபடி மகன நிற்கும் புகைப்



படம் அவளுக்கு மிகவும் பிடித்தமானது. அடிக்கடி எடுத்துப் பார்க்கிற போது தனக்குள் சொல்லிக் கொள்வாள். 'அப்பிடியே.... அவரைப் போல... உரிச்சுவைச்சுப் பிறந்திருக்கிறான் பிள்ளை...அதுதான் அந்தாள் இடையில போட்டுதோ? ச்சீச்சீ.... அவர் செத்ததுக்கு இவன் பிள்ளை என்ன செய்யிறது....? தானே நோயும் சொல்லி மருந்தும் கொ[illegible] நாள்கள் நகரும்.

'ஐயோ! என்ரைபிள்ளை... தனிய... எப்படிச் சமாளிக்கிறானோ? தாய்மை பரிதவிக்கும்; திரும்பவும் புகைப்படம் எடுத்துப் பார்க்கத் தோன்றும்.

காற்றாட, சந்தடி அற்ற கிராமப் புறத்தில் இளையமகள் துர்க்காவின் வீட்டில்தான் செல்லம்மாவின் வாழ்க்கை கழிந்தது. ஆனால் மருத்துவவசதி கருதி நகரப்புறம வர வேண்டியாகிவிட்டது.

"நல்லவேளை; கண்ணில் வெளிச்சம் மங்கேல்லை இன்னும். என்ரை பிள்ளையை ஆசைதீர ஒருக் காப்பாத்திட்டாப் போதும்... அப்பனே... ஆலடி முருகையா... செல்வச் சந்திநிதியானே!" வாய்விட்டே சொல்லிக் கொண்டாள்.

மெதுவாக மூச்சடைப்பது போலிருந்தது. அருகே மருந்துக் குளிசைகள். வீரியமான, பாதிமட்டும் ஒரு [illegible] பாவிக்கப்பட வேண்டும் [illegible] தரப்பட்ட குளிசைகள். போட்டால் கொஞ்சம் சுகப்படுமெனத் தோன்றிற்று. சகலருக்கும் வழமையான ஜீவிதம். இவளுக்கு மட்டும் ஏன் கஷ்டமானது? சாதார்ண சுவாசம் ஏன் ஒரு வேலையாய்ப் போனது இங்கே? சில கேள்விகள் அப்பிடித் தான் பிறக்கும்போதே பதில்கள் இல்லாமல்தானே பிறக்கும்? அப்பிடிப் பட்ட கேள்விகள்தான் இவை. சில நேரங்களில் சளிஅடைந்து மூச்சு இழுக்கையில் முழுதாக மாத்திரைகளை விழுங்கினால் என்ன என்று இருக்கும்.

'அம்மா...!' மகன் கூப்பிடுவது காதுக்குள் ஒலிக்கும். 'ராசனைப் பார்க்கிறதுக்கு எண்டாலும் இந்தக் கட்டைல உயிர் இருக்கத்தானே வேணும். முணுமுணுத்தபடி பெரு மூச்சோடு கட்டிலில் சுருண்டு கொள்வாள் அவள்.

ஏனோ அந்த நகைப்பெட்டியை பார்க்கவேணும் போலிருந்தது. பெட்டி திறந்து வெளியே அதை எடுத்துத் திறந்தாள். உள்ளே நீலக்கல்லு மூக்குத்தி, மோதிரம், தோடுகள்... சகலதும் நீலக்கல் பதித்திருக்க சற்றே மங்கிய பசும்பொன்னில் மினுங்கின. இது செல்லம்மாவின் பரம்பரைச் சொத்து.

இது தம்பிக்கு வாறவளுக்குத் தான். இந்தமுறை வரேக்குள்ள எப்பிடியும் அவனிட்டை சேர்ப்பிச்சுப் போடவேணும்.இவள் பவானி பார்த்து வைச்சிருக்கிற பெட்டையைச்செய்து கொண்டு போகட்டன். இல்லாட்டி அவனுக்கு ஆரிலயும் பிடிப்பிருந்தா... ச்சே...அப்பிடிஇருக்காது. இருந்திருந்தா தம்பி மறைக்காமச் சொல்லியிருப் பன்' மனதில் நினைவுகள் படர்ந்தன.

* * *

நேரம் பத்தரையாக சூரியன் கதிர்களில் சூடுபூசத் தொடங்கியிருந் தான். வெளியே தபால்காரனின் சைக்கிள் மணியோசை ஒலிக்க ஜன்னலூடே எட்டிப்பார்த்தாள்.

"அட...தம்பி! எழும்பிவரக் கஷ்டமடா! இப்பத்தான் இவள் பிள்ளை நேஸரிக்கு மகனைக் கூட்டப் போட்டாள். இதில் கொண்டுவந்து தாமோனை?"

கடிதம் பெறப்பட்ட பொழுதில் மனம் நெகிழ்ந்தது. கண்கள் கலங்கின. இதயம் கொஞ்சம் வேகமாய் துடிப்பது போலிருந்தது. 'தம்பின்ரை கடிதம்... மூன்று, நான்கு மாதத்தின் பின்னான கடிதம்.' தொலைபேசி கடித வரவை மிகக் குறைத்திருந்தது. ஆனால் இவளுக்குத்தான் குரலைக்கேட்கக்கூடி வழி இல்லையே... முகம் பார்க்காவிட்டால் கதை விளங்காதே...?

நடுங்கும் கரங்களால் கண்ணாடி மாட்டிக் கடிதம் உடைத்தாள். "பவானிக்குத்தானே என்னத்தை எழுதியிருக்கப்போறான்...?" வாய்விட்டுச் சொல்லிக் கொண்டாள். உள்ளே புகைப்படங்கள், மகனின் படங்கள். கூடவே ஒரு பெண். கழுத்துவரை வெட்டிய தலைமயிரை விரல்களால் கோதியபடி, பூக்களோடு ஒரு பூவாக, மகனின் மேல் சாய்ந்தபடி..... இதயம் அதிர்ச்சியில் உறைந்து போயிற்று.

மனதில் கற்பனை செய்து வைத்திருந்த பின்னல் இட்ட, பூச்சூடிய, புடைவையணிந்த மருமகளின் தோற்றம் சுக்கு நூறாய்ச் சிதறியது. கூடவே கடிதம். எடுத்தாள். கையெழுத்தைப் பார்த்தபோது அன்புத் தம்பி "ரிஷி" என்றுதானிருந்தது. கடித வரிகளுக்கு விழிகள் தாவின.

*அக்கா! வேறென்ன இவ்விடம் சொல்வதற்கு ஏதுமில்லை. நான் சொல்லியிருந்தபடி அம்மாவைக் கொஞ்ச நாளைக்குத் துர்க்கா அக்கா வீட்டை அனுப்பிவையுங்கோ. அவவுக்கு ஒரு 'சேஞ்ச்' ஆயிருக்கும். யவ்னால நாங்கள் தங்க ஏற்ற இடம் உங்கடை வீடுதான். என்ரை நிருஷிக்குக் 'கன்றிசைட்' பிடிக்கவே பிடிக்காது. 'சிற்றி லைவ்'விலயே பிறந்து வளர்ந்தவ அவ. அதுவும் இழுத்துக்கொண்டு கிடக்கிற பழசுகளின்ரை முணுமுணுப்பைக் கேக்கிற அளவுக்கு அவவுக்குப் பொறுமை இல்லை.*

*உனக்குத் தெரியுந்தானே! நாங்கள் பரம்பரைப் பணக்கார்ர் எண்டு தான் நிருஷிக்குச் சொல்லியிருக்கிறன். அவையளின்ரை ஸ்ரைலுக்குச் சமனாயில்லாட்டியும் சமாளிக்கவாவது வேணுந்தானே! அதுதான் காதுங்கேளாத அம்மாவை வைச்சுக் கொண்டு...பிறகு அது பெரிய ஜோக்காத்தான் இருக்கும். அதுதான் அவவை கிராமத்துக்கு அனுப்பி வையுங்கோ. இடையில் ஒரு ரெண்டு நாளைக்கு நிருஷிக்குத் தெரியாமல் பார்க்கில் பார்க்கலாம். யோசிப்பம். மற்றது அக்கா இந்தப்படங்களை அம்மாக்குக் காட்டத்தேவையில்லை. இன்னுமொரு முக்கியமான விஷயம். என்னை 'ராசன்' எண்டு கூப்பிட வேண்டாம். 'ரிஷி' எண்டு இல்லாட்டிக்கு 'ரிஷா' எண்டு கூப்பிடுங்கோ. அத்தானிட்டையும் சொல்லுங்கோ.*

*அன்புத்தம்பி,*
*ரிஷி.*

செல்லம்மாவுக்குக் கடிதம் வாசிக்க முடியாமல் கண்ணீர் கொப்புளித்தது. விம்மல் வெடித்தது. கடிதமும படங்களும் மூடிவைத்து, நகைப் பெட்டியைத் திறந்து பார்த்தாள். கண்மணி மகனுக்காய் பேணிய சொத்து... அழுகை பீறிட்டது. நீலக்கற்களில் கண்ணீர். முத்துக்கள் விழுந்து சிதறின. கூடவாக மூச்சடைப்பதாய்த் தோன்றிற்று. பெட்டியை மூடினாள். மெதுவாகக் குளிசை எடுத்தாள். ஒன்று..... இரண்டு..... மூன்று.... தொடர்ச்சியாக ஏழு குளிசைகளையும் விழுங்கி வெற்றுப் போத்தலை வீசியெறிந்தாள். ஜன்னலின் வெளியே அநாதரவாய் அது - இந்தத் தாயைப் போலவே. செல்லம்மாவின் விழிகள் செருகத்தொடங்கின.

மகன்வரும் வரை வரவே வேண்டாம் என வேண்டிக் கொண்ட அதே மீளாத் துயிலுக்காக!

இந்த ரிஷி குமாரர்களுக்கு இனி யாவது புரியுமா மென்மையான இதய அன்புகள் கண்ணாடிகளென்றும் அவை ஒரு போதும் வளைவதில்லை உடைகின்றன என்பதும்.....?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனமொழி

## உங்கள் கவிதைகள்



காப்பாற்ற வந்த கைகள்
காயங்கள் தருவதேன்?
இன்பம் அளிக்க வந்த இனங்கள்
துன்பம் அளிப்பதேன்?
சிதைந்த வாழ்வை
சீர்ப்படுத்த வந்த சிரங்கள்
புதைத்து வதைத்து
சீரழித்து சிரமம் தருவதேன்?
உணவைப் பரிமாற வந்தவர்கள்
உயிரைப் பறிப்பதேன்?
உறவுகள் பிரிகிறதே
உரிமைகள் எரிகிறதே
உலகமே உணர்ந்துவிடு!
உண்மையை அறிந்துவிடு!

- வளர்மதி -

முல்லை படர தேர் - ஈந்தவன்
வழித்தோன்றல்கள் - இன்று
உரிமையுடன் ஒருங்கே வாழ
ஒரு துண்டு நிலமேனும் கொடுக்க
இயலாத பாவியர்கி விட்டேனே....
என்று பூமித்தாய் கண்ணீர் வடிக்கின்றாள்

- ஜெ.வாணி -
சங்கத்தானை.

'வஞ்சகத்தால் பொய்மொழியால் ~ கொடும்
பஞ்சமதால் பாதகத்தால் ~ அணு
நஞ்சதனால் ஆணவத்தால் ~ என்
கொஞ்சுமொழிக் குழந்தையெலாம்
அஞ்சியஞ்சிச் சாவதனால்
நெஞ்சம் வெடித்தெனக்கு
நெடு கண்ணீர் வடிகிறது' ~ இது
உலகத்தின் ஒப்பாரிக் கீதம்!

- அனலையூர்ச் சேந்தன் -

எங்கள் வீட்டிலோர் எறும்புப் புற்று
தொல்லை தாழாமல், தொலைக்க எண்ணி
மண்ணெய் ஊற்றினேன். மாண்டன பற்பல
சின்னாள் கழித்து சென்று பார்க்கையில்
மீண்டும் முன்போல் வேகமாய் பெருகின
'அவனால்' அன்றி அழித்தல் இயலாதே
என்ற உண்மை எனக்குப் புரிந்தது
உலகப் பார்வையில் தமிழர் கூட்டம்
கட்டெறும் பாகக் காணப் படினும்
'அழித்தல் தொழிலுக்கு அவனே'
என்பது தெரிந்தால் இனச்சமர் அவமே

- வ.சின்னப்பா -
தணங்கிளப்பு

'மிலேனியம்' ஆண்டினை
மிடுக்குடனே வரவேற்கும்
ஈழமணித் திருநாட்டின்
'கிட்லர் வதைமுகாம்கள்'
காலப் பெருவெளியில்
'கறைபடிந்த ஓவியங்களை'
கணக்கிட்டுக் கொள்வது......
உலகக் கண்காட்சிக்கு – அவற்றை
உரித்தாக்கிக் கொள்வதற்கா......?

- சி.சிவகௌரி -
மட்டுவில் - வடக்கு

முடிவடையும்
இரண்டாயிரமாம் ஆண்டில்
அழிந்தவை போக,
மீதியை
செவ்வாய் கிரகத்திற்கா
கொண்டு செல்கிறாய் ???

- மதுப்பிரதா -
நுணாவில் மத்தி.

தன் இனிய மைந்தர்கள்!
வல்லரசின் ஆதிக்கங்களாலும்
வறுமை வரலாறுகளாலும்
இன்னலுறுவதைக் கண்ணுற்று
உலக அன்னையவள்
கண்ணீர் மையினால்
ஓவியம் வரைகிறாள் போலும்!!

- நித்தியா யோகராஜா
நல்லூர்.

உன் வீழ்ச்சி கண்டு
உலகம்
கொள்ளும் மகிழ்ச்சி
நீ
உன்னை நம்பி நில்லு
தம்பி வழி செல்லு
வந்த பகை வெல்லு

- கதா -

உடுண்ட வடிவானவனே......
எங்கே போகின்றாய்?.......
பேரினவாதத்தாலும் இனவாதத்தாலும்
காமவேட்கையாலும் பலியான
உனது மக்களின் என்புகளை ஏந்தியபடி
எங்கே போகின்றாய்?.....
ஓ.....செம்மணிக்குப் போகின்றாயோ?.....
அல்லது செய்வினைக்குப் போகின்றாயோ?....

- சுஜன். சதா -

பண நாயகத்திற்
பவனி வருகின்ற
ம(னி)தப் பிராணிகளே!
அன்னை பூமியின்
அழுகுரல் கேட்கிறதா?
சுவர்களை எழுப்பிச்
சுகம் காணும் வல்லவரே!
மனித உரிமைகள்
சாசனத்தில் மட்டுமல்ல ~ உம்
ஞாபகத்திலும் இருக்கட்டும்.
அன்றேல்.....
அழுகையும் ஓயாது ~ எம்
அவலமும் தீராது.

- இ.ஜெயக்குமார் -


பூமி மாதாவே!
நீ ஏந்திநிற்கும் தாம்பாளம்
மானிட மலர்களால்
நிறைந்து கிடக்கிறது....
இதில்!
வாடிய மலர்களை - நீ
வீசத்தான் போகிறாய்....
ஆனால்
அனைத்து மலர்களின்
சுகந்தத்திற்காகவும்
தன்னையே கருக்கிய
புனிதமலர்களை - நீ
என்ன செய்யப் போகிறாய்?

- ச.தியானேஸ்வரசர்மா -
நுணாவில் மத்தி.

உலகமே! உற்றுப்பார்!!
உன் பரப்பெங்கும்
பரந்து...
நாடொன்றில்லாமல்
நாதியற்ற.....
ஏழெட்டுக்கோடி
தமிழன் நிலைதனை....
நன்றாக... உற்றுப்பார்.....
இப்போதெனினும்....
இவன் அபிலாசைகள்
உன் கண்களுக்கு.....
தென்படுகின்றனவா.... பார்ப்போம்!!

- நா.கபில்நாத் -

## மௌனமொழி - 49



உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது
இதனை வரைந்தவர் மானியூர் ரட்ணேஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதறிப் போன வாழ்வில்
பதறிப் போன மனங்கள்
கதறி அழும் இனங்கள்
உதறி விட்ட நிலையில்
சிந்தி விழும் கண்ணீருக்கு
அபய கரமே அளிக்கும் வேளை
அபாய கரமாய் அழிக்கும் நிலையில்
விழுந்தவர்கள் விழுந்தாலும்
விழுதுகள் பலவிட்டு
பழுதில்லாத வாழ்வை பக்குவப்படுத்த
அழுதிடாது எழுந்திடுங்கள்
அழிவில்லாது வாழ்ந்திடுவோம்!

- மௌனிகன் -

சத்தியத்தை விழுங்கி
பொய்சிரிக்கும்
இவ்வுலகில்
ஓயாத சத்தங்கள்
காயாத இரத்தங்கள்
முடிவில்லா யுத்தங்கள்
பட்டினிச் சாவுகள்
படுகொலைகள்
எல்லாமே தாராளம்
அப்படியிருந்தும்
புதிய உறவுகளின்
வரவை எண்ணி
புத்தாயிரமாண்டின் சுமையை
ஒத்திகை பார்க்கிறது
பூலோகம்.

- க.ச.திரிசூல் -
சுதுமலை.

21 ஆம் நூற்றாண்டின்
உதய கன்னியவள்
உதயமாகி விட்டாள்..
நல்லவரைக் காக்கவும்
தீயவரை அழிக்கவும்
யுத்த பூமியை அழித்து
புனித பூமியை சிரம்
மேல் கொண்டு எழுந்து
நிற்கிறாள்..! புதிய
மனிதங்கள் அவள்
கரங்களில்..!

- ந.கௌசல்யா -
புதுவையூர்.

யுத்தம் என்னும்
புயலில் சிக்கி
உயிர்ப் பூக்கள்
உதிரும் வேளை
உலகமே நீயும்
ஊமையாய் இருப்பதேன்?

- சிவன் -
பளை

ஓசோன் துவாரம்
ஒரு புறம்
அணுகுண்டு அபாயம்
உட்புறம்
தூர நின்று
சூரியனைச் சுற்றும்
பூமிக்கின்று
தலைச்சுற்று
வாடி உதிரும்
சமாதனமும் சேர
காணிக்கையாவது
கண்ணீர்ப் பூக்கள்.

- க.நாகராசா -
நுணாவில்.

பொறுமையின் சிகரத்தினுள்
புகுந்ததேன் கலக்கம்?
மனிதர்கள் அழிவதாலா?
மனிதங்கள் மடிவதாலா?

- வ.இரவீந்திரன் -
மட்டுவில்.

மனிதமற்ற மனிதர்களை
குலுக்கி வீழ்த்தி
மனிதம் வாழும்
மண்ணாய் என்னை
மாற்றும் முயற்சியில்....
அதிர்ந்தேன்
அட! ஒருவன் கூட
இறுதியில் மிஞ்சானா?

- ச.சாரங்கா -
சங்கத்தானை.

மலர் கொடிகளின்
கீழ் சருகானோம்!
சமாதான சன்னத்தின்
சிறகானோம்!
உயரிய மானிட நேயத்தில்
உறுதியான உதிர்வின்
அதிர்வுகள்!

கிழக்கின் இலக்கு
தகனமாகவில்லை இன்னும்
தாகம் மட்டும் தணியவில்லை!

- ந.சிறீதரன் -
கிளிநொச்சி.

பூமித்தாயே......!
பாரம் தாங்காது
கண்ணீர் வடிக்கிறாயா?
பொறுமையின் இருப்பிடமான - நீ
இன்னும் சொற்பகாலம் பொறுத்திரு
விரைவில் மாந்தர்களின் பிடியிலிருந்து
விடுதலை பெறுவாய்
இது நிச்சயம்!

- க.மைதிலி -
சாவகச்சேரி.

என்ன இது அதிசயம்!
உலகம் ஒருபுறம்
மக்கள் வெளிப்புறம்
ஒரு கண்ணற்ற
மனித தலை கொண்ட
உருவம்....!
இது என்ன?
அருள் நேசனின்
இரண்டாயிரமாம்
ஆண்டு தீர்க்கதரிசனமோ....!!

- சி.என்.ஹெய்ன்ஸ் -

பேசியே......
தீர்க்கப்படாத
பிரச்சினைகள் நிறைந்த
ஆசியக்கண்டத்தில்....
அடிவைத்த
அமெரிக்காவின்
பாசக்கரங்களை....
இல்லாமற் செய்திடவே
எழுந்து வருக
தென்னாசிய நாடுகளே!!!

- க.நாகேஸ்வரா -

தமிழ் மக்கள்
தொலைவதையும்
இறப்பதையும்
சரித்திரம்
படைப்பதையும்
உலகமே....
வியப்பிலா
பயத்திலா
பார்த்துக் கொண்டு
இருக்கின்றாய்...?

- யோ.ஜெஸ்ரின் -
கொழும்புத்துறை.

எம் தமிழர்
சிந்திய குருதியில்
அணையாத போர்த்தீ...
உன் கண்ணீரில்
கரைந்துவிடப் போகிறதா?

- ச.சுஜிதா -
அச்சுவேலி.

பூமித்தாயே
யுத்தத்தில் இரண்டு பிரிவு
இறப்பில் ஒரு பிரிவு
இவ்வொரு பிரிவு யுத்தத்தின் முன்
இருந்திருப்பின்
இவ்விறப்பு நிகழ்ந்திருக்குமா?
என நினைத்து அழுகிறாயா?

பா.ராஜபவானந்தி.

# 'உதயன்' தாக்கப்பட்டது குறித்து நம் வாசகர்களின் இதயக்கனல்!

ஆருயிர் உதயன் சஞ்சீவியே!

உனது அலுவலகம் கயவர் கூட்டத்தால் தாக்கப்பட்டது அறிந்து அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்த பல லட்சக்கணக்கான தமிழ் நெஞ்சங்களில் நானும் ஒருவன். எத்தனையோ இடர்களின் மத்தியிலும் காலத்தின் தேவையுணர்ந்து தமிழ்க்குலத்துக்கு நீ ஆற்றிவரும் மகோன்னதமான பணியை ஒவ்வொரு தமிழனும் மறந்துவிடமுடியாது; மறுத்துவிட முடியாது. இத்தகைய உன் பணியில் ஆயிரத்திலொன்றைக் கூட ஆற்றமுடியாத, பொய்யிலே உழன்று, கொள்ளையிலே தோர்ந்து, பந்தத்திலே ஊறி, நாடகமாடும் கையாலாகாத வேடதாரிக் கூட்டத்திற்கு உன்மீது தாக்குதல் நடத்தும் அளவிற்கு எத்தனை துணிவு?

சிங்கத்தின் பாதங்களை தஞ்சமெனப் பற்றி நிற்கும் குள்ளநரிக்கூட்டமே! சற்று செவிமடுத்துக் கேளும். உதயசூரியன் என இளங்காலைப் பொழுதினிலே எம் இல்லம் நாடிவரும் பைந்தமிழ் பத்திரிகை உதயனின் மேன்மைதனை செப்புகிறேன் கேளும்.

எம் உயிருக்கு உயிரான உடன்பிறப்புக்கள் காணாமல் போய்க் கொண்டிருந்தபோது அவற்றை உலகுக்கு அம்பலப்படுத்தி, மீதமுள்ளோரை காணாமல் போகாமல் காத்ததிலே இயன்றவரை பங்களிப்பு ஆற்றியுள்ளதுடன் காணாமல் போனோரின் நலனில் உழைத்த - உழைத்துக் கொண்டிருக்கிற - உழைக்கும் - உன்னத சேவையாளர் உதயன் - சஞ்சீவியே. தமிழ்வாணன் போன்றோர் கூறும் அப்பாவிக் கட்சிகளின் தப்பான செய்கைகளை, தவறான போக்குகளைக் கச்சிதமாய் வெளிப்படுத்தி நிற்கும் நம் உதயன், அத்துடன் அத்திருகுதாள ஜனநாயகவாதிகளின் சுடலைஞானப் பேருரைகளை தருவதற்கும் பின்நிற்கா நடுநிலைவாதி கண்டீர். நித்தமும் இங்கு வேட்டொலியும் கைதுகளும் சாவுகளும் மலிந்துவிட்ட போதும், மார்பு தட்டி பாராண்ட மறத்தமிழன் இங்கு கூனிக் குறுகி, கோவணத்துடனே மீன்பிடிக்க வைக்கப்பட்ட பிறகும், வாழையடி வாழ்ழயாகத் தான் வாழ்ந்த மண்ணில் வாழ அனுமதியின்றி அநாதைகளாகவும் அகதிகளாகவும் எம்மவர் வாழ்ந்து கொண்டிருக்கின்றபோதும், நாய்க்கு எலும்புத்துண்டு இட்டமாதிரி அற்ப வசதிகளை இங்கு ஏற்படுத்திவிட்டு வெளியுலகிற்கு இயல்பு நிலை தோன்றிவிட்டது என போலிப் பூச்சாண்டி காட்டும் பேரினவாதிகளினதும் ஒத்து ஊதும் ஊதுகுழல்களினதும் விஷமப் பிரச்சாரத்தை முறியடித்து, யாழ்ப்பாணத்தின் யதார்த்த நிலைமையை எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கும் பெருமையும் உதயனையே சாரும். இவை உதயனில் மகத்தான உன்னத பணிக்கு ஒரு சில உதாரணங்களாகும். உதயனின் பணியை முழுமையாக எடுத்துச் சொல்ல முயன்றால் அது வரையறையற்றது ஆகும். ஆனால் அவை முழுவதையும் கூற வேண்டிய தேவையும் எனக்கில்லை. ஏனெனில் அது ஒவ்வொரு தமிழனினதும் நெஞ்சினிலும் அழியா இடம் பெற்றுள்ளது.

இத்தகைய அருந்தமிழ் தொண்டாற்றிவரும் எம் ஆருயிர் உதயன் - சஞ்சீவி மீது கோழைத்தனமான தாக்குதல் நடத்தத் துணிந்த கயமைக் கூட்டமே! உதயனின் பின்னால் முழுத் தமிழ் சமூகமுமே அணிதிரண்டு நிற்பதை புரிந்து கொள்.

எமதருமை உதயன் - சஞ்சீவியே! நீ உனது பணியில் நிமிர்ந்து செல்; துணிந்து செல்; நீ இன்று ஆற்றி வரும் உன்னத பணிக்கு நாளைய சமுதாயம் என்றுமே தலைசாய்த்து நிற்கும் என்பதை மறந்துவிடாதே!

**காரை. தமிழன்பன்.**

## உங்கள் உள்ளத்திலிருந்து

### குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துக!

உதயனும் மக்களும் இரண்டறக் கலந்தவர்கள்; கிரனேட் வீச்சு போன்ற கோழைத்தனமான செயல்களால் தீயசக்திகள் அதை ஆக்கிரமிக்க முடியாது.

ஜனநாயக நாட்டில் பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், தனிமனித சுதந்திரம், மனித உரிமை பேணல் என்ற எல்லாக் கோட்பாடுகளுக்கும் அடித்தளமிட்டு இச்சுதந்திரங்கள் எல்லாம் சரியாக நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என உறுதி செய்யும் ஒரே ஒரு சுதந்திரம் பத்திரிகைச் சுதந்திரம் என்றால் அது மிகையாகாது. அடக்குமுறைகளும் அதிகாரங்களும் தமிழ் மக்கள் மேல் தலைவிரித்தாடும் போதெல்லாம், விசேடவிதமாக யாழ் மண்ணில் அநியாயக் கைதுகளும் கொலைகளும் அந்நியர்களால் நிகழ்த்தப்படும்போது, தனித்து நின்று குரல் கொடுத்து உண்மைகளை வெளிப்படுத்த உதவிய உதயனை ஒரு மறத்தமிழனும் மறக்க முடியாது.

தமிழ் மக்களுக்காகத்தான் இயங்குகின்றோம் என்றும் ஜனநாயகம் என்றும் கூறிக்கொண்டு தேர்தலில் சங்கு ஊதிய சில அரசாங்கத்தின் ஒட்டுண்ணிகள் ஊதியசங்கிற்கு முற்றிலும் எதிராக சில ஊழல்களிலும் வர்த்தகர்களிடம் கப்பம் திரட்டுவதிலும் ஈடுபட்டபோது பாதிக்கப்பட்டவர்களின் நலன் கருதியும் பாதிக்கப்படப் போபவர்களின் நலன் கருதியும் உடனுக்குடன் மக்களுக்கு அவற்றைத் தெரியப்படுத்தி மக்களுக்காகக் குரல் கொடுக்கும் உதயனுக்கு எதிராக எந்தத் தீயசக்திகள் செயற்பட்டாலும் அது மக்களுக்கு எதிராக செயற்பட்டதாகவே கருதப்படும் என்பதில் ஐயமில்லை.

குழந்தைக்கு இனிப்பைக்காட்டி பேய்க் காட்டலாம். பூனை கண்ணை மூடிக்கொண்டு பூலோகம் இருண்டுவிட்டது என்று நினைக்கிறது. ஆனால் உதயனை - அதாவது யாழ் மக்களை எந்த ஆசையைக் காட்டியும் ஏமாற்ற முடியாது.

வெளிப்போர்வையில் தமிழர்களுக்கு உதவுகின்றோம் என்று கூறிக்கொண்டு தமிழர்களைச் சுரண்டிக் குட்டிச் சுவராக்குகின்றார்கள் அவர்கள்.

பத்திரிகைச் சுதந்திரம் உள்ள ஜனநாயக நாட்டில் இப்படிப்பட்ட ஊழல்களையும் அரசியல் நாடகங்களையும் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் சுட்டிக்காட்டுவது பத்திரிகையின் தலையாய கடமை ஆகும். மக்களுக்காக செயற்படும் உதயன் தன்கடமையைத்தான் செய்தான்; செய்து வருகிறான்.

'தாங்கள் செய்வது அநீதி, அநீதியை நேரில் வந்து நீதியெனக் கதைக்க முடியாது. நாங்கள் கண்ணை மூடிக்கொண்டு எதையும் செய்வோம். குனியக்குனியக் குட்டுவோம். எம்மைத் தட்டிக் கேட்க யார் இருக்கிறார்கள்?' என்ற வரட்டுப் பெருமையுடன் இருப்பவர்களுக்கு நீதிக்காகக் குரல் தரும் பத்திரிகை எதிரிதான்.

இருட்டுக்குள் ஒளித்து நின்று வீட்டிற்குக் கல்லெறியும் காவாலிகளில் இருந்து கூர்படைந்தவர்கள் போல், கோழைத்தனமாக, இரவு வேளையில்; உதயன் அலுவலகம் மீது கிரனேட் வீசியது யார் என்பதையும் எந்த வகையினர் என்பதையும் யாழ் மக்களால் எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

அற்ப ஆசைகளைக்காட்டி நடனமாட அதற்கு ஏற்ப தாளம் போடுபவர்கள் யாழ் மக்கள் அல்லர். குட்டக்குட்டக் குனிபவனும் மடையன், குனியக்குனியக் குட்டுபவனும் மடையன்.அநீதி என்ற குட்டைக் குட்டகுட்ட யாழ் மக்கள் குனிய மாட்டார்கள். குட்டுபவர்கள்தான் மடையர்கள் ஆக வேண்டும்.

எனவே ஒளித்து நின்றுகொண்டு கோழைத்தன வேலைகள் செய்து வீரம் எனப் பேசிக் கொள்வதை விடுத்து பிரச்சினைகளை நேரில் எதிர்கொள்ள இனியாவது முன்வர வேண்டும்.

உதயனைத் தாக்கும் எந்த அமைப்பும் மக்களைத் தாக்கியதாகவே கருதப்படுவதுடன், மக்களிடையே அந்த அமைப்புக்கு இருக்கும் சொற்ப ஆதரவு கூட இல்லாமல் போய்விடும்.

இந்தத் தாக்குதல் குறித்து தீவிர விசாரணை நடத்தப்பட வேண்டும். எறிந்தவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படவேண்டும். குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க மக்கள் ஒத்துழைக்க வேண்டும்.

எத்தடைகள்வரினும் உதயனின் நீதிக் குரல் ஒலிக்க ஒவ்வொரு தமிழனும் ஒத்துழைக்க வேண்டும். உதயனின் நீதிக்குரல் ஓயமாட்டாது என்பதில் ஐயமில்லை.

**யாழ்ப்பாணம். இ.றொசான்.**

### குண்டு விழுந்தாலென்ன? உடல்துண்டுபட்டாலென்ன? கலங்காதே உதயனே!

தமிழ் மக்கள் மீது திணிக்கப்படும் பல்வேறு ஒடுக்குமுறைகளின் வடிவங்களை உலகுக்கு வெளிக்காட்டிவரும் உதயன் பத்திரிகை மீது நடத்தப்பட்ட குண்டுவீச்சு மிலேச்சத்தனமான நடவடிக்கையாகும். கட்டுப்பாடற்ற, காட்டுமிராண்டிக் கூட்டத்தின் கீழ்த்தரமான இந்த செயலை பல்லாயிரம் வாசகர் சார்பில் வன்மையாக கண்டிக்கிறோம்.

கடந்த 15 வருடமாக பல தடைகளுக்கு மத்தியில் - அடக்குமுறைக்கு எதிராக தமிழ் மக்களின் ஏகோபித்த குரலாக வெளிவந்த பத்திரிகை உதயன். இன்று அரசியல்வாதிகளாகிப் போனவர்களின் இந்தச் செயல் தமிழ் இனத்திற்கே இழிவானது.

ஒற்றுமையின்மையால் - எதிரி பிரித்து வைக்காமலே பிரிந்து நிற்கும் - இனம் என்றால் அது தமிழ் இனம் ஒன்றுதான். எம்மக்களின் வோட்டுகளில் ஆட்சிக் குதிரையின் வால்பிடிக்கும் தமிழ்க்கட்சிகள் தாம் செய்யும் பல மறைமுக நடவடிக்கைகளை உதயன் மக்களுக்கு எடுத்துக் காட்டி விட்டானே என்ற ஆத்திரத்தில் செய்த வேலையே இது.

இந்தக் குண்டு வீச்சுக்குப் பயந்து தமிழ் மக்களின் இறைமையை - அவலத்தை - வெளிக்கொணர்ந்து உலகுக்கு உணர்த்தும் தன் இன்றியமையாத பணியில் இருந்து உதயன் சற்றேனும் விலகிவிடக் கூடாது. இன்று வெளிவரும் தனித்த - தனித்துவமான - பத்திரிகை உதயன். எனவே அதன் பணியில் என்ன நடந்தாலும் விலகக் கூடாது என்பதே எம்அவா.

எங்கள் மக்கள், தமிழ்கட்சிகள் செய்த மிலேச்சத்தனமான நடவடிக்கைகளுக்கு உரிய பதிலை எப்படியும் அடுத்த தேர்தலில் கொடுப்பார்கள் என நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

**கொம்மந்தறை. இதயநிலா.**

### இதுவா ஜனநாயகம்?

கடந்தவார சஞ்சீவி அதிரடிஅரங்கில் யாழ்ப்பாணத்தில் உள்ள இயக்கம் ஒன்று மீண்டும் வர்த்தகர்களுக்கு கடிதம் அனுப்பி கூப்பிட்டு அன்பாக உபசரித்து வசூல் வேட்டை ஆரம்பித்திருப்பதாகவும் இது இயக்கப்பாணி நடவடிக்கையின் மிச்ச சொச்சம்தான் எனவும் "மின்னல்" தகவல் வெளியிட்டிருந்தார். இதற்கு முன்னரும் ஆயுத வழியில் இருந்து அகிம்சை(?) வழிக்குத் திரும்பியவர்களால் இவ்வாறான பல நடவடிக்கைகள் இடம்பெறுவதாகச் சஞ்சீவி செய்தி வெளியிட்டிருந்தது. அண்மைக் காலங்களில் வவுனியாவிலிருந்து யாழ் திரும்பியவர்களைக் கேட்டால் ஜனநாயகவாதிகளின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் பற்றி விலாவாரியாக எடுத்துக்கூறுவார்கள்.

கடந்த வார சஞ்சீவி வெளியானதும் மக்கள் தமது கருத்துக்களை தமக்கிடையே பரிமாறிக் கொண்டார்கள். குறிப்பிட்ட (இயக்கத்தின்) செயற்பாடுகள் பற்றி பலவாறாகப் பேசிக் கொண்டார்கள். அதே தினம் இரவு உதயன், சஞ்சீவி அலுவலகத்திற்கு இரு கிரனேட்டுகள் இனந்தெரியாத முறையில் வீசப்பட்டன. இதனால் ஏற்பட்ட சேத விவரங்கள் வேறு. குறிப்பிட்ட செய்தியால் வெகுண்டெழுந்த குறிக்கப்பட்ட கட்சியினரே இதனைச் செய்ததாக மக்கள் மத்தியில் பேசப்பட்டது. இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் "உதயன்" மட்டுமே தனித்து நின்று குடாநாட்டு மக்களுக்கு சேவையாற்றி வருகின்றது. எனவே இதனை குடாநாட்டு மக்களின் பத்திரிகைச் சுதந்திரத்திற்கு விழுந்த அடியாகவும் கொள்ளலாம். மறுபுறம் மக்களுக்கு நன்மை பயக்கும் செயலாகவும் கொள்ளலாம். ஏனென்றால் தற்போதே இக்கட்சிகளின் செயற்பாடுகள் குறித்து மக்கள் வெறுப்படைந்துள்ளனர். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் மேலும் மேலும் இந்த ஜனநாயகவாதிகளை மக்கள் தூர வைக்கப் பழகிக் கொள்வர். என்றாலும் இவ்வாறான மிரட்டல்களுக்கு 'உதயன்' அடிபணிய மாட்டான் என்பது யாவரும் அறிந்ததன்றோ!

**வண்ணை. க.பிரசாந்தன்.**

### வித்துவானின் போக்கில் மாற்றம் தெரிகின்றது

பத்திரிகை தர்மம் பேணி தங்களுக்கு வரும் கண்டனமடல்களையும் புகழ் மடல்களையும் ஒருங்கு சேரப் பிரசுரிக்கிறீர்கள். மேலும் வாசகர்களின் கண்டனங்களை தாங்கள் கருத்திற் கொண்டு வித்துவான் பதில்களில் மாற்றங்கள் செய்துள்ளீர்கள். உதாரணமாக முதலிரவு அனுபவம், முதல் முத்த அனுபவம் போன்ற கேள்விகளுக்கு தாங்கள் வழங்கிய பதில் மிகச்சிறப்பானது. எவ்வித விரசமான கேள்விக்கும் கண்ணியமாகப் பதில் வழங்கினால் அவ்வாறான கேள்வி கேட்பவர் கூட தன்னை மாற்றிக் கொள்ளக்கூடும். இவ்வாறான மாற்றத்திற்கு மனமார்ந்த நன்றிகள்.

நாம் சஞ்சீவியை பட்டுச்சேலை உடுத்தி, பூச்சூடி, பொட்டிட்டு துலங்கும் மகாலட்சுமி போன்ற இல்லத்தரசியாகத்தான் பார்க்க விரும்புகிறோம். வெறும் அங்கங்களைக் காட்டும் கவர்ச்சி நடிகையாக அல்ல.

நான்கு சுவர்களுக்குள் நடக்கும் புனிதமான - தாம்பத்திய - உறவையும் குடும்ப வாழ்வையும் வெட்ட வெளிச்சமாகக் காட்டும் வெள்ளைக்கார நாகரீகம் எமக்கு வேண்டாம். கண்ணியமான, நாகரீகமான பேச்சையும் எழுத்தையுமே நாம் வேண்டுகிறோம்.

சொல்லுங்கள்! கண்ணியமான வார்த்தைகளால் சொல்லுங்கள்!!

எழுதுங்கள்! நாகரிகமான எழுத்துக்களால் எழுதுங்கள்!!

உங்களை 21ஆம்நூற்றாண்டின் எதிர்கால சந்ததியும் நாடும் போற்றும்.

**பளை. க.கனகசிங்கம்.**

# புத்தாயிரமாம் ஆண்டில் முதலில் நுழையும் குட்டி நாடு டோங்கா!

உண்மையிலேயே நாம கொடுத்து வைத்தவர்கள்தான். முற்றிலும் புதிய தொரு நூற்றாண்டினோடு கைகுலுக்கும் வாய்ப்பினைப் பெற்றுள்ளோம்.

'கம்பியூட்டர்', 'சாட்டிலைட்', 'இன்டர்நெட்' என்று உலகையே உள்ளங்கையில் சேர்த்துவிட்டு, விரைவில் விடைபெறவிருக்கின்றது 20ஆம் நூற்றாண்டு. இந்த நூற்றாண்டின் கண்டுபிடிப்பான கம்பியூட்டருக்குச் சவால் விடுத்தபடியே வருகிறது 21 ஆம்நூற்றாண்டு. என்றாலும் அதனை அத்தனை சவால்களோடும் மகிழ்வோடும் எதிர்கொள்ள மனித குலம் தயாராகி வருகின்றது.

ஆனால் இந்தக் கோதாவில் எல்லாம் இறங்காத - இதைப் பற்றி எல்லாம் பெரிதாக அலட்டிக் கொள்ளாத - குட்டி நாடு ஒன்றுக்குத் தான் 21 ஆம் நூற்றாண்டை முதன் முதலில் கைகுலுக்கும் யோகத்தை வழங்கியுள்ளது இயற்கை.

அதென்ன புத்தாயிரம் ஆண்டில் கூடவா முந்திப் பிந்தி என்று புருவத்தை உயர்த்துகின்றீர்களா?

புத்தாயிரமாம் ஆண்டின் முதல் நாளில் சூரியனை முதலில் தரிசிக்கும் நாடு இதுதான்.

சர்வதேச நேர அளவான கிறின்விச் கணக்குப்படி ஒரு நாள் மாற்றத்தின் தொடக்கம் ஆரம்பமாவது இந்தக் குட்டி நாட்டில்தான்

இந்த யோகத்தை பெற்றுள்ள நாட்டின் பெயர் 'டோங்கா'. பசிபிக் பெருங்கடல் பகுதியில் அமைந்தள்ள 169 எரிமலைத் தீவுகளைக் கொண்டுள்ள குட்டி நாடு. ஒரு லட்சத்து ஐயாயிரத்து அறுநூறு இதன் மக்கள் தொகை. இதன் பரப்பளவு 750 சதுர கிலோ மீற்றர்.

நேபாளத்தைப் போன்று இங்கும் நாட்டின் தலைவராக மன்னர் இருக்கிறார். நாடாளுமன்றமும் உண்டு. அரசின் தலைவர் பிரதமர். தலை நகர் நுகு[illegible]

இக் குட்டிநாடு [illegible] தான் நாள் கடத்தி வந்தது. 21ஆம் நூற்றாண்டினோடு முதல் முதலில் கைகுலுக்கும் யோகத்தை இந்நாடு பெற்றுள்ளது என்பது தெரிந்த உடனேயே உலகின் பார்வை இக் குட்டி நாட்டின் மீது படரத்தொடங்கிவிட்டது. உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பணக்காரர்கள் அடுத்த நூற்றாண்டை முதலில் தரிசிக்க 'டோங்கா'வில் உள்ள பெரிய ஹோட்டல் அறைகளை பதிவு (ரிசர்வ்) செய்து விட்டனர். பதிவு செய்யக் காத்திருப்போரின் பட்டியல் வேறு வெகு நீளமாக நீண்டு கொண்டேபோகிறது.

**ஜெ.உமாபதி.**

டோங்காவின் முக்கிய வருமானத்தில் ஒன்று சுற்றுலா என்றாலும் வரும் சுற்றுலாப் பயணிகளின் சுமையை நாடு தாங்குமா? என்பது நாட்டின் தலைவரான மன்னர் நான் காவது தவ். .பா அகாவு து.'.புவும் பிரதமரான [illegible]வும் சந்தித்ததுத் திட்டமிட்டு வருகின்றனர்.

வரும் வெளிநாட்டுப் பயணிகளை வெறும் பயணிகளாக மட்டுமே நடத்தாமல், புத்தாண்டை தரிசிக்க வருவதால் அவர்களை விருந்தாளியாகப் பாவிக்க அரசு முடிவெடுத்துள்ளது: நாட்டில் உள்ள அனைத்து மக்களும் பயணிகளுக்கு உதவவேண்டும் என்ற பிரகடனம் கூட வெளியிடப்பட்டுவிட்டதாகத் தகவல்கள் வெளியாகின்றன.

'டோங்கா' நாட்டில் உள்ள 169 தீவுகளில் 45 தீவுகள் பயனற்றவை. மேலும் நாட்டில் மொத்தம் 7000 கார்கள்தான் உள்ளன. இவற்றைக் கொண்டு எப்படிச் சமாளிப்பது? புதிதாகக் கார் வாங்கினால் பின்னர் அவற்றை என்ன செய்வது? போன்ற சிந்தனைகள் வேறு டோங்கா அரசைப் பரபரப்பில் ஆழ்த்தி உள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

இதில் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால் இப்படி ஒரு யோகம் தங்களுக்கு வாய்த்திருப்பதை வெளிநாட்டினர் கண்டுபிடித்த பின்னரே டோங்கா மக்கள் தெரிந்துகொண்டனராம்.

அது சரி. இங்கு நாம் எப்போது 2000 ஆண்டோடு கைகுலுக்குவோம்? என்று நீங்கள் கேட்பது காதில் விழுகிறது. 'டோங்கா' மக்கள் தரிசித்து 7 மணி நேரம் கழித்து - ஒரு சனிக் கிழமை 01.01.2000 நம்மைத் தொட்டுப் பர வசப்படுத்தும்.

புத்தாயிரம் ஆண்டு பிறக்கும் தினத்தன்று 'சஞ்சீவி'யும் உங்கள் கைகளில் தவழும் என்பது சஞ்சீவி வாசகர்களுக்கு ஓர் இனிப்பான செய்திதானே! *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனையை அடக்கிய அரியாத்தைகள் இந்தக் காலத்திலும் இருக்கின்றார்களா?

**திருநெல்வேலி. ப.வரதன்.**
மழை பொழிகிறது. வேறு வழியின்றி இளம் பெண் காத்து நிற்கிறாள். ஆபத்துக்குப் பாவம் இல்லை என்று கருதி ஒரு குடையில் கூட்டிச் செல்லலாமா?
**❁ஆம். எப்படி என்றாலும் நனையாமல் சென்றால் சரி!**

**கட்டுடை. எஸ்.ஸ்ரீ.**
குடும்பத்தில் பரஸ்பர அன்புக்கும் சிரிப்புக்கும் தொடர்பு உண்டா?
**❁உண்டு. ஆரம்பத்தில் அவன் புன்னகையில் அவள் மயங்கினாள். அவனோ அவள் (புன்)நகையில் மயங்கினான். திருமணத்தின்போது இருவரும் புன்முறுவல் பூத்தனர். பின்னர் முறுவல் முறுகல் ஆகியது. இப்போது அவர்களைப்பார்த்து அயலவர்கள் சிரிக்கின்றார்கள்.**

**நெல்லியடி. குண்டுமணி.**
அறுபது வயதுக் கன்னியரும் கையில்லா உடைகள், மினிஸ்கேட்டுக்கள் அணிகின்றார்களே?




**❁'உலகக் கிழவி' போட்டிக்குத் தயாராகுகின்றார்கள் போலும்.**

**ஓட்டுமடம். க.சிந்துஜா.**
அந்தக் காலத்தில் ஆனையை அடக்கிய அரியாத்தைகள் இருந்தார்கள். இந்தக் காலத்தில்.....?
**❁அங்குசத்தின் பிடி எந்தக்காலத்திலும் அவர்களிடம்தான்.**

**அரியாலை. பரணி.**
பெண் பார்க்கப்போன எனது நண்பனுக்கு வடை, வாழைப்பழத்துடன் வரவேற்பு அளித்தார்களே....?
**❁குறியீட்டு நாடகம், குறியீட்டுச் சிறுகதை போல இது குறியீட்டுப் பலகாரம் என்று வைத்துக்கொள்ளுங்களேன்!**

**அல்வாய். சிவாஜி.**
உருட்டுக் கட்டையால் உருட்டிய அனுபவம் உண்டா?



**❁உருட்டப்பட்ட அனுபவம் உண்டு!**

ஒழுங்கையில் நிற்கும் காதலர்களைக் கண்டிக்கின்றீர்களே! உங்களுக்குக் காதல் என்றால் என்ன அலர்ஜியா?
**❁நாய்களின் காதலுக்குத்தான் சந்தியும் ஒழுங்கையும். மனிதக் காதல் ஒழுங்கைக் காதலாக இல்லாமல் ஒழுங்குக் காதலாக இருக்க வேண்டும்!**

**உடுவில். தவம்.**
காதலித்து காணாமல் (ஓடிப்) போகின்ற காதலர்களை, மூன்று, நான்கு நாட்களில் பெற்றோர் தேடிப்பிடித்து பிரித்து வைக்கின்றார்களே....!
**❁இந்தக் காலத்துக் காதலர்கள் மூன்று, நான்கு நாள்கள் ஒன்றாக இருக்கத்தானே ஓடுகின்றார்கள். பின்னர் கொஞ்சக்காலத்துக்கு மூன்றுநாள் பிரச்சினை இல்லாமல் போய்விடுகிறதே!**

**அச்சுவேலி. ம.சுரேஸ்.**
எனது மனைவி என்னை அடிக்கடி புகழுகிறாளே?
**❁'சோழியன் குடுமி சும்மா ஆடாது!' எதற்கும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.**

**சண்டிலிப்பாய். வளர்மதி.**
ஊடல். பின் கூடல். இது சிறக்க எது அவசியம்?
**❁உடல்.**

**அச்செழு. க.பிள்ளை.**
'இனம இனத்தைச சேரும்' என்கின்றார்களே. இதனை விளக்க மேலும் பழமொழிகள்உண்டா?
**❁'பெண் என்றால் பேயும் இரங்கும்' என்பது இதன் அடிப்படையில்தானோ?**

**சுன்னாகம். ச.அனிதா.**
வித்துவான் ஸேர்! கல்வி சுமையானதா? அல்லது சுவையானதா?



**❁இன்று சிறுவர்கள் சுமக்கும் புத்தக மூடையைப் பார்த்தால் சுவையான கல்வி சுமையாகிவிடுமோ? என்று அச்சமாக இருக்கின்றது.**

**நல்லூர். எஸ்.சுயாதா.**
புகுந்தவீடு சென்றதும் பிறந்த வீட்டை சில பெண்கள் மறந்து விடுகின்றார்களே?
**❁'புகுந்த' வீட்டு மகாத்மியம் அப்படி!**

**உரும்பிராய். றமேஷ்.**
எனது மனைவிக்கும் எனக்கும் இடையே பிரச்சினை இருக்கின்றதே. என்ன செய்யலாம்?
**❁உங்கள் குழந்தையைத்தானே சொல்கின்றீர்கள். தாலாட்டித் தூங்க வைத்துவிட்டுத் (தூ/துட)ங்க வேண்டியதுதானே!**


**யாழ். கண்ணன்.**
விமான டிக்கெட் பெறுவதிலும் லஞ்சம் தலைதூக்கியுள்ளதே!

# இளம் பெண்ணை ஒரே குடையில் கூட்டிக் கொண்டு செல்லலாமா?

**அராலி. கனகேஸ்.**
பழையகாலத் திருமணப்பேச்சின்போது ஏழு செருப்புத் தேயுமாம் என்கின்றார்களே. உண்மையா?
**❁அந்தக் காலத்தில் ஆழம் பார்க்காமல் காலை விடுவதில்லை!**

**நாவலடி. ம.பத்மா.**
மினிஸ்கேட்டுக்களைக் கண்டிக்கின்றீர்கள். சேலை கட்டிய பெண்கள் சைக்கிளில் செல்லும் போது காற்று சில்லெடுப்பதை நீங்கள் காணவில்லையோ?
**❁மினிஸ்கேட்டுக்கள் காற்று இல்லாமலேயே சில்லெடுப்பதை நீங்கள் உணரவில்லையோ?**

**சாவகச்சேரி. கலாமதி.**




**❁பால்குடிக்கும் பிள்ளைகூட கையில் காசு தந்தால்த்தான் பால்குடிப்பேன் என அடம் பிடிக்கும் காலம் இது. முறைப்பாடுகளை வாங்குவதற்குக் கூட 'கிம்பளம்' கேட்பதாகக் கேள்வி. இது புரியாமல் இருக்கின்றீரே நீர்?**

**சாவகச்சேரி. நிஷா.**
ஆண்களை நாய்கள், பேய்கள் என்று அழைக்கின்றார்களே சரியா?




**❁இந்தச் செல்லமான வீட்டுப் பெயர்களுக்கு மேலதிகமாக ரவுடி, குண்டன், தடிக்கழுதை, தடிமாடு, விசரன், பேயன் என்று நீண்ட அர்ச்சனைக்குரிய நாமவளியே உண்டு. உமக்கு அது தெரியாதா?**

**வடமராட்சி. பாஸ்கரன்.**
காவி உடை, சொகுசுக் கார், ஆடம்பர ஆச் சிரமங்கள், காமக்களியாட்டங்கள்... இந்தச் சாமிகள் முற்றிலும் துறந்தவர்களா?
**❁தாங்களும் துறந்து, தங்கள் பக்தைகளையும் துறக்க வைக்கும் இவர்களை, 'துறந்த' நிலையில் வீதிகளில் துரத்தித் துரத்திக் கலைக்கவேண்டும்.**

**திருநெல்வேலி. பிரசாந்தி.**
இரண்டாயிரமாம் ஆண்டளவில் பெண்களின் உடை எப்படி இருக்கும்?
**❁'ஏவாள் ஸ்டைல்' ஆகிவிடுமோ என்று அச்சமாக இருக்கின்றது!**

**அரியாலை. சுரேஷ்.**
தமிழ்க்கட்சி ஒன்று அறிக்கைகள், கண்டனங்கள் விடுவதில் கின்னஸ் சாதனை படைக்கும் போல் இருக்கின்றதே?
**❁தமிழ்க்கட்சி 'ஒன்று' என நீர் கூறுவதைப் பார்த்து மற்ற தமிழ்க்கட்சிகளுக்குக் கோபம் வரப்போகின்றது மிஸ்டர்!**

**நவாலி. பிரதீபன்.**
தந்தையைக் காட்டிலும் தாயிடம் குழந்தைகள் அன்பாக இருப்பது ஏன்?
**❁தந்தையைக் காட்டிலும் தாயின் அறிமுகம் பத்துமாதம் அதிகம் அல்லவா?**

# வித்துவான் பதில்கள்

**சங்கானை. கணேஷ்.**
சந்ததி விருத்தியில் சாதனையாளர் யார்? ஆணா? பெண்ணா?
**❁அந்தப்புரம் சரியாக இருந்தால் ஓர் ஆண் ஒரு வருடத்தில் ஒன்றென்ன நூறு பிள்ளைக்கே தந்தையாக முடியும். ஆனால் தாயால் ஒருவருடத்தில் ஆகக் கூடியது எத்தனை பேருக்குத் தாயாக முடியும்? எனவே சாதனையாளன் ஆண்தான்!**

**மானிப்பாய். திலீபன்.**
வீதியில் அடிக்கடி காணும் ஒரு பெண்ணைப் பார்த்து என் மனம் ஏங்குகின்றதே.....!
**❁கண்ணோடு காண்பதெல்லாம் தலைவா கண்களுக்குச் சொந்தமில்லை.**

**நவாலி. தீபன்.**
துன்பம் - சோகம்: என்ன வித்தியாசம்?
**❁காதலில் தோல்வி - சோகம்**
**காதலில் வெற்றி - துன்பம்.**

**மானிப்பாய். தீப்.**
இசகு, பிசகு படம் போடுவதில் நீர் கில்லாடியாமே! உண்மையா?
**❁நான் என்ன மினிசினிமாவா நடத்துகிறேன்?**

**மானிப்பாய். எஸ்.ஜெயா.**
பெண்களை ஏறெடுத்துப் பார்க்காத என் நண்பன் இப்போது அடிக்கடி ஒரு பெண்ணின் பெயரையே உச்சரித்து அர்ச்சனை செய்து கொண்டிருக்கிறான். என்ன செய்யலாம்?
**❁திருமணம் முடித்துக் கொடுத்தால் அந்த வீட்டிலேயே பூசாரியாகி விடுவாரே!**

**வண்ணை. பிரசாந்த்.**
பெண்கள் அணியும் ஆடைக்கும் கற்புக்கும் தொடர்பு ஏதும் உண்டா?
**❁கற்பு, வெறும் 'கவுண்' அல்ல; அது 'கவசம்'.**


**துறையூர். ஜெஸ்ரின்.**
"மாமா" வேலை பார்க்கும் தாதாக்கள் குறித்து.....?
**❁'மாமியார்' வீட்டுக்குப் போய் வந்தாலும் அவர்கள் திருந்தப்போவதில்லை.**

**ஊரெழு. குமணன்.**
மைடியர் வித்துவான்! அலரி மாளிகைக்கும் வெள்ளைமாளிகைக்கும் ஒற்றுமை என்ன? வேற்றுமை என்ன?
**❁அது வந்து..... நமக்கேன் வம்பு?**

**அச்சுவேலி. கிறிஸ்ரி.**
சிரிப்பின் சிறப்பு என்ன?
**❁அது பல நோய்களுக்கு மருந்து. அத்தோடு அதை விலை கொடுத்துத்தான் வாங்கவேண்டும் என்பதல்ல.**

**அரியாலை. அகிலன்.**
நல்லூர் வீதிக் காப்புக் கடைகளில் பெண்களுக்குப் பதிலாக ஆண்கள் நிற்கின்றார்களே. ஏன்?
**❁கொழுவி விடத்தான் ( காப்பைச் சொன்னேன் ).**

**அல்வாய். சுதாகரன்.**
ஒரு குடும்பத்தில் ஆனைபோல் மனைவியும் பூனைபோல் கணவனும் இருந்தால் எப்படி இருக்கும்?



**❁மதில்மேல் பூனையாக இருந்து கொண்டு 'ஆனைக்கொருகாலம் வந்தால் பூனைக்கொரு காலம் வரும்' என்று ஆதங்கப்பட்டுக்கொண்டிருக்க வேண்டியதுதான்!**

## இவ்வார ஜோக்

அவர் ஒரு வயதில் முதிர்ந்த பிரமுகர்; பிரமச்சாரி; எப்போதும் கையில் Walking Stick வைத்திருப்பார். அதிகமாகக் குழந்தை பெறுபவர்களைக் கண்டால் அவருக்குப் பிடிக்காது.

ஒரு நாள் பக்கத்து வீட்டுக் குடும்பத்துடன் ஓரிடத்துக்குப் போக வேண்டிய தேவை ஏற்பட்டது. பக்கத்து வீட்டுக்கார நண்பர், மனைவி, நான்கு பிள்ளைகள் ஆகியோருடன் பிரமுகர் பஸ்தரிப்பு நிலையத்துக்கு வந்தார்.

முதல் பஸ்ஸில் ஆறு ஆசனங்களே காலியாக இருந்தன. அதனால் அதில் பயணிக்க முடியவில்லை. அடுத்த பஸ்ஸில் ஐந்து ஆசனங்களே இருந்தன. அதன்பின் வந்த எந்த பஸ்ஸிலும் ஏழு ஆசனங்கள் காலியாகவிருக்கவில்லை. நேரம் போய்விட்டதால் வேறு வழியின்றி 7 பேரும் நடக்கத் தொடங்கினார்கள்.

பஸ்ஸில் இடம் கிடைக்காதது பிரமுகருக்கு எரிச்சலைத் தந்தது. எனவே மரத்தினாலான தன் கைத்தடியை நிலத்தில் தட்டியவாறு அவர் நடந்து கொண்டிருந்தார். அது 'டக் டக்' என்று சத்தம் எழுப்பியபடி இருந்தது. பஸ் கிடைக்காதது நண்பருக்கும் எரிச்சல்தான். அத்தோடு இந்த 'டக், டக்' சத்தம் வேறு. அவர் எரிச்சலுடன் பிரமுகரைப் பார்த்துக் கேட்டார்.

"ஐயா! இந்தத் தடியில் ஒரு இறப்பரை மாட்டக்கூடாதா? மாட்டியிருந்தால் சத்தம் வராதே!"

பிரமுகர் சீற்றத்துடன் பதில் கூறினார் :-

"நீ உன்னுடையதில் ஏற்கனவே அதைச் செய்திருந்தால் எமக்கு இன்று பஸ் கிடைத்திருக்குமே!"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வருக! வருக! 2000!

21 ஆம் நூற்றாண்டு விரைவில் பிறக்கின்றது. இருபது நூற்றாண்டுகள் கழிந்திருந்தாலும் சமீபத்திய 150ஆண்டுகள்தான் மனித குலத்தின் முன்னேற்றத்தில் ஆழமான, அடர்த்தியானபங்கு வகித்திருக்கிறது. குறிப்பாக, அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சி இருபதாம் நூற்றாண்டின் ஒவ்வொரு பக்கத்தையும் துரிதமாக நிரப்புவதற்கு வழிவகுத்திருக்கிறது. அடுத்த நூற்றாண்டில் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு பொழுதும்கூட புதிய வரலாறு படைக்கப்படலாம். மனிதகுலத்தின் அசுர வேக வளர்ச்சி இதையும்விட நமக்கு ஆச்சரியத்தையும் அதிசயத்தையும் தரக்கூடும்.

இதுவரை வரலாறு என்பது, அதற்கென்றே தயாரானவர்கள் தேடிப் பிடித்து சேகரித்து, அவர்கள் விருப்பத்திற்கேற்ப தொகுத்தளிப்பதாகத்தான் இருந்தது. இனி அது சாத்தியமில்லை. உட்கார்ந்த இடத்திலிருந்து கம்பியூட்டர்கள் உதவியுடன் ஒருசிலரே உலக வரலாற்றை முறைப்படி பதிவு செய்துவிட முடியும். அடுத்த தலைமுறை வரலாற்றின் சாதாரண நிகழ்வுகளைச் சேகரிப்பதற்குக்கூட அல்லற்படும் அவஸ்தை இருக்காது. தேடல் என்பது ஆய்வாளர்களுக்கு மட்டுமான வேலையாக இருக்கும். அவர்களின் தேடலும் எளிதாகும். தகவல் தொழில்நுட்பப் புரட்சியும் அதன் விளைவாகக் கிடைத்த இன்ரநெற்றும் உலகின் அடையாளத்தையே முற்றிலும் மாற்றிவிட்டன. உண்மையில் இந்த நூற்றாண்டு அடுத்தநூற்றாண்டுக்கு அளிக்கும் மிகப்பெரும் கொடை, இன்ரநெற்றாகத்தான் இருக்க முடியும்.

அதேபோல அடுத்த நூற்றாண்டில் இன்னொரு பெரிய மாற்றமும் நிகழப்போகிறது. தகவல்களை மறைத்து வைத்து அல்லது பதுக்கிவைத்து அல்லது கிடைக்கவிடாமல் செய்து, யாரும் யாரையும் பின்தள்ளிவிட முடியாது. உலகின் ஒவ்வொரு அசைவும் இன்ரநெற் மூலம் எல்லாமனிதர்களுக்கும் பரிமாறப்படும். கேபிள் டி.வி.க்களில் நூற்றுக்கணக்கான சானல்கள், ஒலிம்பிக் போட்டி, நோபல் பரிசளிப்பு அல்லது ஒஸ்கர் விருது - எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் உலகின் எந்த மூலையிலும் இருந்தவாறு அப்படியே பார்க்க முடியும். உலக நடப்புகளை முன்னைவிட விரைவாக, பெருந்திரளானவர்கள் அறியமுடிகிறது. ஒருவர் கதையளப்பது.... இன்னொருவர் வியப்பது என்பதெல்லாம் நடக்காது. அப்படியே யாராவது ஒருவர் அளந்தாலும், வெகுசீக்கிரத்தில் அவர் அம்பலப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். சுருக்கமாகச் சொன்னால், தகவலும் தகவல் சார்ந்த பிரக்ஞையும்தான் அடுத் நூற்றாண்டில், மனித வாழ்வின் வெற்றிக்குச் சூத்திரமாக அமையும் என்பதே நமக்குக் கிடைக்கும் புதிய செய்தி.

இன்ரநெற்றில் 21ஆம் நூற்றாண்டை ஒட்டி நாள்தோறும் புதுப் புதுத் தகவல்கள் அமைக்கப்படுகின்றன. நினைத்தமாத்திரத்தில் தகவல்கள் கைவசமாவதுதான், அடுத்த நூற்றாண்டைப் பற்றிய பிரம்மாண்டமான கனவுகளைப் கிளப்பிவிட்டிருக்கிறது.

சாதி - மத, அரசியல், வன்முறை வெறியாட்டம் என்று சுயலாபத்துக்காகப் பலசக்திகள் வரலாற்றைப் பின்னோக்கித்தள்ளும் முயற்சியில் இருப்பது ஒருபுறமிருக்க, இன்னொருபுறம் பல்வேறு அறிஞர்களும் ஆய்வாளர்களும் வரலாற்றை முன்னோக்கி நகர்த்தும் தொலைதூரக் கண்ணோட்டத்துடன் இயங்கி வருகிறார்கள். இந் நோக்கில்தான் அடுத்த நூற்றாண்டை வரவேற்கும் பிரம்மாண்டமான முயற்சியில் பிரிட்டன் இறங்கியிருக்கிறது.

கிறின்விச் என்ற இடத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். GMT என்று சொல்கிறோமே.... சர்வதேச நேரம், அங்குதான் கணக்கிடப்படுகிறது. லண்டன் அருகேயுள்ள இடம் அது. சர்வதேச நேரப்படி, அடுத்த நூற்றாண்டு ஆரம்பமாவதும் அதை மையமாக வைத்துத்தான் கணக்கிடப்படுகின்றது.

அதைக் கருத்தில் கொண்டு உலகமே வியக்கும் வகையில் நூற்றாண்டு அரங்கத்தை (Millennium Dome) கிறின்விச்சில் பிரிட்டன் அமைத்து வருகிறது. (நூற்றாண்டு அரங்கம் என்பதைவிட யுக அரங்கம் என்பதுதான் மிகச் சரியாக இருக்கும்.) அடுத்த ஆண்டு ஜனவரியிலிருந்து கோடிக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் இங்கு வந்து செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிரான்ஸ் நாட்டின் 'ஈபிள் டவர்' போல, இந்த அரங்கமும் உலகப் பெரும் சின்னமாகத் திகழும் என்று சர்வதேச நோக்கர்கள் கருதுகின்றனர்.

மூன்றாண்டுகளுக்கு முன்புதான் பிரிட்டன் அரசுக்கு இத்தகைய யோசனையே வந்தது. உடனடியாக அதற்கென பிரத்தியேகக் குழு அமைக்கப்பட்டது. இந்த நூற்றாண்டு அரங்கத்தை அமைத்து, தொடர்ந்து பராமரிப்பது மட்டுமன்றி - வர்த்தக நோக்கில் லாபகரமாக நடத்தவும் முடிவு செய்யப்பட்டது. இதற்காக ஒரு தனி நிறுவனமே (New Millennium Experience Company Ltd.,) உருவாக்கப்பட்டது. பிரிட்டன் அரசும் பல பன்னாட்டு நிறுவனங்களும் இணைந்தளித்த நிதியுதவியில் இந்நிறுவனம் உதயமானது. பிரிட்டன்,அரச 'லாட்டரி' மூலம் கிடைக்கும் வருவாயிலிருந்தே பெருந்தொகையை இத்திட்டத்துக்காக அளித்திருக்கிறது.

சுமார் 6000 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டம், தங்கள் நாட்டின் தொலைநோக்குக் கண்ணோட்டத்தை உலகுக்குப் பறைசாற்றுவதாக இருக்கும் என்று பிரிட்டன் தலைவர்கள் கருதுகின்றனர்.

இந்த நூற்றாண்டின் தலைசிறந்த அறிவியல் - தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகள், சாதனைகள், சாதனங்கள் எனப் பல்நோக்கில் அமைக்கப்படும் கண்காட்சி, இந்த அரங்கத்தின் சிறப்பு அம்சம். பார்வையாளர்களுக்குக் களிப்பூட்டும் வகையிலும், பிரமிப்பூட்டும் விதத்திலும் அதே நேரத்தில் அறிவுபூர்வமான விஷயங்களை அள்ளித்தரும் நோக்கிலும் மனித குலத்துக்கான மாபெரும் விருந்தாக இந்த அரங்கம் தயாராகி வருகிறது. இந்த அரங்கத்தின் மேற்கூரைதான் உலகிலேயே மிகப்பெரிய கூரையாக (80,000 சதுர மீற்றர்) இருக்குமாம்.

மூன்று பக்கம் தேம்ஸ் நதிசூழ அமைந்துள்ள கிறின்விச்சின் வடக்குப் பகுதியில், 18 ஏக்கர் பரப்பளவில் இந்த நூற்றாண்டு அரங்கம் உருவாகி வருகிறது. 1400 இல்லங்களை உள்ளடக்கிய 21 ஆம் நூற்றாண்டுக் கிராமமும் (Millennium Village) நிறுவப்பட்டுவருகிறது. லண்டனிலிருந்து இந்த அரங்கத்துக்குச் செல்லப் பாதாளரயில் போக்குவரத்து வசதியும் உண்டு. தேம்ஸ் நதியோரமாக... இயற்கையை ரசித்தவாறே 21ஆம் நூற்றாண்டு நோக்கிப் பயணமாகலாம். சைக்கிள் ஓட்டிகளுக்கும் பாதசாரிகளுக்கும்கூட தனித் தனிப் பாதைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

பாதாள ரயிலில் செல்வதென்றால், லண்டனிலிருந்து 12 நிமிஷங்களில் இந்த அரங்கத்தை அடைந்து விடலாம். ஒரு மணி நேரத்துக்கு 22,000 பேர் செல்லும் வகையில் ரயில் போக்குவரத்து தாராளமாக்கப்படுமாம். அரங்கத்துக்குச் செல்வதற்கென தேம்ஸ் நதியில் படகுப் போக்குவரத்தும் உண்டு. உலகின் 390 நகரங்களிலிருந்து ஏற்கனவே லண்டனுக்கு விமானப் போக்குவரத்து வசதி இருக்கிறது.

"இவ்வுலகம் காணும் இன்னொரு புதிய உலகமாக - இந்த யுக அரங்கம் அமையும்" என்று பிரிட்டன் பிரதமர் டோனி பிளேயர் பெருமிதத்துடன் கூறியிருக்கிறார்.

* * *

புரட்சிகரமான அடுத்த நூற்றாண்டுக்கு கவலைகளையும் கணிசமாகச் சேர்த்து வைத்திருக்கிறோம். பாலஸ்தீனப் பிரச்சினையிலிருந்து ஈழத்தமிழர் பிரச்சினை வரை மனிதகுலத்தின் சுமுகமான வாழ்வுக்கு வேட்டு வைக்கும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அடுத்த நூற்றாண்டு பதில் சொல்லியாக வேண்டும். புயல், வெள்ளம், நிலநடுக்கம் போன்ற இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் பேரழிவுகளைத் தடுப்பது எப்படி? எய்ட்ஸை விரட்டுவது எப்படி? 'மனித நகலாக்கம்' (Human Cloning) என்ற விஞ்ஞான விபரீதத்தைத் தவிர்ப்பது எப்படி? அணு ஆயுத ஆபத்துகளை ஒழிப்பது எப்படி? வளர்ச்சி பெற்ற நாடுகளின் அப்பட்டமான சுரண்டிலிலிருந்து வளரும் நாடுகள் மீள்வது எபப்டி....? இப்படிப் பல கேள்விகளுக்கும் அடுத்த நூற்றாண்டு பதில் சொல்லியே தீர வேண்டும்.

எதிர்பார்ப்புகளும் நம்பிக்கையும் இன்றி ஏது வாழ்க்கை?

நெஞ்சம் நிறைய வரவேற்போம். வருக 2000.

*

## விழுப்புரம் சம்பவம்....

(III ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைகூடவில்லை. ஆனால் மற்றும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் பிரதமர் பதவியை ஏற்கத் தயாராக இருப்பதாக 85 வயது நிரம்பிய மேற்கு வங்காள முதல்வர் ஜோதிபாஸு தற்பொழுது தெரிவிக்கிறார்.

எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் பாரதீயஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியோ அல்லது காங்கிரஸோ அரசு அமைக்க முடியாது போனால் ஜோதிபாஸு தலைமையிலான மூன்றாவது அணி ஒன்று அரசு அமைக்கும் முயற்சியில் ஈடுபடும் என்று ஊகம் தெரிவிக்கப்படுகிறது. மூன்றாவது அணி அமைப்பது தொடர்பாக சரத்பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ், முலாயம்சிங் யாதவ் தலைமையிலான சமாஜவாதிக்கட்சி ஆகியவை உட்பட பல்வேறு கட்சிகளுடன் இடதுசாரிக் கட்சிகள் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றன. மூன்றாவது அணியை உருவாக்குவது மூலம் மற்றொரு தேர்தல் வருவதை தவிர்க்க முடியும் என்று ஜோதிபாஸு கருதுகிறார்.

### மக்களவைக்கு நிரந்தர பதவிக்காலம்

அடிக்கடி தேர்தல்கள் நடைபெறுவதால் கோடிக்கணக்கான ரூபாய்கள் வீணாவதைத் தடுக்க மக்களவைக்கு நிரந்தர பதவிக் காலத்தை நிர்ணயிக்க வேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சி வலியுறுத்தி வருகிறது.

இந்தியாவில் ஒரு தடவை தேர்தல் நடத்த ஆயிரம் கோடி இந்திய ரூபா அரசுக்கு செலவாகிறது. வேட்பாளர்கள், கட்சிகளின் செலவு வேறு.

கடந்த பத்து ஆண்டுகளில் 5 தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. அடிக்கடி தேர்தல் நடைபெறுவதால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி குன்றுகிறது. நாட்டில் சட்டம், ஒழுங்கு பாதிக்கப்படுகிறது. சர்வதேச அரங்கில் நாட்டின் பெருமை குலைகிறது.

ஓர் அரசைக் கவிழ்ப்பதாக இருந்தால் கவிழ்ப்பதற்கு முன் கவிழ்க்கும் கட்சிகள் மாற்று ஏற்பாடு குறித்து போதிய ஆதாரங்களுடன் அறிவிக்க வேண்டும் என்ற நடைமுறை சில மேலை நாடுகளில் இருப்பதாகப் பாரதீய ஜனதாக்கட்சி தெரிவிக்கிறது.

### மின்னணு வாக்குப் பதிவு

இந்த முறை தமிழகத்தில் நான்கு தொகுதிகளில் மின்னணு வாக்குப் பதிவு நடைபெற உள்ளது. தென் சென்னை, மத்தியசென்னை, மதுரை, கோவை ஆகியவையே இந்த நான்கு தொகுதிகளும் ஆகும். இந்த நான்கு தொகுதிகளிலும் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு தமது தேர்தல் பிரசாரங்களின் போது மின்னணு வாக்குப் பதிவு குறித்து வாக்காளர்களுக்கு விளக்கம் அளிக்கும் மற்றொரு சுமையும் சுமத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் இந்தியா முழுவதும் 46 தொகுதிகளில் மின்னணு வாக்குப் பதிவு நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

ஏற்கனவே ராஜஸ்தான், கோவா, டில்லி மாநிலங்களில் மின்னணு வாக்குப் பதிவுமுறை வெற்றிகரமாகச் செயற்படுத்திப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தேர்தல் அதிகாரிகள் மின்னணு வாக்குப் பதிவு குறித்து விளக்கப்படங்களையும் செய்திப் படங்களையும் தயாரித்து பொதுமக்களுக்குப் போட்டுக்காட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மின்னணு இயந்திரத்தை எப்படி இயக்குவது என்பதை வாக்காளர்கள் தெரிந்து கொள்வதற்காக மிகப் பெரிய அளவில் சுவரொட்டிகள் அச்சிடப் பட்டுவருகின்றன.

இந்தியா போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பெரும் பணச் செலவை ஏற்படுத்தும் தேர்தல்களை அடிக்கடி சந்திப்பது ஜனநாயகத்துக்கு ஒரு சவாலாகவே கருதப்படுகிறது. *

## ஒரு மூங்கிற்........

(XVI ஆம்பக்கத் தொடர்ச்சி)

"சரி,சரி! மூன்றுபாடம் பாஸ் பண்ணீட்டாள்தானே! ..பைனாட்ஸுக்குப் போகட்டன்" அம்மாதான் சொல்லுறா. மௌனமாய் இதுவரை காலமும் நான் சேர்த்து வைத்திருந்த நடனக் கோலங்களை, வண்ணக் காட்சிகளை எடுத்துப்பார்க்கிறேன். நடராஜரின் நாட்டியத் திருத்தோற்றத்தில் பார்வை நிலைக்க ஏனோ கண்கள் நிறையக் கண்ணீர் நிறைகிறது.

எண்ணக்கரு:- **உயர்தரக் கல்விப் பாதைகளைத் தேர்வு செய்வதில் பெற்றோரின் பங்கு.**

## விடை


IX ஆம் பக்கத்தில் 'சிறுவர் சுடர்' பகுதியில் 'உங்களால் முடியுமா?' என்ற தலைப்பில் வெளியான புதிருக்கான விடை இதுதான்:-

**dog**

மூன்று எழுத்தை மூன்று ஆங்கில எழுத்துக்களாக மாற்ற ஆங்கிலத்தில் dog என்ற சொல் வரும் dog என்றால் நாய்தானே!

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.117



### சொற்சிலம்பம் இல. 117

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..........................................

விலாசம்: ..........................................

..........................................

..........இங்கே வெட்டுக..........

முடிவுத் திகதி:- 03-09-1999

### இடமிருந்து வலம்

1. யுத்தகளத்தில் உபதேசிக்கப்பட்டது. 7. உதயன்மீது வீசப்பட்டது. 8.பிழைக்காது. 10. உள்ளே தள்ளு. 11. வெற்றிலை, பாக்கு இத்யாதி. 12. சினம். 13. துணைவி. 14. கவ்வு. 15. சுவடு. 18. தாய். 19. மறி. 20.ஒரு சுவாசநோய். 22. அறுக்க உதவும் கருவி. 23. மூன்று புரங்கள். 24. ஒரு வள்ளல்.

### மேலிருந்து கீழ்

1. பிரிவு. 2. மறைத்து வைக்கும் குண்டு. 3. மறு. 4. இசைப்பாட்டு. 5. ஓரெழுத்து மாதத்தின் முக்கிய நாள். 6. திருப்தியைக் குறிக்கும் சொல். 9. சிறு பெண். 11. கறியை மணம், குணம் நிரம்பச் செய்ய அதற்கு இது செய்ய வேண்டும். 14. மிக வேகமாகச் செல்லுதல். 16. சிறுபறை. 17. தலையில் முடிவது. 18. வில்லுடன் சேர்ந்த கருவி. 19.தவத்தோன். 21. பிழை அல்ல.

### சொற்சிலம்பம் 115 இன் விடைகள

#### இடமிருந்து வலம்

1. அபிமன்யு. 5. சதா. 7. சரடு. 8. வதனம். 10. திதி. 11. அதிகம். 12. யுகம். 15. ஆபத்பாந்தவன். 16. காதலி. 17. ஈர. 18. கைது. 20.பல. 21.கைம்மை. 22. விலகும்.

#### மேலிருந்து கீழ்

1. அசதி. 2. பிரதியுபகாரம். 3. மடு. 4. யுவதி. 5. சனம். 6. தாம். 9. தகர்தல். 11. அம்பாலிகை. 13. கத்த. 14. தன்னலம். 17. ஈகை.19. துவி. 20. பகு.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

**முதலாம் பரிசு** :- தனபாலசிங்கம் ஜெகௌதன்,
'பொதிகை' பொற்பதி வீதி,
கொக்குவில்.

**இரண்டாம் பரிசு** :- வி.செல்வநாயகம்,
126.4 பலாலி வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

**மூன்றாம் பரிசு** :- செல்வன் பா.யதுகுலன்,
மூளாய் றோட்,
வட்டுக்கோட்டை.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50.00 |

புதிர்ப்போட்டி இலக்கம் 116 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக வழிபாட்டுக்கு சைவ நெறியில் இடமுண்டா?

**'நவக்கிரகங்களை வழிபடுவது சைவ நெறியுமன்று; சாத்திர உட்கிடக்கையுமன்று; ஆகம விதிகளுக்குமுற்றிலும் முரண் பட்ட ஒன்று.'**

தமிழகத்தில் இன்று காணப் பெறும் கோயில்கள் பல.

சிவன், விஷ்ணு, உமை, முருகன், விநாயகர் ஆகியவர்களை முழுமுதற் பொருளாகக் கொண்டு மக்கள் வழிபடுகின்ற முறையை இன்றும் காணலாம்.

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது ஆகியவர்களை முழுமுதற் கடவுள்களாகக் கொண்டு வழிபடும் முறை எங்கேயும் காணப்பெறவில்லை. அவர்களுக்குத் தனிக்கோயில்கள் இல்லை.

சூரியன் முதலிய ஒன்பது கோள்களும் சிவனை வணங்கி வழிபட்டார்கள் என்ற வரலாறு உண்டு. அவர்கள் சிவபரம்பொருளை வந்து வழிபட்டுப் பேறுபெற்றதன் அடையாளமாக அவ்வத் தலங்களில் அந்தந்த கோள்கள் அமைக்கப் பெற்றன.

பேராசிரியர்
**வை.இரத்தினசபாபதி**

நவக்கிரகங்களுக்குத் (ஒன்பது கோள்களையும் ஒன்றாகச் சேர்த்து வணங்கும் முறை) தனிக்கோயில் அமைக்கவோ, அவைகளுக்குச் சிவன், உமை, முருகன் போன்ற முழுமுதற் கடவுள்களின் திருக்கோயில்களில் வழிபாட்டுத்தலம் அமைக்கவோ சாத்திரத்தில் எங்கேயும் குறிப்பு இல்லை.

ஆகம முறைப்படி அமைக்கப் பெற்ற சிவாலயங்களில் நவக்கிரகக் கோயில் அமைப்பதற்கு ஆகமங்கள் எந்த ஓர் இடத்திலும் எந்த ஒரு குறிப்பையும் கூறவில்லை.

ஆகமங்களில் விதி கூறப்பெறதா நவக்கிரகங்களுக்குத் திருக்கோயில்களில் இடம் அமைத்துக் கொடுத்து, வழிபாட்டினையும் அமைத்துக் கொடுத்திருப்பது ஆகம முரண்பாட்டுச்செயல்.

திருமால் கோயில்களில் எங்கும் நவக்கிரக வழிபாட்டுத் தலம் அமைக்கப் பெறவில்லை.

தஞ்சை மாவட்டத்துத் திருக்கோயில் என்பதொரு சிவத்தலம். அது இன்று திருக்குவளை என வழங்கப் பெறுகிறது. அத்தலத்து இறைவன் 'கோள் இலி நாதன்' என்று புகழப் பெறுகிறான். அந்தத் திருத்தலத்தில் நவக்கிரகங்கள் - நவகோள்கள் இல்லை.

இயமனை உதைத்ததாகக் கூறப் பெறும் பழம்பெருமை வாய்ந்த தலமாகிய திருக்கடவூரில் நவக்கிரகக் கோயில் அமைக்கப் பெறவில்லை.

புள்ளிருக்கு வேளூர் எனப்பெறும் வைத்தீசுவரன் திருக்கோயிலில் ஒன்பது கோள்களும் வரிசையாக நின்று வணங்கும் முறையில் படிமங்கள் அமைக்கப் பெற்றுள்ளன.

நவக்கிரகங்களை வழிபடுவது சைவ நெறியுமன்று; சாத்திர உட்கிடக்கையுமன்று; அது ஆகம விதிகளுக்கு முற்றிலும் முரண்பட்ட ஒன்று.

அண்மைக் காலத்தில்தான் நவக்கிரக வழிபாடு அதிகம் செல்வாக்குப் பெறத் தொடங்கிவிட்டது.

நவகோள்கள்-நவக்கிரகங்கள்-மக்களுடைய வாழ்க்கையில் உண்டாகும் நன்மை, தீமைகளுக்கு உரிய அதிகாரிகள் என்ற கருத்தானது கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருளாளராகிய திருஞானசம்பந்தர் தேவாரத்தில் காணப்பெறும் செய்தியாகும்.

மதுரை வருமாறு திருஞானசம்பந்தருக்கு அழைப்புவருகிறது, அப்போது உடனிருந்த அப்பரடிகள் நாளும் கோளும் சரியில்லை என்று கூறுவதாகப் பெரியபுராணத்தால் அறிகிறோம். அப்போது திருஞான சம்பந்தர் "சிவனடியவர்களை நாளும்கோளும் ஒன்றும் செய்யா"சிவனடியவர்களை அவைகள் நலிவோ தீங்கோ செய்யமாட்டார்கள் என்ற - பொருளில்

"வேயிறு தோளிபங்கன்" எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடி அருளுகின்றார்கள்.

நவகோள்கள், தீயுறு நாள்கள், திருமகள் முதலான தெய்வங்கள், நமனொடுதூதர், கொடுநோய்கள், இடி, மின்னல், பூதம், கொலை, யானை, கரடி, சிங்கம், வெப்பொடு குளிர், நலியும் இடர், அல்காலம் ஆகியவையெல்லாம் சிவனடியார்களை ஒன்றும் செய்யா என்ற பொருளில் அந்தப் பதிகத்தை அமைக்கின்றார்.

திருஞானசம்பந்தர் பாடிய பதிகத்துக்கு 'நவகோள்களை' ஞானசம்பந்தர் வணங்கிப் பாடிய பதிகம் என்ற புல்லுரையை எழுதினார்கள். தனித் தனியாக நவக்கிரகத் துதி போற்றிப் பாமாலை அமைத்தார்கள்.

நவகோள்களை வழிபடலாம என்று எந்த சாத்திரமும் வரையறை செய்யவில்லை. இத்தகைய இழி செயலால், தலைவனை வணங்கும் தன்மை இல்லாமல் நாள்களையும் கோள்களையும் வணங்கும் செயல் தலைதூக்க ஆரம்பித்தது.

கூட, நாயன்மார்கள் சிவனைத் தவிர உமையைக் கூடத் தனிப்பதிகங்கள் அமைத்துப் பாடவில்லை.

உமைக்கும், முருகனுக்கும், விநாயகருக்கும் இன்று தனிக்



திருநள்ளாறு செல்கிறவர்கள் பரம் பொருளாகிய தர்ப்பாரண்யேசுரரை வணங்குவதில்லை. தூணில் அம்மைக்கப் பெற்ற சனீஸ்வரனை வணங்கி மீளுகின்றார்கள்.

இத்தகைய இழிவழக்கம் திருமாலைப் பரம்பொருளாகக் கொள்ளும் வைணவரிடத்தில காணப்பெறவில்லை.

திருஞானசம்பந்தர் காலத்தில் உமைக்குத் தனிக்கோயில் இல்லை. சிவன் கோவிலில் உமைக்குத் தனிக் கோயில் கட்டும் வழக்கம் பிற்காலத்தில்தான் அமைந்தது. உமைக்குத் தனிக் கோயில் இருந்த போதிலும் கோயில் அமைக்கப் பெற்றுள்ளன.

அங்கெல்லாம் கூட இப்போது நவக்கிரக்கோயிகள் அமைக்க வேண்டும் என்ற எழுச்சி காணப்பெறுகிறது.

திருக்கோயில் நிர்வாகம் வருமானத்தைப் பெருக்க வேண்டும் என்ற வகையில் பிரசாதக் கடைகள் திறப்பதுபோல நவக்கிரகப் பிரதிஷ்டையையும் செய்ய அனுமதி அளித்து விடுகிறது.

இருபத்தேழு நட்சத்திரங்களைத் தன்னுள் அடக்கியவன் சிவன் என்ற வகையில் திருவொற்றியூரில் 27 இலிங்கங்கள் அமைக்கப்பெற்றுள்ளன.

நவக்கிரகங்களைத் தன்னுள் அடக்கி அன்பர்களுக்கு நலம்புரியும் வகையில் தில்லையில் 'நவலிங்கம்' அமைக்கப் பெற்றுள்ளது.

பன்னிரண்டு ராசிகளைத் தன்னுள் அடக்கி, அவைகளின் தீமையை விலக்கி, நன்மை அளிக்கும்வகையில் சீகாழித்தலம் விளங்குகிறது.

பன்னிரு திருப்பெயர் கொண்ட இறைவனாகச் சீகாழிப் பெருமான் அமைகிறான்.

நவக்கிரக வழிபாட்டுக்குரிய மூர்த்தங்கள் சிவன் கோவிலில் அமைப்பது ஆகமத்திற்கு முரண்பட்டது.

சிவன் கோயிலில் நவக்கிரக வழிபாட்டுத் தலம் அமைக்க ஆகமம் அனுமதி அளிக்கவும் இல்லை; இடமும் இல்லை.

சோதிட விற்பன்னர்கள் நவகோள்களால் ஏற்படும் தீமை நீங்க இரண்டு வகையான வழிமுறைகளைச் சொல்கிறார்கள்.

சூரியன் என்ற கோளினால் ஏற்படும் தீமை நீங்க, சூரியனை வழிபட்டு மாற்றிக் கொள்ளலாம் எனக் கூறுவது ஒருவகை. சூரியனால் வணங்கப்பெற்ற கடவுளை வணங்குங்கள் என்று கூறுவது இரண்டாவது முறை.

குருப் பெயர்ச்சியும் சனிப்பெயர்ச்சியும் வந்துவிட்டால் மக்கள் கலங்கும் கலக்கம் அதிகமாகத்தான் காணப்பெறுகிறது.

குருவுக்கு அர்ச்சனை செய்யுங்கள். இல்லையானால், தட்சிணாமூர்த்திக்கு அர்ச்சனை செய்யுங்கள் என்று கூறுகிறார்கள்.

நவக்கிரகங்களில் வியாழனாகிய கோள் வடக்கு நோக்கி இருக்கும்; தட்சிணாமூர்த்தியானவர் தெற்கு நோக்கி இருப்பார்.

"சென்று நாம் சிறு தெய்வம்
சேரோமல்லோம்
சிவனடியே சிந்திக்கப் பெற்றோம்
நாமே"

என்பது அப்பரடிகள் திருவாக்கு.

தலைவன் அல்லாதானைத் தலைவனாக வைத்து வழிபடுவது மிகப் பெரிய குற்றம். இதைச் செய்த காரணத்தால் தக்க யாகம் அழிக்கப் பெற்றது. தக்கனுடைய தலை அறுக்கப் பெற்று, ஆட்டுத்தலை பொருத்தப் பெற்றது. தக்கன் ஆட்டுத்தலையன் ஆனான்.

நம்மால் வணங்கப் பெறுபவரின் தன்மை, ஆற்றல் ஆகியவைகளை உணர்ந்து வழிபடுவதே மக்கள் கடமை. இல்லையாயின்

"அச்சமே கீழ்களது ஆசாரம்"

என்ற வள்ளுவர் வாக்குக்கு இலக்கியமாக நின்று வாழ்விழக்க வேண்டி வரும் என்பது உறுதி. *

# நியுசிலாந்து அமோக வெற்றி! ஹுசேன் பதவி நிலைக்குமா?

அண்மையில் நடந்து முடிந்த இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான ரெஸ்ற் தொடரில் தாயகத்திலேயே இங்கிலாந்து தோல்வியுற்றமையினால் அணித்தலைவர் நாசிர் ஹுசேனின் பதவி தொடர்ந்தும் நிலைக்குமா என்றதொரு கேள்வி எழுந்துள்ளது.



ஹுசேன்

கடந்த உலகக்கிண்ணத் தொடரில் இங்கிலாந்து அணி சந்தித்த தோல்விகளைத் தொடர்ந்து அலெக்ஸ்ருவர்ட்டிடமிருந்த அணித்தலைமை பறித்தெடுக்கப்பட்டு ஹுசேனிடம் வழங்கப்பட்டது. அனுபவத்தில் முதிர்ந்த மைக்கேல் ஆதர்ரன் அணியிலிருக்கும்போது இங்கிலாந்தில் பிறக்காத ஹுசேனுக்குத் தலைமைப் பதவி கொடுத்தது ஏன்? முதல் ரெஸ்ற்றிலேயே வெற்றி கிடைத்ததால் இக்கேள்வி அடங்கிப் போயிற்று. ஆயினும் இங்கிலாந்து தொடரில் தோல்வியுற்றதைத் தொடர்ந்து மீண்டும் அக்கேள்வி எழுந்துள்ளது.

ஆம்! நாசிர் ஹுசேன் பிறந்தது இந்தியாவில். அதுவும் சென்னையில். ஹுசேனுக்குத் தமிழ் பேசத் தெரியும். (ஆயினும் இலங்கை அணியின் 'தமிழருக்கு' சரியாகத் தமிழ் தெரியாது). நாசிரின் இந்தியத் தந்தை ஜாவெட் ஹுசேன் ஒரு சுழல் பந்தாளர். இந்தியாவில் ரஞ்சி கிண்ணத் தொடர்களில் ஆடியவர்.

இந்தியாவில் பிறந்த போதும் ஹுசேன் இங்கிலாந்திலேயே வளர்ந்தார். சிறுவயதிற் சிறந்ததொரு சுழல் பந்தாளராகப் பிரகாசித்தபோதும் பின்னர் நன்றாகத் துடுப்பெடுத்தாடத் தொடங்கினார். திறமையை மூலதனமாக்கி தேசிய அணியின் அணித் தலைமை வரை முன்னேறிய ஹுசேனால் அணியை வெற்றிப் பாதையில் நடத்த முடியாமல் போய்விட்டது.

ஆனால் பதினொருவரின் தவறுகளுக்கு ஒருவரிடம் பிழை பிடித்தால் அது நியாயமாகுமா? அணிவீரர்கள் சரியாக ஆடாதது ஹுசேனின் தவறாகுமா. இங்கிலாந்து அணி எப்படித் தோற்றது? அதனை அறியத் தொடர்ந்தும் படியுங்கள்.

எட்ஜ்பாஸ்ரனில் நடைபெற்ற முதல் ரெஸ்றில் முதலிற் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து பரோரேயின் சிறந்த ஆட்டத்தின் (73) உதவியுடன் 226 ஓட்டங்களைப் பெற்றது. இங்கிலாந்து தன் முதல் இனிங்ஸில் 126 ஓட்டங்களை மட்டுமே பெற்ற போதிலும் அன்ரு கடிக்கின் பந்துவீச்சு(5/32) நியூசிலாந்தை இரண்டாவது இனிங்ஸில் 107ஓட்டங்களுக்கு வீழ்த்த அதற்கு உதவியது.

**கோபி, சிவா**

இங்கிலாந்து வெற்றிக்கு 208 ஓட்டங்களைப் பெறவேண்டியிருந்தது. இங்கிலாந்து முதல் இனிங்ஸில் குறைந்த ஓட்ட எண்ணிக்கையையே பெற்றதாலும் மைதானம் பந்தாளருக்குச் சாதகமாக மாறுவதுபோல் தென்பட்டதாலும் நியூசிலாந்து அணியினர் நம்பிக்கையுடன் களமிறங்கினர்.

அவர்களது நம்பிக்கையை அலெக்ஸ் ரியூடரின் வேகமான ஆட்டம் தவிடுபொடியாக்கியது. இங்கிலாந்து ஏழு இலக்குகளால் வெற்றி பெற்றபோதும் ரியூடருக்கு சோகந்தான் எஞ்சியது. (அவர் பெற்றது ஆட்டமிழக்காமல் 99 ஓட்டங்கள்).

லோட்ஸில் நடைபெற்ற இரண்டாவது ரெஸ்ற்றில் முதலில் ஆடிய இங்கிலாந்தை 186 ஓட்டங்களுக்கு மடக்கிய நியூசிலாந்து 358 ஓட்டங்களைப் பெற்றது. கெயின்ஸ் சிறப்பாக பந்து வீசினார் (6/77). ஹோரண் சதம் அடித்தும் இங்கிலாந்து அணியினரால் இரண்டாவது இனிங்ஸில் 229 ஓட்டங்களையே பெற முடிந்தது. நியூசிலாந்து (60/1) ஒன்பது இலக்குகளால் வெற்றி பெற்றது.

மான்செஸ்ரறில் நடைபெற்ற மூன்றாவது ரெஸ்ற்றில் காயங் காரணமாக நாசிர் ஹுசேன் ஆடவில்லை. அவருக்குப் பதிலாக மாக்புச்சர் தலைமை தாங்கினார்.

இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து மீண்டும் ஒரு முறை குறைந்த ஓட்ட எண்ணிக்கையுடன் (199) சுருண்டது. மக்மிலன் ஆட்டமிழக்காமல் (107), அஸ்றலே (101) ஆகியோரின் அற்புதமான சதங்கள் நியூசிலாந்தின் எண்ணிக்கையை ஏறத்தாழ ஐந்நூறுக்கு (496/9) உயர்த்தியது. பின்னர் இங்கிலாந்தின் நிதானமான ஆட்டம் (181/2) ஆட்டத்தை வெற்றி தோல்வியின்றி முடித்தது.

ஓவலில் நடைபெற்ற தொடரில் கடைசி ரெஸ்ற், தொடரின் முடிவைத் தீர்மானிப்பதாக அமைந்தது.

முதலில் ஆடிய நியூசிலாந்து 236 ஓட்டங்களைப் பெற்றது. டானியல் விற்றோறி கடைசியில் ஆடிய ஆட்டம் பலரையுங் கவர்ந்தது. இங்கிலாந்து முதல் இனிங்ஸில் 153 ஓட்டங்களைப் பெற்றது. பின்னர் 162 ஓட்டங்களைப் பெற்ற நியூசிலாந்து, சிறப்பாகப் பந்தும் வீசியதால் 83 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

மொத்தத்தில் நியூசிலாந்து 2-1 என்ற அடிப்படையில் தொடரை வென்றது. 1986 இன் பின் நியூசிலாந்து இங்கிலாந்தில் ரெஸ்ற் வெற்றி பெற்றது இதுவே முதல் தடவை என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

சரி. இங்கிலாந்தின் புதிய தலைவருக்கு வெற்றி கிட்டவில்லை. இந்திய, இலங்கை அணித்தலைவர்களுக்கு வெற்றி கிட்டுமா என்பது பற்றி இன்னும் ஓரிரு நாள்களில் தெரிந்து விடுந்தானே! *

# ஒரு மூங்கிற் குழலும் சில மயிலிறகுகளும்

நேற்றுத்தான் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகள் வந்திருந்தன. மூன்று பாடங்களிலும் சாதாரண சித்தி பெற்றிருக்கிற நான் ஸ்வாதி.

"ச்சே......இப்பிடியாய்ப போச்சே....."

அம்மாதான் சொல்லிக் கொண்டிருக்கிறா. ஏனோ என்னை விடப் பெற்றவர்கள்தான் அதிகம் தோற்றுவிட்ட தாய்த் தோன்றிற்று.

என் உயர்தரக் கல்வியில் நான் தோற்றிருப்பது உண்மையெனினும் இலட்சியத்தில் தோற்கவில்லையே. இந்தப் பாதைதான் எனக்கானது இல்லையே. "எனக்கு இது பிடிக்கேல்லை" என்ற முணுமுணுப்புடன் தான் எனது உயர்தரப் படிப்பின் ஆரம்பம் இருந்தது. இயக்கவியலும்.... இலத்திரனியலும்...... என் சிந்தனைப் பாதையில் இருந்து பெரிதும் விலகித் தானிருந்தன. ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையின் ஐந்து விசேட சித்திகளில் எனது உயர்தரக்கல்விப் பாதை கணிதமெனப் பெற்றோரால் தீர்மானிக்கப்பட்டது.


"கணிதந்தான் படிக்கிறது நல்லது" அப்பாவின் வார்த்தைகள் என் இலட்சியக் கனவின் திரைகளாய் விழுந்தன. கொஞ்சம் சொல்லிப்பார்த்தேன். பிரயோசனமில்லை.

**ச.சாரங்கா**
(சங்கத்தானை)

என் சிறு வயதுமுதலான மனத்து இலட்சியம் ஒன்றுதான். நாடே புகழும் நாட்டிய தேவதையாக என் பெயர் வர வேண்டும். அழகிய பரதக் கலைக்கே என்னை முழுமையாக அர்ப்பணித்து விடவேண்டும். நாட்டிய உலகில் ஒளிக்கீற்றுக்களாய் என் பெயரை நான் வரைந்தாக வேண்டும். ஆனால் என் பாதை மாறிப்போயிற்று. மனதினுள் ராகங்களையும், தாளங்களையும் சுமந்து கொண்டு ஆய்வு கூடங்களுக்கும் கணிதவகுப்புகளுக்கும் போய்க்கொண்டிருந்தேன்.

மூலகங்களை வகைப்படுத்துவதும், தாக்குதிறன்களை ஒப்பிடுவதும் எனக்குச் சலிப்பைத்தந்தன. பரவளை வாடிகளுக்கும் கோளவாடிகளுக்கும் கதிர்ப்படம் கீறுவதும் நேர்கோட்டு இயக்கத்துக்குச் சமன்பாடுபோடுவதும் என் மனத்துக்கு உகந்த வேலையாக இல்லை. பிடிவாதமான 'பொறியியலாளர்க் கனவுகள்' என்மீது திணிக்கப்பட படித்தேன். இதயத்தை நெருங்காத படிப்பு இன்று இப்படி ஆகிப்போயிற்று. தவறு எங்கே நிகழ்ந்தது எனத் தீர்மானிக்க முடியாததிருந்தது எனக்கு.

அம்மாவைப் பார்த்தேன். மனதுக்குள் சொல்லிக்கொள்ள வார்த்தை



கள் பிரவகித்தன. 'என்னிடம் இருந்தவை ஒரு மூங்கில் குழலும் சில மயிலிறகுகளும்தானே.... அம்மா! புல்லாங்குழல் செய்வதற்கு நான் வழிப்படுத்தப்பட்டிருந்தால் வெற்றி பெற்றிருக்கக்கூடும் இங்கு முற்றிலும் புதியதான ஒரு இசைக்கருவியை ஆக்க வேண்டுவது போல என்னைப் புதிய கணித உலகத்தில் புகுத்தினீர்கள். நாட்டியத்துடிக்கிற என் இதயத்தை, தாளமிடத் துடிக்கிற என் விரல்களை, பாதங்களை உங்களுக்கு இனங்காண முடியவில்லையே. இனி தோல்விகளை நானும் நீங்களும் அனுபவித்துத்தானாக வேண்டும். என் பாதை வேறு. என்னை உங்களுக்கு புரிந்து கொள்ள முடிகிறதா அம்மா?'

மௌனமாக எனக்குள் சொல்லிக் கொள்கிறேன்.

( XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org